# வைரவ மான்மியம்



தொகுப்பாசிரியர் :
சிவநெறிச் செல்வர், சைவநன்மணி
இரா. மயில்வாகனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

சூல மேற்றுஞ் சுழல் விழிக் கேத்திர
பாலன் பொற்பதம் பற்றிப் பணிகுவாம்

# வைரவ மான்மியம்

10524 S.C

பொதுசன நூலகம்
விசேட சேர்க்கைப் பகுதி

*ஆசிரியர் :*

*சைவ நன்மணி, சிவநெறிச் செல்வர்*

**இரா. மயில்வாகனம்**

பொதுசன நூலகம்
விசேட சேர்க்கைப் பகுதி

யுவ வருஷம் புரட்டாதித் திங்கள்
1995 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்

| | | |
|---|---|---|
| *நூலின் பெயர்* | : | வைரவ மான்மியம் |
| *நூலாசிரியர்* | : | சைவ நன்மணி, சிவநெறிச் செல்வர்<br>இரா. மயில்வாகனம் |
| *நூலின் பொருள்* | : | வைரவப் பெருமானின் வரலாறும்<br>வழிபாடும் பற்றிய தொகுப்பு நூல் |
| *வெளியீடு* | : | திருமதி மங்கையர்க்கரசி மயில்வாகனம் |
| *விலை* | : | ரூபா 150.00 |
| *நூல் உரிமை* | : | திரு. மயில்வாகனம் சுதாகரன் |
| *அச்செழுத்து* | : | ஸ்ரீ லிபி 802 - 11 புள்ளிகள் |
| *வெளியிட்ட ஆண்டு* | : | ஒக்ரோபர் 1995 |
| *நூல் அளவு* | : | 1 / 8 |
| *பக்கங்கள்* | : | 182 |
| *பயன்படுத்திய தாள்* | : | 80 gsm வெள்ளை பாங் |
| *லேசர் ஒளிப்பதிவும்*<br>*அச்சுப்பதிவும்* | : | லக்ஷ்மீஹர<br>*309,* செட்டியார் தெரு,<br>கொழும்பு - *11.* |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. வாழ்த்துரை | - சுவாமி ஆத்மகணானந்தா | III |
| 2. ஆசிச்செய்தி | - நல்லை ஆதீனம் | IV |
| 3. வாழ்த்துரை | - கா. சிவத்தம்பி | V |
| 4. வாழ்த்துரை | - இ. யோகநாதன் | VII |
| 5. வாழ்த்து | - செ. குணரத்தினம் | VIII |
| 6. அணிந்துரை | - வ. சிவராசசிங்கம் | IX |
| 7. தோற்றுவாய் | | 1 |
| 8. ஸ்ரீ கால பைரவாஷ்டகம் | - மூலம் | 26 |
| 9. ஸ்ரீ காலபைரவாஷ்டகம் | - மொழிபெயர்ப்பு | 28 |
| 10. வைரவர் அகவல் | | 30 |
| 11. திருத்தலங்களில் வைரவப் பெருமானின் மகத்துவம் | | 32 |
| 12. வைரவக் கடவுள் | | 49 |
| 13. வைரவரும் சிவனும் | | 54 |
| 14. தில்லையில் காலவைரவர் | | 58 |
| 15. மட்டக்களப்பு நரசிங்க வைரவ சுவாமி ஆலயம் | | 59 |
| 16. மட்டக்களப்பு விடத்தல் முனை ஆதி வைரவர் காவியம் | | 70 |
| 17. காவலூர் ஞானவைரவர் | | 74 |
| 18. கரம்பொன் ஞானவைரவர் ஊஞ்சல் | | 77 |
| 19. பழை, தெல்லிப்பளை ஞானவைரவர் | | 81 |
| 20. தலையாழி ஞானவைரவர் ஆலயம் | | 87 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. தலையாழி ஞான வைரவர் ஊஞ்சல் 92
22. திருகோணமலை வைரவர் கோயில் 96
23. பாலையூற்று ஞானவைரவர் கோயில் 100
24. உவர்மலை ஞானவைரவர் 102
25. பெருந்தெரு ஞானவைரவர் 103
26. செக்கடி ஞானவைரவர் 106
27. கொக்குவில் கோணாவளை வைரவர் கோயில் 108
28. கொக்குவில் கோணாவளை ஊஞ்சல் 121
29. யானை உரி போர்த்தது 125
30. நரசிம்ம மூர்த்தியின் உடலைக் கிழித்தது 126
31. நரசிங்க சரப அவதாரங்கள் 128
32. காசியின் தனிச் சிறப்பு 130
33. காசியில் விஸ்வநாதரும் வைரவரும். 137
34. காசிகண்ட காலவைரவர் 142
35. கந்தபுராணத்தில் கபாலீஸ்வரர் 145
36. ஈழத்துச் சிதம்பரத்தில் இருசிவஞானவைரவர் 148
37. விழிசிட்டி ஞானவைரவர் சுவாமி கோயில் 151
38. இணையிலி வைரவர் 157
39. சங்கானை நிகரை ஞானவைரவர் 160
40. உரும்பராய் காட்டு வைரவர் 161
41. இணுவில் விளாத்தியடி காரைக்கால் மருதனாமடம் 162
42. சித்தாண்டி செந்நெல் வைரவர் காவியம் 164

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வித்துவான் ச. பூபாலபிள்ளை அவர்கள்

(1856 - 1921)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

*வற்றாத வாவி சுற்றியே சூழ்ந்து வர*
*முற்றாத காய் வகைகள் முக்கி முகிழ்ந்திருக்க*
*நீள் இலைய வாழையும் நெடிய கமுகு தென்னையும்*
*காழ் முதிய கரும்பும் கண்ணினிய நெற்கதிரும்*
*மடல்பெரிய தாழையும் மணமினிய மகிழும்*
*தேங்கனியாம் தோடையும் தேமா பலாவகையும்*
*நீக்கமற நின்று நிழலோடு பயனளிப்ப*
*மட்டாரும் கிழக்கிலங்கை பட்டினப் பாக்கத்தில்*
*சதாசிவம் பிள்ளைக்கும் வள்ளியம்மைக்கும் மகனாக வந்து பிறந்தார் (1856ல்).*
*புண்ணிய வயத்தால் பூபாலபிள்ளை எனப் பெயரும் பெற்றார்.*

*அன்னூர் அமர்ந்தார் அரசாங்கசேவையில்.*
*வளர்ந்தோர் கல்வி வளம் பெறக் கற்று*
*வித்தையிற் சிறந்து வித்துவான் ஆனார்.*
*ஊழ்வினை வழிகாட்ட யாழ்நகர் சென்று*
*வல்லையூர் ச. வைத்திலிங்கம் பிள்ளையாகிய சிறந்த ஆசானைப் பெற்றார்.*
*சு. குமாரசுவாமிப்புலவர், திருக்கோணமலை த. கனகசுந்தரம்பிள்ளை, அட்டாவதானம் பூவை கலியாணசுந்தர முதலியார் அவர்களுக்கு நயந்த நண்பர்களானார்.*
*" வளர்ந்தோர் கல்வி விளங்கவைக்கும்; பொருந்திய இடத்தில்*
*புத்தி புகட்டும்" என்பதற்கிணங்க கற்றுக் கரையும் கண்டார்.*
*இவரால் இயற்றப் பெற்ற நூல்கள் பல,*
*சீமந்தனி புராணத்தின் சிற்பியுமிவரே.*

*இரா. மயில்வாகனம் ஆகிய அடியேன்*
*வைரவ மான்மியம் என்னும் தொகுப்பு நூலைச்*
*சிவபதம் எய்திய வித்துவான் ச. பூபாலபிள்ளைப் பெரியோனைச்*
*சந்ததமும் புந்தியில் நினைந்து*
*அன்னார் பொன்னடிகளுக்கு சமர்ப்பிக்கின்றேன்.*

இவ்வண்ணம்
*சிவநெறிச் செல்வர், சைவநன்மணி*
***இரா. மயில்வாகனம்.***

***34 / 3, புளூமண்டால் ஒழுங்கை,***
***கொட்டாஞ்சேனை,***
***கொழும்பு - 13.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

RAMAKRISHNA MISSION
(Ceylon Branch)
40, Ramakrishna Road,
Wellawatta,
COLOMBO-6.

19. 7. 95

PHONE { ASHRAMA: 588253
CULTURAL CENTRE:

# வாழ்த்துரை

சிவநெறிச் செல்வன், சைவநன்மணி திரு. மயில்வாகனம் அவர்கள், 'வைரவ மான்மியம்' என்னும் நூலை இயற்றி வெளியிடவுள்ளார் என்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறோம்.

சிவபெருமானின் திருக்கோலங்களில் ஒன்றாகவே கருதப்படும் வைரவக்கடவுளின் மகிமைகளையெல்லாம் தொகுத்து இந்நூலில் அளித்துள்ளார் நூலாசிரியர். வைரவக் கடவுளின் பக்தர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதம்.

திரு மயில்வாகனம் அவர்கள் ஓர் சிறந்த சைவ எழுத்தாளர். ஏற்கனவே, 'சிந்தனைக் கோவை I, ஒன்பதாம் திருமுறை ஒரு நோக்கு', சிந்தனைக் கோவை II என்னும் மூன்று நூல்களை அவர் எழுதி வெளியிட்டுள்ளார். இவர் ஓர் சிறந்த பக்தர்; சைவசமய நூல்களில் கற்ற புலமை உடையவர். இந்த முதிர்ந்த வயதிலும் இந்தப் பணியில் அவர் கொண்டிருக்கும் ஆர்வம் பாராட்டுக்குரியது.

இறைவன் அவருக்கு நீண்ட ஆயுளையும், திட ஆரோக்கியத்தையும் அருளி, அவரது சேவைப்பணி தொடர ஆசீர்வதிப்பாராக!

இறைபணியில்
சுவாமி ஆத்மகனாநந்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்

அவர்கள் வழங்கிய

## ஆசிச்செய்தி

அருளோங்கும் சைவ மெய்யன்பர்களே!

இலங்கையில் மட்டுமல்ல தமிழகத்திலும் வைரவப் பெருமானுக்குத் தான் சிறிதும் பெரிதுமாக ஆலயங்கள் அநேகம் உள்ளன. அவர் மேலுள்ள பக்திப் பெருக்கு, சிறப்பு இதனால் பெறப்படும். உயர்திரு. இரா. மயில்வாகனம் அவர்கள் 'வைரவ மான்மியம்' என்ற நூலினை யாத்து சைவ உலகுக்கு உவந்தளித்துள்ளார். காத்தற் கடவுளான வைரவப் பெருமானின் அருட்பொலிவு, அருமை பெருமைகளை அறியாதோர் பலருளர். இக்குறையை நீக்குமுகமாக இந்நூல் வெளிவருவது பாராட்டுக்குரியது. குற்றம் பொறுக்காத தெய்வமானதினால் வழிபாட்டுக்கு வேண்டப்படுவன அகச்சுத்தம், புறச்சுத்தம், திரிகரண சுத்தி ஆதியனவேயாம். இவற்றை வழுவாது கடைப்பிடித்து அவரின் திருவடிகளை இறுகப்பற்றிக் கொண்டால் அவரின் திருவருள் நிச்சயம் கைகூடும் என்பது உண்மை. இதன் ஆசிரியர் ஏற்கனவே பல சமய நூல்களைத் தொகுத்து வெளியிட்டுள்ள பெருமைக்கு உரியவர். இவ் 'வைரவமான்மிய'த்துடன் நின்று விடாமல், இன்னும் பல அரிய நூல்களைப் படைக்க ஆசிரியர் நலமே நீடு வாழ வேண்டுமென வைரவப் பெருமானின் திருவருளை உளமார வேண்டி எல்லோருக்கும் எமது மனப்பூர்வமான நல்லாசிகளை வழங்குகிறோம். என்றும் வேண்டும் இன்ப அன்பு.

*ஸ்ரீலஸ்ரீ குருமஹா சந்நிதானம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

திரு. இரா. மயில்வாகனம் அவர்கள் வைரவ மான்மியம் என்னும் நூலை எழுதுவதாக அறிந்தேன்.

கிராம மட்டங்களில் சிறு தெய்வ வழிபாடாகவே விளங்கி வந்துள்ள இவ்வழிபாடு இப்பொழுது முற்று முழுதான ''ஆகம''க் கிரியை மரபுக்குள்ளே கொண்டு வரப்படும் தெய்வமாக மாறி வரும் இன்றைய சூழ்நிலையில் வைரவ வழிபாட்டின் செந்நெறிப் பௌராணிகத் தொடர்புகளை எடுத்துக் கூறுவது காலத்தின் இயல்பு. ஆகின்றது எனலாம். வைரவர், ஞானவைரவரென வழிபடு முறை வளரத் தொடங்குகின்ற பொழுது இத்தகைய தேடல் தவிர்க்க முடியாத தாகின்றது.

வைரவ வழிபாடு இன்று கிராம மட்டத்துக்குரிய ஒன்றாகக் காணப்படுகின்ற தெனினும். அது சிவவழிபாட்டின் வரலாற்றில் மிக முக்கியமான ஒன்றாகும்.

வைரவ மூர்த்தம் பற்றிய தேவாரக் குறிப்புக்களை நோக்கும் பொழுது, வைரவம் காபாலிகத்துடன் தொடர்புபட்டதென்பது தெரிய வருகின்றது. கி.பி. 5,6 ஆம் நூற்றாண்டுகளில் தமிழ்நாட்டின் காளாமுகம், காபாலிகம், பாசுபதம், ஆகிய ''வன்நிலை'' வழிபாடுகள் காணப்பட்டமை வரலாற்றுண்மையாகும்.

இறைவனைப் பேயாகக்காணுதல், கபாலத்தைக் கொண்டு சென்று பிச்சையெடுத்து வாழ்தல், எலும்பை (கங்காளம்) அணியாகப் போடுதல், ஆதியன இந்தப் பாரம்பரியங்களுக்குரியன.

கபாலிகர் குறிப்பாகக் குடியிருப்பின் எல்லைகளில் வாழ்ந்து வந்தமை ஒரு முக்கிய அம்சமாகும், இத்தகையோருக்கு நாய் இன்றியமையாத துணைப் பிராணியாகும். வைரவரைக் காவல் தெய்வமாகக் கொள்வதும் இங்கு நோக்கப்படத்தக்கது.

வைரவ வழிபாடு தெலுங்குப் பிரதேசத்திலிருந்தே தமிழ் நாட்டினுள் வந்திருக்க வேண்டும் போலத் தோன்றுகின்றது. வைரவரை ''வடுகன்'' என்று போற்றுவதற்கான காரணம் யாதென நோக்கல் வேண்டும். கந்தபுராணம் ''புரிதருவடுகனைப் போற்றி செய்குவாம்'' என்று கூறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காபாலிக மரபிலே சிவனுடன் இணைத்துப் பேசப் பெறும் சிலபண்புகள் பின்னர் தனி ஒரு மூர்த்தமாக உருவகிக்கப்பட்டுள்ளமையை இன்றைய வழிபாட்டிலே காணலாம்.

தாந்திர மதத்திலும் ''வைரவம்'' (பைரவம்) முக்கிய இடம்பெறுகின்றது. தாந்திர வளர்ச்சியின் இரண்டாவது பிரதான கட்டமாக அமையும். யாமள இலக்கியங்களின் கையளிப்பு எட்டு ''வைரவர்''களினாலே செய்யப்பட்டது என்பர். சிவ தந்திரங்கள் சதாசிவ அல்லது ருத்திர மரபினைச் சுட்ட, யாமளங்கள் வைரவ மரபைச் சுட்டுகின்றன. அந்த மரபில் ''பைரவர்'' என்பது முற்று முழுதான முத்தியெய்திச் சிவ நிலையை அடைந்தவரைக் குறிக்கும்.

இவ்வாறாக வைரவக் கோட்பாடு சிவ மதங்களில் முக்கிய இடம் வகிக்கின்ற ஒன்றாகும்.

இலங்கையில் இவ்வழிபாடு ஆகமம் சார்ந்த நிலையிலும் ஆகமம் சாராத நிலையிலும் நிலை பெற்றுக் கொண்டிருக்கின்றது. அந்த மரபுகளைத் திரு. மயில்வாகனம் அவர்கள் இங்கு தமக்குரிய முறையிலே தொகுத்துத் தர முன்வந்துள்ளார்.

அண்மைக் காலத்தில் வளர்ந்து வரும் மதவிடய வாசிப்பு ஊக்கம் இம்முயற்சிக்கு உதவுதாக அமைகின்றது.

திரு. இரா. மயில்வாகனம் அவர்கள் இந்து மத ஒழுகலாறுகள் பற்றி எழுதுவதனை தனது முக்கிய ஊழியமாகக் கருத்திற் கொண்டுள்ளார்.

அவர் பணி சிறக்க வாழ்த்துகிறேன்.

*கொழும்பு*
***8. 8. 1995***

***கார்த்திகேசு சிவத்தம்பி***
***தமிழ்ப் பேராசிரியர்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# வாழ்த்துச் செய்தி

திருநெறிச்செல்வர் திரு. இரா. மயில்வாகனம் அவர்கள் ''தாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்'' என்ற மனப்பாங்கினர். சீரிய சமய அறிவும் பழுத்த அநுபவமும் பெறப்பெற்ற இவர் தம் அறிவையும் அநுபவத்தையும் ஏனையோருடன் பகிர்ந்து கொள்ளும் முகமாக பல அரிய சமயக் கட்டுரைகளை எளிய நடையிலே எழுதி வெளியிட்டுள்ளார்கள்.

இத் தொடரிலே ''வைரவ மான்மியம்'' என்னும் நூலை வெளியிடவுள்ளார் என்பதை அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். சமய அறிவும் அதனால் பெறப்படும் ஒழுக்கமும் வாழ்க்கையில் கடைப்பிடித்தல் அருகிக்கொண்டிருக்கும் வேளையில் இந்நூல் வெளிவருவது ஒரு குறையை நிவர்த்தி செய்யும் என நான் நம்புகிறேன்.

சிவபெருமானின் அம்சங்களில் ஒன்றாகிய வைரவக் கடவுள் ஒவ்வொரு கோயிலிலும் பிரதிஷ்டை செய்யப்பட வேண்டிய முக்கியமான கடவுளாகும். அவ்வாறு செய்யப்படாதவிடத்து கோயில் பூரணத்துவம் பெறாது. மூலாதார மூர்த்தியை நோக்கும் பாணியில் சந்திரனுக்கு அண்மையாக மணிக்கோபுரத்திற்கு அடியிலே வைரவக் கடவுள் எழுந்தருளியிருப்பார். அர்த்தசாம பூஜை முடிந்து கோவில் கதவுகளைப் பூட்டி திறவுகோலை வைரவக் கடவுளிடம் ஒப்படைப்பது வழக்காறு. இவ்வகையில் வைரவர் காவல் தெய்வமாக கருதப்படுகின்றார்.

''சிந்தனைக் கோவை ஒன்று, இரண்டு'', ''ஒன்பதாம் திருமுறை ஒரு நோக்கு'' ஆகிய நூல்களை ஆக்கித்தந்த ஆசிரியரின் இந் நூல் வெளியீடு சைவர்களால் இதுகாறும் பேணாமல் கைவிடப்பட்ட தத்துவ அறிவினையும் அவ் அறிவினால் ஏற்படுகின்ற ஒழுக்க விழுமியங்களையும் வளர்க்கும் என்பதில் ஐயமில்லை.

ஆசிரியரின் சமயப்பணி சிறந்தோங்க இறைவனைப்
பிரார்த்திக்கின்றேன்.

*இ. யோகநாதன்*
*மேலதிக செயலாளர்*
*(இந்து சமய அலுவல்கள் அமைச்சு)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S. GUNARATNAM B.A. FBIM. SLAS.
RETIRED SECRETARY
MINISTRY OF REGIONAL DEVELOPEMENT
GOVERNMENT OF SRI LANKA
CONSULTANT PLANNING AND FOREIGN TRADE

12 RETREAT ROAD, COLOMBO-4
SRI LANKA
TEL: 58 14 58 AND 508030

## வாழ்த்து

இலக்கியச் செம்மல் செ. குணரெத்தினம்
தலைவர்,
கொழும்பு தமிழ்ச் சங்கம்,
இளைப்பாறிய அரசு அமைச்சுச் செயலாளர்.

★★★★★★

பாரார் போற்று சீர்வரிசை
பாலும் தெளிதேன் முக்கனிகள்
பலவும் இயற்கை தெரிந்தளிக்க
பண்பார் அன்பு பயில் நாடன்

சீரார் வாழ்வு செந்தமிழில்
தேர்ந்த புலமை ஆசிரியன்
தெய்வம் போற்றும் சால்புடையன்
தேர்ந்த சிந்தாமணி என்ன

நேரார் இலாத ஞானமொடு
நெஞ்சம் மறவா அன்புடமை
நிறைந்த மனிதன் இவனென்று
நின்று கற்றோர் வாழ்த்திசைக்க

ஆரா அமுதாய் வைரவர்க்கு
அழகு மான்மியம் செய்தான்
ஆர். மயில் வாகனன் என்றே
அறிஞர் ஏத்து புலவோனே.

செ. குணரெத்தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

*சிவபெருமானுடைய திருக்குமாரர்கள் யாவர்?*

*விநாயகக் கடவுள், வைரவக் கடவுள், வீரபத்திரக் கடவுள், சுப்பிரமணியக் கடவுள் என்னும் நால்வர்.*

- நாவலர் பெருமான்
சைவ வினாவிடை , முதற் புத்தகம்

சிவபெருமானின் திருக்குமாரர்களாகக் குறிக்கப்பெறும் விநாயகர், வைரவர், வீரபத்திரர், சுப்பிரமணியர் ஆகிய மூர்த்திகள் சிவபிரானின் வேறு வடிவங்களேயன்றி அவரினும் வேறானவர் அல்லர். முருகப் பெருமானின் இயல்பினை உமையம்மைக்கு எடுத்துரைக்குமுகமாக,

*'ஆதலின் நமது சக்தி அறுமுகன் அவனும் யாமும்*
*பேதக மன்றால் நம்போற் பிரிவிலான் யாண்டும் நின்றான்'*

எனக் கூறியதனால் தமக்கும் முருகனுக்குமுள்ள அபேத நிலையைப் புலப்படுத்தியருளினார். இவ்வாறே சிவபெருமானும், ஏனைய மூர்த்திகளும் பேதகமன்று என்பது உணர்தற்பாலது. இறைவன் சிறுத்தொண்டர் இல்லத்திற்கு 'சித்தமகிழ் வயிரவராய்த் திருமலை நின்றணைந்' தமையும் சிந்திக்கற்பாலது.

வைரவர் வழிபாடு ஈழத்தில் பெருவழக்குப் பெற்ற வரலாறு அனைவரும் அறிந்ததே. வழிபாடு பிரபலமுற்றதாயினும், வைரவ மூர்த்தியின் மகிமைகள் அவ்வளவாகத் தெரிந்தில. 'பரமனைமதித்திடா' என்ற கந்தபுராணச் செய்யுளும் அதிற் குறித்த கதையுமே வைரவர் பற்றி நம்மில் அநேகர் அறிந்தவை. 'வைரவ மான்மியம்' என்ற பெயரில் சிவநெறிச் செல்வர் இரா. மயில்வாகனம் அவர்கள் வெளிக் கொணரும் அரிய நூலில் வைரவ வழிபாடு தோன்றி வளர்ந்த வரலாறு, அவைபற்றிய விளக்கங்கள், ஈழத்தில் திகழும் சிறப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக்க வைரவர் ஆலய வரலாறுகள் என்றின்ன பல அம்சங்கள் இடம் பெற்றுள்ளன. கந்த புராணம், காஞ்சிப் புராணம், முதலிய புராணங்களிலும், காசிகண்டம் ஆதிய பிற நூல்களிலும் காணப்பெறும் வைரவர் காப்புச் செய்யுள்களைத் தேர்ந்து திரட்டித்தந்துள்ளமையும் பாராட்டுக்குரியது.

ஆசிரியர் அவர்கள் தம் பெயருக்குகேற்ப வாளாவிராது, ஆசிரியத்தொழில் முற்றிப்பெற்ற ஓய்வுப் பொழுதினை நூலாய்வுப் பொழுதாக மலர்த்தி மலர் தோறும் தாவி மது சேர்க்கும் வண்டு போல நூல் மலர்களுட் புகுந்து பொருட் தேறல் கவர்ந்து நெஞ்சக் கூட்டில் வைத்து சிந்தனைத் தாதும் சேர்த்து படிப்போர் நுகர்ந்து இன்புறத்தக்க தேனாக்கி வெளியிடுவதில் நிறைவுகாணும் செயல் முனைஞர்.

*காவற் பெரும்தெய்வ மாகக் கருத்ததனில்*
*மேவும் வயிரவர்தம் மேன்மையெலாம் - பாவிலுள*
*பன்னூல்கள் தேர்ந்து பருப் பொருளாத் தந்தனன்சொல்*
*மன்னன் மயில்வா கனம்.*

*பிள்ளைக்கவி வ. சிவராசசிங்கம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரவ மான்மியம்

## தோற்றுவாய்

*வாதவூரன் தனதுவா சகத்தே னொடுவந்தி*
*மாமதுரப் பிட்டுக்கு மண்சுமந்த - வேதியனே*
*பாதியினை பார்வதிக்கு நல்குபரனே வடுகன்*
*காரியத்தைக் கூறுவதைக் கா.*

*கத்து கடலுலகோர் கண்டு வணங்கிடவே*
*எத்திசையு நின்றிலங்கி இன்பளிக்கும் - உத்தமனாம்*
*சிற்பரனைச் சிந்தித்து வயிரவரின் சீருரைக்க*
*கற்பகமே என்றனக்கு காப்பு.*

*முத்தனேகு மரனென்பேன் முழுமுதற்பர னேஎன்பேன்*
*சித்தத்தில் தெளிவுவேண்டில் சிவசிவஎனச் சிந்திப்பேன்*
*வைத்தியர் வந்துவந்து வழிவகை காட்டா வண்ணம்*
*நேத்திரம் மூடும்போது நேத்ரபாலா காப்பாயே.*

வைரவ மான்மியம் என்னும் தலையங்கம் இரண்டு சொற்களைக் கொண்டது. ஒன்று வைரவர். மற்றது மான்மியம். வைரவர் என்பது வடமொழியில் பைரவர் என்று உச்சரிக்கப்படுகிறது. மான்மியம் பெருமை என்னும் பொருள் கொண்டது.

வைரவ மான்மியம் என்னும் நூல் சிவனது திருவருளினாலே ஆன்மாக்கள் உய்யும் வண்ணம் சிவன் வைரவ மூர்த்தியாகி வந்தமையை பல புராணங்களிற் கண்டவாறு அருளாளர்களும் அனுபூதிமான்களும் உரைத்தவற்றைத் தொகுத்துத் தருவதாக அமைந்துள்ளது.

இத்தொகைநூல் வைரவ வழிபாட்டுக்கு ஏற்றதாக இருக்குமென்று எண்ணங் கொண்டேன். பல இன்னல்கள் முட்டி மோதின எனினும் சிறியேன் முன்னர் வெளியிட்ட சிந்தனைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவை முதலாவது, ஒன்பதாந் திருமுறை ஒரு நோக்கு, சிந்தனைக் கோவை இரண்டாவது என்னும் இம் மூன்றும் என் எண்ணத்திற்கு உரமூட்டின.

வைரவக் கடவுளை பல நாமங்களால் அழைப்பார்கள்.

*சூடாமணி நிகண்டு:-*

"முத்தனே குமரன் பிள்ளை
முடுவல் வெம் படையோன் காரி
சித்தன் கேத்திரபாலன் னே
செந்தொடைக்குரிய கோமான்
வித்தகன் ஞாளியூர்தி
விறற் கருங்கு திரையாளி
வைத்த சீர்வடுக னின்ன
வைரவ நாமமே"

முத்தன், குமரன், பிள்ளை, முடுவற் படையோன், காரி, சித்தன், கேத்திர பாலன், செந்தொடைக்குரிய கோமான், வித்தகன், ஞாளியூர்தி, கருங்குதிரையாளி, வடுகன் இப்பெயர்கள் காரணங் கொண்டும் இயல்பாகவும் வந்தன. இயன்றளவு காரணங்கண்டெழுதியுள்ளேன். இவைகளை விட

*அபிதான சிந்தாமணியில் :-*

கண்டாவைரவர், உன்மத்தவைரவர், கபாலவைரவர், விபூஷண வைரவர், மார்த்தாண்ட வைரவர், சுதந்திர வைரவர், சுவேச்சர வைரவர், உலோகவைரவர், உக்கிர வைரவர், பிரச்சயனவைரவர், நிர்வாண வயிரவர், பூஷண வைரவர் என்று கூறப்பட்டிருக்கிறது.

*நம் பெரியோர்கள்:-*

காலவைரவர், மஹாவயிரவர், க்ஷேத்திரபாலர், பிரும்ம சிரஸ்சேத மூர்த்தி என்று பலவாறு கூறுவர். வடுகதேவர், சட்டநாதர், நரசிம்ம வைரவர் என்பன தமிழ் நூல்களால் எடுத்தாளப்படும் பெயர்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புராணங்களில் கூறப்பட்டுள்ள வைரவ மூர்த்தங்கள்:-

### மஹாவயிரவர்:-

ஒளி பொருந்திய உக்கிரமும், எண்கரங்களில் சர்ப்பம், டமருகம், அங்குசம், கட்கம், அமிர்தம், கபாலம், வரம், அபயம் ஆகியவற்றைத் தாங்கியும் உள்ளவர். மரகதம் போன்ற நிறமுடையவர், சந்திரனைச் சிரசில் கொண்டவர், ஜடாமுடியும், மூன்று கண்களுமுடையவர் என்று சிற்ப சாஸ்திர நூல்கள் கூறுகின்றன. இவரது வாகனம் சுவானம் (நாய்) ; ஆயுதம் சூலம்.

### காலவைரவர்

கபாலத்தைக் கையில் ஏந்தியவர், காதுகளில் அழகிய குண்டலங்களை தரித்திருப்பவர், கையில் தண்டம் இருக்கும், கருமை நிறமுடையவர், சர்ப்பத்தைப் பூணூலாகக் கொண்டவர், போர்க் கோலக் காட்சியால் இடையூறுகளை மாய்த்து தன் பக்தர்களுக்கு இன்பமளிப்பவர்.

### உக்கிர வைரவர்

காண்போரை மிரளச் செய்யும் உக்கிர வடிவமாய் இருப்பார். முகத்தில் கோபக்கனல் கொந்தளிக்க ஆவேசத்துடன் இருந்து பிரம்ம சிரச்சேதம் செய்தவரும் இவரே. ஆலய சிற்பங்களில் காண்கின்ற உக்கிர வைரவர் எனப்படுபவர். ஜடாமுடி, தீச் சுடர், பயங்கர ஆயுதம் என்பனவற்றைக் கொண்டு இருப்பார்.

### வடுகநாதர்

சுவான (நாய்) வாகனத்தை உடையவராய் அருள் பாலிப்பவர். சாதாரணமாக இப் பெயரையே பேசுவார்கள். காண்போர்க்கு எளிமையான முறையில் அருள் பாலிப்பார். வடுகநாதர் கருணைமிக்கவர். அட்சமாலை, கமண்டலம் ஆகியவற்றைக் கொண்ட இவர் வாக்தேவியுடன் இருப்பார். தன்னை உள்ளன்போடு வணங்குபவர்களுக்குக் குறையாத அருளைக் கொடுப்பார். பல ஆலயங்களில் வடுகநாதருக்கு வேறான ஸ்தாபனமும், சிற்ப வேலை அமைந்த கோபுரங்களுமுண்டு. தஞ்சை, மதுரை,



பொதுசன நூலகம்
விசேட சேர்க்கைப் பகுதி
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காஞ்சி, காசி இவைகள் விசேடம் பெற்றன. பிரமதேவர் செருக்கடைந்த காலத்து அவரது ஐந்து சிரங்களுள் ஒன்றைக் கிள்ளிய சிவன் திருவுரு.

**சட்டைநாதர்**

வைரவமூர்த்தியின் மற்றோர் வடிவம். நரசிம்ம உக்கிரத்தைக் குறைத்தவர். சட்டைநாதருக்கு தஞ்சை மாவட்டத்து சோழர்களினது பழைய கோயில்களில் சிற்ப படிமக்கோலங்கள் உண்டு. ஆவேசமான நரசிம்மத்தைக் கெளவி அதன் உக்கிரத்தை குறைக்க இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கின்ற பாணியில் சிற்பத்தைக் காணலாம். சீர்காழியில் தோணியப்பர் கோயிலில் வைரவரின் ஆபத்துத் தாரண மூர்த்தம் எனப்படுஞ் சட்டைநாதரைக் காணலாம். விஷ்ணு மூர்த்தியின் செருக்கடக்க எடுத்த நரசிம்ம சாபத் திருவுரு வுக்குப் பின்பு விஷ்ணு மூர்த்திக்குத் தரிசனம் தந்த திருவுரு,

***சீர்காழிப்புராணம்***

***"துங்கமாமணித் தூணில் வந்து இரணியன் தோள் வலிதனை வணங்கும்***
***சிங்கரத்து உரி அரைக்கு அசைத்து உலகு எலாம் தேர்ந்து அளந்து அவன் மேனி***
***அங்கம் யாவும் ஓர் கதையதாய்க் கொண்டு அதன் அங்கியாய்ப் புனைகாழி***
***சங்கவார் குழைச் சட்ட நாயகன் துணைத் தாமரைச் சரண் போற்றி"***

இவ்வாறு கூறுகிறது.

திருவண்ணாமலை, அருணாசலேஸ்வரர், ஆலயங்களில் உள்ள வைரவ சந்நிதி ஏகப்பிரபல்யமாக விளங்குகிறது. இன்றும் பெருமை யுடன் விளங்குகிறார் அண்ணாமலை வைரவர். இது பார்ப்பதற்கு மிக அழகியது. சிற்பம். தஞ்சை மாவட்டம் பட்டீச்சுவரத்தின் ஆலயத்திலுள்ள வைரவ மூர்த்தியும், க்ஷேத்திரபால புரத்திலுள்ள மூர்த்தியும் மிக அழகானதாகும், பிரசித்தமானதும் கூட.

**அஷ்ட வைரவர்**

''பராக்கியம்'' என்னும் நூல் எட்டு வைரவர்களின் சிறப்பைப் பற்றிக் கூறும். இவைகள் காலவைரவர், கல்பாந்த வைரவர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உக்குரோதவைரவர், கபாலவைரவர், ஸம்ஹாரவைரவர், உன்மத்தவைரவர், சண்ட வைரவர், உக்கிர வைரவர் என்னும் பெயர்களாகும். சென்னைக்கடுத்த திருவான்மியூரில் சந்நிதிகள் உண்டு . ஆலய பலிபீடத்தில் அட்ட வைரவர்கள் உறைவதால் பலிபீடத்தின் பூசையின் போது இவர்களுக்கும் பூசை உண்டு.

ஆலயங்களில் வைரவமூர்த்தி காவல் தெய்வமாக அமைந்துள்ளார். கோவிற் பூசைகள் எல்லாம் முடிந்து கடைசியாக இவரைப் பூசித்து இவ்வாலயத்தைக் காப்பாயாக என்று வணங்கி திறப்பை ஒப்புவிப்பதும் வழக்கமாயுள்ளது. இவற்றை விட முனீஸ்வரர் என்ற பெயரோடு அமர்ந்திருப்பதையும் காணலாம். ஆலயங்கள் திறந்து பூசிப்பதன் போதும் இவர் பூசிக்கப்படுகிறார்.

நதிதீரங்களில் நீராடச் செல்பவர்களும் முதலில் வைரவக் கடவுளை வணங்கியே நீராடச் செல்வார்கள்; ஆன காரணங்களால் காவல் தெய்வம் என்பது பொருந்தும்.

**ஞானவைரவர்**

சாதாரணமாக எல்லா இடங்களிலும் காணப்படும் கடவுளாவர். இவரை நாம் விநாயகரை வணங்குவது போல தரிசனத்துக்கு இலகுவாக்குகிறோம். முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் உலகத்துக்கு கர்த்தா என்று பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் கூறியதுமன்றி அவருடைய திருக்குமாரர்களுள் வைரவக் கடவுளும் ஒன்றென்றார். எவ்வாறாக இம்மூர்த்தம் உண்டாயது என்பது அறியா வினாவாகும்.

ஒன்றாய், ஆதியாய், நிர்மலமாய், வேதங்களுமறிய முடியாத பரஞ்சுடராய், வெண்மதியும், புனைந்த குழைகளையுமுடைய பரம்பொருளாய், முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப்பழம் பொருளானவர். மாதவனும் மலரவனும் அறியமுடியாத ஒளிவளர் விளக்கு. பாரொடு விண்ணாய்ப் பரந்த பொருள். மாயையின் பிடியினின்று விலகமாட்டாதிருக்கும் எம்மனோர்க்கு எப்படி அறியமுடியும் இவரை.

நினைப்புமாய் மறப்புமாகி, நினைவினுக்கு எட்டாதொன்றாய், அனைத்துமாய் நின்று அருமறைக் கொழுந்தாய் உள்ளவர், கடுக்கையாங் கண்ணியோடு புனிற்று வெண்திங்கள் புனைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செஞ்சடை, அரவணிந்த அங்கம், புரமூன்றெரித்த புன்முறுவல், இவ்வாறாய சிவன் அடியார்களுக்கு அனுக்கிரகஞ் செய்யவும், துஷ்டரை நிக்கிரகஞ்செய்யவும் எடுத்த மூர்த்தங்களுள் வைரவக் கடவுளுமொருவர் ஆவர்.

சிவன் என்னும் நாமம் தனக்கேயுரிய செம்மேனியெம்மான் என்றும் சிவனோடொக்கும் தெய்வம் தேடினுமில்லை என்றும் தேவ தேவனென்றும் பலவாறாகப் போற்றுவர். நிறை மலம் அனாதியின் நீங்கி நிற்றலின் இறைவன் என்றார். வேதங்கள் நான்கும் விரிவாக இவரின் பெருமையைக் கூறுகின்றன. வைரவக்கடவுள் என்ற பெயருடன் இவர் புகழ் கூறப்படுகின்றது.

கடவுள் நிறைந்த அன்பும், இன்பமும், தூய்மையும், ஆற்றலும் உள்ளவர். கடவுளுக்கு இரண்டு நிலைகள் உண்டு. ஒன்று சிறப்பு இயல்பு என்று கூறும் சொரூபலட்சணம். ஊரிலான், பேரிலான், குணமிலான் என்பதினாலே

''மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சி
மயானத்தான் வார்சடையா னென்னினல்லான்
ஒப்புடைய னல்ல னொருவ னல்லன்
ஓரூர னல்லனோ ருவம னில்லி
அப்படியு மந்நிற மவ்வண்ணமு
மவனருளே கண்ணாகக் காணினல்லால்
இப்படிய னிந்நிறத்த னிவ்வண்ணத்த
னிவனிறைவ னென்றெழுதிக் காட்டொணாதே ''

திருநாவுக்கரசு நாயனாரும் திருத்தாண்டகத்தில் கூறினார்.

இறைவனின் இரண்டாவது நிலை பொதுவியல்பு என்னும் தடத்த லட்சணம். இது ஆன்மாக்களுக்கு அருள் புரிய எழுந்தருளும் நிலை. ''அறிதரு சிவனே எல்லாம் அறிந்து அறிவித்து நின்றவன்'' என்கிறார் சிவஞான சித்தியார்.

இறைவனை அருவத்திருமேனி, அருவுருவத் திருமேனி, உருவத்திருமேனி. என மூவகையுள் அடக்கலாம். நாதம், விந்து, சக்தி, சிவம் என்பன அருவத் திருமேனியுள் அடங்கும். சிவலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருவுருவத் திருமேனி. உருவத்திருமேனி போக வடிவம், கோரவடிவம், யோகவடிவம் என மூன்றாகும். இவற்றுள் சிவன் கோரவடிவமுடையவராய் ஆன்மாக்களுள் துஷ்டரை நிக்கிரகஞ் செய்து சிஷ்ட பரிபாலனஞ் செய்பவராய் உள்ளவரே நாம் கூறும் வைரவக்கடவுள், ஆன்மாக்களின் வினைகள் கழிவதற்கு உபகரிப்பது வீரட்டானம். இது பற்றி வீரட்டானத்துறை அம்மானே என்றார்.

காசி காண்டம் வைரவரின் பெயரை எடுத்தருளுகிறது.

*"காண்டலோடு மலர்க் கிழவனுள்ள மதனிற் கனல் கொளுத்தி*
*தூண்டுமுனிவு பிடித்துந்தவெனது புருவந்துணை நாப்பண்*
*நீண்ட சடையினொடும் புதல்வனலையோ நீயென்ன*
*மூண்ட வெகுளி* **வயிரவனை** *முக்கட்கனியாண்டளித்ததுவே.*

ஒரு சமயம் பிரமாவுக்கு மயக்கம் காரணமாக அகந்தையுண்டாகவே அவரின் அறியாமையைப் போக்குவதற்கு வைரவமூர்த்தம் உண்டானது. இதன் விரிவை மான்மியத்தில் காணலாம்.

வைரவர் பொதுவாக நீலமேனியும், சிலம்பொலிக்கும் திருவடியும், பாம்புகள் பொருந்திய திரு அரையும், தலைமாலைகள் புரளும் திரு மார்பும், சூலம், மழு, பாசம், உடுக்கு இவைகள் ஏந்திய திருக்கரங்களும் மூன்று கண்களும் பெரிய கோரப்பற்கள் இரண்டும், சிவந்த சடையும், கோபச்சிரிப்பும், உக்கிரவடிவுங் கொண்டவர். சர்வ சங்கார காலத்தில் பிரமா, விஷ்ணு முதலிய தேவர்களின் தலைகளைக் கொய்து புவனங்களை ஒடுக்கியவர். இக்காரணத்தினாலே காலவைரவர் என அழைக்கப்படுகிறார். வைரவ மூர்த்தத்தில் காலவைரவர், கற்பாந்த வைரவர், சங்கார வைரவர், உன்மத்த வைரவர், உக்கிர வைரவர், கண்ட வைரவர் ஞான வைரவர் என்பன காரணங் கருதி வந்தமைதல் காண்க.

திருநாவுக்கரசு நாயனார் தேவாரம் :

**"தன்னடியார்க் கருள்புரிந்த தகவு தோன்றுஞ்**
**சதுர் முகனைத் தலையரிந்த தன்மை தோன்றும்**
**மின்னனைய நுண்ணிடையாள் பாகந் தோன்றும்**
**வேழத்தி னுரிவிரும்பிப் போர்த்த றோன்றும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்னிய செஞ் சடை மேலோர் புனலும் பாம்பும்
தூயமா மதியுடனே வைத்த தோன்றும்
பொன்னனைய திருமேனி பொலிந்து தோன்றும்
பொழிறிகளும் பூவணத்தெம் புனிதனார்க்கே.

சதுர்முகனைத் தலையரிந்த தன்மை, வேழத்தினுரி விரும்பிப் போர்த்தமை என்பன வைரவக் கடவுளால் செய்யப்பட்டன என்பதை திருமுறைகளிலும் காணலாம். காசி காண்டத்திலும்

"இமையாப் பறவையேற் றெகினப் பாகனுள்ள ச் செருக்கினையும்
துமியாத் திருப்பாற்கடற் சேர்ப்பனுள்ளச் செருக்கும் தொலைத்தியென
அமையா வெகுளிக்கனல் கொள்ளுங்குமர லோன்னைந்தாந் தலையதனை
கமை **தீர்க்காரி** தன்னிடக்கை யினுகிராற் கிள்ளிக் களிப்புற்றான்."

காரி என்னும் வைரவ நாமமும், உகிராற் கிள்ளியதும் பெறப்பட்டன.

காவற் கடவுளாகக் கிராமங்கள் தோறும் சிறந்து விளங்கும் வைரவப் பெருமானின் பெருங்கருணையைப் போற்றி நிற்கிறோம். காசி, வைரவப் பெருமான் தனித்து ஆளும் திருத்தலமாக விளங்குகிறது. இதை காசியின் தனிச்சிறப்பு, காசிகண்டத்தில் வைரவர், என்னும் தலையங்கங்களில் சுவைக்கலாம். பிள்ளையாரைப் போல வைரவப் பெருமானும் வேம்பு, ஆல், மா, முதலிய மரங்களிலும் சூலாயுதத்தை அறிகுறியாக வைத்து வணங்கப்படுபவர்.

அக்கால அந்நியராட்சியால் நாம் துன்பமுறும் பொழுது காவற் தெய்வமாக விளங்கியவர் வைரவரே, அன்றியும் பிரமஹத்தி தோஷ நிவிர்த்திக்கும் வைரவ வணக்கம் சிறந்தது என்பது புராணங்கள் வாயிலாக அறியுமாறுள்ளது.

சில ஆலயங்களில் வைரவக் கடவுளுக்கு நடக்கும் வழிபாட்டு முறைகளையும் தனித்தனி ஊர்களில் இருந்து எடுத்துக் கோர்த்துள்ளேன். பொங்கல், படையல், மடைபரவுதல், வடைமாலை சாத்துதல், செவ்வரத்தம் பூமாலையணிதல் என்பன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா ஆலயங்களிலும் பொதுவாக நடைபெற்று வருவதைக் காணலாம். சித்திரைப் பரணி நாள் வைரவரின் விசேட நாளாகும். வெள்ளி, செவ்வாய் ஆகிய கிழமை நாட்களும் பிரதானம். வைரவர் பூசை நடக்கும்போது இடைமறித்தல், குறுக்கேபோதல், கர்ப்பிணிகள் ஆலயங்களை வலம் வருதல் என்பன தவிர்க்கப்பட்டன.

அந்நியர் ஆட்சிக்காலத்தில் பூசை செய்ய சமயாசாரியர்கள் பயந்து மறுத்தனர். அதனால் சமயகுருமாராக பூசாரி என்று அழைக்கப்படுவோர் பூசை செய்தார்கள். இக்காலத்திலும் பூசாரியார் என்று அழைக்கும் வழக்கம் இருந்து வருகிறது.

வைரவ உபாசனை வீரம், ஞானம், தைரியம் போன்ற பாக்கியங்களை அளிக்க வல்லது. நல்லியல்புகளும் தர்மமும் நலிந்து அறியாமை ஆகிய இருள் கவ்விவரும் நாட்களில் மீண்டும் புத்தொளியும் புதுவாழ்வும், பெற வடுக நாதனை உபாசித்து வணங்கவேண்டியது அவசியமாகும். பரதகண்டத்திலுள்ள வைரவ சந்நிதிகளுள் காசியில் உள்ள கால வைரவர் கோவில் மிகப் பிரசித்தி பெற்றது. இதனைக் காசிகண்டத்தில் காலவைரவர் என்னும் கட்டுரை விளங்கவைக்கும். காசிக்குச் செல்லும் எவரும் அப்பெருமானை வணங்காமல் வருவதில்லை. நாயன்மார்களது திருமுறைகளிலும் சிவனது மூர்த்தமாக வைரவக்கடவுள் வர்ணிக்கப்பட்டுள்ளார்

காசியில் பாபத்துக்கு தண்டனை கொடுக்க இயமதர்மராசாவுக்கு அதிகாரங்கிடையாது. காசியில் யாராவது இறந்தால் யமவாதனை கிடையாது. காசியில் வைரவர்தான் சிட்ஷகர். காலவைரவர் காசிநகரின் சேனாபதி. ''காசியின் தனிச்சிறப்பு'' இதனை விளக்கமாகக் கூறும். வைரவ உபாசனை உக்கிரமானது. விரக்தன், கபாலிக்கன், வைராகி, போன்ற சாதகர்களால் சித்தி செய்யக்கூடியது. இது தேவதா உபாசனை. எல்லோரும் செய்யக்கூடாது. வேதங்களில் ரிக்வேதம், அதர்வணவேதம் என்பன வைரவரைப்பற்றி விரிவாகக்கூறும்.

காசிகாண்டத்தில் வைரவரின் சரித்திரம் விஸ்தாரமாகக் கூறப்படுகிறது. பிரமன் சிவனை தூஷித்ததினால் வைரவராக வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் தலையைக் கிள்ளி எறிந்து விடுகிறார். அதனால் பிரமஹத்தியைப் போக்குவதற்கு உலகம் பூராவும் அலைகிறார்.

இவ் வைரவர் நர்மதா நதிதீரத்தில் ரிஷிகளிடம் சென்று தன் குறையை முறையிடுகிறார். முனிவர்கள் அது சமயம் 'காசி போவீராகில் உம் பிரமஹத்தி தீரும்' என்று கூறி 'காசி எங்கிருக்கிறது என்று கேட்பாயானால் ஆனந்த கானம் என்ற ஆரணியம் இருக்கிறது. அதற்கே காசி என்று பெயர்' என்று அநேக அடையாளங்களைக் கூறினார்கள். கடைசியாக 'எந்த இடத்தில் உம் கையில் இருக்கும் கபாலம் தெறித்து விழுகிறதோ அதுதான் காசி' என்று புரிந்து கொள். கபாலம் விழுந்தால் பிரமஹத்தி நீங்கி விட்டது' என்று எண்ணுவாயாக. கபாலம் கையில் இருப்பதால் கபாலவைரவர் என்று அழைப்பார்கள். எல்லாமும் இப்படியே நடந்தது. கபாலம் தெறித்து விழுந்தது. உடனே இதுதான் ஆனந்த கானம் என்று தெரிந்தார். விசாகமோசன தீர்த்தத்தில் ஸ்னானம் செய்து விஸ்வநாதரைப் பிரார்த்தித்து ஸ்தோத்திரம் செய்யப் பகவான் விஸ்வநாதர் வைரவரை அனுக்கிரகித்து இன்று முதல் காசியில் இருந்து கொண்டு காலன் அதிகாரம் இங்கு செல்லாததாலால் காலனின் காரியத்தை நீயே கவனித்துக்கொள்'' என்று சொல்லி காலவைரவர் என்ற பெயரையும் வைத்து காசிக்கு சேனாதிபதியாக்கினார்.

வைரவர்தான் பிரளய காலத்தில் சகல ஜகத்தையும் ஸம்ஹாரஞ் செய்து வந்தார் என்ற விஷயத்தை ஹரத்ததாசாரியார் சருதிஸரித்திமாலை என்ற கிரந்தத்தில் கூறி இருக்கிறார். அதன் சாராம்சம் எல்லோராலும் வைரவ உபாசனை தீவிரமாகச் செய்யக் கூடாது என்பதாகும். எனினும் தீமைகள் அகல பூஜிக்கப் படவேண்டிய தெய்வநிலைகளில் பூஜிக்க வேண்டும்.

காசி கண்டத்தில் (காண்டம் இக்காலத்தில் கண்டம் என வழங்கப்படுகிறது) காலவைரவர். கந்தபுராணத்தில் கபாலீஸ்வரர். காசியின் தனிச் சிறப்பு என்பன இலகுவாக விளங்கக் கூடியனவாக உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் ஈழ நாட்டில் பரம்பரையாக வணங்கி வந்த காத்தல் அதாவது காவல் கடவுளின் அதிசயங்கள் உள்ள கதைகளும் இணைக்கப்பட்டு தொகுப்பு நூலைப் பெருமைப்படுத்துகின்றன. ஒவ்வோர் பட்டினத்திற்கும் வழிபாட்டு முறைகளும் பெயர்களும் வேறுபட்டிருப்பதைக் காணலாம். அதிகமாக ஞானவைரவர் என்ற பெயர் இடம் பெறுகிறது. காவலூரில் காவல் தெய்வத்தைக் கூறும் கதை சேர்க்கப்பட்டுள்ளது. கரம்பொன் ஞானவைரவர் ஊஞ்சல் இந்நூலைச் சிறப்புறச் செய்கிறது.

படைத்தல், காத்தல் ஆகிய தொழில்களைச் செய்கின்றவர்களாகிய திசைமுகனும் திருமாலும் இருந்து வந்தாலும் வைரவரின் அருட்கடாட்சம் அனைவரும் அறிய வேண்டும் என்று சிவம் எண்ணியதால்

*"தீய தன்றடுஞ் செயலும் நல்லரும்*
*ஆயின் ஆவிகள் அழிந்துந் தோன்றியும்*
*ஒய்வி லாதுழன் றுலைவு றாமலே*
*மாய்வு செய்திறை வருத்தம் மாற்றலாம்"*

என்னும் கந்தபுராணச் செய்யுளை நோக்கும் போது பிரமதேவனின் வரம் பெற்று அவர் வாக்குக் கிணங்குவேன் என்று முடிவு செய்த கயாசுரன் சிவனைக் கண்டவுடனே வாக்குறுதியை மறந்து போரிட்டான். இதனால் தோல் உரிபட்டான். வைரவக் கடவுளின் பெருமையை விளக்க இக்கதை வேண்டப்பட்டது.

திருஇசைப்பாவில் திருமாளிகைத் தேவர் சிவனின் பெருமையினால் வைரவரைத் தொடர்ந்துள்ளார்.

**"தக்கனற் றலையு மெச்சன வன்றலையுஞ்**
**தாமரை நான்முகன் றலையு**
**மொக்க விண்டுருள வொண்டிருப்புருவ**
**நெறித் தரு ளியவுருத் திரனே**
அக்களி புலித்தோ லாடைமே லாட
வாடப் பொன்னம்பலத் தாடுஞ்
சொக்கனே யெவர்க்குந் தொடர்வரி யாயைத்
தொண்டனேன் தொடருமா தொடரே"

என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாசகப் பெருமான் திருப் பொற்சுண்ணத்தில் இடம் கொடுக்கிறார்.

" அயன்தலை கொண்டு செண்டாடல் பாடி
அருக்கன் எயிறு பறித்தல் பாடிக்
கயன்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக்
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டு கொண்ட
நயந்தனைப் பாடி நின் றாடியாடி
நாதர்க்குச் சுண்ணம் இடித்துநாமே"

அயன் தலை கொண்டாடல், கயன்தனைக் கொன்றுரி போர்த்தல் என்பன இடம் பெற்றன.

திரு ஞானசம்பந்தமூர்த்தி நாயனாரால் திருப்பிரமபுரம் முதலாந் திருமுறையில் நாலாம் பா.

" விண் மகிழ்ந்தமதி லெய்தது மன்றி விளங்குதலை யோட்டில்
உண்மகிழ்ந்து பலி தேரியவந்தென துள்ளங் கவர்கள்வன்
மண்மகிழ்ந்தவர வம்மலர்க் கொன்றை மலிந்தவரைமார்பிற்
பெண்மகிழ்ந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே"

"விளங்கு தலையோட்டில் உண்மகிழ்ந்து, பலிதேரியவன்"

" ஊனியன்ற தலையிற் பலிகொண்டுலகத்துள்ளவரேத்தக்
கானியன்ற கரியின்னுரி போர்த்துழல்கள்வன் சடைதன்மேல்
வானியன்ற பிறைவைத்த வெம்மாதி மகிழும் வலிதாயத்
தேனியன்ற நறுமா மலர் கொண்டுநின் றேத்த தெளிவாமே."

"கானியன்ற கரியின்னுரி போர்த்துழல் கள்வன், தலையிற் பலியேற்றல்"

மூன்றாம் பதிகம், ஆறாம் பா

"ஆறணி செஞ்சடையானழகார் புரமூன்றுமன்று வேவ
நீறணியாக வைத்தநிமிர் புன்சடையெம் மிறைவன்
பாறணி வெண்டலையிற் பகலே பலியென்று வந்துநின்ற
வேறணி கோலத்தினான் விரும்பும் புகலியதே"

" பாறணி வெண்டலையிற் பகலே பலி"

(நூற்றி நாலாம் பதிகம், மூன்றாம் பா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''செய்யதிரு மேனி மிசை வெண்பொடியணிந்து கருமா னுரிவை போர்த்
துதைய மிடு மென்று மடமங்கை யொடகந் திரியுமண்ணலிடமாம்
வையம்நிலை மாறிடினுமேறுபுகழ்மிக் கழிவிலாத வகையார்
வெய்ய மொழி தண்புலவருக்குரை செயாத வர் திருடியே.''

''கருமானுரிவை போர்த்தையமிடுமென்று மடமங்கையொடகந்திரியும்''
(பதிகம் முன்னூற்று முப்பத்தாறு. ஆறாவது பா)
இவைகளினால் வைரவ மூர்த்தம் சிவாம்சம் உடையதென்பது தெளிவாகிறது.

திருநாவுக்கரசு நாயனார் ஆறாவது திருமுறை திருவாவடுதுறைப் பதிகம்

'' கோணாரணங்கத் தோள் மேற்கொண்டு
கொழுமலரான் தன் சிரத்தைக் கையிலேந்திக்
காணார் களிற்றுரிவைப் போர்வை மூடிக்
கங்காள வேடராய் எங்குஞ் செல்வீர்
நானாருமக் கோர் வினைக் கேடனே
னல்வினையும் தீவினையு மெல்லா முன்னே
ஆனாயடியேனை யஞ் சேலென்றா
யாவடு தண்டுறை யுமமரரேறே''

''கொழுமலரான் சிரத்தைக் கையிலேந்தி ''

சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்
திருவெஞ்சமாக்கூடல் என்னும் திருப்பதிகம், நாற்பத்திரெண்டாம் பா

''கடமாகளியானை யுரித்தவனே கரிகாடிட மாவனல்வீசிநின்று
நடமாடவல்லாய் நரையேறுந்தாய் நல்லாய் நறுங் கொன்றை நயத்தவே
படமாயிரமாம் படுத்துத்திப் பைங்கண்பகுவாயெயிற் றேடழலேயுமிழும்
விடவாரரவாவெஞ்சமாக்கூடல்விகிர்தாவடியேனையும்வேண்டுதியே''

''கடமாகளியானை உரிபோர்த்தவனே''
இவ்வாறே திருமுறைகளிலும் வைரவமூர்த்தியின் நினைவினை குரவர்கள் நால்வரும் எடுத்தாண்டுள்ளார்கள்.

10524



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுதுகுன்றப் பதிகம் நாற்பத்திமூன்று. பா மூன்று

"தொண்டர்கள் பாட விண்ணோர்கள் தவுழிதர் வீர்
பண்டகந் தோறும் பலிக்குச் செல்வதும் பான்மையே
கண்டகர் வாளிகள் வில்லிகள் புறங்காக்குஞ்சீர்
மொண்டகை வேள்விமுழக்கருமுது குன்றரே"

இப்பதிகத்தில் பண்டகந்தோறும் பலிக்குச் செல்வதும் பான்மையே" என்று காசி வாசியாயிருந்து பலியேற்றது ஞாபகமாகிறது.

இப்பதிகத்தில் எட்டாவது பா

"அந்தி திரிந்தடியாரு நீருமகந்தோறும்
சந்திக டோறும் பலிக்குச் செல்வது தக்கதே
மந்தி கடுவனுக் குண்பழநாடி மலைப்புறம்
முந்தியடி தொழ நின்ற சீர்முது குன்றமே"

இங்கே "சந்திகள் தோறும் பலிக்குச் செல்வது தக்கதே" என்னும் இடத்தில் பலியேற்றது படிப்புக்குரியதாகும்.

திருக்கச்சியேகம்பம் என்னும் திருப்பதியினை நினைந்து பாடும்போது பதிகம் அறுபத்திஒன்று பா மூன்று

"திரியுமுப்புரந்தீப்பிழம்பாகச்செங்கண்மால்விடைமேற்றிகழ்வானைக்
கரியினீருரி போர்த்து கந்தானைக் காமனைக் கனலாவிழித்தானை
வரிகொள்வெள்வளையாளுமைநங்கை மருவியேத்தி வழிபடப்பெற்ற
பெரியகம்பனை யெங்கண்பிரானைக் காணக் கண்ணடியேன்
பெற்ற வாறே.

இப்பாவில் "கரியினுரி போர்த்தானை" என யானை உரிபோர்த்தல் காணப்படுகிறது. இவ்வாறே பற்பல வான பதிகங்களின் பாக்களில் வைரவமூர்த்தம் போற்றப்படுகிறது.

இனி நாம் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் வைரவரைப் பற்றி எப்படி ஞாபகப்படுத்துகிறார் என்பதைப் பார்ப்போம்.

"இல்லாளே முப்பத்திரண்டறமுஞ் செய்திருப்பச்
செல்லார் பொழிற் காசிச் செல்வனார் - மெல்லப்
பரக்கின்ற புண்ணீர் படுதலை கொண்டையம்
இரக்கின்ற வாறென் சொல்கேன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வெண்பாவில் இல்லாள் உமாதேவியார். இவர் நிலை பொருளில்லாதவராய் இருப்பவர் எனக் கருதுகிறார். செல்வனார் அகிலேசர் செல்வமுடையவர் எனக் கருதுகிறார். புண்ணீர் - இரத்தம், ஐயம் - பிச்சை எனப் பொருள் கொண்டு பொருளில் லாதவளான மனைவி முப்பத்திரண்டு அறங்களையும் செய்யும் செல்வராகிய கணவர் தலையோட்டால் பிச்சை யெடுப்பது என்ன வியப்பு என்றபடி தலையோட்டால் இரத்தப் பிச்சை யெடுத்த காசி நகரில் சிவனே வைரவமூர்த்தமாக வந்தது பிரமஹத்தி தோஷத்தை நிவிர்த்தி செய்வதற்காகவே.

''பங்கயாசனன் ஒரு தலை கிள்ளியது வெளிப்படையாயிற்று''

இன்னும் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்,

காசியில் பாவஞ் செய்தவருக்கு யமதண்டனை இல்லை என்பதும் வைரவ தண்டனை மட்டும் உண்டு என்பதும் புராண வரலாறுகள். இதைத் தலைவி கூற்றாக

'' ஆமோ வவிழுத்தத் தையரே பெண்பழிவீண்
போமோ வயிரவர்தஞ் சாதனமும் பொய்யாமோ
தேமோது கொன்றை செழுந்தாம நல்காநீர்
தாமோ தருவீருமது பரந்தாமமே (655ம் பா)

''வயிரவர் தஞ் சாதனமும் பொய்யாமோ '' என்று கூறுகிறார்.

திருநாகைக்காரோணப் புராணம் சுந்தரவிடங்கற் படலத்தில் களம் த. ச. மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள்.

''திரிபுர மெரித்தவாறுஞ் சிலைமதிற் காய்ந்தவாறுங்
கரியத ளுரித்த வாறுங் காலனைக் காய்ந்தவாறும்
விரிமலர்க் கிழவன் சென்னி விழுத்திய வாறுநெய்த் தோர்
அரியுடற் கவர்ந்த வாறும் மனத்தொடு வகையோர்பாட

எனக் கூறுகிறார், சித்தாந்த சைவமணி த.சி. மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள்.

திரி புர மெரித்தது அதிகை வீரட்டானம். சிலைமதிற் காய்ந்தது குறுக்கை வீரட்டானம். கரியதள் உரித்தது வழுவை வீரட்டானம். மலர்க்கிழவன் சென்னி விழுத்தியது கட்டியூர் வீரட்டானம். நெய்த்தோர் அரியுடற் கவர்ந்தமை வைரவக் கோலத்துடனாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவன், விநாயகர், முருகன், திருமால் ஆகியோருக்கு புராணங்கள் இருப்பது போன்று வைரவருக்கு ஒரு புராணம் இல்லை. வைரவ மான்மியம் என்னும் ஓர் தொகுப்பு நூலை இயன்றவரை ஆக்கியுள்ளேன்.

வைரவர் மகிமையைப்பற்றிய தகவல்கள் பல்வேறு நூல்களில் ஆங்காங்கே காணப்படினும் அவையெல்லாம் இலகுவில் கிடைக்குமாறில்லை. ஆதலின் இத்தகவல்களைத் தொகுத்து வைரவ மான்மியத்துள் அடக்கியுள்ளேன். அதில் தவறுகள் இல்லாது இருக்க முடியாது. இருப்பின் மழைபோல் மன்னிப்பீர்கள் என்று எண்ணுகிறேன்.

காவல் தெய்வமாக தலங்களில் வழிபட்டுவந்த நம் முன்னோரின் வாழ்வை நினைவு படுத்துவதே முக்கிய நோக்கமாகும். இது முதலாவது காரணம். காவலூர் என்பது ஓர் காரணப்பெயர் அன்று தொட்டு வந்துள்ளது. அவ்வூரில் எழுந்தருளி உள்ள வைரவப் பெருமான் மீது ஞானவைரவ காவியம் இப்பொழுதும் பாடுவதைக் காணலாம். கரம்பொன் ஞானவைரவர் திருஊஞ்சற்பாட்டும் இதை நன்கு விளக்கும்.

தம்மத நாட்டல் நிகழும் போது பல வேறுபாடுகள் கொண்டும் உடன்பாடுகள் கொண்டும் அகச்சான்று புறச்சான்றுகள் கொண்டும் நிலைநாட்ட வேண்டும். இவைகளை விடுத்து இப்படி இருக்கலாம் அப்படி இருக்கலாம் என்று கூறுவதில் பயனில்லை. எடுத்துக் காட்டின்றி ஒரு நூலை ஆக்குவது நூல் வழக்குக்கு மரபுமன்று.

சிவனது நிலைப்பாட்டை காசியின் தனிச்சிறப்பு , காசியில் வைரவர், வைரவரும் சிவனும், வைரவக் கடவுள் என்னும் கட்டுரைகள் எடுத்து உணர்த்துகின்றன. முதலியார் திரு. செ. இராசநாயகம் எழுதிய யாழ்ப்பாணச் சரித்திரத் தகவல்களையும் அறிவோம்.

அந்நியர் ஆட்சியில் நாம் துன்பமுற்றபோது காவற் தெய்வமாக விளங்கியவர் வைரவரே என்பது தெளிவாகிறது. **''பெறண்டி''** என்று சிங்கள மொழியிலும் அழைக்கப்பட்ட, வைரவ ஆண்டி என்று தமிழ் மொழியிலும் அழைக்கப்பட்ட வைரவ கோயில் ஒன்று 1575 இல் இருந்ததென்றும் இதைப் போர்த்துக்கேயர் சூறையாடி அழித்தனர் என்னும் முதலியார் குறிப்பிட்டுள்ளார். (BERENDA = பெறண்ட) என்னும் சிங்கள மொழி பாவநிவிர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் பொருளுடையது. முதலாம் இராசசிங்கன் செய்த பாவங்களின் நிவிர்த்திக்காக சிவப்பிரதிஷ்டை செய்து இக் கோயிலைக் கட்டினான்.

பெறண்டி என்று சிங்கள மொழியிலும் வைரவ ஆண்டி என தமிழாலும் அழைக்கப் பெற்ற வைரவர் கோயில் ஒன்று சீதவாக்கையில் இருந்ததென்றும் அது போர்த்துக்கேயரால் அழிக்கப்பெற்றதென்றும் முதலியார் தமது நூலில் குறிப்பிட்டுள்ளமை சிந்திக்கற்பாலது. இராசசிங்கன் தான் செய்த பாவங்களுக்கு யாது பிராயச்சித்தஞ் செய்யலாமென பிராமணர்களைக் கேட்க சிவப்பிரதிஷ்டை செய்தால் அப்பாவம் ஒழியுமென அவர்கள் உறுதி கூறி அதன் நிமித்தமாக அப்பாரிய கோயிலைக் கட்டினான்.
(யாழ்ப்பாணச் சரித்திரம் பக்கம் 131)

என்னுடைய ஆசையும் இரண்டாவது காரணமாகும். நம் முன்னோர்கள் வழிபட்டுவந்ததை மறந்து கொண்டே வருகிறார்கள். இதை நினைவு படுத்துவதே இரண்டாவது காரணமாகும். இவ்வருளை எனக்குதவிய இறையை வணங்க வேண்டும்.

அருள்செய்த அருட் பெருஞ்சோதியை, ஆனந்தவாரிதியை
இறையென நிற்பானை, ஈரமில்லார்க்கும் ஈவானை,
உண்மைப்பொருளை, ஊக்கமளிப்பானை, ஒப்பற்ற
கண்ணுதலானை, ஓங்காரத்துட்பொருளை
இறைஞ்சுவது கடமையாகும்.

இந்நூலினை வாசித்து உணரும் நேயர்கள் பிழைகண்டுழி இயன்றவரை மனமிரங்கிப் பொறுப்பீர்கள் என வேண்டுகிறேன்.

*"வாரம் பட்டுழித் தீயவும் நல்லவாம்*
*தீயக் காய்ந்துழி நல்லவும் தீயவாம்"*

அறியாமையாலும், பிராயமுதிர்வு, உடல்தளர்வு முதலியவற்றாலும் நேர்ந்துள்ள எல்லாப்பிழைகளையும் பொறுத்துச் செய்த இம்முயற்சியைப் பெரிதாக நினைக்கும் படி வேண்டுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எண்ணிய முடித்தல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்"

- *பாரதியார்.*

நூலாக்க உதவி செய்த உத்தமர்களையும் உள்ளுறையில் சேர்க்க வேண்டியது கடமையாகும். உடலோம்பல் ஒன்றனையே குறிக்கோளாகக் கொண்ட எனக்கு பூவுடன் கூடிய நாரும் மணம் பெறுமாறு போலப் பல பேரறிஞர்களின் சேர்க்கையால் மணம் சேர்ந்தது.

வெஞ்சினப் பரியழல் மீது போர்த்திடும்
அஞ்சனப் புகையென ஆலமா மெனச்
செஞ்சுடற் படிவமேற் செறித்த மாமணிக்
கஞ்சுகக் கடவுள் பொற் கழல்கள் ஏத்துவாம்.

-*கந்தபுராணம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிஷ்டாகலாநிதி வேதமாமணி சிவசிவ ஸ்ரீ.சி.குஞ்சிபாதக் குருக்கள், பிரதம சிவாசாரியார் -ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம். இப்பெரியார் குன்றின் மேல் வைத்த விளக்குப் போல கொழும்பு மாநகரில் விளங்குகின்றவர். இவரால் குடமுழுக்குப் பெற்ற கோயில்கள் அநேகம். இந்நூலை விளங்க வைப்பதற்காகப் பல ஆராதனை வேலைகளின் மத்தியிலும் வைரவரை மையமாகக் கொண்டு வழிபாடு, நித்திய நைமித்தியங்கள், காவல் தெய்வமாக வந்த காரணிகள் எனப் பலவாறாகப் பகுத்து எழுதித் தந்தமை இம்மை மறுமை இரண்டிற்கும் போற்றுவதற்குரியதாகும்.

கரம்பொன் ஸ்ரீ ஞானவைரவர் ஊஞ்சல் பிள்ளைக்கவி ஸ்ரீ வ. சிவராசசிங்கம் ( B. A. Hons ) அவர்களால் பாடப்பட்டு இந்நூலில் இடம் பெற்றுள்ளது. அவரை நினைவில் இருத்துவோம். இப்பெரியார் தம் பிரயோசனங்களை பிறரனுபவிக்க அது கொண்டு மனத்தின் கண் வெறுப்புத் தோன்றாது மகிழ்ச்சியே நிலை பெறத் தோன்றப் பெற்ற நல்ல அறிவுடையவர். வயல்களில் வளரும் கரும்புகள் தம் பயனைப் பிறரனுபவிக்க தாம் மதர்த்து நின்றன என்பதைக் கடவுள்மாமுனிவர் ''ஆன்ற பயன் பிறர் நுகர அகத்தினிமையுள்ளதாகத் தோன்றிய நல்லறிவினர் போற் றுவன்றி யெழுந்தன கன்னல்'' என வர்ணித்த உவமானத்துக்குத் தகுதியுடையவராவர். சிறப்பாக கரம்பொன் ஞான வைரவர் ஊஞ்சற் பாக்களின் சில பகுதிகளைப் பார்ப்போம்.

''மைத்திரை சூழ் கரம்பொன்னகர் தன்னில் மேவும் வைரவஞானப் பெருமான்''

''மஞ்சு தவழ் கோபுரமார்கரம் பொன்மேவும் ஞானவைரவப் பெருமான்''

''வினைகள் யாவும் துகள்படுத்தும் அடியார் தலையிற் சூட மன்னிய சீர் கரம் பொன் ஞானவைரவப் பெருமான்''

''காவலம் பெற்றுரை மருவுகரம் பொன்மேவிக் களித்துறையும் வடுக பிரான்''

''அடியவர்களுக்கும் கருணை செய்யக்கரம் பொன்மேவும் ஆரூர் ஞானவைரவரே ஆடீரூஞ்சல்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப்பலவாறு ஞானவைரவரைப் புகழ்ந்து பாடியுள்ளார். இப் பொன்னூஞ்சலாலே கரம்பன் நகர் கரம் பொன்னகரானது என்றால் மிகையாது.

இவையும் எனது தொகுப்பு நூலுக்கு ஓர் தோரணமாகும். படிப்பு, பணிவு என்பன நடைமுறையாக எவர்க்கும் ஒன்றாய் அமையாது. இவருக்கு ஒருமித்து அமைந்துள்ளமை கண்கூடு.

இல்லறத்திலிருந்து வழுவாதொழுகி துறவறத்தின் துகள் கண்டு முத்திக்கு வித்தாகும் படிமுறைகளில் ஒழுகுபவர். இவரது வாழ்க்கையில் உருவாக்கிய பிள்ளைத் தமிழ் நூல்களும், பாடிய திருஊஞ்சற் பாக்களும் பற்பல நூல்களுக்கு நுடங்காது உரையெழுதும் திறனாய்வும் மிக்கவர். இப் பெரியார் பேயினுடன் நின்றாலும் பிரித்தறிய வொண்ணாத எனக்கு உதவியமை மாணிக்க மதிப்பாகும்.

மண்ணவரும் விண்ணவரும் மகிழ்ந்த மகா கும்பாபிஷேகத்தை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயில், ஸ்ரீகதிரேசன் வீதி, கொழும்பு. என்னும் முகவரியில் தலைவராய் நின்று நடத்திய சிவநெறிச் செல்வர், சிவநெறிச்செம்மல், சமாதான நீதிவான் (J. P) திருஞானசம்பந்தர் செந்தில்வேள் அவர்களை வாயார வாழ்த்தி நெஞ்சார உருகி எழுத வேண்டிய கடமையுண்டு. பெரியார் நான் கேட்ட போது அஞ்சேல் எனக்கூறி ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தின் ஆக்கத்தையும் தனது தந்தையின் இணையீடில்லா முயற்சியையும் இணைத்ததுமன்றி அந்நியர் ஆட்சிக் காலத்தில் இந்துக்களாகிய நாம் பட்ட இன்னல்களையும் கூறி இனி வரப் போவன யாவை என்பதையும் இடையிடையே கூறி அறிவுறுத்தியுள்ளார். சிவனே வைரவமூர்த்தியாக வந்து எங்களை அருள்பாலிக்கிறார் என்பதையும் ஆணித்தரமாக விளக்கியுள்ளார். இதைக் கூர்ந்து உணர்ந்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோம்.

ஞானசிரோன்மணி, பண்டிதர், சைவப்புலவர் ஆர். வடிவேல் அவர்களை அறியாதார் இல்லை என்றே சொல்லலாம், திருக்கோணமலையில் வைரவப் பெருமான் எப்படித் திகழ்ந்து விளங்கினார் என்பதை, வேறு பிரதானமான வைரவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில்களில் வழிமுறைகளும் எழுதித் தந்து இந்நூலைச் சிறப்பித்துள்ளார்.

''செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றல் அரிது'' என்னும் குறளுக்கு நெடிதாகும்.

நாட்டு நிலை, வீட்டு நிலை இவற்றை உணராது பலரைக் கண்டு கேட்டு ஊட்டமாக ஊட்டி விட்டார். போகாத விடமெல்லாம் போக வேண்டாமென்றாலும் என்னை திருப்தி செய்யப்போய் வைரவ மான்மியத்தை மாண்புற வைத்துள்ளார். இவர்கள் அடியார் உறவு, அரன்பூசை நேசம், அன்பு இவைகளின்றி படிமீது வேறு பயனுள்ளதோ? நல்லாரிணக்கமும், நின்பூசை நேசமும் ஞானமுமேயல்லாது, வேறு நினைவுளதோ? என்பன போன்ற கோட்பாடுடையவர். இவரையும் போற்ற வேண்டியது எனது கடப்பாடாகும்.

வைரவரும் சிவனும் என்னும் தலைப்பில் ஓர் சிறந்த கட்டுரையை எழுதித் தந்த இப்பேரறிவாளரை நாம் நினைவு கூர வேண்டும். இன்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பிரதிப் பணிப்பாளராக பணிபுரியும் திருமதி. சாந்தி திருநாவுக்கரசன் ஆவார். இவரை அறியாதவர்கள், வானொலியைக் கேட்காதவர்களாவர். பணிக்கேற்பவும் சைவத்தின் வளர்ச்சிக் கேற்பவும் பல விடயங்களை ஒலிபரப்புவதில் ஒத்துழைப் புடையவர். ஆன்ற அறிவு படைத்தவர். எவரையும் எள்ளாது இகழாது வேண்டும் விடயத்தை தூண்டி நின்று முடித்துக் கொடுப்பவர்.கலைப் பட்டதாரியாக வெளிவந்தவர். சிறப்புப் பாடமாக இந்து நாகரிகத்தை முன்வைத்தவர். S. L. A. S. (இலங்கை நிர்வாகசேவை) ஆரம்பமாக உதவி அரச அதிபராய் ஊர்காவற்றுறை, சண்டிலிப்பாயில் ஓயாதுழைத்தவர். சிந்தனைச் சிறப்புக்கேற்ப இந்து கலாசார காரியாலயத்தை சிறப்புச் செய்து கொண்டி ருக்கிறார். சிவனே வைரவரானார் என்பதைத் தனது கட்டுரையில் உரைத்திருக்கிறார். வேலைப்பழு கூடிய காலத்திலும் என் பணியைத் தன் பணியாகக் கொண்டு செய்த உதவியை நினைவு கூருகிறேன்.

''மனத்தின் அழகு மதியில் தெரியும்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரிய சிரோமணி ரி. செல்வநாயகம் அவர்கள் மட்டாரும் கிழக்கிழங்கை மட்டுநகரில் விளங்கும் மட்டக்களப்பு நரசிங்க வைரவரை எழுதி உதவியமையை விட்டு வைக்க முடியாது. இவர் ஓய்வு பெற்ற அதிபர். ஆசிரிய சிரோமணி என அழைக்கப்படுபவர். இவரது பெயர்க் காரணமே விளங்க வைக்கும். எனது கேள்விக்கிணங்கி பல பல கஷ்டங்களின் மத்தியிலும் தந்துதவினார். இக்கட்டுரை இக் காலத்தினால் செய்த பேருதவியாகும். நானும் என் சிநேகிதர்களும் இன்று வரை நரசிங்க வைரவ ஆலயத்தை வணங்கி அர்ச்சித்து வந்துள்ளோம் ஆனால் இவ்வாறாய வரலாறு கண்டதுமில்லை. கேட்டதுமில்லை. இனியாவது ஆராயவும் அறியவும் இடமுமில்லை. இவ்வின்ப நிலையை ''நான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்'' என்பதினால் இந்நூலில் சேர்த்துள்ளேன். பொன்னாடை புள்ளி விழும்; பொற்கிளி பறந்து போம். இப்பெரியாரின் புகழ் நின்று நிலவும் எனப் பாராட்டுகிறேன்.

இணையிலி வைரவ கோயில்கள் என்னும் ரூபத்தில் திருவாளர் இ. க. கந்தசுவாமி என்னும் பெரியார் ஓர் செய்தியை எழுதி உதவியுள்ளார். இப்போ இணையிலி என்பது இணுவில் என்று அழைக்கப்படுகின்றது. கொழும்பு தமிழ் சங்கத்தின் கொழுகொம்பு இவரே. துறவியாய்ப் போகும் வழிக்குத் துணையாக பிரமச்சரிய விரதத்தைப் பூண்டுள்ளார். நாளை நடப்பதை நாடாது நன்றென்றதை நன்குணர்ந்து நிறைவேற்றும் நாட்டமுடையவர். பட்டப்படிப்பு நிரம்பிய பட்டதாரிகளின் படிப்பறிவு இவருக்குண்டு. ஆயிரக் கணக்காக அடுக்கி யிருக்கும் புஸ்தகங்களின் பொது அறிவு உடையவர். வேண்டிய விடயங்களை விருப்புடன் விளங்க வைக்கும் விவேகி, மதியாதார் முத்தம் மிதியாதவர். இவரை வாழ்த்தி வணங்குகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. தலையாழி அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர்
ஆலய வழிபடுநர் (வழிபாடுகள் ) சபை

2. திருவளரும் தலையாழிப் பகுதியில் அமர்ந்த
ஸ்ரீ ஞான வைரவர் மீது பாடப்பெற்ற திருஊஞ்சற் பாக்கள்
ஆக்கம். பண்டிதர். கோ. தியாகராசபிள்ளை

3. கொக்குவில் கிழக்கு கோணாவளை வைரவர் சுவாமி
கோயில் பரிபாலன சபை

4. இவ்வாலயத்தின் ஸ்ரீ. நடராஜவைரவ மூர்த்தி திருப்பொன்னூஞ்சல்
ஆக்கியோன்: அருட்கவி சீ. வினாசித்தம்பி.

5. விழிசிட்டி ஞானவைரவ சுவாமி ஆலயம்
தலைவர் பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை.

6. சங்கானை நிகர ஞான வைரவ ஆலயம்
திரு. அ. ஞானசேகரம்.

7. ஈழத்தில் இரு சிவஞான வைரவ மூர்த்திகள்.
திரு. க. தில்லையம்பலம்

8. அகவல்
முருகர் பூசாரி, மண்டூர்

9. மட்டக்களப்பு மண்டூர் விடத்தல்முனை ஆதி வைரவர் காவியம்
தகவல்: நடராசா யோகேந்திரன்.

10. சித்தாண்டி செந்நெல் வைரவர்
தகவல்: எஸ். நாகராசா இளைப்பாறிய அதிபர்.

11. கந்தபுராணத்தில் கபாலீஸ்வரர்
தகவல்: மஸ்கன் தொழில் நிறுவன உத்தியோகத்தர் எஸ். பத்மநாதன்

**கால மறிந்தாங் கிடமறிந்து செய்வினையின்**
**மூல மறிந்து விளைவறிந்து - மேலுந்தாம்**
**சூழ்வன சூழ்ந்து துணைமை வலிதெரிந்**
**தாள்வினை யாளப் படும்.**

*ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தங்கள் (258 ம்பா)*

இவர்கள் காலமறிந்து கடமை உணர்ந்து தந்துதவிய தகவல்களுக்கு நன்றிகள்.

இந்நூலின் ஆசிரியனாகிய என்னையும் புறக் கண்ணால் பார்த்து மனக் கண்ணால் மகிழ்ந்தவராகிய பாரில் யார்க்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகையிலாதவராகிய பொன். பாலசுந்தரம் அவர்களையும் போற்ற வேண்டும். 'சும்மா இரு' என்னும் தொடர் சுத்த சூனியமாய் இருக்கும். மண்ணில் பெரிது, சிறிது, உயர்வு, தாழ்வு எண்ணாது வேண்டியோர்க்கு ஈண்டியளவு இருப்பதை ஈபவர். நெற்றியில் நயனமாய திலகவதியாரை திருவாட்டியாகக் கொண்டவர். பார்வைக்கினியான் பழகுதற் கெளியான் பாலசுந்தரம் என்று பலரும் பகர்வர். கொழும்பில் வந்து கூட்டமாய் இருந்த நாளில் பழகிய இப்பெரியாரை மண்ணும் கடல் வானம் மங்கி மடிந்தாலும் மறக்கமுடியாதவர். இவரையும் நன்றிக்குரித்தாக்குகிறேன்.

*''தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே*
*வேளாண்மை என்னும் செருக்கு''*

வள்ளுவப் பெருந்தகை.

இனியது கூறல் இயற்றும் நூலுக்கு இனிதாகும். ஆகவே மனைவியையும் மக்களையும் நினைக்க வேண்டும். மனைவி நீரில் நிழல்போல நீங்கா நிலை உள்ளவர். ஒத்த வகுப்புடையவராயினும் உயர்ந்த எண்ணங் கொண்டவர். பிழையெனக் கண்டவற்றை இளையேனும் குறையாது எடுத்தியம்புபவர். மாறுபட்ட கோட்பாடு மதிப்புக்குரியது என்பதை உணர்த்தி விளக்குபவர். நான் தொகுத்தாலும் மனையாளின் துணையே வகுக்க வைத்தது என்பது மிகையாகாது.

பணப் பமு கூடிய காலத்தில் வேண்டியவற்றை வேறிடத்தை நாடாது உதவிய மக்கள் மருமக்கள் எல்லோருக்கும் எனது மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

**கயல் வாய்த்த கண்ணியுல கீன்றவல்லி பங்காவுனது**
**செயல் வாய்த்த வன்பர்க்கு மல்லாதவர்க்குஞ் சிரிப்பல்லவோ**
**இயல்வாய்த்த வெந்தைக்கியான் வாய்த்ததுவு மிங்கென்றெனக்கு**
**வயல்வாய்த்தது மனைவாய்த்தது மைந்தர்கள் வாய்த்ததுமே.**

*(சிவப்பிரகாச சுவாமிகள்) தனிப்பாடற்றிரட்டு*

உச்ச நிலையில் அச்சேற்றி அரங்கிற்குக் கொணர்ந்த ஸ்ரீமான். மயில்வாகனம் சிவராசா அவர்களையும் அறிமுகமாக்க வேண்டும்.

சிவனது திருவடிக்கே எனது மனதடிமை என்பது குறிக் கோளாக உள்ளவர். ஆன்றோர்கள் இவரை சிவா என்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைப்பார்கள். நுட்பமான அறிவும் திட்டமான மனநலனுமுள்ளவர். அன்று நீ, இன்று நான், வேண்டத்தக்கது உன் அருளே அன்றி வேறில்லை. ஐந்தெழுத்தை அயராது ஓதுபவர்.

செல்லுமிடமெல்லாம் சிவனே சிவனே எனச் சொல்லும்படியன்றி சொற்சோர்வு வேறறியார். அல்லும் பகலும் அவனே சிவன் என்பர்.

வறுமை வரினும் பெருமையைக் கைவிடா பேரன்பாளர். பசித்தோர்க்கு பருவரல் தீர்க்கும் பண்பினால் உழைப்பு வேண்டி உழைப்பவர்.

மான்மியத்தை மறவாதிருக்கும் மதிவண்ணம் இவரையும் நினைந்து நன்றி கூறுகிறேன்.

*"மறவற்க மாசு அற்றார் கேண்மை! துறவற்க*
*துன்பத்தார் துப்பாயர் நட்பு."*

*(திருவள்ளுவர்)*

*கலந்து நின் அடியாரோடு அன்று வாளா களித்திருந்தேன்*
*புலர்ந்து போன காலங்கள் புகுந்து நின்றது இடர்பின் நாள்*
*உலர்ந்து போனேன் உடையோனே உலவா இன்பம் சுடர்காண்பான்*
*அலர்ந்து போனேன் அருள் செய்வாய் ஆர்வம் கூர அடியேற்கே.*

*- சுவாமி மாணிக்கவாசகர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கால பைரவாஷ்டகம்

காசியிலுள்ள கால பைரவரைக் குறித்து
*ஸ்ரீ சங்கராச்சாரியர்*
அருளிச் செய்த ஸ்தோத்திரம்

தேவராஜ ஸேவ்யமாந பாவநாங்க்ரி பங்கஜம்
வ்யாள யக்ஞஸூத்ர மிந்துசேகரம் க்ருபாகரம்
நாரதாதி யோகிப்ருந்த வந்திதம் திகம்பரம் 1
காசிகாபுராதி நாத காலபைரவம் பஜே

பாநுகோடி பாஸ்வரம் பவாப்தி தாரகம்பரம்
நீலகண்ட மீப்ஸிதார்த்த தாயகம் த்ரிலோசநம்
காலகால மம்புஜாக்ஷ மக்ஷசூல மக்ஷரம் 2
காசிகாபுராதிநாத காலபைரவம் பஜே

சூலடங்க பாச தண்டபாணி மாதிகாரணம்
ச்யாம காய மாதி தேவமக்ஷரம் நிராமயம்
பீம விக்ரமம் ப்ரபும் விசித்திர தாண்டவப்ரியம் 3
காசிகாபுராதிநாத காலபைரவம் பஜே

புக்திமுக்தி தாயகம் ப்ரசஸ்தசாரு விக்ரஹம்
பக்தவத்ஸலம் சிவம் ஸமஸ்தலோக விக்ரஹம்
நிக்வணந் மநோக்ஞ ஹேம கிங்கி லஸத்கடிம்
காசிகாபுராதிநாத காலபைரவம் பஜே 4

தர்மஸேது பாலகம் த்வதர்ம மார்க நாசகம்
கர்மபாச மோசகம் ஸுசர்மதாயகம் விபும்
ஸ்வர்ணவர்ண சேஷபாசசோபிதாங் கமண்டலம்
காசிகாபுராதிநாத காலபைரவம் பஜே 5

ரத்நபாதுகா ப்ரபாபிராம பாதயுக்மகம்
நித்யமசி தீயமிஷ்ட தைவதம் நிரஞ்ஜநம்
ம்ருத்யுதர்ப நாசநம் கராளதம்ஷ்டிர மோக்ஷணம்
காசிகாபுராதிநாத காலபைரவம் பஜே 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டஹாஸ பிந்த பத்மஜாண்டகோச ஸந்ததிம்
திருஷ்டி பாதநஷ்ட பாபஜாலமுக்ர சாஸநம்
அஷ்டஸித்தி தாயகம் கபால மாலிகந்தரம்
காசிகாபுராதிநாத காலபைரவம் பஜே 7

பூதஸங்க நாயகம் விசாலகீர்த்தி தாயகம்
காசிகாஸ்தலோக புண்யபாப சோதகம் விஷம்
நீதிமார்க் கோவிதம் புராதநம் ஜகத்பதிம்
காசிகாபுராதிநாத காலபைரவம் பஜே 8

காலபைரவாஷ்டகம் படந்தி யே மநோஹரம்பீ
ஞானமுக்தி ஸாதநம் விசித்ர புண்யவர்தநம்
சோகமோஹ தைந்யலோப கோபதாப நாசநம்
தே ப்ரயாந்தி காலபைரவாங்க்ரிஸந்நிதிம் த்ருவம் 9

ஸ்ரீ காலபைரவாஷ்டகம் ஸம்பூரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கால பைரவாஷ்டகம்

*காசியிலுள்ள கால பைரவரைக் குறித்து ஸ்ரீ சங்கராச்சாரியர் அருளிச்செய்த ஸ்தோத்திரத்தின்*

***தமிழாக்கம்***

1. தேவேந்திரனால் பூசிக்கப்படுகிறவரும், பாவத்தை நீக்கி அருளுகின்ற தாமரை மலர் போன்ற திருவடியும், சர்ப்பமாகிய யஞ்ஞோ பரீதத்தையும் இளம் பிறைச் சந்திரனைத் தரித்தவரும், கிருபைக்கடலும் நாரதர் முதலிய முனிவர்களால் நன்கு சேவிக்கப்படுபவரும் நிர்வாணியுமாகிய காசிப்பதியில் எழுந்தருளி இருப்பவரும் எப்பொருட்கும் இறைவருமாகிய காலபைரவரை வணங்குகிறேன்.

2. கோடி இளஞ் சூரியர்களை ஒத்த திருமேனியும், பிறவிப்பிணியை நீக்குகிறவரும், பிரணவப் பொருளாயும், பரம்பொருளாயும், உள்ள நீலகண்டராகிய சிவபெருமானால் விரும்பத் தகுந்த நாயகரும், மூன்று திருக்கண்களையுடையவரும், காசிப்பதியில் எழுந்தருளியிருப்பவரும்ஆகிய காலபைரவரை வணங்குகிறேன்.

3. சூலம், உடுக்கு, பாசம், தண்டம் இவற்றைத் திருக்கரத்திலே ஏந்திய ஆதிகர்த்தாவும் கரிய திருமேனியையும் பிரணவப் பொருளாய் உள்ளவரும், நிர்மலரும், மிக்க பெலசாலியும், பிரபுவும், நூதனமான தாண்டவத்தில் பிரியருமாகியவரும் காசியில் எழுந்தருளியிருப்பவருமாகிய காலபைரவரை வணங்குகிறேன்.

4. புத்தி, முக்தி ஆகிய மோட்ஷத்திற்கு இருப்பிடமானவரும், தெளிவான அழகிய திருமேனியை உடையவரும் கிருபைக்கடலும், மங்களமானவரும், சகல லோகத்தவராலும் வந்திக்கப்படுபவரும், பொன்னாலான கிங்கிணி மாலைகள் லங்குகின்ற இடுப்பை உடையவருமாகிய காசிப்பதியில் எழுந்தருளியிருக்கும் காலபைரவரை வணங்குகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. புண்ணியமாகிய, சே வாகிய காசியைக் காப்பாற்றுபவரும் புன்னெறி செல்லும் மார்க்கத்தை நாசம் செய்கிறவரும், கர்ம பாசத்தை நீக்குகிறபவரும் நிர்மலரும், செஞ்சுடர் வர்ணத்தை ஒத்த குற்றமற்ற கேச பாரத்தால் ஸோபிக்கிறவரும் காசிப்பதியில் எழுந்தருளியிருப்பவருமாகிய காலபைரவரை வணங்குகிறேன்.

6. இரத்தினமயமான மிதியடிகளால் பிரகாசிக்கின்ற இரு திருவடிகளையுடையவரும் நித்தியரும், குல தெய்வமும், நிர்மலரும், ஆகியவரும் காசிப்பதியில் எழுந்தருளி இருப்பவருமாகிய காலவைரவரை வணங்குகிறேன்.

7. அட்டகாசச் சிரிப்பையுடையவரும், திட்டி தோஷத்தை நீக்குபவரும் உக்கிரமான பாவக்கூட்டத்தை நீக்குபவரும் அட்ட சித்திகளை கொடுப்பவரும் பிரம்ம கபால மாலையைத் தரித்தவரும் காசியில் எழுந்தருளி இருப்பவரும் ஆகிய காலபைரவரை வணங்குகிறேன்.

8. பூதக் கூட்டத்திற்கு தலைவரும், விசாலமான புகழுக்கு இருப்பிடமானவரும் காசிப்புண்ணிய ஷேத்திரத்தில் வசிப்பவர்கள புண்ணிய பாவங்களை பரீட்சிக்கிறவரும், மலமற்றவரும், நீதிமார்க்கத்திற்குத் தலைவரும் பழைமை யானவரும் உலக கர்த்தாவுமாகியவரும் காசிப்பதியில் எழுந்தருளி இருப்பவருமாகிய கால வைரவரை வணங்குகிறேன்.

9. எவனொருவன் மனப்பிரீதியோடு கால வைரவ தோத்திரத்தைப் பாராயணஞ் செய்கிறானோ அவனுக்கு ஞானம், முத்தி, சாதகமாகும். நல்ல புண்ணியம் விருத்தியடையும், இன்பம், ஆசை, கோபம், தாபம், நாசமடையும். அவர்கள் காலவைரவருடைய உலகத்தைச் சென்றடைவர்.

*ஸ்ரீ கால வைரவ தோத்திரம் முற்றிற்று.*

*தமிழாக்கம்*

*கு. வை. சிவ ஸ்ரீ கனகசபைக் குருக்கள்*

*அச்சுவேலி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரவர் அகவல்

காப்பு

சீர்புகழ் வயிரவர் செந்தமி ழுரைக்கக்
கார்புகழ் மேனிக் கணபதி யருளே!

நூல்

ஆதி பராபரி அருளிய நுதல்விழி
சோதிபோ லெழுந்து சுடரொளி யாகி
வீதியி லெழும்பி விசும்பெலாங் கடந்து
ஓதிய மந்திர உச்சா டனமாய்
ஓங்கா ரங்கொண் டொருமுக மாகி
ஆங்கா ரங்கொண் டமரக மாகி
அக்கினிச் சொரூப வனல்பல கதிராய்
விக்கினந் தீர்க்கும் விறும வயிரவா
அப்பமு மவலு மாலங் காயும்
செப்பிய மாங்கனி திகழ்தட் டுறட்டியும்
தேங்கத லிப்பழம் செப்பிய பலாப்பழம்
அத்த னையெல்லா மருந்திய வயிரவா
ஐயுங் கிலியு மகோர வயிரவா
சவ்வுங் கிலியுங் சங்கார வயிரவா
சிறியுங் கிலியும் ஏறு வயிரவா
மௌவுங் கிலியு மான வயிரவா
முச்சூல வயிரவா முக்கணீ சுபரா
அக்கினி வயிரவா ஆனந்த வயிரவா
சத்தியோ டருள்புரி தற்பர னாகிப்
பாம்பெலும் பணிந்த பராபர வஸ்துவாய்ச்
சாம்பலு மணிந்து தலையோ டேந்திச்
சுடலையில் நின்று சுடலைகாத் தவனே
கெங்கைக் கரையிற் கிருபா கரனாய்
நம்பின பேர்க்கு நற்பத மருளிப்
பூமடை தன்னிற் பூசல் புரிந்து
ஆலை நிழலி லமர்ந்துறை சிவனே
பாதக் கொலுசு பளபளென் றிசைப்ப
நாதவீ ணைகள் நலம்பெற விளங்க
ஆதி சிவனா ரருள்புரி வயிரவா
செம்பொன் மேனியுந் திருநீற் றழகும்
உச்சிக் குடுமியும் உதிர வாயும்
அலறிய பல்லும் அண்ணாந்த பார்வையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலிற் றரித்த தண்டை பாடகமும்
கழுத்திற் கட்டிய கங்கண மாலையும்
கையிற் பிடித்த கண்டகோ டாலியும்
அரையிற் கட்டிய காவியொட்டி யாணமும்
அங்கம் முழுவதும் அணிந்த வெண்ணீறும்
அக்கினிக் கண்ணும் அரவணி குஞ்சியும்
குஞ்சிச் சடையிற் குலாவிய பிறையும்
பச்சை மேனியும் பரிந்த முகமும்
உச்சிக் குடுமியும் உதிர வாயும்
அக்கினிச் சுடலையி லவ்வேஷ மானாய்
திக்குப் பேய்களைச் சிதற அடித்துப்
பக்கப் பசாசைப் பறக்கத் துரத்தி
எற்றி மிதித்து ஈடழித் திடுவாய்
ஐயனே யுந்த னருளுண் டானால்
வையகப் பிணிபோய் வாதபித்த கபம்
துய்யவி யாதிகள் துகழ்போற் பறக்க
எதிர்க்கும் வியாதியை இருள்போல் வெட்டி
மெய்யனே யுன்னருள் மேதினி விளங்க
ஐந்தெழுத் துச்செபித் தன்போ டரனே
நம்பினே னுன்னை நமக்கருள் மேதினி விளங்க
கரிமுக முடைய கற்பகா வருள்தா
திருவருள் புரியுஞ் சிவனே யருள்தா
பார்பதி யிடமுறை பரனே யருள்தா
சித்த மிரங்குஞ் சிவனே போற்றி
மத்தணி மாலின் மருகா போற்றி
ஞாளியில் வந்து நமக்கருள் புரிந்து
கூளிகள் மாயக் குண்டெறிந் தவனே
அன்பாய் வந்து அடியேன்செய் பூசையை
நண்பா யேற்று நமக்கருள் புரிவாய்
ஆனக பாலமு மழகிய பிரம்பும்
ஞானபூ ஷணமும் நமக்கருள் காட்டி
சங்கூர்த்த மார்பில் தனியொளி காட்டி
எங்களை யிரட்சித் தருள்வாய் போற்றி
இன்பமாய் வந்து யான்செய் பூசையை
நண்பா யேற்பாய் நமஸ்தே நமஸ்து.

*மட்டக்களப்பு*
*மண்டூர்*
***மணியப் பூசாரியார்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# திருத்தலங்களில்
# வைரவப் பெருமானின் மகத்துவம்

## 1. கந்தபுராணம்

*பரமனை மதித்திடாப் பங்க யாசனன்*
*ஒருதலை கிள்ளியே யொழிந்த வானவர்*
*குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன்*
*புரிதரு* ***வடுகனைப்*** *போற்றி செய்குவாம்.*

முன்னொரு காலத்தில் சிவபெருமானை அவமதித்த தாமரை மலர் ஆசனனான பிரம்ம தேவனது ஒப்பற்ற நடுத்தலையைக் கிள்ளி மற்றைய தேவர்களது உதிரத்தையும் கர்வத்தையும் வாங்கிக் கொண்டு அவர்களுக்குத் தண்டனை புரிந்த வைரவக்கடவுளைத் துதிப்போம்.

*வெஞ்சினப் பரியழன் மீது போர்த்திடு*
*மஞ்சனப் புகையென வால மாமெனச்*
*செஞ்சுடர்ப் படிவமேற் செறித்த மாமணிக்*
***கஞ்சுகக் கடவுள்*** *பொற்கழல் களேத்துவாம்.*

கடுங்கோபமுள்ள வடவாமுகாக்கினியானது தன்மீது போர்த்துக் கொண்ட கருநிறமமைந்த புகையைப் போலவும் ஆலகாலத்தைப் போலவும், சிவந்த பிரகாசமுடைய திருமேனியின் மீது விசேடித்த சிறப்பமைந்த நீலமணியின் நிறம் வாய்ந்த சட்டையணிந்துள்ள வைரவக் கடவுளின் பொன்மயமான திருவடிகளைத் துதிப்போம்.

## 2. பழைய காஞ்சிப்புராணம்

*கொச்சையறி வுற்பவமாங் கொள்கையினா*
*லரிபிரமர் கூடிவீணின்*
*மெய்ச்சமரம் புரிந்திகலி யொருவரொரு*
*வரை மிகவும் வெறுக்கு நாளி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*லச்சுறவுற் றவரகந்தை விடுமாறு நெருக்கி*
*யினிதருளே செய்யுங்*
***கச்சிவடு கக்கடவுண்** முச்சிகை வேற்*
*படையினையே கருதிவாழ்வாம்.*

அஃறிணை உயிராகிய அன்ன, வராகப் பிறப்படைந்ததனால் பிரம்ம, விஷ்ணுவும் சேர்ந்து சண்டையிட்டுப் பகைத்து ஒருவருக்கொருவர் மிகவும் வெறுத்துக் கொள்ளும் நாளில் அவர்களுடைய கர்வத்தை விடும்படியாக, நெருக்கியும் தாக்கியும் திருவருள் புரியும் காஞ்சி வடுகக் கடவுளின் முத்தலைச் சூலாயுதத்தினைப் போற்றுவாம்.

### 3. திருவாவடுதுறைப் புராணம்

*காலன் மார்பிற் கான்மலர் நீட்டிய*
*சீலன் கோயிற் திறமிகழ்ந் தோர்களைச்*
*சூல மேற்றுஞ் சுழல் விழிக் **கேத்திர***
*பாலன் பொற்பதம் பற்றிப் பணிகுவாம்.*

எமனுடைய மார்பு முறியும்படி மலர் போன்ற காலைத்தூக்கி நீட்டி யுதைத்தருளிய குணசீலனாம் வடுகக்கடவுளின் கோயிற் பெருமைகளை இகழ்ந்து பேசியவர்களைச் சூலாயுதத்தால் குத்தும் சுழல் கண்ணனாகிய வைரவக்கடவுளின் பொன்னடிகளைப் பணிவோம்.

### 4. காஞ்சிப் புராணம்

*எளியரை வலியர் வாட்டின் வலியரையிருநீர் வைப்பி*
*னளியறத் தெய்வம் வாட்டு மெனுமுரைக் கமைய வன்றே*
*தெளியுமா வலியைச் சொற்றோற் செகுத்துரிக் கவயம்*
*வளியுளர் கச்சி காவல் வயிரவர்க் கன்பு செய்வோம்.*

கடல் சூழ்ந்த உலகத்தின் கண் விசுவாசமில்லாமல் எளியாரை வலியார் அடித்தால் வலியாரைத் தெய்வம் பார்த்து அடிக்கும் என்னும் பழமொழிக் கிணங்க மாவலி தலைமேல்கால் தூக்கிய வாமனனை அழித்து அவன் தோலைக் கவசமாகப் போர்த்துக் கொண்ட கச்சிக்காவலரும் காருண்ணிய மூர்த்தியுமான வயிரவ மூர்த்திக்கு அன்பு செலுத்துவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. திருவானைக்காப் புராணம்

*உலக மளித்தல் சுதந்தர மன்றுவண*
*முயர்த் தோர்க் கெனவ வன்சே*
*யிலகு முருவம் பொடித்த வன்பா*
*லெழுந்து படைப்புஞ் சுதந்தரமன்*
*றலர்மெல் லணையாற் கெனவவனை*
*யரங்கத் **திசைமாமு கனாக்கிப்***
*பலரும் வெருவப் பொழிநெய்த் தோர்ப்பயிக்கம்*
*புகுந்தோன் பதம் பணிவாம்.*

கருடக் கொடியோனாகிய மகா விஷ்ணுவுக்கு உலகம் அளித்து பாதுகாத்தல் சுதந்தரமான தன்றென்று கூடி உயிர்களைப் படைப்பதும் பதுமனுக்குச் சுதந்தரமான தன்றென்று பிரம்மதேவன் தலை அழிய நான்முகமுடையவனாக்கி, பலரும் அஞ்சச் சிந்துமவ் இரத்தத்தில் பிச்சையெடுத்தோனாகிய முழு நீற்றுருவ வைரவ மூர்த்தியின் பாதம் பணிவாம்.

*கோணா ரணங்கத் தோண் மேற் கொண்டு*
*கொழுமலரான் தன்சிரத்தைக் கையிலேந்திக்*
*கானார் களிற்றுரிவைப் போர்வை மூடிக்*
*கங்காள வேடரா யெங்குஞ் செல்வீர்*
*நானா ருமக்கோர் வினைக் கேடனே*
*வல்வினையுந் தீவினையு மெல்லாமுன்னே*
*ஆனா யடியேனை யஞ்சே லென்னா*
*யாவடு தண்டுறையுறையு மமர ரேறே.*

*திருமுறை 6வது*
*திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்*

இத் திருத்தாண்டகத்திலும் ' ' கொழுமலரான்றன் சிரத்தைக் கையிலேந்திக் கானார் களிற்றுரிவைப் போர்வைமூடி' ' இரண்டு திருவிளையாட்டை இயற்றிய சிவனே வைரவமூர்த்தியாக இயற்றினார் என்பது வெள்ளிடை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. திருப்பாதிரிப் புலியூர்ப் புராணம்

*தருணமலர்க் கோயிலிறை யுச்சிமுடிக்*
*கபாலத்தைத் தளிர்க்கை யேந்தி*
*யருணநீர் பலிக்கிமையோர் நடுங்கவலம்*
*வந்து மாற்காவி நல்கி*
*மருணனிசெய் மூவிலைவேண் மணிநாக*
*முடுக்கையிவை வயங்க வேந்திக்*
*கருணைமறம் பூண்டெழில் செய்கடைஞாழல்*
*வயிரவரைக் கருதி வாழ்வாம்.*

செந்தாமரையில் வாழ் பிரம்மனுடைய உச்சிமுடிக் கபாலத்தை உள்ளங்கையிலேந்திக் கொண்டு தேவர்கள் பயந்து நடுங்க வலம்வரும் படியாகச் சூரியோதய பலிப்பிச்சை எடுத்துத் திருமாலுக்கு ஆவி கொடுத்து, மயங்கிய போரை வெல்லத்தக்க மூவிலைச் சூலமும் மாணிக்கமுடைய பாம்பும் உடுக்கையுமாக இவை விளங்கத் தாங்கி மறக்கருணைபூண்டு, கொன்றைப் பூவணியும் வைரவமூர்த்தியைக் கருதித் துதிப்போம்.

## 7. திருச்செந்தூர் புராணம் 10524

*கிஞ்சு கந்தரு வாய்க்கலைக் கிள்ளையா*
*னஞ்சு கம்மிலொன் றற்றிடக் கிள்ளியே*
*மிஞ்சு கந்தொறு மிக்குறுங் கார்நிறக்*
*கஞ்சு கன்பொற் கழலிணை போற்றுவாம்.*

கிளியைப் போல வேதாத்தியனம் செய்யும் பிரம்ம தேவனுடைய ஐம் முகத்தில் ஒரு தலையற்றுவிழக் கிள்ளி மேகத்தினும் அதிகமான கருநிறங் கொண்ட யானைத்தோல் போர்த்துக் கொள்ளும் வைரவ மூர்த்தியின் பொன்னடிகளைப் போற்றுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. கடம்பவனப் புராணம்

*கருதரிய லளினதபர னெற்றியிற்றோன் றிச்சூல கபாலமேந்தி*
*வருபிரள யஞ்சுவற்றிப் பயிரவனாய ண்டதத்து வங்கண்மாற்றி*
*யரிசரும கஞ்சு கியாய் வேதவெகி னூர்த்து முன்போல வுண்டாக்கி*
*யிருமை பெறக் **காத்தருளுங் கேத்திரபாலன்** றிருத்தா ளேத்தல்*
*செய்வாம்.*

உமையம்மையின் நாயகராம் பரமசிவன் நெற்றியில் தோன்றிச் சூலமேந்தி பிரமனுடைய கபாலத்தை யேந்தி நரசிங்க மூர்த்தியின் உடலைக்கிழித்து அதன் தோலை இடுப்பில் உடையாக அணிந்து வயிரவன் என்னும் பெயரைத் தாங்கி அண்ட தத்துவங்களை மாற்றியமைத்து சீவான்மாக்களை இருமை பெறக் காத்தருளும் கேத்திர பாலனாம் வயிரவ மூர்த்தியைப் போற்றி வணங்குவாம்.

## 9. கடம்பர் கோயிற் புராணம்

*கயிரவ நான்மலர்க் கவின்க ணார்மயற்*
*செயிரவ நாடொறு மியற்றி யேதிரி*
*யுயிரவ நானென வொறாது காத்தருள்*
***வயிரவ நாதனை** வணங்கி வாழ்த்துவாம்.*

ஆம்பற் பூவைப் போலும் அலங்காரக் கண்களையுடைய மாதர்களின் நோயை எந்நாளுமே யுண்டாக்கித் திரியும் மனத்துள் நான் எனது என அலையாமல் இருக்க காத்து இரட்சிக்கும் வயிரவக் கடவுளை வணங்கி வாழ்த்துவாம்.

## 10. புலியூர்ப் புராணம்

*விதிப்பால வினைதவிர்க்கும் வியாக்கிரமா*
*புரத்தினிது மேவினோர்கண்*
*மதிப்பாலிற் செய்வினைக்கு மூவிலைவேற்*
*சூலத்தின் மருவ வைத்தே*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*யுதிப்பாலன்னையர் முலைகண் மீட்டருந்தா*
*வகை முத்தியுதவுந்தில்லை*
*பதிப்பால்வயிரவன்றன் பாதசரோ குகங்களென்றும்*
*பரவி வாழ்வாம்.*

விதியால் வந்த படைத்தலான பிறவி வினையைத் தவிர்க்கும் புலியூரின் கண் வாழப்பட்டவர்களுக்கு மதிப்பில்லாமல் துன்புறுத்தும் மலமாயா கன்மத்தை மூன்றிதழ்களுடைய சூலாயுதத்தில் அடக்கி மீண்டும் பிறந்து தாயினர் முலைப் பாலை உண்ணாவண்ணம் பதமுத்தியை உபகரிக்கின்ற தில்லையம்பலத்து வைரவக் கடவுளின் பாதாம்புயங்களை என்றைக்கும் போற்றி வாழ்வாம்.

## 11. சீர்காழிப் புராணம்

*துங்க மாமணித் தூணில்வந் திரணியன் றோள்வலிதனை வாங்குஞ்*
*சிங்க வேற்றுரி யரைக்கசைத்து லகெலாந் தேர்ந்தளந்த வன்மேனி*
*யங்கம் யாவுமோர் கதையதாக் கொண்டத ணங்கியாப் புனைதாழிச்*
*சங்க வார்குழைச் சட்டை நாயகன்றுணைத் தாமரைச் சரண் போற்றி.*

நவரத்தினங்கள் பதித்த தம்பத்தைப் பிளந்து கொண்டு வந்து இரணியன் வயிற்றைக் கிழித்து அவன் புயவலிமையை வாங்கும் நரசிங்கத்தைக் கொன்று, அதன் தோலை இடுப்புக்கு ஆடையாக அணிந்தவரும் ஈரடியாலே மூவுலகளந்தோனாகிய வாமனன் உடல் உறுப்புக்களை யெல்லாம் ஒரு கதாயுதம் கொண்டும் தோலை உடையாக உடுத்தவருமாகிய சீகாழிச் சங்கின் கவச குண்டலராகிய சட்டை நாயகருடைய இரண்டு பாதார விந்தங்களுக்கும் வணக்கம்.

## 12. திருப்பூவணப் புராணம்

*அரிபிரம ரகந்தை கெட வண்டங்க*
*ளுடைத் தெரியு மங்கிக் கோட்பட்*
*டுரியபல வுலகமெலா மொழிந் திடுநா*
*ளவர்கடம துடன் மேற் கொண்டு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருதிவாய் கொப்பளிக்குங் கூரயின்மூ
விலைச் சூலங்கொண்ட திண்டோட்
கருவரைநேர் தருவடுகக் கடவுளெமைப்
புரப்பக் கைகூப்புவாமே.

ஆகாயமெல்லாம் பற்றி எரியும் அக்கினிச் சுவாலைப்பட்டு சுந்தரமான பலஉலகங்களும் ஒழித்திடுங் காலத்திலே பிரம்ம விஷ்ணுக்களின் கர்வம் கெட்டொழியும்படியாக அவர்கள் தம் உடல்மேல் பாய்ந்து, இரத்தத்தைச் சொரிவிக்கும் கூரியவேலும் மூவிலைச் சூலமுங் கொண்ட (மலைபோலும்) புயவலிமையுடைய வடுகக்கடவுள். நம்மைக் காக்கும் படியாக நாம் அவருக்குக் கைகூப்பி அஞ்சலிப்போம்.

## 13. அவிநாசிப் புராணம்

அஞ்சுகனை யாதிலகு மாடரவக்
கங்கணனை யகலும் வானில்
விஞ்சுகனை மாரிநிகர் மேனியனை
வாசியென விரைந்து தாவும்
பைஞ்சுகனை யேயெரித்த புக்கொளியா
ரெயில் காவல் பரிக்கும் வீரக்
கஞ்சுகனை வேணிமலர்க் கிஞ்சுகனைப்
பரசுகனைக் கழறல் செய்வாம்.

அழகிய சுகங்குறையாது விளங்கியாடும் அரவாபரணனாய் பரந்த ஆகாசத்தின் மிகுந்த மழைபோலும் திருவருளுடைய திருமேனியனாய் பாணம் விடுத்துக் கொண்டே சமீபத்து வரும் மன்மதனை எரித்த சிவபிரானுடைய எல்லைக்காவல் காக்கும் வீரவைரவனாய் விளங்கும் சிவந்த மலர் அணிந்த சடாதரனாம் பரமசுகனைத் துதிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தன்னடியார்க் கருள்புரியுந் தகவு தோன்றுஞ்*
*சதுர்முகனைத் தலையரிந்த தன்மை தோன்றும்*
*மின்னனைய நுண்ணிடையாள் பாகன் தோன்றும்*
*வேழத்தி னுரிவிரும்பிப் போர்த்த றோன்றும்*
*துன்னியசெஞ் சடைமேலோர் புனலும் பாம்பும்*
*தூயமா மதியுடனே வைத்த தோன்றும்*
*பொன்னனைய திருமேனி பொலிந்து தோன்றும்*
*பொழி றிகழும் பூவணத்தெம் புனிதனார்க்கே.*

*திருமுறை திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்*
*திருப்பூவணம் 34 ம் பக்கம்*

திருப்பூவணத்தை நினைந்து தோத்தரிக்கும் போது திருநாவுக்கரசு நாயனார் ''சதுர்முகனைத் தலையரிந்த தன்மைதோன்றும் என்றார் ''வேழத்தி னுரிவிரும்பிப் போர்த்த றோன்றும்'' என்றவை நினைவுக்கு வரவேண்டியன.
இங்கேயும் வைரவக்கடவுள் குறிக்கப்பட்டமை காண்க.

## 14. பவானி கூடற் புராணம்

*பொருதலை யுகளும் வேணிப் புனிதனே பரமென் றுள்ளங்*
*கருதலை யயனீ யென்னக் குடிலையுங் கழலத் தேறா*
*வொருதலை யுகிராற் கிள்ளி யும்பர்மா லுதிரம் வாங்கும்*
*விரிதலை சூலச் செங்கை விமலனை வணக்கஞ் செய்வாம்.*

ஐம்முகம் பொருந்தி உள்ளதால் சிவபெருமானென்று கருதிக் கர்வித்தவனும் பிரணவத்துக்குப் பொருள் சொல்லாதவனும் நீதானென்னக் கூறி பிரம்மனின் ஒரு தலையை நகத்தினால் கிள்ளி திருமால் உதிரத்தை வாங்கும் மூவிலைச் சூலாயுத பாணியனாகிய வைரவனை வணங்குவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15. திருவேர்த்தூர் புராணம்

*வேரி மலர்ப் பண்ணவன்றன் சிரமொன்றை
நகநுதியால் வீட்டி யுற்ற
சோரிமலர் தலை நிலத்திற் பாயாதச்
சிரத் தேற்றுத் தொடர்ந்து போந்து
வாரிமலர் கண்வளர்மா னெற்றி யெற்றிக்
குருதிகொடு மமதை நீக்குங்
காரிமலர்க் கழலிரண்டுங் கரமிரண்டுங்
கூப்பி நிதம் கருதி வாழ்வாம்.*

செங்கமலாசனனாகிய பிரம்ம தேவனுடைய தலைகளில் ஒன்றை நகத்தினாற் கிள்ளி ஒழுகிய இரத்தம் பூமியில் விழாமற் படி அம்பில் கோர்த்துக் கொண்டு அதே விரைவில் போய்ச் சமுத்திரத்தில் பள்ளி கொள்ளும் திருமால் நெற்றிக்கிலக்காக விட்டு மூளையைப் பேர்த்துக் கர்வத்தைப் போக்கும் வைரவருடைய மலர்ப் பாதங்களிரண்டையும் எந்நாளும் இருகரங்களாலும் கூப்பி வணங்குவாம்.

## 16. மருதூர்ப் புராணம்

*கோணிலவு பிறைபொருவுங் கூரெயிற்று
வாய் மூடுவற் குதிரை யானைப்
பாணியிற்கங் கணம் புனைந்த வுரகமணி
வெயில் விரிக்கும் பண்பினானை
வேணியரன் திருக்கோயில் காப்பானை
நிருவாண வேடத்தானை
வாணிலவு முத்தலைவேல் வடுகனைச் செந்
தமிழ்பாடி வணக்கஞ் செய்வாம்.*

கோணி வளைந்த மூன்றாம் பிறைச் சந்திரனைப் போல் கூரிய வக்கிர தந்தமுள்ள நாயைக் குதிரைவாகனமாய்க் கொண்டவனாய் கையில் கங்கணமாகக் கட்டிய அரவத்தின் மாணிக்கம் வெயில் போல் பிரகாசிக்கத் தக்கவனாய் சடாதரனாகிய சிவபெருமான் கோயிலைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கப்பட்டவனாய் விளங்கி நிர்வாணவேடங் கொண்டவனாய் வாழ்ந்து நிலைபெறும் முத்தலை வேல் வடுகனைச் செந்தமிழ்ப் பாமாலையால் துதித்து வணங்குவாம்.

## 17. ஆதித்தகிரிப் புராணம்

*பரநாத வரைமணிகிண் கிணி யொலிப்பப்*
*படமெடுத்துப் பார்க்குந் துத்தி*
*வரநாக கங்கணத்தான் மாலகந்தை*
*யிருளகற்ற வந்த ஜோதி*
*யுரனாகும் வித்துருமச் செஞ்சடையா*
*னருளத்தி யுயரா தித்த*
*புரமேவு மணிவரை வாழ் **சட்டைநா***
*யகன் மலர்த்தாள் போற்றி வாழ்வாம்.*

பரநாத மணிச் சிலம்பு கிண்கிணியாக ஒலிக்கும் படியாக படமெடுத்தாடும் பொறிகளையுடைய அரவை ஆபரணமாக அணிந்தவனாய் ஆணவ மலவிருளை நீக்கவரும் பரஞ்சோதியாய் மார்பினிடமாக அணியும் பவளம் போன்ற செஞ்சடைக் கடவுளின் அருளுடைய கங்கையின் வளப்பம் பெருகும் ஆதித்தபுரத் திருக் கோயிலில் வாழ் சட்டை நாயகனுடைய பாதாம்புயங்களைப் போற்றி வாழ்வாம்.

## 18. திருநெல்வேலிப் புராணம்

*பகருமறைப் பணைவனத்திற் பண்டிருந்த தாபதர்க*
*ணிகரிலவந் தவமெனவே நெறியிலவர் செயும் வேள்விப்*
*புகர் முகவெங் கரியுரித்த புரிசடையோ னெல் வேலி*
*நகரினிது புரந்த சட்டை நாதனிரு பதம் பணிவாம்.*

சொல்லா நின்ற வேதாரணியத்தில் பூர்வமிருந்த சைன முனிவர்கள் பிரமாணமில்லாத அவத்தைத் தவமென்று நெறியில் லாமற் செய்யும் யாகத்தின் கரிய யானையை உரித்த சடாதரனாகிய ஈசுரனுடைய திருநெல்வேலித் தலத்தை இனிது காத்த சட்டை நாதர் திருவடியிணைகளைப் பாடிப்பணிவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19. மருதவனப் புராணம்

*மேலையோர் கற்பத் திருதியிற் கதிர்கண்*
*மேவுடுக் கணங்கள் கீழுறத் தீம்*
*பாலை யொத் திருசங் கீன்றமுத்தினங்கள்*
*பரந்திடப் புவியிடத் தெழுந்த*
*வேலையின் மிகுந்த புகலியந் தோணி*
*விளங்கிடு வடுகனாங் கடவுள்*
*காலை மென் போதை யுச்சியிற் கொள்வாங்*
*கடுந்துயர் மாலைதீர்ந்திடவே.*

முன் ஒரு கற்ப கால முடிவில் மூன்றொளிகளையுடைய நட்சத்திரக் கூட்டங்கள் கீழுதிர்த்தாற் ·போல பால் எனவெளுத்த சங்குகள் ஈனும் முத்துத் தினுசுகள் பரவும் படியாகப் பூமியைச் சுற்றி உள்ளம் மகிழும் காசியில் உறைகின்ற வைரவக் கடவுளது திருப்பாதங்களைச் சிரமேற்கொண்டு பிறவித் துயர் தீர்த்திடுவோம்.

## 20. திருநல்லூர்ப் பெருமணப் புராணம்

*புயற்காரின் வருமகவான் பணிவள்ளல்*
*பணிவிடைகள் பொருந்தி நாளுஞ்*
*செயற் காக வெங்கள் குலந்தனை*
*யடிமைக் கொண்டு வளர்தேவதேவ*
*னயற்காதி யமலனருள் செய்த புர*
*மெனவுலக மனைத்துங் கூறும்*
*வயற் காழி நகர்ச்சட்டை நாதனிரு*
*பாதமலரை வணங்கி வாழ்வாம்.*

மேகநாயகனாகிய இந்திரன் பணியும் வள்ளலாகிய சிவபெருமானுக்கு எந்நாளும் திருத்தொண்டு செய்வதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்முடைய குலத்தை அடிமையாகக் கொண்டு வளருந் தேவதேவனும், பிரம்மாதிதேவர் முதலானவர்களுக்கும் வரம் அளிக்கும் முதல்வனாகிய பரம சிவன் ஏற்படுத்தியதாம் என உலகமெல்லாங் கொண்டாடும் வயல் வளப்பமுடைய சீகாழிச் சட்டை நாதனுமான **வைரவ மூர்த்தியின்** பாதாம் புயங்களிரண்டையும் வணங்குவாம்.

## 21. காசி ரகசியம்

*தளம் பொரிமலரோ னாதிவானவர் தாழ்ந்து போற்ற*
*வுளம் பொலி காசி மேவு முயிர்கள் செய்பாவ மெல்லாங்*
*களம் பொலியாது தண் டங் கண்டற லொழிந்து முத்தி*
*வளம் பொரிவகை செய்கால **வயிரவற்கன்பு** செய்வாம்.*

கமலாசனனாகிய பிரம்மாதி தேவர்கள் தாழ்ந்து போற்ற உள்ளம் மகிழும் காசியில் வாழ்கின்ற சீவாத்துமாக்கள் செய்த பாவங்களை யெல்லாம் தண்டிக்காது, பணிந்து தண்டனிடக் கண்டு அவர்கள் பாவங்களை ஒழித்து முத்தி சாம்ராச்சியம் அடைய வழிகாட்டும் காலவயிரவற்கு அன்பு பூண்டொழுகுவாம்.

## 22. திருநாகைக்காரோணப் புராணம்

*பெருகுதன் புகழுளேனோர் பிரதாப மடக்கி யாங்கு*
*முருகுதங் கலரின் மேலான் முண்ட வெண்கபாலத் தூடு*
*கருகுபைங் கொண்டன் மேனி கவிழ்த்திடு செந்நீரேற்ற*
***திருகுதீர் வடுகப் புத்தேள்** சேவடி சென்னி சேர்ப்பாம்.*

பெருகிய தன் பிரதாபத்துள் மற்றவர்களுடைய புகழை அடக்கிக் கமலாசனத்தின் மேல்வரும் பிரம்மனுடைய முண்டமான கபால ஓட்டில் கருகிய நீலமேக சரீரம் கவிழ்ந்து புரண்டாலன்ன சிவந்த இரத்தங் கொண்ட கள்ளமில்லா வடுகக் கடவுளின் சேவடிகளைச் சிரமேற் கொள்வாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23. திருக்குடந்தைப் புராணம்

*எழுவகைத் தாதுங் கூடினியங்கிடு முயிரொன் றேனு*
*நழுவிடி னியங்கா வென்று நவிறலை வெளிசெய் தாங்கு*
*முழுவலி நெடியோ னாதி மொய்த்த வானவர்மெய் நெய்த்தோர்*
*வழுவறக் **கபாலத் தேற்ற வடுகனை** வணங்கி வாழ்வாம்.*

இரதம், இரத்தம், சுக்கிலம், மூளை, தசை, எலும்பு, தோல், ஆய தாதுவகை ஏழுங்கூடித்தான் உயிர்கள் நடைபெறும் . இல்லாவிட்டால் ஒன்றும் நடைபெறமாட்டா என்று சொல்லு வதைப் பிரசிப்படுத்தி முழு வன்மையுடைய மகாவிஷ்ணு முதலான தேவகூடங்களின் தேக இரத்தத்தைக் குற்றமற்ற பிரம்ம கபாலத்தில் ஏந்திய வடுக நாதக் கடவுளைக் வணங்குவாம்.

திருநாகைக்காரோணம் கோயில் கொண்ட ஐயனை நினைந்து பாடும்போது திசை முகன் சிரமொன்றேந்தும் ஐயனைக் குறித்த சிறப்பு காண்க.

### திருநாகைக்காரோணப்புராணம்

*வையனை வையமுண்ட மாலங்கத் மேற்கொண்ட*
*செய்யனைச் செய்ய போதித் **திசைமுகன் சிரமொன்றேந்தும்***
*கையனைக் கடல் சூழ் நாகைக்காரோணக் கோயில் கொண்ட*
*ஐயனை நினைந்த நெஞ்சேயம்மநா முற்றவாறே.*

*வெம்பனைக் கருங்கையானை வெருவவன்றுரிவை போர்த்த*
*கம்பனைக் காலாற் காய்ந்த காலனை ஞாலமேத்தும்*
*உம்பனை உம்பர்கோனை நாகைக்கா ரோணமேய*
*செம்பொனை நினைத்த நெஞ்சே திண்ணநா, முற்றவாறே.*

இங்கேயும் திருநாகைக்காரோணத்தானைத் துதிக்கும்போது

''வெம்பனைக் கருங்கையானை வெருவவன் றுரிவை போர்த்த சிவனே வைரவராக நாமமேந்தினார் எனபது விளங்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24. மாயூரப் புராணம்

*ஓங்குநாற் படை முன்னஞ்சு மொள்ளுகிர் படையுந் தேசு*
*வீங்குசக் கரமுன்னாள் வெம்படை அஞ்சுமஞ்சுந்*
*தாங்குசூற் படையுங் கொண்டோர் தலைக்கல நெந்தோரேற்ற*
*பாங்குசேர் **வடுக்கப்புத்தேள்** பதமலர்க் கன்பு செய்வாம்.*

ஓங்கிய சதுரங்கசேனைகளும் அஞ்சத்தக்க நகக் கூர்மையும் அழகிய சங்கு, சக்கரம், வாள், கோதண்டம், கதையாய ஐம்படையையும் பயப்படத்தக்க சூலாயுதத்தையும் தாங்கிக் கொண்டு பிரம்மகபாலத்தில் இரத்தம் கொட்டிப் பாய்ச்சும் பெருந்தகையனாம் வடுக நாதக் கடவுளின் பாத தாமரைக்கு அன்பு செலுத்துவாம்.

## 25. உறையூர்ப் புராணம்

*உலக மூன்றி னுக்குந்தானே யொருமுத தெரிந்தாங்*
*கலகிறீப் பொறிக டும்பி யலங்குமுத் தலைவேறாங்கி*
*வலனுடை மாயனாதி வானவர் செருக்கு மாறப்*
*பலருமுன் **னஞ்ச நெயத்தோர்** பலிக்கொண்டோன்*
*சரணஞ்சார்வாம்.*

சுவர்க்க, மத்திய, பாதாள மென்ற திரிலோகங்களுக்கும் தானே ஒரு முதல்வனெனத் தெரிவித்துக்கையில் அளவில்லாத தீப் பொறிகளைச் சிந்திப் பிரகாசிக்கும் முத்தலை வேலாயுதத்தை தாங்கி வலம்புரிச் சங்கமேந்திய மாயோன் முதலான வானவர்களின் கர்வமடங்கவும், அவர்கள் பற்பலவுமாகப் பயப்படவுமாக இரத்தப் பலி வாங்கும் வைரவக் கடவுளின் சரணார விந்தங்களைச் சார்ந்தடைவாம்.

## 26. திருவம்பர்ப் புராணம்

*சுவைமுனந் தெரிந்து பின்புதற் குதவுந்*
*தூத்தவ வேட்டுவர் பொருவச்*
*செவைமலர் **கிழவன் றலைச்சுவை** முன்னந்*
*தெரிந்து பின்னக் குதவுகிரு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நவை கொண்மா னெய்த் தோர்ச் சுவைமுனந் தெரிந்து*
*நயந்துபினத்தலைக் குதவுங்*
*கவைபடு திறற் சூலமுங்கரங் கொண்ட*
*கடவுடன் சேவடி போற்றி.*

முன்னே சுவை பார்த்த பின்னே தனக்குதவுங் கண்ணப்ப நாயனாரைப் போலச் செந்தாமரையனாகிய பிரமன் தலைச் சுவையை முன்னேயுணர்ந்ததால் பின்னும் வளர்த்த நகமும், பழியா நின்ற திருமால் உதிரத்தைச் சுவைத்து முன்னமினிமையடைந்ததால் பின்னுமத்தகைய சமயங்கட்குதவா காரண பெற்றியுடைய சூலாயுதமும் கையிற் கொண்டேற்றும் வைரவக் கடவுளின் சேவடிகளைப் போற்றுவாம்.

## 27. திருவாளொளிப் புற்றூர்ப் புராணம்

*மறைகமழ் கபாலத்தோடு மாயவன் மேனிநெய்த்தோர்*
*துறைகமழ் கொடிய வெந்தீச் சூலமுங் கரத்திற்றாங்கி*
*முறைகமழ் உலகில் யார்க்குமூடிய பேருக்கு மாய்க்கு*
*மிறைகமழ் **வடுகப் புத்தே** ளிணையடிக்கன்பு செய்வாம்.*

பிரம்மாவின் கபாலவோட்டில் மகாவிஷ்ணுவின் உதிரத்தை வாங்கும் கொடிய வெந்தீச் சூலத்தைக் கையில் தாங்கிக் கொண்டு உலகத்திலே யாரார்க்குக் கர்வம் மூடியதோ அக்கர்வத்தை மாய்க்கும் இறைவனான வடுகப் பெருமானுடைய திருவடி இணைகளுக்கு அன்பு பூண்டு ஒழுகுவாம்.

## 28. விளத்தொட்டிப் புராணம்

*இருட்பெரு நிரய மேவற் கேது வாஞ் செருக்கு மேவில்*
*வெருட்பெருந் தண்டமேவு மகவுமென் றுணர்த்தி யாங்கு*
*மிருட் பெருஞ் செயலி னீங்கா மாலுடம்புரித்துப் போர்த்த*
*வருட்பெரு **வடுகன் செம்பொனம்புயப்** பாதம் போற்றி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதியந்தகாரமான நரகம் அடைவதற்கு காரணமாம் கர்வத்தைப் படைத்தால் மிகவுங் கொடூரமான தண்டனைக்குட்பட வேண்டுமென்று தெரிவித்து மயக்கமான கொடுஞ் செயல் விட்டு நீங்கா உக்கிர நரசிங்கத்தைப் பிளந்து தோலையுரித்துப் போர்த்த பேரருள் உடையோனாகிய வடுகக் கடவுளின் பொற்பாத கமலங்களைப் போற்றுவாம்.

## 29. கோயிலூர்ப் புராணம்

*தெருட்பெரு நலனை வாவித் தீவிர தரத்துற்றோர்க்கு*
*மருட்பெரு மாயை நூறி வல்வினைப் படலங் கீறிச்*
*சுருட்பெருங் கொடிய துக்க நிவர்த்தியுஞ் சுகத்தின்பேறு*
*மருட்பெருஞ் செயலானல்கும் **வடுகனையடைந்து** வாழ்வாம்.*

தெளிந்ததோர் பேரின்பத்தை இச்சித்து தீவிர தரத்தை அடைந்தோர்களின் பெரு மயக்கமான மாயையை அழித்து வல்வினை என்னும் படலத்தைக் கீறி சுருள் போல் பெருகுங் கொடுந்துக்க நிவாரணமும் பரமசுகத்தின் முத்திப் பேறும் திருவருட் செயலால் அருள்புரியும் வடுகக் கடவுளை அடைக்கலம் புகுந்து வாழ்வாம்.

## 30. திருக்குறுக்கைப் புராணம்

*ஆக்கும் வினைமலர வனதன் றென்றற*
*கவனுத் தமாங்க நான்குங்*
*காக்கும் வினைமாய வனதன் றென்றற்*
*கவன் மேனி கழிநெய் தோரும்*
*தாக்கும் வினையாள ருந்தேர் சான்றுரைக்கக்*
*கூர்கொளு கிர்ச்சாங்கத் தோடு*
*போக்கும் வினைச் சூற் படையுபாங்கமுங்கொள்*
***வடுகனடி** போற்றி வாழ்வாம்.*

தாழ்ந்த சிறுத் தொண்டருமறிந்து சாட்சி கூற உண்டாக்கும் படைப்புத் தொழில் பிரம்ம தேவனுடையதல்லவென்பதாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுடைய நான்கு முகமும் பாதுகாக்குந் திதித்தொழில் விஷ்ணுவினுடையதல்லவென்பதாய் அவனுடைய இரத்தம் ஒழுகும் தேகமும் விளங்கும் கூரிய நகவொழுங்கும் உயிரைப் போக்கத்தக்க சூலாயுதமேந்திய கையும் கொண்ட வைரவருடைய திருவடிகளைப் போற்றி வாழ்வாம்.

## 31. தனியூர்ப் புராணம்

*மறைபுகழ் தானேயோம்ப வயங்க கேத்திரத்தினெல்லை*
*பொறையுடல் விடுத்தோர் பாவப் புணர்ப்பினுக் கேற்றதண்டங்*
*குறையற வியற்று தண்டதரன்குறுகாது தானே*
*முறையுற வுஞற்றிப் போக்கு **முதல்வனை** வணக்கஞ் செய்வாம்.*

வேதங்களால் புகழ்ந்து கொண்டாடத் தக்க சிவபெருமான் கோயில் எல்லையருகில் உடலை விட்டிறந்தவர்களின் பாவ சம்பந்தத்துக் கீடான தண்டனையைக் குறைவில்லாமல் நிறைவேற்றும் எமன் நெருங்காத வண்ணம் எல்லாந்தானே நெறி முறையாகச் செய்து பாவத்தைப் போக்கி முத்தி தரும் வடுகநாதக் கடவுளை வணங்குவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# வைரவக் கடவுள்

*பிரதிஷ்டா கலாநிதி வேதமாமணி*
***ஈசான சிவ சிவ ஸ்ரீ சி. குஞ்சிதபாதக் குருக்கள்***
*பிரதம சிவாசாரியார் - ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம்*

வைரவ மூர்த்தம் சிவாம்ச மூர்த்தமாகும். இம்மூர்த்தம் சம்ஹார ருத்திரர் எனவும் கூறப்படும். வைரவக் கடவுள் சத்துவ தாமச குணத்தவர். உடற்பற்றை விட்டபடியால் வைரவர் நிர்வாண கோலத்துடன் உள்ளார். வினை நீங்கும் போது உடற்பற்றும் நீங்குகிறது. அவற்றை அழிக்கும் கோலத்தைக் காட்டுவதே நிர்வாண வடிவம் ஆகும். இவ்வடிவமானது கோரரூபங் கொண்ட வடிவமாக உள்ளமையை நாம் நோக்கலாம்.

10524

## வைரவ கோயில்

ஆலயங்களில் வடக்குக்கும் வடகிழக்குக்கும் இடைப்பட்ட இடத்தில் பரிவார மூர்த்தியாக வைரவக் கடவுள் எழுந்தருளி இருந்து அருள்பாலிப்பதை நாம் அறிவோம். அங்கு வைரவ விக்கிரகம் அல்லது திரிசூலம் பிரதிட்டை செய்யப்பட்டிருக்கும். அவரே ஆலயத்தின் காவலர் ஆனமையின் அவர் ஷேத்திரபாலர் என அழைக்கப்படுகிறார். காசியில் கால வைரவராகவும் சிதம்பரத்தில் சுவர்ண வைரவராகவும் சிறப்பாக காட்சியளிக்கிறார். எமது நாட்டில் பெரும்பாலும் ஞானவைரவ வழிபாடு எங்கும் உள்ளது. சிதம்பரத்து பொன்னம்பலத்தின் பெயரைத் தாங்கிச் சிவாகம முறைகளுக்கமைய பெருங்கோவிலாகக் கொழும்பில் உள்ள ஸ்ரீ பொன்னம்பல வாணேஸ்வரத்தில் க்ஷேத்திரபாலருக்கு அருகே சுவர்ணவைரவர் அம்பாளுடன் அருட்கோலங் கொண்டு பரிவார மூர்த்தியாக உள்ளமையை இங்கு காணலாம். தனி வைரவ ஆலயங்களாக ஞானவைரவர், நரசிங்கவைரவர் போன்ற ஆலயங்கள் இலங்கையில் உள்ளன.

பொதுசன நூலகம்
விசேட சேகரிப்புப் பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காவற் தெய்வம்

வைரவ வழிபாடு இலங்கையில் இயற்கையோடிணைந்த ஓர் வழிபாடாக உள்ளமையையும் நாம் காணமுடியும். ஆகமங்களில் கூறப்பட் டுள்ளவாறு அவர் கிராமபாலகர், ஊர்ப்பாதுகாவலர் ஆகவே பிள்ளையார் கோவில்களைப் போல வைரவ கோவில்களும் கிராமங்கள் தோறும் உள்ளன. இலந்தையடி வைரவர். புளியடிவைரவர், ஆலடி வைரவர், காட்டு வைரவர் என்று மரங்களுக்கு மத்தியில் ஆலயங்கள் அமைக்கப்பட்டு சகலரும் இந்தக் காவற் தெய்வத்தை வழிபடும் வழக்கம் இன்றும் எம்மத்தியில் உள்ளது.

## வைரவ வழிபாடு

ஆலயங்களில் விசேட கிரியைகள் ஆரம்பமாகும் போது வைரவ வழிபாடுகள் சிறப்பாகச் செய்யப்படுகின்றன. கிராமசாந்தியில் எட்டுத்திக்குப் பாலகர்களையும் வைரவரையும் சாந்திப்படுத்த மந்திர பூர்வமாக பூசைகளுடன் நீற்றுப்பூசணி வெட்டுதல், வடைமாலை சாத்துதல், சாதம், வெற்றிலை பாக்கு, பழம், எலுமிச்சம் பழம் போன்றவற்றை அர்ப்பணித்து வழிபாடுகள் செய்யப்படுகின்றன. இதே போன்றே வாஸ்து சாந்தியின் போதும் வைரவ வழிபாடுகள் செய்யப்படுகின்றன. கோவிற் கட்டட அத்திவாரம், உற்சவ ஆரம்பம் புதிய தேர் அமைப்பு. தேர்த் திருவிழா, உற்சவ முடிவு, புதிய வீடு கட்ட அத்திவாரம் போடுதல், வீடு கட்டுதல் போன்ற பல்வேறு காலங்களிலும் வைரவருக்கு உரிய முறையிலான வழிபாடுகள் செய்யப்பட்டு அவரது அநுக்கிரகத்தைப் பெற்றபின்பே கிரியைகள் ஆரம்பிக்கப்படுகின்றன.

## நித்திய பூசை

வைரவக் கடவுளுக்கு காலையிலும் மாலையிலும் பூசைகள் உள்ளன. அர்த்த ஜாமப் பூசையிலும் அதிகாலைப் பூசையிலும் வைரவசுவாமிக்கு விசேட பூசைகள் நிகழ்கின்றன. அர்த்த ஜாமப் பூசையிலேயே எல்லா ஆலயங்களும் பூட்டப்பட்டு ஆலயத் திறப்புகள் வைரவரிடம் ஒப்படைக்கப்படுகின்றன. அப்போது சாதம், வடை, வெற்றிலை, பாக்கு, பழம் என்பன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நைவேதிக்கப்பட்டு கோயிலையும், ஊரையும் பாதுகாத்தருளும்படி வேண்டப்படுகின்றது. இதனை முத்திரா தண்ட வழிபாடு எனவும் அழைப்பர். முத்திரை திறப்பு என்பதைக் கவசம் எனவும் கொள்ளலாம். காலையில் கோவில் திறக்கப்படும் போது பசும்பால், தாம்பூலம், பழம் என்பன நைவேதிக்கப்படுகின்றன. அவரது அநுமதியுடன் திறப்புகளை எடுத்து முதலில் பள்ளியறை திறக்கப்படுகிறது. இவ்வேளையில் மூர்த்தி, சாந்நித்தியம் பெறுகின்றதெனலாம்.

### விரத நாட்கள்

சித்திரைப்பரணி, ஐப்பசிப்பரணி, தைமாத முதல் செவ்வாய் முதல் அதாவது ஒவ்வொரு செவ்வாயும் ஆகிய தினங்கள் வைரவ சுவாமிக்கான விரத நாட்களாகும். இக்காலங்களில் முறைப்படி விரதமிருந்து சிவப்புப்பட்டு, சிவப்புமாலை, வடைமாலை என்பனவற்றைச் சாத்தி வழிபாடுகள் செய்து விரதத்தை நிறைவேற்றலாம்.

### வைரவ பொங்கல்

ஏலவே கூறிய விரத நாட்களிலும், மாதப்பிறப்பு, வெள்ளிக் கிழமைகளிலும், விசேடமாக தைப் பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு தினங்களிலும் வைரவ சுவாமிக்கு சிறப்பாகப் பொங்கல் படைக்கப்படுகின்றது. பொங்கல் படையலுடன் பெருமடை போடப்படுவது வழக்கம். வாழைக்குலை, பலாப்பழம், மாம்பழம், எலுமிச்சம்பழம், தாம்பூலம், வடை, முறுக்கு, அப்பம் முதலான பல்வேறு நைவேதனப் பொருட்கள் மடையில் சிறப்பாக இடம் பெறுவது ஓர் சிறப்பாகும்.

### புராண நோக்கு

முன்னொருகால் தேவரும், முனிவரும் திருமாலிடமும் திசைமுகனிடமும் கடவுள் யார் என்பதைக் கூறும்படி விண்ணப்பித்தனர். அவர்கள் தாமே முழு முதற் கடவுள் எனக் கூறினர். அவ்வேளையில் வேதமும், பிரணவமும் நீங்கள் தர்க்கிக்க வேண்டாம். சிவபெருமான் ஒருவரே முழுமுதற் கடவுள் எனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினர். இவர்களது மமதையை அடக்கச் சிவபிரான் ஜோதி வடிவெடுத்து அதனுள்ளே சிவபார்வதி வடிவத்தைக் காட்டினார். அதனைக் கண்டு விஷ்ணு வணங்கினார். ஆனால் சிவபெருமானைப் போலவே எனக்கும் ஐந்து தலைகள் உள்ளன எனத் தனது உச்சிச் சிரசால் சிவபிரானை பிரமா இகழ்ந்தார். சிவபிரான் முன் ஒருகால் தாருகனைக் கொன்ற சக்தியின் கோபத் தீ குழந்தையுருக் கொண்டது. காளி அதை வளர்த்தாள். அதைச் சிவன் இருதயத்தில் ஒடுக்கி வைத்திருந்தார். அந்தச் சக்தியை வைரவ மூர்த்தியாக இருதயத்திலிருந்து தோற்றுவித்தார். இந்த மூர்த்தி சிவமூர்த்தியின் சகல அம்சங்களையும் கொண்டு விளங்கிற்று. சிவபிரானின் ஆஞ்ஞைப்படி வைரவர் நீல நிறத் திருமேனியுடன் சூலம், பாசம், பரசு, உடுக்கு என்பவற்றைக் கரங்களிலேந்தி மூன்று கண் களுடனும் இரத்த நிறச் சுவாலை போன்ற சடையுடனும் உக்கிரரூபியாகி நிர்வாணக் கோலத்துடன் காட்சி கொடுத்தார். வேத வடிவான நாயைத் தமது வாகனமாகக் கொண்டிருந்தார். சிவபெருமானின் அருளாணைப்படி பிரமாவின் ஒரு சிரசினைக் கொய்து அவரது அகந்தையை அடக்கினார்.

மேருமலையில் இருந்து வைரவர் நீங்கி தேவர் முனி வர்களின் பிக்ஷையை ஏற்றார். அவர்கள் உயிர்த்தெழுந்தனர். வைகுண்டத்தில் விஷ்ணுவுக்கு உயிர் கொடுத்தார். பிரம்மா படைத்தற் கடவுள் அல்லவா? ஆகவே அவரது சிரசைக் கொய்த இரத்தம் உலகெங்கும் சென்றது. அதனைத் தமது நெற்றி விழியால் வைரவர் வற்றச் செய்தார். வைரவர் பன்னிரண்டு வருடங்கள் பிரமகத்தியை ஏற்று எல்லாவுலகுஞ் செல்கையில் வைகுண்டமுஞ் சென்றார். அங்கு வைரவரை விஷ்வசேனர் எதிர்த்தார். அவரைத் தமது சூலத்தால் கொய்து தூக்கிக் கொண்டு விஷ்ணு மூர்த்தியிடஞ் செல்ல அங்கு விஷ்ணுவின் சிரசிலிருந்து ஆயிரம் தேவ வருடம் உதிரம் சொரியவே விஷ்ணு மூர்ச்சித்தார். இதனைக் கண்ணுற்ற பூமாதேவி வைரவரை வேண்டவே விஷ்ணுவுக்கு உயிர் கொடுத்து காசி சேத்திரஞ் சென்று கபாலத்தை விட்டு அங்கு காலவைரவராக எழுந்தருளினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமானின் ஆஞ்ஞைப்படி சர்வசம்ஹார காலத்தில் வேதப் பொருளைக் கொண்ட நாயை வாகனமாக்கிக் கொண்டு தீமைகளை தமது நெற்றிக் கண்ணினால் உலகில் இல்லாமற் செய்தார் வைரவக் கடவுள்.

*சிறப்பம்சம்*

வைரவர் காவற் தெய்வம், வீட்டுக்காவல், ஊர்க்காவல், கோயிற் காவல் போன்றவை அவரின் சிறப்பம்சங்களாகும். உலகில் நோய், பிணி ஏற்பட்டாலும் அவர் பிணிதீர்க்கும் வைரவராக உள்ளார். யாத்திரை செல்பவர்களும், தூர இடங்களுக்குச் செல்பவர்களும் வைரவரின் நூலினைக் கட்டிக் கொண்டு செல்வர். காசியில் காலவைரவரின் கறுப்பு நூல் எல்லோராலும் பக்தியுடன் அணியப்படுகிறது.

சகல விதத்திலும் சிவப் பொலிவுடன் காவல் செய்து எல்லோருக்கும் அருள் பாலிக்கும் வைரவ சுவாமியை நாம் விரத அநுட்டானங்களுடன் வழிபட்டு இஷ்ட சித்திகளைப் பெறுவோமாக.

*''பரமனை மதித்திடாப் பங்கயாசனன்*
*ஒருதலை கிள்ளியே ஒழிந்த வானவர்*
*குருதியும் அகந்தையும் கொண்டு தண்டமுன்*
*புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்''.*

சுபம்

卐



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரவரும் சிவனும்

சிவனின் பிள்ளைகள் ஆகிய விநாயகர், முருகன் என்று இருப்பது போல சிவனின் சிவ அம்சமான, சில திரு உருவங்களாக வைரவர், வீரபத்திரர் என்போர் உளர். ஈசானம், தற்புருஷம், அகோரம், சைத்தியோ சாதம், வாமதேவம் முதலிய ஐந்து முகங்களுடன் இறைவன் பல அருளாடல்களைக் காட்டியிருக்கிறான். இந்தவகை மூர்த்தி பேதங்களில் வைரவரும் ஒன்று. சிவாம்சமான வைரவமூர்த்தி உலகம் எங்கும் வியாபித்திருப்பவர். பயங்கர தீமைகளையும், சூதுகளையும், அழித்து விடுகின்றார். உக்கிர மூர்த்தியான வைரவரின் உபாசனை தீமைகளில் இருந்து காத்தருளவல்லது. தீவிர உபாசனையின் மூலம் கடுமையான தவநெறிகளைப் பின்பற்றி சிவனருளை அடைய விரும்பிய பல சிவனருட் செல்வர்கள் வைரவ உபாசனையின் பேரின்பத்தைக் கண்டிருக்கின்றனர். காபாலிகர்கள் வைரவ உபாசனையில் தீவிர ஈடுபாடு கொண்டவர்கள்.

''ஸௌந்தர்யலஹரி'' என்ற கிரந்தம் 41 வது சுலோகத்தில் காலாக்கினி ருத்திரனால் மஹா பிரளயத்தில் பஸ்மமாக்கப்பட்ட உலகத்தை மீண்டும் உண்டு பண்ணுகின்ற காரணத்திற்காக அம்பிகை ஆனந்த பைரவியாகவும், பரமசிவன் ஆனந்த பைரவராகவும் தாண்டவமாடிக் கொண்டு இருப்பதால் சிருங்காரம், வீரம், ஹாஸ்யம், அற்புதம், பீபத்ஸம், ரௌத்ரம், பயானகம், கருணை, சாந்தி என்று ஒன்பது விதமான ரஸங்களும் வெளிவருகின்றன என்று கூறப்படுகிறது.

''லலிதா ஸஹஸ்ரநாமம்'' ''பைரவி'' என்று அம்பாளை அழைக்கின்றது. துக்கத்தை அல்லது துக்கத்திற்குக் காரணமான பாவத்தைப் போக்குவதால் ''ருத்ரன்'' என்றும், ''வைரவர்'' என்றும் சிவன் அழைக்கப்படுகிறான்.

பைரவ தந்திரத்தையே வெளிப்படுத்தியவர் ஆனந்த பைரவர் தான். ஆனந்த பைரவரைத் தான். ஜகத் சிருஷ்டியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்த பைரவி என்பது. அதன் அதிஷ்டானம் தான் ஆனந்த பைரஸ் என்பது, மஹாகால ஸம்ஹிதை, காலிதந்திரம், விஞ்ஞான பைரஸ் முதலிய கிரந்தங்களில் இதன் விரிவை நாம் காணலாம்.

> "சுவாநத் வஜாய வித்மஹே
> சூல ஹஸ்தாய தீமஹி
> தன் நோ பைரவ ப்ரசோதயாத்"

என்பது பைரவரின் பேரருளைப் பெறுவதற்கு வழிகாட்டும் காயத்திரி மந்திரமாகும். இதை ஆசாரத்துடன் தகுந்த குருநாதரால் உபதேசிக்கப்பட்டு ஓதிப் பயன்பெறவேண்டும்.

சிவனது பல அம்சங்களுள் வைரவ அம்சம் மிகவும் முக்கியமானது. ஆலயங்கள் தோறும் வைரவருக்கு சந்நிதி உண்டு. ஆலயத்தில் தினமும் காலையில் பூசைகள் துவங்கு முன்னரும் இரவு அர்த்த ஜாமத்தில் பூசை முடிவுறும் போதும் வைரவருக்கு விசேஷமாக பூசைகள் செய்ய வேண்டுமென்று "ஸ்ரீ பராத்த பூஜாவிதி" என்னும் நூல் கூறுகிறது.

வைரவருக்கு க்ஷேத்திர பாலர் என்றும் ஒரு பெயர் உண்டு. க்ஷேத்திரம், புண்ணிய நதி தீரம், பரிசுத்தமான தூய தவச்சாலை, இவை யாவும், பைரவரின் காவலுக்கு அருளாட்சிக்கு உட்பட்டவை. ஆலயத்திலும் அவர் ஊர் எல்லைகளிலும் காவல் தெய்வமாக விளங்குவதாகவும் கூறப்படுகிறது. காசியம் பதியாகிய புண்ணிய தலத்தின் காவல் நாயகன் காலவைரவ மூர்த்தி, இவரின் சந்நிதியில் கறுப்புக் கயிறு கட்டிக்கொள்ளலும் அங்கிருந்து வாங்கிக் கொண்டு வருதலும் வழக்கமாக இன்னமும் உண்டு.

முன்பு பிரமதேவனுக்கு ஐந்து தலைகள் இருந்தன எனவும் ஒரு சமயம் தானே உலகிலெல்லாம் உயர்ந்தவர்; இணையற்ற பரம்பொருள்; என்று அகந்தையுற்று இருந்த வேளை சிவ னிடம் இருந்து ஒரு பெரும் சக்தி - உக்கிர சக்தி தோன்றியது. காண்போரைப் பயத்தில் ஆழ்த்தும் கொடூர வடிவத்தில் கரங்களிலெல்லாம் பயங்கர ஆயுதங்கள் கொண்டு தோன்றிய அந்தச் சக்தி பிரம்மனுக்குப் பாடம் புகட்ட எண்ணி அவனது ஐந்து தலைகளில் ஒன்றைக் கிள்ளி எறிந்தது. (கந்தபுராணம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு முகமுடையவனாகிய பின்னர் பிரம்மனுக்கு தனது தவறையும் சிவபெருமானின் பெருமையையும் உணர முடிந்தது. சத்தியப் பரம்பொருளான சிவனது பெருமையை உலகுக்கு உணர்த்திக் காட்டிய சிவசக்தியை - வைரவ மூர்த்தியை அனைவரும் போற்றினர். (அகங்காரத்தால் அறம் மறந்த தட்சனைத் தண்டித்துப் புகழ் பெற்ற வீரபத்திரரைப் போல) நான்கு முகனுக்குச் சிவன் பெருமை உணர்த்தி வைரவர் பெருமை பெற்றார்.

வைரவருக்கு காலவைரவர், மஹாவைரவர், க்ஷேத்திர பாலர், பிரம்மா சிரஸ் சேதமூர்த்தி என்று பல பெயர்கள் உண்டு. தமிழ் நூல்கள் வைரவரை ''வடுக தேவர்'' என்று குறிப்பிடுகின்றன. நரசிம்ம உக்கிரத்தைக் குறைத்த சட்டைநாதராகவும் வைரவர் வணங்கப் படுகிறார். சீர்காழியில் தோணியப்பர் கோயிலில் வைரவரின் ஆத்தாரண மூர்த்தம் எனப்படும் சட்டநாதரைக் காணலாம். இப்பெருமான் நரசிம்ம உக்கிரத்தைத் தணித்ததை சீர்காழி தலபுராணம்.

*''துங்கமாமணித் தூணில் வந்திரணியன் றோள் வலிதனை வாங்குஞ்*
*சிங்கவேற்று உரி அரைக்க சைத்துலகெலாந் தேர்ந்தளந்தவன் மேனி*
*யங்கம் யாவும் ஓர் கதையதாய்க் கொண்ட தனங்கியாப்புனைகாழி*
*சங்கவார் குழைச் சட்ட நாயகன் துணைத்தாமரைச் சரண் போற்றி''*

என்று குறிப்பிடுகின்றது.

வைரவ உபாசனை, வீரம், ஞானம், தைரியம் போன்ற பாக்கியங்களை அளிக்கவல்லது. நல்லியல்புகளும் தர்மமும் நலிந்து அறியாமை இருள் கௌவி வரும் இந்நாட்களில் மீண்டும் புத்தொளியும் புது வாழ்வும் பெற வடுகநாதனை அனைவருமே உபாசித்து உய்ய வேண்டுவது அவசியமாகும். இந்திய பூமியிலே உள்ள வைரவ சந்நிதிகளில் காசியில் உள்ள கால வைரவரைக் காணாமல் திரும்புவதில்லை. வைரவ உபாசனையை ஸ்திரீகள், கோழை மனமுடையவர்கள் செய்யக் கூடாதென்று ஐதீகம் உண்டு. வைரவர் உக்கிர மூர்த்தி என்பதனால் இருக்கலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதத்தில் ருக்வேதத்திலும், அதர்வண வேதத்திலும் வைரவரைப்பற்றிக் கூறப்படுகின்றது. காசி கண்டத்தில் வைரவ சரித்திரம் விஸ்தாரமாய்க் கூறப்பட்டுள்ளது. எல்லோராலும் வைரவ உபாசனை தீவிரமாகச் செய்ய முடியாது போனாலும் தீமைகள் அகலப் பூசிக்கப்படவேண்டிய தெய்வ நிலைகளில் ஒன்றாக வைரவர் இடம்பெற முடியும். சிவனின் ஞான மூர்த்த வடிவமே இன்று பெரும்பாலும் வைரவராக வழக்கில் வைத்து வழிபடப்படுகின்றது. இலங்கையில் எல்லாப்பாகங்களிலும் முறைப்படி ஆகமம் கூறும் விதிகளை அனுட்டித்து ஆலயங்களில் வைரவரை வணங்குகிறார்கள். காவல் தெய்வமாக, ஞானவைரவராக, யாழ்ப்பாணத்தில் அநேகமான ஆலயங்கள் உண்டு. வைரவர் சிவனின் ஓர் அம்சமாதலால் சிவனாகவே கொண்டு வழிபட வேண்டும்.

பெருகுதன் புகழுளனோர் பிரதாப மடக்கியாங்கு
முருகுதங் கலனின் மேலோன்முண்ட வெண்கபாலத்தூடு
கருகுபைங் கொண்டன் மேனி கவிழ்த்திடு செந்நீரேற்ற நீ
திருகுதீர் வடுகப்புத்தேள் சேவடி சென்னிசேர்ப்பாம்.

*"திருநாகைக்காரோணப் புராணம்"*

*திருமதி சாந்தி திருநாவுக்கரசன்*
*பிரதிக் கல்விப் பணிப்பாளர்*
*இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தில்லையில் காலவைரவர்

ஸ்ரீ நடராஜர் இருக்கும் இடத்திற்குக் கீழ்ப்புறம் சிற்சபையில் உள்ள மூர்த்தி. முன்னாளிலே இந்த மூர்த்தி நாள் தோறும் பூசை செய்பவர்கட்கு பொன்னாலாய காசு (படிக்காசு) வழங்கியதால் இந்த மூர்த்திக்குச் சுவர்ண காலபைரவர் என்றும் பெயர் சொல்வர். இப்போது பொற்காசு வழங்கி வருவது இல்லையெனினும் பெயர் வழக்கம் தொடர்ந்து நிலவி வருகிறது. இந்த மூர்த்திக்கு தனிப்பட வேண்டுதல் செய்து கொண்டு அன்பர்கள் அபிஷேகஞ் செய்து வடைமாலை சாத்தி விசேஷ வழிபாடுகள் செய்வர். சந்திரமௌளீசுர ஸ்படிக லிங்கத்துக்கு ஆறுகால அபிஷேகம் நடக்கும் போது மட்டுமே இதற்கு அபிஷேகம் செய்வர். மற்ற நேரங்களில் செய்யும் வழக்கம் இல்லை.

காசியில் இறந்தவர்களுக்கு எமவாதனை இல்லை என்றும், அங்குள்ள காலவைரவருடைய சூலத்தின் நுனியிலே எண்ணில் காலம் நரகங்களில் கிடந்து அனுபவிக்கும் துன்பங்களைச் சிறிது நேரத்தில் அகல்வித்து வீடு பேறெய்தும் நிலை எய்துவர் என்பது வழக்கம்.

அதனையொட்டிச் சிதம்பரத்திலுள்ள ஆன்மாக்கள் எண்ணில் காலம் அனுபவிக்கும் நரக வேதனைகளை இந்தக் கால வைரவருடைய சூலநுனியால் நொடிப் பொழுதில் அனுபவித்த பின்பு வீடுபேறெய்துவர் என்று புராணம் கூறுகிறது.

*சோம. லெ. அவர்களின்*
*"கோயில்" என்னும் நூலிலிருந்து*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டக்களப்பு

# ஸ்ரீ நரசிங்க வைரவசுவாமி ஆலயம்

### 1. மூர்த்தி

சைவ ஆலயங்கள் தோறும் பரிவார மூர்த்திகளுள் ஒருவராக வைரவசுவாமி ஆலயம் அமைந்திருப்பது யாவரும் அறிந்ததே. எனினும் தனிக்கோயிலில் கர்ப்பக்கிருக மூர்த்தியாக அமர்ந்து அடியார்களுக்கு அருள்பாலிக்கும் வைரவர் ஆலய மொன்று உண்டெனில் அது கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு நகரில் புகையிரத நிலையத்திற்கு அருகில் தெற்கு எல்லை வீதியும் கள்ளியங்காடு சேமக்காலை வீதியும் சந்திக்கும் இடத்தில் அமைந்துள்ள நரசிங்க வைரவசுவாமி ஆலயமே எனலாம். சைவப்பெருமக்களால் வைரவர் ஆலயம் எனப் பொதுவாக அழைக்கப்பெறினும் ஸ்ரீ நரசிங்க வைரவர் ஆலயம் என்பதே இதன் சிறப்புப் பெயரென்க. விஷ்ணுவின் நரசிங்க அவதாரமும் சிவகுமாரரான வைரவ அவதாரமும் ஒன்றாக அமைந்த இருவரும் ஒருவரே என்ற பேருண்மையை விளக்கி நிற்பது இக்கோயில் எனலாம்.

### 2. தலம்

இவ்வாலயத்தின் கர்ப்பக்கிருகத்துள் பிரதிஷ்டை செய்யப் பெற்றுள்ள வைரவ மூர்த்தி வெண்கலத்தினாலான சிலையாகும். இதுவே மூல மூர்த்தி. இதைவிட எழுந்தருளி மூர்த்தியாக ஒரு சூலம் மூல மூர்த்தியுடன் காணப்படுகின்றது. மூல மூர்த்திக்குரிய சகல வழிபாடுகளுக்கும் இவ்வெழுந்தருளி மூர்த்தியான சூல மூர்த்தியும் உரித்துடையவராவர்.

1845 ஆம் ஆண்டளவில் கந்தன் கதிராமர் என்பவர் வன்னி நாட்டின் ஒரு பகுதியில் வைத்துத் தான் வழிபட்டு வந்த இப்போதுள்ள நரசிங்க வைரவ விக்கிரகத்தை மட்டக் களப்பிற்கு வந்தபொழுது கொண்டு வந்தாரென்றும், மட்டக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களப்பில் விடத்தல் முனைப் பகுதியில் ஒரு மர நிழலில் வைத்து வணங்கி வந்தாரென்றும், சில நாள்களின் பின், அங்கிருந்து மட்டக்களப்பு நகரின் வடபாகத்தில் தற்போது சந்தை அமைந்த அரசடிப் பிள்ளையார் வீதியைச் சார்ந்த பகுதியில் தனது சுற்றத்தவர்கள் வசித்துவந்த ஒரு இடத்தில் வைரவியார் என்பவருக்குச் சொந்தமான நிலத்தில் ஒரு பெரிய கூழா மரத்தினடியில் சிறு மேடையமைத்து அதில் விக்கிரகத்தை வைத்து அவரும் அவரது இனத்தவர்களும் சேர்ந்து வழிபட்டு வந்தனர் என்றும் கர்ணபரம்பரைக் கதையாகக் கூறப்படுகிறது.

இவ்வாறு வழிபாடு நடந்து கொண்டிருக்கும்போது ஒரு நாள் கந்தன் கதிராமர் நித்திரையிலிருக்கும் வேளை ஆவேசம் கொண்டவராய் எழுந்து ஓடத்தொடங்கவே ஊரவர்களும் உறவினர்களும் அவரைத் தொடர்ந்து ஓடியதாகவும், அவர் நகரின் வடக்குப் பக்கமாக ஓடித் தற்போது கோயில் அமைந்துள்ள இடத்தில் இருந்த பெரியதொரு தேற்றா மரத்தைச் சுற்றிச்சுற்றி ஆடி ஆவேச நிலையில் ஊரவர்களையும் தனது சுற்றத்தவர் களையும் விளித்து இன்றுமுதல் நரசிங்க வயிரவசுவாமி குறிப்பிட்ட இந்த தேற்றா மரத்தடியில் கோயில் கொண்டருளச் சித்தமாகியுள்ளார் என்றும், ஊரவர்கள் ஆக வேண்டியன செய்து, தேற்றா மரத்தடியில் ஒரு மேடையமைத்து எம்பெருமானை எழுந்தருளப்பண்ண வேண்டுமென்றும் கூறினார் எனவும், அதன் படி அங்கு நின்றவர்கள் சார்பில் ஒருவர் கையடித்து சத்தியம் செய்து தாரைவார்த்துக் கொடுக்க அவர் சுயஉணர்வு எய்தப் பெற்றார் என்றும் அவ்வரலாறு தொடர்கிறது.

இதன்படி ஆரம்பகாலத்தில் காட்டுப் பிரதேசமாக இருந்த இவ்விடத்தில் தேற்றாமர நிழலைச் சுற்றியுள்ள சிறுபகுதியே ஆலயமாகக் கொள்ளப்பட்டது. குறிப்பிட்ட தேற்றா மரம் இன்றில்லை.

பின்னர், திரு. கந்தன் கதிராமரின் உறவினரான சின்ன வியார் என்பவர் ஸ்ரீ நரசிங்க வைரவப் பெருமானுக்குப் பல தொண்டுகள் செய்து அவ்விடத்திலேயே சிறு குடிலமைத்து வாழ்ந்துள்ளார். ஒருநாள் அவருக்குப் பெரியம்மை நோய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டது. நோயினால் மிகவும் துன்புற்ற சின்னவியார் தன்னந்தனிமையில் ஸ்ரீ நரசிங்கப் பெருமானையும் முத்து மாரித்தாயையும் வேண்டித் தன்போக்கில் பாடித் துதித்து வழிபடலாயினார். நாளடைவில் தெய்வ அருளால் இவரின் நோய்குணமடைந்தது. எனினும் கண்கள் பார்வையை இழந்து தவிக்கலானார். இவரின் உபாதையை அறிந்த இனத்தவர்கள் இவரை அணுகி நிலைமையை விசாரித்தனர். தனது நிலையை விளக்கியதோடு தாம் அனுபவித்த கஷ்டங்களையும் கூறி ஸ்ரீ நரசிங்க வைரவப் பெருமானையும் அன்னை முத்துமாரியையும் நினைந்து பாடிய துதிப்பாடல்களையும் பாடினார். நெஞ்சுருக்கும், பக்தி ததும்பிய அப்பாடல்களைக் கேட்ட மக்கள் அவற்றைத் தொகுத்து ஏடுகளில் எழுதலாயினர். இப்பாடல்களே பிற்காலத்தில் மாரியம்மன் குளிர்த்திப் பாடல்களாகவும், நரசிங்க வைரவர் காவியம், வைரவர் ஊஞ்சற் பாடல்களாகவும் இன்றும் இவ்வாலய உற்சவகாலங்களில் பக்தி சிரத்தையுடன் பாடப்படுவனவாகும்.

சின்னவியாரின் மரணத்தின் பின்னர் கோட்டைமுனை, உப்போடை, அமிர்தகழி, ஏறாவூர், சித்தாண்டி, நாவற்குடா, மாங்காடு ஆகிய ஊர்களில் குடியேறி வாழ்ந்துவந்த இனத்தவர் எல்லாரும் சேர்ந்து எம்பெருமானுக்குச் சிறப்பாக ஆலயமொன்று அமைக்க வேண்டுமென விரும்பினர். தற்போது ஆலயம் அமைந்துள்ள இடம் அரசாங்க நிலம், எனவே அரசினரிடம் விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி 17.11.1866 இல் அரசினரிடம் மேற்கூறிய நிலத்தை திரு.வைரவியார் நாகப்பரும், விநாயகர் வேலாயுதருமாகச் சேர்ந்து பணம் கொடுத்து வாங்கி, தேற்றா மர நிழலில் ஸ்ரீ நரசிங்க வைரவருக்கு ஒரு ஆலயமும் அதனருகில் மாரியம்மனுக்கு ஒரு ஆலயமுமாகச் சிறு குடில்கள் அமைத்து வழிபட்டு வந்தனர். தொடர்ந்து இப்படி சிறு குடில்களில் வழிபாடுகள் சுமார் 33 ஆண்டுகள் நடைபெற்று வந்துள்ளன. 1899ஆம் ஆண்டில் திரு. நாகப்பர் இளையபெருமாளும், திரு. வேலாயுதர் சபாபதியும் வண்ணக்கர்களாக இருந்த காலத்தில் ஒரு நாள் திடீரென தேற்றா மரம் தீப்பற்றி எரிந்ததாகவும், அதன் நிமித்தம் ஆலயமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதைவுறவே, ஊரவர்கள், இனசனத்தார் ஆகியோரின் உதவியுடன் இப்போதுள்ள ஆலயம் செங்கற்களினால் உருவாக்கப்பட்டு, முறைப்படி விக்கிரகப் பிரதிஷ்டை செய்யப்பெற்றுக் கும்பாபிஷேகமும் நடைபெற்றிருக்கின்றது. இதுவே முதற் கும்பாபிஷேகம் எனக் குறிப்பிடப்படுகின்றது.

இவ்வாறு உறுதியாக உருவாக்கப்பெற்ற ஸ்ரீ நரசிங்க வைரவ சுவாமி ஆலயம் இன்று தூபி, அர்த்த மண்டபம், மகாமண்டபம் முதலான அமைப்புகளுடன் புதுப்பொலிவு பெற்று அழகுறக் காட்சியளிக்கின்றது. தூபி, விஷ்ணு அவதாரங்களை நன்கு விளக்கும் சிற்பங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளதே தவிர, சிவனைப் பற்றியோ, வைரவருடைய அவதாரம் பற்றியோ எந்தவொரு சிற்பமும் இதில் இடம்பெறவில்லை என்பதும் குறிப்பிடற்குரியது.

### 3. வழிபாடு

ஆலய வழிபாடு தொன்றுதொட்டு மாரியம்மன் வழிபாட்டினை அடியொற்றியே நடைபெற்றுவருகிறது. 'சடங்கு' எனப்படும் தெய்வ வழிபாட்டு முறை 'பூசாரியார்' என்று அழைக்கப்படும் பூசகரினால் 'மந்திரம்' எனப்படும் துதிப்பாக்கள் பாடி வழிபடும் முறையே இவ்வழிபாட்டு முறை என்க. 'கதவு திறத்தல்' தொடக்கம் 'கதவு அடைத்தல்' வரையும் இந்நிகழ்ச்சிகள் இடம்பெறும். இறுதியில் 'தெளிவு' சடங்குடன் வருடாந்த உற்சவம் நிறைவு பெறும். உற்சவகாலம் ஒவ்வொரு வருடமும் ஆனி உத்தரத்தில் வரும் வெள்ளிக்கிழமை கதவு திறந்து இரவுப்பூசையுடன் ஆரம்பமாகி இரவு-பகல் சடங்குகளாக எட்டு நாட்கள் சடங்குப் பூசைகள் இடம்பெறும். இவ்வெட்டு நாள் எல்லையுள், ஆரம்பத்தில் நடுவில் அல்லது இறுதி நாளில் பௌர்ணமி நாள் வருவதுண்டு. இவ்வாறு பௌர்ணமி நாள் வராவிட்டால் ஆனி உத்தரம் பார்த்துத் தான் ஆலய உற்சவம் ஆரம்பமாகும்.

முதல்நாள் கதவு திறத்தல். இதற்கு வடக்குவாசல் கதவின் அடியில் மடை வைத்து மந்திரங்கள் செபித்து, தேங்காய் உடைத்துக் கற்பூர தீபாராதனை செய்து பூசகர் கதவில் மூன்று முறை தட்டிக் கதவைத் திறப்பார். இதன்பின்னர் உட்கதவு திறப்பதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு மடை வைத்து மந்திரம் செபித்துக் கற்பூர தீபாராதனை செய்த பின்னரே இடம்பெறும். இதைத்தொடர்ந்து ஆலயம் சுத்தம் செய்யப்படும். உருத்திரகும்பம் வைத்து எல்லைக்காவல் செய்த பின்னரே பூசைக்கருமங்கள் ஆரம்பமாகும். இதை அஷ்ட பந்தனக் காவல் என்றும் அழைப்பர். இதைத்தொடர்ந்து மூல மூர்த்திகளும் பரிவார மூர்த்திகளான பிள்ளையார், மாரியம்மன் முதலானோர்க்கும் சுற்று மேடைகளில் எழுந்தருளச் செய்யும் வீரபத்திரர், வீரமாகாளி, காத்தவராயர், படபத்ரகாளி, காளவைரவர், திரிசூலவைரவர், அடையாளவைரவர், கிரகசாந்திவைரவர், சிங்கநாத வைரவர், ஐயப்பன், விஷ்ணு, வதனமார், மாறா, கன்னிமார், கங்காதேவி, குமாரர், முதலான தேவதைகளுக்கும் முறையாக அபிஷேக ஆராதனைகள் இடம்பெறும். இவ்வேளைகளில் 'தலைத்தெய்வக்காரர்' தலைமையில் தெய்வமாடுவோர் உருப் பெற்று தலைசுற்றித் தெய்வமாடுவதும், அடியார்களின் மனக்குறைகளை அறிந்து 'கட்டுக்கூறுதல்' எனப்படும் நல் வாக்குகள் கூறுவதும் விசேட நிகழ்வுகளாகும்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சியாக கொடித்தம்ப மேடையில் கொடிமரம் நிறுத்தி கொடியேற்றல் வைபவம் இடம்பெறும். ஏற்றப்படும் கொடியில் 'நாய்' உருவம் பொறிக்கப்பட்டிருக்கும். இது சிங்கநாத வைரவருடைய வாகனம் என்பர். நான்கு வேதங்களினதும் குறியாகும்.

மூன்றாம் நாள் நிகழ்ச்சியாக, மூலஸ்தானத்தில் மூல மூர்த்தியுடன் இருக்கும் 'சூலம்' வெளிக்கொணரப்பட்டு அதற்கென அலங்கரிக்கப்பட்டுள்ள மேடையில் பக்தி சிரத்தையுடன் எழுந்தருளச் செய்யப்படும். அதன் பின்னர், அதற்குரிய பூசைகள் நடைபெற்று, பட்டுகளால் அலங்கரிக்கப்பட்டு, பூமாலைகள் சூட்டித்தெய்வங்கள் ஆடிவர, வாத்தியங்கள் முழங்க, பக்தர்கள் கற்பூர ஆரத்தி எடுக்க, விசேடமாக ஏற்பாடு செய்யப்பட்ட வட்டாமடையை கோயில் உரிமையாளரொருவர் ஏந்திவர, அச்சூலம் கோயில் வீதிவலம் வந்து மீண்டும் ஆலயத்தினுள் கொண்டு செல்லப்பட்டு மூலமூர்த்திக்கருகில் வைக்கப்படும், வட்டாமடையும் மூலஸ்தானத்துள் வைக்கப்படுவதோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதிநாள்வரை மடைப்பொருட்கள் மாற்றி, மாற்றி புதுப் பொருட்கள் வைக்கப்படும்.

அடுத்து வரும் நாள்களில் கன்னிமார் தெரிவு, விநாயகப் பானை வைத்தல், யாகசாலைக்கும்பம் வைத்தல், நெல்லுக் குற்றுதல், விநாயகப்பானை பொங்குதல், பாலாமிர்தம் ஒப்புக்கொடுத்தல் முதலான நிகழ்வுகள் இடம்பெறும். இவ்வேளைகளில் அடியார்கள் தம்நிலை மறந்து மெய்சிலிர்த்து எம்பெருமான் திருவடிகளைத் தியானித்து வழிபடும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

ஏழாம் சடங்கு நிகழ்ச்சி இறுதி நிகழ்ச்சியாகும். இன்று ஆரம்பத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட கன்னிமார் மூலம் சர்க்கரை அமுது படைத்து குளிர்த்தி ஆடப்படும். இதில் பூசகர், தெய்வக்காரர், பக்தர்கள் அனைவரும் பங்குபற்றுவர். ஆரம்பத்தில் குறிப்பிட்டது போன்று, தெய்வக்காரர் தமக்குரிய மேடைகளுக்குச் சென்று தலை சுற்றி ஆடிப் பக்தர்களின் மனக்குறைகளை அறிந்து திரு வாக்குக் கூறி அதற்கான பரிகாரங்களையும் சொல்லுதல் விசேட நிகழ்ச்சியாகும்.

தலைத்தெய்வக்காரர் பல்வேறு தெய்வங்களுக்குமான உருவரப் பெற்று தெய்வமாடி ஊஞ்சலாட்டம் முதலான ஆட்டங்களாடி ஏனைய தெய்வக்காரர்களுடன் மடைப்பலி, சாட்டைப்பலி முதலான பலிகளை ஏற்று மனதார பூசைகளை ஒப்புக்கொள்ளுவர்.

இதன்பின்னர் மாரிஅம்மன் ஆலயத்தில் பூசகர்கள், தெய்வக்காரர், நிருவாகசபையினர், ஏனைய பக்தர்கள் அனை வரும் ஒன்று கூடி மாரியம்மன் திருக்குளிர்த்தி, வாழிப்பாடல்கள் பாடி அம்மனை வழிபாடு செய்வர். தொடர்ந்து ஸ்ரீ நரசிங்க வைரவப் பெருமானுக்கும் வாழி பாடிய பின்னர் கொடி இறக்கப்பட்டுக் கொடிமரமும் பக்திப் பரவசமாக ஆலயத்துள் எடுத்துச் சென்றதும் ஆலயக்கதவுகள் பூட்டப்படும். இத்துடன் ஆலய உற்சவப் பூசைகள் யாவும் முடிவுற்றதாக அறிவிக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைத்தொடர்ந்து , அதே நாளிரவு பத்துமணிக்குப் பின்னர் பலிப்பூசை நடைபெறும். இதில் பூசகர்கள், தெய்வக்காரர், நிருவாக சபையினர் மாத்திரம் கலந்துகொள்வர். தெய்வக் காரர்களுக்கு உருவேற்றப்பட்டு வீரமாகாளி ஆலய முன்றலில் ஆட்டுக் கடாவொன்றும், அதன் பின்னர் முறையே கெங்கா தேவி, கிரகசாந்தி வயிரவர், படபத்திரகாளி ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு கோழியும் பலிகொடுக்கப்படுவதுடன், ஆலயத்திற்கு வெளியில் வாசல் முன்பாக நரபலிக்கு ஒப்பானதாகக் கருதப்படும் நீற்றுப்பூசணிக்காய் ஒன்று வெட்டி அதை ஒப்புக் கொடுத்தலுடன் நிறைவுறும்.

இதைத்தொடர்ந்து மூன்றாம் நாள் ஞாயிற்றுக்கிழமை தெளிவு சடங்கு இடம்பெறும். தெய்வக்காரர் தாம் பலிக் கருமங்களை ஏற்றுக்கொண்டமை பற்றி திருவாக்குக் கூறுவார்கள்.

நரசிங்க வைரவர் முன்பாக வேறு ஆலயங்களிலோ, வேறு இடங்களிலோ தலைசுற்ற மாட்டோமெனச் சத்தியவாக்குக் கூறுவதோடு வருடாந்த உற்சவ நிகழ்வுகள் யாவும் இனிது நிறைவுறும்.

### விசேட பூசைகள்

வருடாந்த உற்சவத்தைவிட இன்று இவ்வாலயத்தில் வெள்ளிக்கிழமைகள் தோறும் பூசைகள் நடைபெற்று வருகின்றன. தைப்பொங்கல், மகாசிவராத்திரி, சித்திரை வருடப் பிறப்பு, கார்த்திகை விளக்கீடு, மார்கழிப்பூசை முதலிய விசேட நாள்களிலும் விசேட பூசைகள் நடைபெறுகின்றன. இப் பூசைகள் யாவும் அம்மன், விநாயகர் ஆலயங்களிலும் வயிரவர் ஆலய வெளிமண்டபத்திலுமே தொன்றுதொட்டு நடைபெற்று வந்ததைப் போன்று நடைபெற்று வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நிருவாகம்*

திரு. கந்தன் கதிராமர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு அவரின்பின் அவரின் உறவினரான சின்னவியார் என்பவரால் தேற்றாமர நிழலில் ஸ்தாபிக்கப்பட்டு பரிபாலிக்கப்பட்டு வந்த இவ்வாலயம் அவரின்பின்னர் முன்னர் குறிப்பிட்டுள்ளதைப் போன்று கோட்டைமுனை, உப்போடை, அமிர்தகழி, ஏறாவூர், சித்தாண்டி, நாவற்குடா, மாங்காடு ஆகிய ஊர்களில் வதியும் அவருடைய இனத்தவர்களால் நன்கு பரிபாலனஞ் செய்யப் பட்டு வருகிறது.

ஆரம்பத்தில் நிருவாகிகளாகக் கடமையாற்றியவர்கள் பற்றிய பதிவுகள் எதுவும் பெறக்கூடியதாக இல்லை. எனினும், 1899 ஆம் ஆண்டில் திரு. வேலாயுதர் சபாபதி, திரு. நாகப்பர் இளையபெருமாள் என்பவர்களும், இவர்களுக்குப் பின் திரு. அ. இளையதம்பி, திரு, வீ. கணபதிப்பிள்ளை, திரு. க. குமாரசுவாமி, திரு. பொ. கணபதிப் பிள்ளை ஆகியோரும் வண்ணக்கமாராகப் பணி புரிந்துள்ளனர் என்பதும் அறிய முடிகிறது.

1964 ஆம் ஆண்டு வரை வண்ணக்கமார் நிருவாகத்தில் பேணப்பட்ட இவ்வாலய நிருவாகம் பின்னர் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட நிருவாகசபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 1967 இல் நிருவாக சபையில் பணியாற்றிய கோட்டை முனையைச் சேர்ந்த இவ்வாலய வண்ணக்கர் திரு. இளையதம்பி என்பவரின் மூத்த புதல்வர் திரு. இ. வீமக்குட்டி அவர்கள் இவ்வாலய முன்னேற்றத்திற்காக ஆற்றிய திருப்பணி வேலைகள் என்றும் நினைவிலிருத்தற்குரியன. இன்றைய ஆலயப் பொலிவிற்கு வழிவகுத்த பெருமை அவரையே சாரும் என இவ்விபரங்கள் அனைத்தையும் எனக்கு விபரமாக எடுத்துக் கூறியும் எழுதிக்கொடுத்தவருமான திருவாளர். பொன்னையா பூபாலரெத்தினம் அவர்கள் (இவ்வாலய முன்னாள் போஷகர்) மிகவும் நன்றியுடன் கூறுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தற்போது உள்ள நிருவாக சபையினர்

| | | | |
|---|---|---|---|
| தலைவர் | - | திரு.சி.விநாயகமூர்த்தி | அவர்கள் |
| இணைத்தலைவர் | - | திரு. சி. நவராஜா | ,, |
| உபதலைவர் | - | திரு. த. கிருபாகரன் | ,, |
| செயலாளர் | - | திரு. க. சக்திதாஸ் | ,, |
| உபசெயலாளர் | - | திரு. சி .நற்குணம் | ,, |
| பொருளாளர் | - | திரு.சீ. நவநேசராஜா | ,, |
| உபபொருளாளர் | - | திரு. செ. சிவநாயகம் | ,, |

### நிர்வாகக்குழு

| | | |
|---|---|---|
| திரு.செ.மகேஸ்வரம் | அவர்கள். | கோட்டைமுனை |
| திரு. செ. பாக்கியராசா | ,, | உப்போடை |
| திரு. பா. காந்தன் | ,, | சீலாமுனை |
| திரு. செ.நாகராசா | ,, | மாமாங்கம் கூழாவடி |
| திரு. சி .செல்வம் | ,, | ஏறாவூர் |

### காப்பாளர்கள்

| | |
|---|---|
| திரு. சி துரைசிங்கம் | அவர்கள் |
| திரு.ஜி. நாகராசா | ,, |
| திரு. த. நடராசா | ,, |

### குறிப்பு

இவ்வாலயத்திற்கு திரு. துரைராசசிங்கம் அவர்கள் (பிரபல வர்த்தகர்) வெளி மண்டபத்தைப் புதிதாக நிர்மாணித்தும், திரு. ந. கணபதிப்பிள்ளை வைத்தியர் அவர்களும் மக்கள், குடும்பத்தினரும் இரண்டாம் மண்டபத்தைப் புனர்நிர்மாணஞ் செய்தும் அழகுபடுத்தி உள்ளனர். மேலும் சுற்றுமதில் அவசிய தேவை என்பதைக் குறிப்பிடும் நிருவாகசபையினர் அதைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூர்த்தி செய்து எம்பெருமான் திருவருள் பெற்றுய்யுமாறு அடியார்களைப் பணிந்து வேண்டுகின்றனர்.

முடிவுரை

இவ்வாலயம் புராதன ஆலயமாகையினால் இது தொடர்பான பதிவுகள் எதுவும் கிடைக்கக்கூடியதாக இல்லை. உற்சவ காலங்களில் இவ்வாலயத்தில் பாடப்படும் நரசிங்க வைரவர் காவியத்தில்,

" ஆளும் உன் கட்டாடி கதிராமனுக்கும்
அவனிதனி லெதிராக வரும் பிணியகற்றி.........." என்றும்,

அம்மன் குளிர்த்தியில்,

" தாரணிபுகழிலங்கை தாண்டவன் வெளிப்பதி தன்
னில்வந்து அவதரித்த நங்கையரே
காரணியே கேள் கார்தேச மடங்கலையும்
கற்புநெறி உற்ற தவம் பெற்றவளே
சீரிலங்கு கட்டாடி சின்னவன் மனங்குளிர
சென்மதுயர் கிலேசம் தீர்த்துவிட்டு
பேரிலங்கு புளியநகர் பதியிலுனது சனம்
பேரிலொரு துன்பபிணி வாராமலே"
என்றும்,

" அரிநமோ நரசிங்க வைரவ சுவாமியே
அருள்சேர் விடத்தல்முனை ஆள்தம்பிரானே" என்றும்,

கூறப்படும் பாடல்களிலிருந்தும் ஏனைய முதியவர்கள் பரம்பரைக் கதைகள் மூலமும் ஓரளவு இவ் ஆலயத்தின் முன்னோர்கள், இடங்கள் பற்றி அறியமுடிகிறது.

இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ள சகல விபரங்களும் முன்னர் ஓரிடத்தில் குறிப்பிட்டுள்ளது போன்று இவ்வாலய நிருவாக சபையிலுள்ள சிலரின் உதவியுடன் திரு. பொன்னையா பூபாலரெத்தினம் (முன்னாள் போஷகர்) அவர்களிடமிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக்கொண்டவை. அத்துடன் வித்துவான் பண்டிதர் வி.சி.கந்தையா பீ. ஓ. எல் அவர்கள் எழுதிய 1983 பங்குனித் திங்கள் இந்து சமயத் திணைக்களம், பிரதேச அபிவிருத்தி அமைச்சினால் வெளியிடப்பட்ட மட்டக்களப்புச் சைவக் கோயில்கள் 1 எனும் நூலினையும் உசாத்துணை நூலாகக் கொள்ளப்பட்டது.

கட்டுரை ஆசிரியர் என்ற வகையில் எனது மனமார்ந்த நன்றிகள். ஸ்ரீ நரசிங்க வைரவர் அருள் எல்லோருக்கும் கிடைப்பதாகுக.

*ஆசிரிய சிரோமணி*
*த. செல்வநாயகம்*
*ஓய்வு பெற்ற அதிபர்*

卐



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு, விடத்தல்முனை
கண்ணகை அம்மன் ஆலயத்தமர்ந்த

# ஆதி வைரவர் காவியம்

ஆலய தர்மகர்த்தா க. பொன்னுத்துரை அவர்கள் யாத்தவை

திருமருவு பரனுதவு ஆதிவயி ரவர்மீது
செந்தமிழ் தெரிந்துநற் காவியம் பாட
கருமருவு கரகதட கரிமுகவ னேயுனது
கருணைபொற் பாதகம லம் பணிந்திடவே
மருமருவு அரியயனும் மாலின்மரு கோனும்
வாலசரஸ் பதியுமென் நாவினிலிருக்க
அருமருவு வடுகனெனும் ஒருகடவு ளைமனதில்
அனுதினமு மடியே னொருநாளுமற வேனே. 1

மறவாமல் வருதில்லை மன்றுள்நட மாடி
வடுகடவுள் எனவந் துதித்தநீ யல்லோ
குறமாது தனைமேவு குகனோடு பொருசூரன்
குலமாள மயிலேறு குமரவே ளல்லோ
திறமாக வருகாளி திரிசூலி யுடனாடு
சிவனார்தன் மகனாரும் வரவேணு மல்லோ
இறவாத முனிவோர்கள் திறமேவு கைலாயர்
இயல்வானி லுறையீசர் புகழோது வோமே. 2

ஓதுமோங் காரமுக் கோணசட் கோண
ஒளியாகி வெளியாகி உருவாகி நின்றே
மாது சுந்தரகாளி யுடன்நடன மாடிவரு
வயிரவ ரெனவந்து உதிப்பவனு நீயே
பாதுகாத் துலகமதி லெங்கும்ப ரந்து
பலபேர் இடும்பூசை வேள்விகளு வந்து
காததனிற் குண்டலம் அணிந்துலகை ஆளும்
கருணை பெறு கைலைமலை வயிரவரும்நீயே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீயே றிங்காச னத்திலிருந் தாயே
நீங்காம லேயுனது கிருபைவைத் தாயே
நீயேயிங் கீரேழு புவனமும் நடுங்க
நின்றுதான் முப்புரத் தைத்தகன மாக்கி
நீயே மதன்தன்னை எரித்தவனு மாகி
நினைவாக தேவரை காத்தவனு மாகி
நீயேவெண் நீறணிந் தேசுடலை தன்னில்
நித்தமுறை சுத்தனே நிலவுபுனை வோனே. 4

நிலவுபுனை பரவுசடை யோனுருவ மாகி
நிறுமான வயிரவ சொரூபமென வந்து
அலகு சூ லாயித கபாலமுமெடுத்து
ஆதிவயி ரவதேவ ராகவந் துதித்து
உலகுபுகழ்தேன்கொன்றைவெற்றிலைஅடைக்காய்
குங்குமம் தீபமொடு செங்கமல மலரும்
இலகுமகில் சந்தனம் கஸ்தூரி கற்பூரம்
இளநீரு டன்மடைகள் ஏற்றுகந் தாயே. 5

ஏற்றுநீ அட்டவயி ரவருருவ மாகி
எத்திசைக ளும்பூசை வேள்விகளு கந்து
காற்றுநீ கங்காள வயிரவசொரூப மொடு
காருலகு தன்னிலே யெங்கும் பரந்து
மாற்று உருவமாகியே சுடலையினிலாடும்
காளியொடு நூற்றெட்டு வயிரவருமாகியே
வேற்றுருவ மதாகவே வந்தேழு கன்னியை
மணம்வேட்டு மேன்மைபெறு வீர வயிரவரே. 6

வயிரவ சொரூபமென வந்ததற் பரனே
வாகான வேள்விக ளுகந்தவனு நீயே
எயிரவ வனத்தில் வருபூதப் பசாசுகளை
எறிசூல வேல்விட்டு எறிந்தவனும் நீயே
வயிரவி யுடன்சமைய மாகிநின் றவனே
பலவேஷ மாகவரு உலகநற் பரனே
உயிருமுட லும்பொருளு மாகிநின் றவனே
உத்தண்ட ஆதிவயிரவ தேவ னாரே. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிநீ யெங்களை ரெட்சிக்க வந்த நீ
அண்டபகி ரண்டமும் அடுக்காக நின்ற நீ
சோதியே சுடரொளிய தானதொரு கடவுள்நீ
துட்டவயி ரவர்கோடி சூழவரு பவனு நீ
நீதியுட னுந்தனை நினைப்பவர் தமக்குமுன்
நிற்கு மொரு தீவினை இட்டமுடன கற்றி
ஊதிப மானதொரு கண்கண்ட தெய்வம் நீ
உபாயமுடன் வந்துமே நிற்பவனு நீயே. 8

உபாயமது செய்தவர்க் காகவந் தாயே
உண்டென்ற வர்க்குதவு உத்தமனு நீயே
சிவாய ஓங் காரறீங் காரத் துதித்த
சித்தியே முத்தியே சிம்மவா கனனே
சிவாய வெனு மட்சர மாகிநின் றவனே
நான்மறைக ளும்புகழ் நடுவான தேவனே
சிவாய ஓங்கார றீங் காரத்து தித்த
ஆதியே மெய்ப்பொருள் ஆன வயிரவரே. 9

பொருளான ஆதிசங் கரா சிவாயநம
போகாத பிணிகள்பல தீர்ப்பாய் சிவாயநம
அருளாக எங்கெங்கும் நிறைந்தாய் சிவாயநம
அன்பருக் கன்பனாய் ஆனாய் சிவாயநம
இருளான இரத்த வயிரவரே சிவாயநம
ஈரெழு புவனமும் அழித்தாய் சிவாயநம
மருளான உன்மத்த னானாய் சிவாயநம
மண்டலத் தோர் புகழ நின்ற நாயகமே. 10

நாயக மானதோர் நாதா நமோநமோ
நாயெனும் வாகனமு கந்தாய் நமோ நமோ
தாயான ஆதிசங் கரா நமோ நமோ
சகலஉயிர் கட்குமுயிர் ஆனாய் நமோநமோ
பாய்பரிகள் தலையிடற வருவாய் நமோ நமோ
பாருலகில் ஆதிதேவ தையே நமோநமோ
சேய் பிழைகள் நீயே பொறுப்பாய் நமோ நமோ
நாதாந்த வொளியாகி நின்ற தற்பரனே. 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீதாந்த தெய்வ மென்றுன்னை நம்பினேனே
தீவினைகள் அணுகாமல் அருள் செய்வாயே
நாதாந்த வொளியாகி நின்ற வயிரவரே
நற்பதியிலுற் பத்தி யான நாயகனே
வேதாந்த மறைகளுக் கெட்டாத திருவே
விண்ணோர்கள் புகழவரு மெய்யான குருவே
தாதாம் திமிதிமெனவே நடன மாடும்
தாரணியிலுனது பொற் பாதமலர் துணையே. 12

உனது புகழ் புவிமீதில் ஓதுவோர் வாழி
உத்தண்ட தனவீர பத்திரரும் வாழி
உமது கட கரிமுகவர் பாதமலர் வாழி
நான் மறைக ளென்றுமே புகழோடும் வாழி
நிமலனுமை வாழிபல நீதிமுறை வாழி
நெடுமாலும் வாழிகும ரேசர் நிதம் வாழி
கமலசரஸ் பதிகமல மாதாவும் வாழி
காசினியில் மனை மக்கள் வாழவாழியவே. 13

ஓம் திருவாழி நந்தியம் பதிவாழி வாழி
ஜெகமீதில் மனுநீதி மறைநீதி வாழி
கருவாழி உருவாழி கற்றோர்கள் வாழி
கஞ்சமலர் மாதுஉமை பாதமலர் வாழி
உருவாழி உலகுதனில் ஓர் பிழையும் வராமல்
உனது கற்பெங்குமே ஓங்கி நிதம் வாழி
மருமாலை அணிவோர்கள் மிக வாழ்க வாழி
அரசர்குரு நீடூழி வாழ வாழியவே. 14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## காவலூர் கரம்பொன் கிழக்கு
## அண்டினோர் துயர் தீர்க்கும்
# அருள்மிகு ஞான வைரவர்

காவலூர் - கரம்பொன் கிழக்கில் பரவப் புலம் என்னும் பகுதியில் கோயில் கொண்டிருப்பவர் தான் எம் ஸ்ரீ ஞானவைரவப் பெருமான். பல நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே அவர் இவ்விடத்தில் குடி கொண்டிருப்பதாகவே பலரும் கூறுகின்றனர். ஆயினும் திட்டவட்டமாக இவ்வாலயத்தின் தோற்றக்காலத்தை அறிய முடியவில்லை. ஆரம்பத்தில் ஐந்து இலுப்பை மரங்களையுடைய சோலை ஒன்றின் மத்தியிலேயே வைரவரை வழிபட்டு வந்தனராம். இவ்வாலயத்தில் இருந்து கும்பங் கொண்டு சென்றே இதன் அண்மையில் அமைந்துள்ள காளி அம்மன் ஆலயம் உருவாக்கப் பெற்றதாகவும் பெரியோர் கூறுகின்றனர்.

தற்போதுள்ள பெரியோரைக் கேட்டபொழுது பிற்காலத்தில் தாம் காணக்கூடியதாக அப்போது ஒரு இலுப்பை மரமே நின்றதாகவும் தேவையின் பொருட்டு ஒருவர் அம்மரத்தை வெட்டியதாகவும் அதன் பின்னர் அவரும் அவரது குடும்பமும் பல கஷ்டங்களையும் பிரச்சினைகளையும் எதிர் நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் கூறினார்கள். அண்மைக்காலத்தில் கூட அம்மரத்தின் அடி இருந்ததாகவும் அதை விறகின் பொருட்டு ஒருவர் வெட்டியபோது அவர் வெட்ட உபயோகித்த கோடரி அவரைத் தாக்கிக் காயப்படுத்தியதாகவும் உடனடியாகவே அவர் தன் முயற்சியைக் கைவிட்டுச் சென்றதாகவும் அறிகின்றோம்.

இவ்வாலயத்தின் பின்னர்தான் காவலூரில் உள்ள ஏனைய வைரவ ஆலயங்கள் உருவாகின. அஃது ஒழுவில் ஸ்ரீ ஞானவைரவ ஆலயம், அரசினர் வைத்தியசாலை ஸ்ரீ ஞானவைரவ ஆலயம் ஆகியன யாவும் இவ்வாலயத்தின் பின்னரே தோன்றியவையாகும்.

எனினும் எமது ஸ்ரீ ஞான வைரவ ஆலயம் 1947ம் ஆண்டளவில் தான் சிறிய கட்டடமாக உருவாக்கப்பெற்றது. இம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சியில் ஈடுபட்டுச் செய்துமுடித்த பெருமை திரு. ஆ. சு. நடராஜா அவர்களையே சாரும். அதன் பின்னர் முன்புறமாக ஒரு மண்டபமும் மடப்பள்ளியும் மணிக் கூட்டுக்கோபுரமும் அமைக்கப் பெற்றன. ஆலயம் அமைக்கப் பெற்ற பின்னர் காலஞ்சென்ற திரு. க.கந்தையா அவர்கள் ஆலயத்தின் நிர்வாகத்தைப் பொறுப்பேற்று நடத்தி வந்தார். அவர் தனது முழுநேர உழைப்பினால் ஆலயவளவைச் சோலையாக மாற்றினார். இப்பொழுதும் அவர் நினைவாகவே ஆலயத்தைச் சுற்றி தென்னை, மா, நெல்லி, விளா முதலியன வளர்ந்து பயன் கொண்டிருக்கின்றன. ஆலய முன்பாக அரசும் வேம்பும் இணைந்து காணப்படுகின்றன. இவையும் அவரால் உருவாக்கப் பெற்றவையேயாகும். அவரைத் தொடர்ந்து அவரது மகன் காலஞ் சென்ற திரு. க. முத்துக்குமாரு அவர்கள் ஆலயப் பொறுப்பேற்று நடத்திவந்தார்.

இவ்வாலயத்தில் பெற்றுள்ள கிணறு இக்கிராமமக்கள் அனைவருக்கும் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. கல்விச் செல்வம், பொருட் செல்வம் ஆகியவற்றால் மேம்பட்டு விளங்கும் தீவுப்பகுதி மக்களின் சாபக்கேடாக அமைந்துள்ளது கோடை கால தண்ணீர்ப் பிரச்சினையாகும். ஆயினும் எக்காலத்திலும் வற்றாத அமுத சுரபியாக இவ்வாலயக் கிணறு விளங்குகின்றது. இதனால் இக்கிராம மக்கள் கோடைகாலத்தில் இக்கிணற்றை நோக்கி நீர்க்கலங்களுடன் படையெடுப்பதை நாம் காணலாம். மாரிகாலங்களில் கூட இக்கிராமத்திலுள்ள மற்றைய எல்லாக் கிணறுகளிலும் பார்க்க இவ்வாலயக்கிணறு சிறந்த நன்னீரைச் சுரந்து கொண்டிருப்பதை யாவரும் அறிவர். இதனால் எக் காலத்திலும் குடிநீருக்காக மக்கள் இக்கிணற்றுக்கு வருவதைக் காண முடியும்.

ஸ்ரீ ஞானவைரவ ஆலயத்தில் சித்திரா பூரணை நாளன்று வருடாவருடம் கஞ்சி காய்ச்சி விழாக்கொண்டாட்டம் நடை பெறும். அதே போன்று வைகாசி விசாகத் தினத்தன்று வருடாந்தப் பொங்கல் விழாவும் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமமக்கள் தமக்கு எவ்விடர் நேரினும் எல்லாம் வல்ல ஸ்ரீ ஞான வைரவப் பெருமானிடமே சென்று முறையிடுவர். அவரும் அடியார்கள் துயர்கள் பலவற்றைத் தீர்த்து வைத்துள்ளார். இவ்வாலயத்தைப்பற்றிக் குறை கூறியவர்கள் பலருக்கு கனவில் நாய் வடிவில் தோன்றிப் புத்திபுகட்டியதுமுண்டு. சிலருக்கு தூய வெண்ணிற ஆடையுடன் கனவில் காட்சி கொடுத்ததாகவும் கூறக் கேட்டிருக்கின்றோம்.

1976 ஆம் ஆண்டு சித்திரா பூரணைத் தினத்தன்று ஆலயத்தில் கூடிய இளைஞர்கள் ஆலயத்தைப் புனரமைப்புச் செய்ய வேண்டுமெனத் தீர்மானித்தனர். இதன்படி திருப்பணிச் சபை ஒன்றும் தெரிவு செய்தார்கள். ஒருவருடகாலத்தினுள்ளேயே சகல திருப்பணி வேலைகளையும் பூர்த்தி செய்து கும்பாபிஷேகம் செய்வதெனத் தீர்மானித்தார்கள். ஆயினும் இடையிடையே பல சோதனைகள், நான்கு ஆண்டுகளின் பின் இன்று இவ்வளவு சிறப்பாக இவ்வளவு நடைபெறுமென நாம் எவருமே எதிர்பார்க்கவில்லைத்தான்.

புயலுக்குப்பின் இன்பம் என்பார்கள் அதுபோன்று இன்று நாம் பேரானந்தமடைகின்றோம். அடியார்களாகிய எம்மை ஆட்கொள்ளும் பொருட்டுத்தானோ என்னவோ இவ்வளவு பெரும் இன்னல்களை எம் அருள் ஞானவைரவப் பெருமான் எமக்கு அளித்தார் போலும், எமது கிராமம் - நாடு, இன்று பேருவகை பெற்றுத்திகழ்கின்றது.

*(காவலூர் கரம்பொன் கிழக்கு ஸ்ரீ ஞானவைரவ ஆலய திருக்குடத் திருமஞ்சனமலர்)*

30.4.79

*திரு. மு. கந்தசாமி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரம்பொன் ஸ்ரீ ஞானவைரவர் ஊஞ்சல்

- பிள்ளைக்கவி ஸ்ரீ வ. சிவராசசிங்கம் -

### காப்பு

*வந்தாரை வாழவைக்கும் பண்பாலீகை*
*வரம்பின்றி மேவுதலால் கரம்பொன்னாகும்*
*சந்தாரும் நாமமுறு நகரில் மேலாம்*
*சான்றோர்கள் வாழ்பரத குலத்துவாழும்*
*செந்தாரும் எழில்வைர வேசர்மீது*
*திகழ்விருப்பால் செந்தமிழில் ஊஞ்சல்பாடச்*
*சிந்தூரத் திலகநுதற் சிந்துரம்போற்*
*திருமுகத்தோன் கமலபதம் சிரங்கொண்டேனே.*

### நூல்

*கொத்தலரும் சித்திரப்பூம் பந்தர்நாப்பண்*
*குலவுமொளிப் பவளக்கால் நிரையநாட்டி*
*உத்தரமாய் வைரமணிச் சலாகைபூட்டி*
*ஒளிதயங்கு நித்திலத்தால் வடங்கள் கோத்து*
*தைத்தபொலன் பீடமிசை இனிதுமேவிச்*
*சராசரமெ லாமுவகை தளிர்த்துப்பூக்க*
*மைத்திரைசூழ் கரம்பொனகர் தன்னில் மேவும்*
*வைரவஞா னப்பெருமான் ஆடீரூஞ்சல்.* 1

*அஞ்சனவண் ணத்திருமா லோடுசெங்கேழ்*
*அரவிந்த மலர்ப்பொன்னோர் வடந்தொட்டாட்ட*
*கஞ்சமலர்ப் பிரமனோடு படிகமேனிக்*
*கலைரூப வாணிஒரு வடந்தொட்டாட்ட*
*குஞ்சரவா கனன்சசியோர் வடந்தொட்டாட்ட*
*குமரனொடு குறமின்னோர் வடந்தொட்டாட்ட*
*மஞ்சுதவழ் கோபுரமார் கரம்பொன் மேவும்*
*வைரவஞா னப்பெருமான் ஆடீரூஞ்சல்.* 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துர்ச்சனரால் விலங்குகளால் அலகைதன்னால்
துன்பம்நமை யடர்த்துவருங் காலைசிம்ம
கர்ச்சனைசெய் தவைகடியும் கருணைவாழ்வே
கமலநா யகன்கருவம் கடிந்தகோவே
அர்ச்சனைசெய் தடிபரவும் அடியார்தங்கள்
அல்லலறுத் தாட்கொள்ளக் கரம்பொன்மேவும்
வச்ரமணி யங்கிதரித் திடுமெய்ஞ்ஞான
வைரவநாதப் பெருமான் ஆடீரூஞ்சல். 3

அன்பிலகம் குழைந்தடியார் உவகைகூட
அரியசந்தத் தொடைமாலை கவிஞர்பாட
இன்பரசத் தமிழ்ப்பாடல் வழியேதோகை
யிளமயில்போல் எழில்மாதர் நடனமாடத்
துன்பமுறு பிறவிதரும் வினைகள் யாவும்
துகள் படுத்துமடியர் தொழுதலையிற் சூட
மன்னியசீர்க் கரம்பொனகர் தன்னில் வாழும்
வைரவஞா னப்பெருமான் ஆடீரூஞ்சல். 4

தலங்களிலே தலைசிறந்த தலமாம் வேதச்
சதுர்முகனின் தருக்கழித்த வடுகநாதர்
நலம் பொழிய வீற்றிருக்குமென் றோர்ந்து
நாரணனே முதலான தேவரோடு
பலமருவு நவக்கிரகம் நாள்கள் யாவும்
படர்வினைகள் கெடவருளை நாடிநாளும்
வலம்புரியும் கரம்பொனகர்க் கோயில் வாழும்
வைரவஞா னப்பெருமான் ஆடீரூஞ்சல். 5

மாவலிகூர் முத்தலைவேற் படையும் தண்டும்
வலங்கெழு பொற் திருக்கரத்திற் கொண்டு சூழும்
தீவினையின் மறம் போக்கி யருளை நல்கச்
சேணுயரும் மாடமலிகின்ற மூதூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவலம்பொற் றுறைமருவு கரம்பொன் மேவிக்
களித்துறையும் வடுகபிரான் ஆடீரூஞ்சல்
ஆவலொடு வழிபடுமெய்யடியார் தங்கள்
அகமகிழ முகமலர ஆடீரூஞ்சல். 6

மண்டிதய பேரன்புடனின் னடியார் நேர்ந்து
வாகையெனச் சூட்டுவடை மாலையோடு
தொண்டர் தொடுத் தணிந்திடுசெவ் வரத்தமாலை
சொர்ணமய மானவெழில் மார்பிலாட
தெண்டனிடு தொழும்பர்கலி வலிகெட்டோடச்
சிவமதலை யெனவமரர் துதிகொண்டாட
வண்டிரைசூழ் கரம்பொனகர்க் கோயில்வாழும்
வைரவஞா னப்பெருமான் ஆடீரூஞ்சல். 7

தத்திவரு முத்தினங்கள் இடறலாலே
தையலர்பூ மிசைவிழுதல் கண்டுவெள்ளைக்
கொத்து முல்லை மெத்தநகை கோட்டவீது
குற்றமெனக் கைமறித்துக் காந்தள்காட்ட
மெய்த்துயர மொடுகண்ணீர் மரக்காசிந்தி
மிகவுருகும் கரம்பொனகர்ப் பதியில்மேவும்
சித்திவிநா யகர்க்கிளையீர் ஆடீரூஞ்சல்
சிவஞான வைரவரே ஆடீரூஞ்சல். 8

மிடிதரியேம் பிணிசகியேம் புரப்பாரெம்மை
மற்றிப்பார் மீதிலெவர் திரும்பிப்பாரென்
றடியறுநீள் மரம்போல் வீழ்வாருக்கும்
ஐயபெரும் பிறவியெனும் ஆசைமேவும்
நெடிதலைமேல் படிதுரும்பாய் உலைதல்நீக்கி
நின்பதத்தே சேர்த்திடுவாய் என்றுவேண்டும்
அடியவர்க்கும் கருணைசெயக் கரம்பொன்மேவும்
அருள்ஞான வைரவரே யாடீரூஞ்சல். 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீலமணிக் கந்தரத்தீர் ஆடீரூஞ்சல்
நெட்டிலைவேற் கரதலத்தீர் ஆடீரூஞ்சல்
வேலவர்க்கு மூத்தவரே யாடீரூஞ்சல்
வேதன் மருள் தீர்த்தவரே யாடீரூஞ்சல்
காலமெலாம் எமைப்புரப்பீர் ஆடீரூஞ்சல்
கபாலமணித் தொடைதரிப்பீர் ஆடீரூஞ்சல்
கோலவெழிற் கோபுரமார்க் கரம்பொன்மேவும்
குறைவில் வைரவநாதர் ஆடீரூஞ்சல். 10

## வாழ்த்து

மாதமும் மாரிபெய்து வளஞ்சுரந் துலவுவாழ்க
வேதவா கமங்கள் வாழ்க மிகுசிவநெறியும் வாழ்க
காதல்மெய் யடியார் வாழ்க கரம்பொன்மா நகரமேவும்
போதமார் வடுகநாதர் புகழ்நெடி தோங்கி வாழ்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# யாழ்ப்பாணம் பழை, தெல்லிப்பழை
# ஞான வைரவர் கோயில்

*சிவநெறிச் செல்வர், சிவநெறிச் செம்மல்,*
*அறங்காவலர், சமாதான நீதிவான்*
*திரு தி. செந்தில்வேள்*

காங்கேயன்துறைக்குச் சமீபமாக உள்ள மாவிட்டபுரம் புகையிரத நிலையத்திற்குக் கிழக்கே உள்ளது பழை என்னும் மிகப் பழைய ஒரு ஊர். ஆங்காங்கு பனைமரக் காணிகள் அங்கொன்று இங்கொன்றாக ஓர் ஐந்தோ ஆறு வீடுகள் மட்டுமே புலப்படும். பரந்து கிடக்கும் இப்பாலைச் செம்மண் பூமியில் இருந்தாற்போல் பசுமையான மரங்கள் சூழ கம்பீரமான இராஜகோபுரத்துடன் பார்ப்பவரை வியக்க வைக்கும் ஒரு வைரவர் திருக்கோயில். இராஜகோபுரம் கொண்ட ஒரே வைரவர் ஆலயம் இலங்கையில் இதுவே.

ஆதியில் இவ்விடத்திலேயே இருந்த பழைய கோயிலில் இருந்த மூலவரான ஞானவைரவர் விக்கிரகத்தையும் , ஒரு விநாயகர் விக்கிரகத்தையும் மட்டும் எடுத்து ஏனையவை யாவுமே புதிதாக கருங்கற் சிற்பச் சிலைகளும், மண்டபங்களும், இராஜ கோபுரமும், உயர்ந்த திருச்சுற்று மதில்களும் கொண்டதாக தனியொருவரே தன் சொந்தச் செலவில் முற்றிலும் முழுமையாக பெருந் திருப்பணியை நிறைவேற்றி உள்ளார். இவர் பழை ஊரில் பாரம்பரியச் சிறப்புமிக்க பூலோகரத்தின முதலியார் சித்தர் எனப் பிதுர் மரபு வழியிலும், வீரசிங்க முதலியார் வழித் தோன்றலில் தாய் வழி வந்தவருமான எந்தை திருஞானசம்பந்தர். இவர் 17 வருடங்களாக உலகிலேயே மிகச் சிறப்பு வாய்ந்த சிற்பாசாரி யர்களைத் தன்னிடத்தில் அமர்த்தி இலங்கையின் பல பாகங்களில் பெரும் ஆலயத் திருப்பணிகள் ஆற்றியவர். மாவைக் கந்தனுக்கு கலை நுணுக்கங்கள் மிக்கதாக தனிக் கருங்கற்களினாலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மகா மண்டபம் நிறுவியவர். பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோயிலில் உள்ள மூலவர், நிற்கின்ற முகூர்த்தம் ஆகும். அக்கோயில் அர்ச்சகருக்கு வரதராஜப் பெருமாளே கனவில் தோன்றி ''நான் எவ்வளவு காலம் தான் நிற்பேன்'' என்று கேட்டதாக அந்தத் தலைமை அர்ச்சகரே எந்தையிடம் கண்ணீர் மல்க மல்க வந்து சொன்னார். அது கேட்ட என் தந்தை தலைமைச் சிற்பாசாரியரான பெரியசாமி ஆசாரியாருக்குக் கட்டளையிட ஒரு அற்புதமான அனந்தசயனத் திருக்கோலம் உருவானது கல்லிலே. அதுவும், ஆதிசேஷன் முதல் அனந்தசயனக் கோலமும் நாபிக் கமலத்தின் மேலெழுகின்ற தனித்தாமரையில் பிரமதேவர் உட்பட அனைத்துமே ஒரே கருங்கல்லில் உருவானது.

குறிஞ்சிக் குமரன் ஆலயச் சிலைகள் இவர் செய்வித்தவையே. தனியார் துறையில் மிகப் பிரமாண்டமான நீர்ப்பாசனக் குளத்தை முற்றாகக் கட்டியவர். சுமார் ஒன்றரை மைல் நீளமுள்ள குளக்கட்டுக் கொண்ட நவாலங் குளத்தையும் அதன் அருகே சிவாங்க குளத்தையும் கட்டினர். இவர் கட்டிய இக்குளத்திலிருந்தே கடலுடன் சங்கமமாகும் சூரியன் ஆறு ஆரம்பமாகிறது. இலங்கை முழு வதையும் ஒரு குடைக்கீழ் ஆண்ட சோழப் பேரரசன் இராஜேந்திர சோழனின் இலங்கைக்கும் மாலைதீவுக்குமான தலைநகர் இருந்த இடம் காடு கொள்ள அங்கே மீளக் கட்டுப்பட்டவையே மேற்சொன்ன குளங்கள். நவாலயத்தில் இவர் எழுந்தருள வைத்த விநாயகர் சிலைதான் இலங்கையிலேயே மிகப் பெரிதும் கலை வடிவும் நிறைந்த விநாயகர் சிலை. நவாலயத்தில் அகழ்ந் தெடுத்த கருங்கற்கள் பலப் பல அனுப்பி எழுப்பப்பட்டதே. திருக்கேதீஸ்வரத்தின் பெரும் பகுதி. இவர் ஆற்றிய திருப்பணிகள் இன்னும் எத்தனை எத்தனையோ.

பழை ஊரில் ஞான வைரவர் கோயில், திருப்பணி நிறைவெய்தும் காலந் தன்னில், தலைமைச் சிற்பாசாரியார், ஆலயம் எழுப்பிய என் தந்தையாரின் சிறப்புக் கூறும் செய்திகளைக் கோபுர வாசலிற் பொறிக்க உத்தரவு கேட்டார். ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையோ மறுத்து விட்டார். ''நான் செய்தது என்னென்ன என்பது சித்திரபுத்திரனாருக்குத் தெரிந்தால் போதும்'' என்றாரே பார்க்கலாம்.

சிற்பாசாரியார் என்ன செய்தார் தெரியுமோ, கூர்ந்து பார்த்தால் மட்டும் தெரியத்தக்கதான ஒரு சின்னஞ்சிறு சித்திரபுத்திரனாரின் சிலையைக் கையில் சுவடியில் எழுதிக் கொண்டிருக்கும் பாவனையில் வடித்து அச்சுவடியில் திருஞானசம்பந்தர் என்று எழுதியிருப்பதாகச் செய்து விட்டார். இச் சித்திரபுத்திரனார் கணக்கெழுதும் சிற்பம் வைரவர் கோயிலின் கருங்கல் மூலஸ்தானத்தின் பின்சுவரில் உயரமான இடத்தில் செதுக்கப்பட்டுள்ளது.

இக்கோயிலின் நாய் வாகனமும் மிகப் பெரியது. உயிர்த் தன்மை மிகக் கொண்ட இந்நாயின் வாயின் உள்ளே ஒருபெரிய கருங்கல் உருண்டை கிழே விழாதவாறு உருளக் கூடியதாக அமைந்துள்ளது.

ஞானவைரவர் கோயிலில் இன்னும் கலையம்சம் மிகுந்த சிற்பங்கள் உண்டு. மகாவிஷ்ணுவின் உயிருக்காக மடிப்பிச்சை கேட்கும் பாணியில் தேவியர் இருவரும் வைரவப் பெருமானிடம் யாசிப்பதாகப் பெரிய அளவில் சிலைகள் உள்ளன.

இவ்வாலயத்தில் திருப்பணி ஆரம்பத்தில் மகாமண்டபத்தை மட்டுமே கட்டுவதாக இருந்தது. கட்டத் தொடங்கிய போது யாவரும் அதிசயிக்கத் தக்கதாகவும் பார்க்கத் தக்கதாகவும் பழைய மூலஸ்தான விமானத்தில் திடீரென ஒரு வெடிப்புத் தோன்றியது. அது கண்ட பின் மூலஸ்தானத்தையும் கட்டித்தானே ஆகவேண்டும். அப்படித் தொடங்கிய திருப்பணி ஒரு முழுமையான ஆலயத்தையுமே கட்டப்பண்ணி நிறைவானது.

திருஞான வைரவப் பெருமான் காலமறிந்து திருஞான சம்பந்தரால் தன் கோயிலை எழுப்பியது அற்புதமே என்று யாவரும் வியப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராம பக்தனான அனுமன் சீதையைத் தேடி இலங்கை வரும் வழியில் அகத்திய மாமுனிவரைக் கண்டு ஆசி பெறுகிறான் அல்லவா. அப்போது அகத்திய மாமுனிவர் சொல்வார். ''அனுமனே, நீ இலங்கையை ஆகாயமார்க்கமாக அடையப் போகிறாய். நீ கடலை இலகுவாய்க் கடந்திடுவாய். ஆனால் நீ இறங்கும் போது தான் மிக அவதானமாக இறங்க வேண்டும். ஏனென்றால் இலங்கை எங்கணுமே சிவலிங்கங்கள். சிவ பூமியிலே இறங்கும் நீ தவறியும் சிவலிங்கத்தின் மீது கால் படாது மிக அவதானமாக இறங்குவாயாக'' எனச் சொல்கிறது காவியம். அவ்வளவு சிவலிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன அக்காலத்தில்.

இங்ஙனமே காணும் இடமெல்லாம் சிவலிங்கங்கள் தாபிக்கப் பட்டிருந்த இலங்கையில் சிவன் கோயில்கள் குறைய வைரவர் ஆலயங்கள் யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் மிகச் செறிந்து காணப்படும் காரணம் என்னவாயிருக்கும்? வேறு நாடுகளில் காணப்படாத அளவிற்கு இங்கு சிவனை வைரவ மூர்த்தமாக வழிபடும் வழக்கம் பரவலாயுள்ளது.

இவ் வழக்கம் போர்த்துக்கேய, பறங்கி ஆக்கிரமிப்புகளின் போதே மீளவும் மிகப் பிரபலமானது. அந்நியப் படையெடுப்புகளின் ஆதிக்க வெறியினால் இடிக்கப்பட்ட சைவக் கோயில்களோ ஏராளம். சைவக் கோயில்களில் இடிக்கப்பட்ட கருங்கற்களைக் கொண்டே கோட்டை கொத்தளங்கள், கிறிஸ்தவ கோயில்களைக் கட்டி ஆண்டார்கள். சைவர்கள் திருநீறு தரிக்கவே அனுமதிக் கப்படாத இருட்காலம். வெளியே கிறிஸ்தவராகவும் மனதுள்ளே சைவராகவும் வாழ்ந்தவர் பலர். விரத காலங்களில் வாழை இலையில் சாப்பிடும் வழக்கம் உள்ள சைவர்கள் சாப்பிட்ட இலையை எறிந்தால் சைவ அநுட்டானம் செய்யும் மக்களை அடையாளம் கண்டு துன்புறுத்துவார்கள். ஆகவே எச்சில் வாழை இலையைக் கூட வீட்டு ஓலைக் கூரையில் செருகி விடும் தந்திரத்தைக் கையாண்டவர் பலராவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதம் மாறியவருக்கு மட்டுமே பதவி, உத்தியோகம் என்ற காலம். மதமும் மாறி பெயரும் மாறியவர் பலர். சைவக் கோயில்களைத் தகர்க்கத் துணிந்து ஆண், பெண், குழந்தைகள் எனப் பாராது இம்சைப்படுத்தியும் சூறையாடியும் வந்த அந்நியர் ஆக்கிரமிப்பின் போது திகைத்த மக்களைக் காக்க சிவன் வைரவ கோலத்தில் காட்சி தந்து அற்புதங்கள் பல புரிந்தார். தற்பாதுகாப்பு வேண்டுவோர்க்கு வைரவமூர்த்தம் துணை நின்றது. சைவர்கள் தம் கோயில்களுக்கே செல்ல அனுமதிக்கப்படாத இக்காலத்தில் தான் சூல வழிபாட்டில் ஒரு புதிய வேகம் வந்தது. கலைகளுக்குக் கலைமகளை வழிபடுவோர் செல்வத்தை வேண்டித் திருமகளை வணங்குவார்கள். வீரத்தை வேண்டி பராசக்தியை ஆராதிப்பவர்கள் ஞானம் வேண்டில் தட்சிணாமூர்த்தியைத் தியானிப்பர். வைத்திய வெற்றிக்கு வைத்தீஸ்வரனை வணங்குவர். இது போல் தற்பாதுகாப்பு வேண்டிய வேளையில் இறைவனின் வைரவ அம்சம் காவலாகும். இவ்வுண்மையை உணர்ந்த யாழ்மக்கள் வளவுகளில் மிக எளிதாக சூலத்தை நட்டு வழிபட்டனர். சூலம் நட்ட வளவுகளுக்குள் அந்நிய அநியாயக்காரரின் ஆதிக்கம் செயல்படவில்லை. சூலம் இருந்த காணிகளுள் நுழைந்த வெள்ளையர்களின் குதிரைகள் ஸ்தம்பிதமாகி விழுவதும், பெண்களை காம வெறி கொண்டு இம்சைப்படுத்த இவ்வளவுகளில் நுழைந்த படையினருக்கு காக்கை வலிப்பு வந்தமையும், மாங்கலியப் பெண்களின் மாங்கலியங்களைச் கவர நினைத்தவர்களுக்கு கை, கால், வழங்காமல் போனதையும், வளவுகளிலும் கிணறுகளிலும் மறைக்கப்பட்ட கோயில் பொன் விக்கிரங்களைக் கவர முனைந்தவர்களின் கண்களே தெரியாமல் போவதையும் பற்றிய கதைகள் அநேகம் உண்டு. இங்ஙனமாக அதிசயம் நடப்பதையும் பட்டுணர்ந்த ஆதிக்க வெறியில் சூலத்தைக் கண்டு பயப்படலாகினர். சூலம் நட்டு இருக்கும் காணிகளுள் பிரவேசிப்பதையே விட்டு விட்டனர். இங்ஙனம் சமயத்தையும் சமூகத்தையும் காத்த வைரவப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமானை மக்கள் போற்றினர். அந்நிய ஆக்கிரமிப்பின் அக்கிரமங்களில் இருந்து தம்மைக் காத்த வைரவப் பெருமானைத், தம் குலம் காத்த தெய்வத்தை, குலதெய்வமாகவே கண்டு வைரவருக்கு கோயில்கள் எடுத்து நன்றிக் கடன் செலுத்தினார்கள். இதுவே, உலகில் வேறெங்குமில்லாத எண்ணிக்கையில் யாழ்ப் பாணத்தில் கூடுதலான வைரவர் ஆலயங்கள் காணப்படுவதற்கான காரணம். சூல வடிவில் வழிபட்ட இடமெல்லாம். பிற்காலத்தில் வைரவ கோயில்களை வளர்த்தார்கள்.

அது அன்றி அக்கால கட்டத்திற்கு முன் சரித்திர காலத் திற்கும் முந்தி இருந்தே வைரவர் வழிபாடும் வைரவர் கோயில் களும் சில இங்கு இருந்திருக்கின்றன. ஆதி எதுவென்றே அறிய இயலாத தொன்மையுடையது பழை ஊரின் ஞானவைரவர் ஆலயம். எம்முன்னோரின் குல தெய்வமாக அற்புதங்கள் அன்றாடம் நடத்தும் கண்கண்ட தெய்வமாக எழுந்தருளியவர்.

இங்கே அயலில் களவு பயமே இல்லாது கவலையே இன்றி வாழ்வதற்கு வைரவரின் துணையுண்டு. திறந்திருக்கும் வீடே யாயினும் தோட்டமேயாயினும் யாரும் களவு செய்யத் துணியார். காரணம் இப்பெருமான் திரு விளையாடல்களை அறியாத ஊருக்குப் புதியவர்கள் சில சமயங்களில் களவு செய்த போது அவர்கள் ஏதாவது பெருவிபத்தில் பாதிக்கப்பட்டு அன்றே வைரவர் ஆலயத்திற் தஞ்சம் புகுந்து தாம் களவு செய்ய எத்தனித்ததை ஒப்புக் கொண்டு பிராயச்சித்தம் செய்த கதைகள் பல.

இன்னும் சமகால படையெடுப்புகளின் போது வானில் இருந்து சரமாரி பொழிந்த காலங்களில் கூட மக்களைக் காத்தவர் இப்பெருமான். தன் ஆலயத்திலே அச்சம் அகற்றி இருக்க விட்டார். தன் கோயிலையும் அயலவர்களையும் காத்து கண்கண்ட தெய்வமாகவே காணப்படுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# தலையாழி

# ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம்

ஈழத்தில் வைரவப் பெருமானுக்கு அமைந்துள்ள ஆலயங்கள் எல்லாவற்றிலும் தனித்துவமானதும், அளவால் பெரியதுமாக விளங்குவது, தலையாழி ஸ்ரீ ஞான வைரவர் ஆலயமாகும். சைவத்தையும் தமிழையும், இரு கண் எனக் கொண்டு நம் சைவ பாரம்பரியத்தைக் கட்டிக்காத்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் எழுந்தருளி புராணபடனம் செய்து வழிபட்டுத் தனிப்பெருமை கொடுத்தருளிய ஆலயம் இது. கொழும்புத்துறை முனிவர் சிவயோக சுவாமிகள், சிறப்புற நடாத்தப்பட்ட அலங்கார உற்சவங்களின் போது தரிசித்து அக மகிழ்ந்து போற்றிய பெருமையையும் சிறப்பையும் கொண்டது இவ்வாலயம்.

இத்தகைய பழம்பெருமை மிக்க இவ்வாலயம் நாலு தலை முறைக்கு முந்திய இத் தலையாழிக் கிராமத்தின் மூத்த குடி மக்களாய் விளங்கிய பெரியவர்களால் கிராமவாசிகளின் வழிபாட்டிற்காக உருவாக்கப்பட்டது. பாரம்பரியமாக சொல்லப் பட்டும் கேள்விப்பட்டும் அறிந்தளவில் இக்கோவிலை உண்டாக் கியவர்கள் தலையாழியில் தனிச்சிறப்புடனும், பெருமையுடனும் பிறர் மதிப்பை பெரிதும் பெற்றிருந்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களாவர். அந்நாளில் யாழ்ப்பாணத்தில் மிகப் பிரபல்யமாக விளங்கிய சரவணமுத்து உடையார் என்னும் பெரியாரும், அவருடைய நான்கு சகோதரர்களும், அவரின் சகோதரிமாரின் கணவன்மாரும், யாழ்ப்பாணத்தில் வாக்கிய பஞ்சாங்கம் கணித்து வெளியிட்ட பிரபல சோதிடர் இரகுநாத ஐயர் அவர்களும், இவ்வாலயத்தை அமைப்பதற்கு முன்னின்று உழைத்தவர்கள் ஆவர். இவர்களோடு அக்காலத்தில் இக்கிராமத்தில் வாழ்ந்த வேறு சில பெரியார்களும் உதவியிருக்கலாம் எனச் சொல்லப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற் சொன்ன குடும்பத்தினரின் சமயப்பற்றும், தமிழ்ப் பற்றும் நாவலருடன் சேர்ந்து அவர் செய்த அரிய பெரிய தொண்டுகளுக்கு உதவி புரிய நேர்ந்ததால், நாவலருடைய நண்பர்களாகவும், அவரின் மதிப்பிற்குரியவர்களாகவும், இவர்களைத் திகழ வைத்தது. ஆதலால் தான் இவர்களின் விருப்பத்திற்கு இயைந்து நாவலர் பெருமான் அவர்கள் சிரமம் பாராது இவ்வாலயத்தில் நடக்கும் புராண படனங்களில் பங்குபற்றினார். தனங்கிளப்பு இராம நாதர் சம்புநாதர் அவர்களாலும் புராணபடனம் மேற்கொள்ளப் பட்டது. ஆலய நிர்வாகத்தை குடும்பத் தலைவராக இருந்த சரவணமுத்து உடையார் ஏற்று நடத்திய பின், இரகுநாத ஐயர் நடாத்திக் காலக்கிரமத்தில் வர்த்தகத்தில் மேன்மையடைந்த உடையாரின் மைத்துனர் மு. அருணாசலம்பிள்ளையிடம் கொடுக் கப்பட்டது. இவர்கள் கோவில் அலுவல்களை நடத்திப் புராண படனமும், ஆண்டு தோறும் 10 நாட்கள் அலங்கார உற்சவங்களையும் மற்றும் விசேட காலங்களில் உரிய விழாக்களையும் சிறப்புற நடாத்தி வந்திருக்கின்றனர்.

மேலும் இவர் கோயிலுக்கு கணிசமான அளவு விளை நிலங்களையும் தோட்டக் காணிகளையும், அர்ச்சகர் இருப்பதற்கு வடக்கு வீதியில் ஒரு வளவையும், அதில் மடத்தையும் கட்டி உதவியுள்ளார். எவ்வகையிலும் கோவில் நிர்வாகம் தடை யின்றி இயங்க ஆவன செய்துள்ளார்.

இத்துடன் கோவில் ஸ்தாபகருள் ஒருவரும் அர்ச்சகருமாகிய இரகுநாத ஐயர் வாக்கிய பஞ்சாங்கம் ஒன்றை வெளியிட உதவி செய்து அவரின் சோதிட பரிபாலன மடத்திற்கும் கோவிலுக்கும் ஒரு தொடர்பையும் உண்டாக்கி வைத்திருந்தார். அதாவது இக் கோவிலுக்கு பூசகர்களாக வருபவர்கள் மடத்தின் தொடர்புடைய வர்களாக இருக்கவேண்டும் எனவும், மடத்தின் பரிபாலனத்தை மேற்பார்வை செய்யும் பொறுப்பும் உரிமையும் கோவில் முகாமையாளருக்கு உரியதாகும் என்பனவேயாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு திரு. மு. அருணாசலம்பிள்ளை அவர்கள், மற்றும் உரிமையாளரின் உதவி கொண்டு ஆலயத்தைச் சிறப்பாக பரிபாலித்து வந்தார். இவருக்குப் பின் இவரின் புதல்வர் சபாபதிப் பிள்ளை அவர்கள், தந்தையின் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

சபாபதிப்பிள்ளை அவர்கள் இந்துசாதனத்தின் ஆங்கில ஏட்டின் ஆசிரியராகவும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியினதும், அதன் கிளைக் கல்லூரிகளினதும் முகாமையாளராகவும், பல்வேறு சங்கங்களின் முக்கிய பதவிகளையும் வகித்து வந்தார். இவரின் ஆழ்ந்த அறிவும், மதிநுட்பமும், திறமையும் காரணமாக இலங்கை சட்டசபையின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டார். இவரின் காலம் வைரவர் ஆலயத்தின் பொற்காலமாக விளங்கியது. பல்வேறு பணிகளில் ஈடுபட்டு வந்தபோதும் வைரவர் ஆலயத்தை ஒரு உன்னத நிலைக்கு கொண்டுவர பல திருப்பணி வேலைகளைச் செய்வித்தார். மலையாள புகையிலை வர்த்தகர்கள் பலரின் உதவியைப் பெற்று ஆலயத்தை பெரிதாக அமைத்து கட்டி கோவிலுக்குத் தேவையான பல உபகரணங்களையும் சேகரித்து உதவினார் இவர் காலப்பகுதியில் புனருத்தாரண வேலைகள் சிறப்பாக நடைபெற்றதுடன் பல படித்த குருமார்களை ஒன்று சேர்த்த இவரது காலப்பகுதி கோவிலின் புகழும் சிறப்பும் பலராலும் போற்றப்பட்ட காலமாகும். சபாபதிப் பிள்ளைக்குப் பின்னர் அவரின் பொறுப்பினை அவர் மகன் கனகரத்தினம் ஏற்றுக்கொண்டார். மிகச் சிறப்புடனும் பொலிவுடனும் விளங்கிய ஆலயம் இவர் காலப்பகுதியில் பொலிவிழக்கத் தொடங்கியது. காலம் போகப் போக இடிபாடுகள் ஏற்பட ஆரம்பித்தன. நிர்வாகமும் தளர்வடைய ஆலயம் பழைய பொலிவிழந்து காணப்பட்டது. நீண்ட ஒரு காலப்பகுதிவரை இந்நிலையில் இருந்த இவ்வாலயத்தின் புனருத்தாரண வேலைகள் 1988 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ்வாலயத்தின் வழிபடுபவர்கள் ஆலய வழிபடுநர் சபை ஒன்றை நிறுவி இச் சபை மூலம் புனரமைப்பு வேலைகளை ஆரம்பித்தனர். கிராம மக்களிடையே ஏற்பட்ட விழிப்புணர்ச்சியும் காலத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலத்தால் ஏற்பட்ட பக்தி, வைராக்கியமும் ஞானவைரவர் ஆலயத்தைப் புனரமைத்து மீண்டும் பொலிவுற வைக்கும் பணியில் ஈடுபடுத்தின.

இடிபாடுகளாகக் கிடந்த விநாயகர் ஆலயம், வசந்த மண்டபம், மடைப்பள்ளி ஆகியனவும், ஸ்தூபி மண்டபங்களும் புனரமைக்கப் பட்டதோடு புதிய மணிக்கூட்டுக் கோபுரமும் நிர்மாணிக்கப்பட்டது. சந்தான கோபாலர் ஆலயம், முருகன் ஆலயம் ஆகியன பரிவார மூர்த்திகளாக விளங்கின. 1990 ஆம் ஆண்டு ஆனி மாதம் 04 ஆம் திகதி மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. மீண்டும் அருள் மிகு ஞானவைரவர் ஆலயம் அருட்பொலிவும், திருப்பொலிவும் பெற்று விளங்க ஆரம்பித்தது. ஆலயத்தின் நிர்வாக சபையாக விளங்கும் ஆலய வழிபடுநர் சபை உறுப்பினர்களின் அயராத தெய்வீகப் பணியால் பண்டைய சிறப்பைப் பெற்று மாத உற்சவங்கள், பரணி உற்சவங்கள், சதுர்த்தசி, வருடப்பிறப்பு, தைப்பொங்கல், கந்தசஷ்டி, சோமவாரம், திருக்கார்த்திகை உற்சவங்களும் வருடாந்த உற்சவங்களும் சிறப்புடன் நடைபெறுகின்றன.

மேலும் ஆலய சபையின் கீழ் அமைக்கப்பட்டுள்ள இந்து இளைஞர் மன்றத்தின் பணி அளப்பரியது. தினசரி ஆலய கர்மங்களை செய்வதோடு, நந்தவனம் அமைத்தல், சிரமதானங்கள், யாத்திரைகள், போன்ற பணிகளால் தங்களையும் ஆலயத்தையும் இவர்கள் புனிதப்படுத்தியுள்ளனர். வருடாந்த உற்சவத்தின் நாள் விழாவை இவ்விளைஞர்கள் வெகு சிறப்பாகச் செய்வதோடு, கிராமசிறார்களின் சமய அறிவை வளர்க்கும் பொருட்டுப் பண்ணிசைப்போட்டி, சமய அறிவுப் போட்டி ஆகியவற்றை நடாத்தித் தங்கப்பதக்கங்களும், பெறுமதிமிக்க பரிசில்களும் வழங்கி சிறாரைச் சமயப் பணியில் ஊக்குவிக்கும் பணி பாராட்டத்தக்கது.

மேலும் 1992 ஆம் ஆண்டு புதிதாக விநாயக உற்சவமூர்த்தி ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டு, வருடாந்த உற்சவத்தின்போது ஞானவைரவப் பெருமானுடன் எழுந்தருளி வரும் காட்சி கண்கொள்ளாக்காட்சியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைய காலப்பகுதியில் திரு. ம.வே. திருஞானசம்பந்த பிள்ளை அவர்களால் இயற்றப்பட்ட ஊஞ்சல் பாட்டுப் பாடப்பட்டது. இப்பாடல் ஆலய புனரமைப்புக்கு முன்னரே தவற விட்டமையால் தற்போது பண்டிதர் சோ. தியாகராஜா அவர்களால் இயற்றப்பட்ட ஊஞ்சல்பாட்டு உற்சவத்தின்போது பாடியருளப் பெறுவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இவ்வாறாக உருவேறத் திருவேனும் என்ற வகையில் இரகுநாத ஐயர் முதல் இடையில் மிகச் சிறப்பாக அமைந்த பஞ்சாட் சரக் குருக்கள் காலம் தொட்டு இன்று வரை ஆலயத்தின் வேதாகம கிரிகைகளை, நடாத்திவரும் எண்ணற்ற குருமாரின் மந்திர உச்சாடனங்களால் மீண்டும் தலையாழிக் கிராமம் தெய்வீக மணம் பெற்று விளங்குவதோடு ஞான வைரவர் அடியார்கள் தொகையும் பல்கிப் பெருகி வந்து கொண்டிருக்கின்றது என்பதை இங்கு குறிப்பிடாதிருக்க முடியாது.

காவல் தெய்வமாம் எம் பெருமான் ஞானவைரவர் தாள் பணிந்து எல்லோரும் இன்புற்று இருக்க அவன் அருள் வேண்டி இறைஞ்சி நிற்போமாக.

*திரு. அ. இராமநாதன்* - தலைவர்.

10524



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருவளரும் தலையாழிப் பதியில் அமர்ந்த ஸ்ரீ ஞானவைரவர் மீது பாடப்பெற்ற திருஊஞ்சற் பாக்கள்

### காப்பு

திருவளரும் யாழ்ப்பாணத் திலகமெனத்
திகழ்கின்ற தலையாழிப் பதியின்மேவும்
உருவளரும் ஞான வைரவர்மீது
ஒண்தமிழால் ஊஞ்சலது இனிதுபாட
மருவளரும் மலைவல்லி பாகனொடு
மகிழ்ந்துதரும் கணபதியை மனத்தால்வாக்கால்
கருவளரும் காட்டினையே காய்க்களன்று
கைதொழுது சிரங்குவித்துக் கருத்துள்வைப்பாம்.

### நூல்

பண்ணும் ஒருமறை நான்கும் கால்களாகப்
பகரும் ஒருஉபநிடதம் விட்டமாகத்
துள்ளிவரும் ஆகமங்கள் பலவகையாகத்
துலங்கிவரும் தோத்திரங்கள் வடமதாக
மின்னல்எனும் உருவினொடு அடியார்வேண்ட
விளங்கு தலையாழிமிசை அமர்ந்து நின்று
அன்னமெனும் தவிசின்மிசை ஆடல் செய்யும்
அருள்ஞான வைரவரே ஆடீருஞ்சல்.

விண்ணவரும் அமரர்களும் விஞ்சையோரும்
வித்தியாதரர் முதலோர் மலர்கள்தூவ
புண்ணியத்தால் திருமாலும் அயனும்கூடி
போற்றியென்று கரங்குவித்து மருங்கேநிற்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணவர்கள் விழிநீரால் கசிந்துநிற்ப
மாகதர்கள் மகளிரொடு பாடிஆட
அண்ணமெனத் தலையாழிப்பதியின் மேவும்
அருள்ஞான வைரவரே ஆடீரூஞ்சல்.

நீலமணிப் பட்டுடுத்திச் சூலம் ஏந்தி
நித்திலமும் மரகதமும் வைரங்கொண்ட
கோலஅணி வகையெல்லாம் கவினச்சாத்திக்
கொழுந்தெரியும் சடையினொடு வடுகனென்னும்
வாலஉருச் சுமந்துநின்று வானோர்கொண்ட
வல்லகந்தை குருதியோடு மாற்றிநின்ற
காலன்எனத் தலையாழி மேவிநின்ற
கலைஞான வைரவரே ஆடீரூஞ்சல்.

ஆணவமாம் பெருந்தளையை அகற்றவேண்டி
அருங்கன்மம் மாயைதனை உயிருக்கீந்து
பேணிய தத்துவங்கள் எனும் பிணியைநீக்கப்
பிரானாகி அறிவுறுத்திப் பருவங்கண்டு
கோணாதுஅருள் வெள்ளத்தழுத்தி அன்பர்
குலவுகின்ற பெருநெறிக்கே குலவச்செய்து
காணாத திருவடியைக் காட்டிநல்கும்
கலைஞான வைரவரே ஆடீரூஞ்சல்.

கார்விரியும் கொன்றையொடு அரசும்கந்தம்
கமழ்கின்ற வில்வமுமாய் அருகேநின்று
ஏர்பொலியும் பலவினொடு மாவீனீட்டம்
இளந்தெங்கு இவைகளெல்லாம் இனிக்கும்சோலை
சீர்பொலியும் தலையாழிப்பதியின் மேவிச்
சிந்தையினார் கண்களிக்க அமர்ந்தசெல்வா
ஆர்பொலியும் சடைமுடியான் அருளும்தேவே
அருள்ஞான வைரவரே ஆடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரையும் ஐப்பசியிற் பரணிநாளும்
செவ்வாயும் உள்வீதி நிறையும்நின்று
பத்தரெல்லாம் கண்வடிப்பர் அன்றும் இன்றும்
பருவமிலார் யாரேதான் நின்னைக்காண்பர்
நிந்தலுமே நெய்தயிர் பால் கையில்ஏந்தி
நினைவுடனே பூசனைக்கு வருஏவார் வைகும்
மெய்த்தவத்துத் தலையாழிப்பதியின் மேவும்
மெய்ஞ்ஞான வைரவரே ஆடீரூஞ்சல்.

பூவினிலே வாசமது பொருந்தக் கொண்டாய்
புனலிடையே பொற்பதுவே பொலிந்து கொண்டாய்
நாவினிலே நறும்பாடல்தனையே கொண்டாய்
நறுஞ்சாற்றில் நாற்றமது நிறையக் கொண்டாய்
தேவினிலே தானவர்கள் மலர்கள் சிந்திச்
சிறந்துநிற்கும் தலையாழிப்பதியின் மீது
ஆவினிலே அஞ்சுகந்து ஆடும்செல்வா
அருள்ஞான வைரவரே ஆடீரூஞ்சல்.

சூலம் படைஏந்திச் சுண்ணம்ஆடி
சுந்தரனாய்த் திகம்பரனாய்க் கபாலம்ஏந்தி
நீலமணிக் கச்சணிந்து மார்புதன்னில்
நிலவுஎன நூலணிந்து நீரைஏற்ற
ஆலமணி கண்டத்தோன் தன்னைஎள்ளி
அகந்தை கொண்ட அனைவரையும் மடியச்சாய்த்து
கோலமொடு தலையாழிப் பதியின்மேவும்
குருஞான வைரவரே ஆடீரூஞ்சல்.

வேதமெனும் நாயுடையீர் ஆடீரூஞ்சல்
வித்தகரே நிருவாணி ஆடீரூஞ்சல்
பாதகஞ் செய் தேவரது அகந்தை நீக்கும்
பவித்திர மாயுள்ளவரே ஆடீரூஞ்சல்
நாதமெனும் நிலைகடந்த மோனமான
நமச்சிவாயப் பொருளே ஆடீரூஞ்சல்
தாதவிழும் தலையாழிப் பதியின் மேவும்
சங்கரனாம் வைரவரே ஆடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணிழிந்து வந்ததெனும் விமானந்தன்னில்
வீற்றிருந்து விளங்கி ஒருவடிவு தாங்கி
தண்ணளியோர் அறம்புரிந்து சிறந்துநிற்கும்
தலையாழிப் பதிமீது அமர்ந்துநின்ற
மண்ணிழிந்து வந்தவர் கண்மாரிபெய்ய
வானவரும் பூமாரி வாரிச்சிந்த
அண்ணல்என அருள்சிந்தும் அழகேகொண்ட
அருள்ஞான வைரவரே ஆடீரூஞ்சல்.

**வாழி**

ஆவாழி அந்தணர்கள் அறங்கள்வாழி
அரிய சிவநெறிவாழி நீறுவாழி
கோவாழி குலதருமம் நிறைந்துவாழி
குலவு பசுவினங்களொடு கொண்டல்வாழி
நாவாழி நல்லதமிழ் கேட்குமன்பர்வாழி
நலம்வாழி புலம்வாழி இசையைக்கொண்ட
பாவாழி தலையாழிப் பதியின் மேவும்
பரஞ் சுடராம் வைரவனார் பாதம்வாழி.

**மங்களம்**

வண்டுசிண்டு மாலையாளி மார்பனுக்கு மங்களம்
வளர்சிலம்பு கோவையணி தாளனுக்கு மங்களம்
அண்டி நின்றவர்க் கருளும் ஐயனுக்கு மங்களம்
அணியரவு சூலமேந்தும் அண்ணலுக்கு மங்களம்
எண்டிசையும் ஏத்துகின்ற இறைவனுக்கு மங்களம்
எழில்கொள் சோலைசூழ்ந்திடு பழம்பதிஎனத்திகழ்
தொண்டர் வாழ்கின்ற தலையாழிமீது அரசுசெய்
தொன்மையான வைரவர்க்கு மங்களம் சுபமங்களம்.

ஆக்கம்:
பண்டிதர் சோ. தியாகராசபிள்ளை



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
விசேட சேகரிப்புப் பகுதி
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருகோணமலை
# வைரவர் கோயில் வரலாறுகள்

வைரவர் :- விஷ்ணு, பிரமன், தக்கன் ஆகியோர்களுக்கு அகங்காரம் மேலிட்டகாலத்து அவர்களைச் சிவ ஆக்ஞையினால் தண்டித்து அநுக்கிரகித்த சிவ அவதாரம். இவருக்கு வேத உருவமாகிய நாய் வாகனம்.

வைரவர்:- சிவமூர்த்திகளில் ஒருவர்- இவரை (அபிதான சிந்தாமணி) இவரை வழிபடுவோரும் வைரவர் எனப்படுவர். இவர் வீற்றிருப்பது வைரவபுவனம். இவர் தோற்றம் நீலநிறம், திருவடிகளில் சிலம்பு, மார்பில் தலைமாலை, சதுர்ப்புஜம், கைகளில் சூலம், மழு, பாசம், உடுக்கை , முக்கண்கள், கோரப்பற்கள், செஞ்சட்டை, சீற்ற நகை கொண்ட முகம்.

இவரைப்பற்றிப் புராணங்கள் கூறுவதாவது:- படைத்தற் கடவுளாகிய பிரமன் முன்னர் ஐந்து முகங்களுடன் இருந்தான். ஒரு முறை சிவபிரானை இகழ்ந்த காரணத்தினால், மேல் நோக்கியிருந்த அத்தலையைக் கிள்ளி அவன் செருக்கை அழிக்க வைரவரைச் சிவபெருமான் படைத்தார். வைரவர் நான்முகனுடைய மேல்நோக்கிய அத்தலையைக் கிள்ளி அதன் ஓட்டில் செருக்கு மிகுந்த சிலமுனிவர்கள், தேவர்கள், முதலியவர்களின் இரத்தத்தை பிச்சையாக ஏற்று அவர்களின் செருக்கை அடக்கி நல்லுணர்வு பெறச் செய்தார்.

வைரவக்கடவுள் ஊழி இறுதியில் சிவபெருமானுடைய ஆணையால் யாவற்றையும் அழிப்பார். இவருக்கு நான்கு மறைகளே நாய்வடிவுடன் வாகனமாக இருக்கிறது. வைரவம் சைவசமய உட்பிரிவுகளில் ஒன்று, கந்தபுராணத்தில் இவருடைய வரலாறு விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

- *கலைக்களஞ்சியம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவுருவ விளக்கம்:- சதுர்ப் புஜங்களையுடைய வைரவரின் திருவுருவங்களில் பெரும்பாலும் வலக்கரங்கள் இரண்டில் சூலமும், உடுக்கும், இடக்கரங்களில் பாசமும் காணப்படுகின்றன. கபாலம் பிரமனுடைய தலை, பாசம் இடப்பக்க மேல்கரத்திலும் கபாலம் கீழ்க்கரத்திலும் காணப்படுகிறது. திருகோணமலையில் உள்ள திருவுருவங்களெல்லாம் இப்படிப்பட்டவையே. புராண வரலாற்றுக்கு ஒத்ததாயிருக்கிறது.

வைரவ மூர்த்தியின் அவதார நோக்கத்தோடு சிந்தித்துப் பார்க்கும் போது பிரமனுடைய தலையைக் கிள்ளுவதற்கு முன் கையில் கபாலம் வருவதற்கு இடமில்லை. எனவே சூலம், உடுக்கு , பாசம், மழு, என்பன கைகளில் அமைவதே பொருத்தமானது.

திருக்கோணமலை வைரவர் கோயில்களைப் பற்றிய செய்திகளைத் தனித்தனி அளித்துள்ளேன். பைரவரை வைரவர் என்று வழங்கி வருவது மரபு. பைரவமூர்த்தியைக் கோரவடிவுடையவரென வைரவமதம் கூறுகிறது. இதனாற் போலும் வைரவருக்கு ஆடு, கோழி, முதலிய இரத்தப்பலியிடும் வழக்கமும் இருந்து வந்தது. திருக்கோணமலையில் இந்த வழக்கம் இல்லை.

வெருகல் தொடக்கம் தென்னைமரவாடி வரையுமுள்ள திருக்கோணமலை நாலு மாவட்டத்தில் முன் சொன்ன ஆறு கோயில்களை விட வேறு தனிக் கோயில்கள் இல்லை. ஆங்காங்கே சூலத்தை வைத்து வழிபடுகிறார்கள்.

பிள்ளையார், முருகன், சிவன், அம்பாள், கோயில்களில் வைரவருக்கு தனிச் சந்நிதிகள் காணப்படுகின்றன. அத்தகைய சந்நிதிகளில் வைரவருடைய சிலா விக்கிரகம், பிரதிட்டை செய்யப்பட்டிருக்கும் அல்லது திரிசூலம் பிரதிட்டை செய்யப்பட்டிருக்கும். வைரவர் சிவனுடைய அம்சாவதாரமானதால் திரிசூலத்தில் மூன்று முனைகளும் சிவனுடைய சக்தியாகிய ஆரணி, ஜனனி, ரோதயித்திரி என்பதைக் குறிக்கும். சூலப்பிரதிஷ்டை கிராமப் புறங்களில் அதிகமாகக் காணப்படுகின்றது. கொட்டில் கோயில்களிலும் ஆல், அரசு, வேம்பு, போன்ற விருட்சங்களின் அடியிலும் சூலத்தை வைத்து வழிபடும் வழக்கமும் உண்டு. சூலம் என்றால் வைரவர்தான் என்பது மக்களின் பயபக்தி வழிபாட்டு நம்பிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைரவர் காவல் தெய்வம் என்பதும் எல்லோருடைய முழுநம்பிக்கை. ஆகம சாஸ்திரங்களைக் கற்றவர்களும் ஆகம முறைப்படி பூஜை செய்கிறவர்களுக்கும் வழிபடுவோருக்கும் வைரவர் காவல் தெய்வம் என்ற நம்பிக்கை இருந்து வருகிறது. நம்பினார் கெடுவதில்லை இது நான்கு மறைத்தீர்ப்பு.

ஆகம முறைப்படி அமைக்கப்பட்ட பெரிய ஆலயங்களில் கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், ஸ்நபன மண்டபம், தம்பமண்டபம், வசந்த மண்டபம், தெரிசனமண்டபம், கோபுரம், மணிக்கோபுரம் என்பன அமையும் போது கிழக்கு நோக்கிய ஆலயமானால் கோபுரம், மணிக்கோபுரத்துக்கு அருகே இடப் பக்கத்தில் வைரவருக்கு அமைக்கப்படும் தனிச்சந்நிதியில் வைரவப்பெருமான் மேற்குமுகமாக கற்பக்கிரகத்தை நோக்கிப் பிரதிஷ்டை செய்யப்படுவார். அவர் ஆலயம் முழுவதற்கும் காவல் தெய்வம் என்பது ஆலயம் அமைப்போரின் கருத்து.

மார்த்தாண்ட வைரவர், ஆனந்த வைரவர், பிரமோத வைரவர் என்று பல மூர்த்தி பேதங்களையிட்டு சிவாகமம் கூறுகிறது. இவர்கள் மணித்துவீப ஆலய காவலர்கள் என்றும் கூறுவதால் பிற்காலத்தில் வைரவரைக் காவல் தெய்வமாக கருதியிருக்கலாம். ஊழிக்காலத்தில் சிவ ஆஞ்ஞையினால் வைரவர்தான் அழித்தல் தொழிலைச் செய்பவர் என்பது சாஸ்திரம். பஞ்ச கிருத்தியங்களும் சிவ ஆஞ்ஞையினால் நிகழ சிவம் சாட்சி மாத்திரையாய் இருப்பது. ஊழிக்காலத்தில் அது ஒன்று தான் அழியாமல் இருப்பது. புவனங்களைத் தோற்று விப்பதும் அதுவேதான்.

திருக்கோணமலைப்பெருமான் திருக்கோணமலை மாவட்டத்திற்கு மாத்திரமல்ல சைவமக்கள் வாழும் அகில உலகத்துக்கும் அவர் பெரிய பொருள். அருட்கண்ணால் அனைத்தையும் நடத்திக் கொண்டிருப்பவர். வரலாற்றுக்கு இப்பாலும் அப்பாலும் அவருடைய அருளாட்சி நடை பெற்றுக் கொண்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி. 1624 ஆம் ஆண்டு போர்த்துக்கீசர் திருக்கோணேஸ்வரத்தை அழித்த பின்பு டச்சுக்காரருடைய ஆதிக்கம் திருக்கோணமலையில் தொடர்ந்து இருந்ததினால் சைவப் பெருங்குடிமக்கள் அந்நியரின் மதமாற்றத்தை விரும்பாமல் மறைமுகமாக சிவவழிபாட்டை மேற்கொண்டார்கள். இதனால் வீடுகளிலும் பொது இடங்களிலும் ஆல், அரசு, வேம்பு போன்ற புனிதமான மரங்களின் அடியிலும் சூலத்தை வைத்து வழிபட்டு வந்தார்கள். இது வைரவ வழிபாடாக நிகழ்ந்து வந்தது.

கோணேசப் பெருமானது திருவடிகளே தஞ்சமெனச் சரணடைந்து வாழ்ந்த பக்தர்கள் பிற்காலத்தில் திருக்கோணமலையில் வைரவருக்குக் கட்டிய கோயில்களை எல்லாம் ஞான வைரவர் கோயில் என்றே கூறி வழிபட்டு வருகிறார்கள். ஞானமே வடிவமான கோணேஸ்வரரை வழிபடும் மக்கள் வைரவரையும் ஞான வைரவர் என்று வழிபடுகிறார்கள். இதனால் பலியிடும் வழக்கம் திருக்கோணமலையில் எந்தக்கோயில்களிலும் இல்லை. வைரவ கோயில்களில் நடைபெறும் பூஜை வழிபாட்டு நிகழ்வுகளால் இதைக் கண்கூடாகக் காணலாம். திருக்கோண மலை மாவட்டத்திலிருக்கும் நான்கு வைரவ கோயில்களைப் பற்றி இனிக் கவனிப்போம்.

卐



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலையூற்று
# ஸ்ரீ ஞானவைரவர் கோவில்

திருக்கோணமலை கண்டி வீதியில் அனுராதபுரச் சந்திக்குத் தெற்குப்பக்கமாக இருப்பது பாலையூற்றுக் குடியேற்றக்கிராமம். அனுராதபுரம் சந்தியிலிருந்து தெற்கே செல்லும் வீதி வழியாகச் சென்று இவ்வாலயத்தை அடையலாம்.

புதிய குடியேற்றக் கிராமங்களில் குடியேறும் மக்கள், தங்கள், தங்கள் வழிபாட்டுக்கென வழிபாட்டுத்தலங்களை அமைப்பது பண்பாட்டு மரபு. அந்தவகையில் அங்கு குடியேறிய இந்துக்கள் இந்த ஞானவைரவர் கோயிலை அமைத்தார்கள். வைரவர் காவல் தெய்வம் என்ற காரணத்தால் சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன் கொட்டில் கோவில் கட்டிச் சூலத்தை வைத்து வழிபாடு செய்து வந்தார்கள். காலக்கிரமத்தில் இது கற்கோயிலாகக் கட்டப்பட்டது.

இது ஒரு மடாலயம். கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபங்களைக் கொண்ட இவ்வாலயத்தின் கற்பக்கிரகத்தில் வைரவரின் சிலாவிக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. சதுர்ப் புஜங்களையுடைய வைரவ மூர்த்தியின் வலக்கரங்கள் இரண்டிலும் சூலமும், உடுக்கும், இடக்கரங்கள் இரண்டிலும் பாசமும், கபாலமும் உடையவராகக் காட்சியளிக்கிறார். சதுர் வேதங்களாகிய நாய் வாகனத்தோடு பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறார்.

அர்த்தமண்டபத்தின் இடப்பக்க மேடையில் சூலமும் வழிபாட்டுக்கு வைக்கப்பட்டிருக்கிறது. மகாமண்டபம் தெரிசன மண்டபமாகப் பயன்பட்டு வருகின்றது. மகாமண்டபத்தின் ஈசான மூலையில் மணிக்கோபுரம் காணப்படுகிறது. ஆலயத்துக்கு எதிரே சற்றுத் தூரத்தில் பிரார்த்தனைகள் பிரசங்கங்கள், கலை நிகழ்ச்சிகளை நடத்த அழகிய பெரிய மேடை அமைக்கப்பட்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியேற்ற வாசிகளில் ஆசாரசீலர் ஒருவரால் ஆலய பூசைகள் நடைபெற்று வருகின்றன. தைப்பூசம், சிவராத்திரி, வைகாசிப் பொங்கல், நவராத்திரி, திருவெம்பாவை முதலிய விசேஷ பூசைகளும் நித்திய பூசையும் ஆகம முறைப்படி நடைபெற்றுவருகிறன. தைப்பூசம், நவராத்திரி பூசை மூன்று நாட்களுக்கும், திருவெம்பாவை பத்து நாட்களுக்கும் விசேட அலங்கார பூசைகளாக நடைபெற்று வருகிறது.

திருவெம்பாவை முடிவில் மாரியம்மனுக்கு அன்ன ஊஞ்சலும் நடைபெறும். இவ்வாலயத்துக்கென எழுதப்பட்ட ஊஞ்சல் பாடல்களும் இருக்கின்றன. ஆனி உத்தரத்தில் கும்பாபிஷேக தினத்துக்கு ஸ்நபன அபிஷேகமும் நடைபெற்று வருகின்றது. நவராத்திரிக் கொலு மூன்று நாட்களுக்கு நடைபெற்று ஆயுத பூசையன்று பொங்கலும் நடைபெறுகிறது. சிவராத்திரிப் பூசைகளின் முடிவில் குளிர்த்திப் பூசை நடைபெறும்.

கதிர்காமத்திலிருந்து சந்நியாசி ஒருவரால் கொண்டுவரப்பட்ட பஞ்சலோகத்தினாலான அழகிய வேலும் இவ்வாலயத்தில் பூஜைக்கு வைக்கப்பட்டிருக்கிறது. கதிர்காம உற்சவத்தைத் தரிசிக்கச் செல்லும் பாத யாத்திரிகர்களுக்கு இவ்வாலயத்தில் அன்னதானம் நடைபெற்று வருகிறது.

செட்டிமார் பரம்பரையினரால் பராமரிக்கப்பட்டு வரும் இந்த ஞான வைரவர் ஆலயத்துக்கு தற்போது பேச்சிமுத்துச் செட்டியாரின் மகன் நவரெட்டினம் (ரவி) என்பவர் பூசகராக இருந்து அரும்பணி ஆற்றி வருகிறார்.

卐



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உவர்மலை
# ஞானவைரவர் கோவில்

''கோயில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்'' என்பது பழமொழி. திருக்கோணமலையின் பல இடங்களில் குடியேற்றத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. திருக்கோணமலைத் துறைமுகத்தை அரண் செய்து கொண்டிருக்கும் மலைகளில் ஒன்று உவர்மலை. குறிஞ்சியும் மருதமும் மயங்கும் அழகிய மலைத் தொடர். இங்கு குடியேறிய மக்கள் பல வழிபாட்டுத் தலங்களை ஆக்கியுள்ளார்கள் அப்படியான தலங்களில் ஒன்று ஞான வைரவர் கோவில்.

உவர்மலையில் குடியேறிய அன்பர் ஒருவர் தமது வழிபாட்டுக்கென ஒரு வேப்பமரத்தடியில் கொட்டில் கோவில் அமைத்து அதில் காவல் தெய்வமாகிய வைரவரை வழிபடும் ஆர்வத்தினால் சூலம் ஒன்றை வைத்து வழிபட்டு வந்தார். அங்கு குடியேறிய ஏனையோரும் இந்த வைரவரை வழிபடத் தொடங்கினார்கள். காலக்கிரமத்தில் அது மக்களின் பொது வழிபாட்டுத் தலமாக மாறியமைந்தது. எனவே அங்குள்ள மக்களெல்லாம் சேர்ந்து கொட்டில் கோவிலைக் கற்கோவிலாகக் கட்டி எழுப்பினார்கள்.

மடாலயமாக விளங்கும் இந்த ஞானவைரவர் கோவில் கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், வசந்தமண்டபம், தெரிசன மண்டபங்களை உடைய அழகிய சிறிய கோவில். இப்போ மணிக்கோபுரமும் கட்டப்பட்டிருக்கிறது.

கற்பக்கிரகத்தில் சதுர்ப் புஜங்களையுடைய ஞான வைரவப்பெருமான் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றார். வைரவர் வலக்கரங்களில் உடுக்கும் சூலமும், இடக்கரங்களில் பாசமும், கபாலமும், தாங்கி அருள்பாலித்துக்கொண்டிருக்கிறார். சதுர் வேதங்களும் நாய் வாகனமாக வைரவரைத் தாங்கி நிற்கின்றது. மகாமண்டபத்தின் வலப்பக்கமேடையில் பிள்ளையாரும், இடப்பக்க மேடையில் பாலமுருகனும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றனர். வசந்த மண்டபத்தில் மனோன்மணி அம்பாள் எழுந்தருளி மூர்த்தியாக இருக்கின்றார். மணிக்கோபுரத்துக்கு அருகிலே ஈசான திக்கில் நாகதம்பிரான் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பெருந்தெரு
# ஸ்ரீ ஞான வைரவர் கோவில்

இவ்வாலயம் திருக்கோணமலைப் பட்டணத்தின் மத்தியில் பிரதான வீதியிலுள்ள விக்கினேஸ்வர மகா வித்தியாலயத்துக்கு அருகில் அமைந்திருக்கின்றது.

சுமார் 150 வருடங்கட்கு உட்பட்டகாலப் பகுதியில் தோற்றுவிக்கப்பட்ட இவ்வாலயம் கடல் வணிகர்களின் காப்பிடமாக ஆரம்பகாலத்தில் இருந்தது. பருத்தித்துறையிலிருந்து கடல் மார்க்கமாகப் பண்டங்களை வத்தைகளிலும், உருக்களிலும் ஏற்றி வரும் வணிகர்கள் இவ்வாலயம் இருக்கும் இடத்துக்குச் சமீபமாகவுள்ள கடற்கரைத்துறைமுகத்தில (றேகு - சுங்கப்பகுதி) ஆறுமாதகாலம் நங்கூரமிட்டுத் தங்கியிருப்பார்கள். அடுத்த ஆறு மாத காலம் கால நிலைமாற்றம் காரணமாக இடமாற்றம் செய்து திருக்கோணமலைத் துறைமுகச் சுங்கப்பகுதியில் நங்கூரமிட்டுத் தங்கியிருந்து மீண்டும் இங்குள்ள பண்டங்களை ஏற்றிக்கொண்டு பருத்தித்துறைக்குச் செல்வார்கள். இந்த வணிகர்கள் தங்கள் வத்தைகள் உருக்களுக்கும், பண்டங்களுக்கும், கடற்பிரயாணத்துக்கும், காவல் தெய்வமாக இருந்து எங்களைக் காக்க வேண்டுமென்று நேர்த்தி வைத்து வைரவரை வழிபடுவதற்கு சூலத்தை வைத்து வழிபட்ட கொட்டில் கோயில் தான் இவ்வாலயம் என்று அறியக்கிடக்கிறது.

இங்குள்ள வணிகர்களுடன் பண்டமாற்று வியாபாரம் நடைபெற்ற இந்த இடத்தை இங்குள்ளவர்களே காலக்கிரமத்தில் வழிபாட்டுத் தலமாக மதித்துப் பயபக்தியுடன் பேணி வந்தார்கள். அக்காலத்தில் இவ்விடத்திலிருந்த அத்திமரத்தடியில் கொட்டில் கோவில் கட்டி பைரவ சூலத்தை வைத்து வழிபடத் தொடங்கினார்கள். வைரவ சுவாமியின் அற்புதச் செயல்களால் கவரப்பட்ட வணிகர்கள் வைரவருக்குக் கற்கோயில் கட்ட முற்பட்டார்கள். அவர்களுடைய விடாமுயற்சியால் தோன்றியதே இப்போதிருக்கும் கற்கோவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபங்களைக் கொண்ட இவ்வாலயத்தின் கற்பக்கிரகத்தின்மேல் விமானம் (தூபி) அமைக்கப்பட்டிருக்கிறது. கற்பக்கிரகத்தில் ஞானவைரவர் சிலா விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. மூலமூர்த்தி சதுர்ப் புஜங்களை உடையது. வலக்கரம் இரண்டிலும் உடுக்கும் சூலமும், இடக்கரம் இரண்டிலும் பாசமும், கபாலமும் காணப்படுகிறது. நான்கு வேதங்களாகிய நாய் வாகனத்துடன் காக்கும் கருணாமூர்த்தியாகக் காட்சி தருகிறார்.

அர்த்த மண்டபத்தின் வலப்பக்கமுள்ள மேடையில் சூலமும், இடப்பக்கமுள்ள மேடையில் நாகதம்பிரானும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது.

மகா மண்டபத்தின் வலப்பக்கமுள்ள மேடையில் பிள்ளையாரும், இடப்பக்கமேடையில் வீரபத்திரரும், பத்திரகாளியின் தாமிர விக்கிரகத் திருவுருவமும் (எழுந்தருளி) பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. தலவிருட்சம் அத்தி.

நித்திய பூஜை ஒருநாளைக்கு ஒருதரம் மாலையில் நடை பெறுகிறது. வெள்ளி செவ்வாய்க்கிழமைகளில் காலையிலும், மாலையிலும் பூஜை நடைபெற்று வருகின்றது.

தைப்பூசம், சிவராத்திரி, வைகாசிப்பொங்கல், நவராத்திரி, திருவாதிரைக்காலங்களில் நைமித்திய பூஜைகள் அபிஷேகங்கள் ஆகியன சிறப்பாக நடைபெற்றுவருகின்றன.

நவராத்திரி உற்சவ நிறைவுநாளின் விஜயதசமியன்று கும்பவிழாவும், வைகாசிப் பௌர்ணமியன்று பொங்கல் விழாவும் மிகச் சிறப்பாக நடைபெறுவதுண்டு.

ஸ்நபன அபிஷேகங்களை சிவாசாரியார்களாகிய பிரம்ம ஸ்ரீ யோகீஸ்வரக் குருக்களும், பிரம்ம ஸ்ரீ கு.சோமாஸ்கந்த ஐயரும் செய்து வந்தார்கள். அவர்களுடைய மறைவுக்குப்பின் வேதாகம மாமணி ஸ்ரீ. சோ. ரவிச்சந்திரக்குருக்களை வரவழைத்துச் செய்விக் கிறார்கள். ஏனைய பூசைகள் யாவும் வணிக பரம்பரையினரே செய்து வருகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதி நாட்களில் விநாயக மூர்த்திச் சாமியார் பூசைகளை நடத்தி வந்ததாகவும், அவர்வழித்தோன்றல்களாகிய வைரவிப் பிள்ளையும், சகோதரர் பரமுவும் ஆலயத்தைப் பரிபாலித்து வரும் காலத்தில் பரமுவின் மகன் இராசையா என்பவர் ஆகமமுறைப்படி பூசை செய்து வந்ததாகவும் அவரைத் தலைவராகக்கொண்டு சுப்பிரமணியம், சின்னராசா, நடராசா, கோணாமலை, பசுபதிப்பிள்ளை என்பவர்கள் கோயிலைப் பரிபாலனம் செய்து வந்ததாகவும் இப்போது கோணாமலை என்பவரின் மகன் வரதராசா பூசைசெய்து வருவதாகவும் அறியக்கிடக்கின்றது. கோணாமலையின் மகன் தங்கவடிவேல் என்பவரும், இராசையாவின் மகன் சோமசுந்தரம் என்பவரும் ஆலய பரிபாலனத்தில் அக்கறை செலுத்தி வருகிறார்கள்.

卐



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செக்கடி

# ஸ்ரீ ஞான வைரவர் கோயில்

கிழக்கு நோக்கிய வாயிலையுடைய இவ்வாலயம் திருக்கோணமலைப் பட்டினத்தில் வியாபார நிலையங்கள் நெருக்கமாயுள்ள மத்திய வீதிக்கருகில் அமைந்திருக்கிறது. செட்டிமார் பரம்பரையினர் இவ்வாலயத்தைப் பராமரித்து வருகிறார்கள்.

1882 ஆம் ஆண்டு இவ்வாலயம் இருக்கும் இடத்தில் செக்கு வைத்துத் தொழிலை ஆரம்பிக்கமுயன்ற போது நிலத்தின் அடியிலிருந்து ஒரு சூலம் கிடைத்ததாம். அந்தச் சூலத்தை அவ்விடத்திலிருந்த அரசமரத்தடியில் மேடைகட்டிப் பிரதிஷ்டை செய்து வழிபடத் தொடங்கினார்களாம். அந்த வைரவ சூலம் கிடைத்த நற்சகுனத்தினால் செக்காட்டும் தொழிலில் விரைவாக முன்னேற்றம் காணப்பட்டதாம். நம்பினவர்களைக் காக்கும் வைரவர் அவ்விடத்தில் வாழ்ந்த மக்களுக்கு நல்லருள் செய்த காரணத்தினால் வைரவருக்கு கற்கோயில் அமைத்து வழிபடத் தொடங்கினார்கள். இதனால் இது செக்கடி ஞானவைரவர் கோயில் என வழங்கி வருகிறது.

ஆரம்ப காலத்தில் ஆறுமுகம் செட்டியார் என்பவர் பூசை செய்து வந்தார். அவருக்குப் பின் அவருடைய மகன் பேச்சிமுத்து என்பவர் பூசை செய்து வந்துள்ளார்.

1933 ஆம் ஆண்டு இந்த வைரவர் கோயில் கட்டப்பட்டது. கற்பக்கிருகம் அர்த்தமண்டபம், மகாமண்டபங்களைக் கொண்டது. இவ்வாலயம் கற்பக்கிருகத்தின்மேல் விமானம் (தூபி) அமைக்கப் பட்டிருக்கிறது. மூலஸ்தான பீடத்தில் நிலத்திலிருந்து கிடைத்த முத்தலைச் சூலம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. அர்த்த மண்டபத்துத் தெற்குப்பக்க மேடையில் பிள்ளையாரும், சூலங்களும் வேலும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. வடக்குப் பக்கமுள்ள மேடையில் வைரவப்பெருமானின் தாமிர விக்கிரகமும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாரியம்மனின் விக்கிரகமும் எழுந்தருளி மூர்த்திகளாக இருக்கின்றன. தலவிருட்சம் அரசு. இந்த வைரவ மூர்த்தி சதுர்ப்புஜங்களை உடையவராகக் காட்சி தருகிறார். மூர்த்தியின் வலப்பக்கக் கரங்களில் உடுக்கும் சூலமும், இடக்கரங்களில் பாசமும் கபாலமும் காணப் படுகின்றன.

1975ஆம் ஆண்டு ஆனி உத்தரத்தில் இவ்வாலயத்தில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. நித்திய பூசையும் வெள்ளிக் கிழமைகளில் விசேட பூசைகளும் நடைபெற்று வருகின்றன.

சுமார் நாற்பது வருடம் பழைமை வாய்ந்த இவ்வாலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு 1995ம் ஆண்டு (முதற்) கும்பாபிஷேகம் நடைபெற்றது. காலைச்சந்தி, உச்சிக்காலம் சாயரட்சைப் பூசைகள் நித்திய பூசைகளாக நடைபெறுகின்றன. செவ்வாய். வெள்ளிக்கிழமைகளில் பொங்கல் பூசை நடைபெற்று வருகின்றது.

ஆகம முறைப்படி பூசைகள் நடைபெறும் இந்த ஞான வைரவர் கோயிலில் தைப்பூசம், சித்திரா பூரணை, சிவராத்திரி, நவராத்திரி, திருவெம்பாவை முதலிய நைமித்திய பூசைகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. தலவிருட்சம் வேம்பு. நினைத்தகாரியங்களை அநுகூலமாக நிறைவேற்றும் ஞான வைரவ சுவாமியை மக்கள் பயபக்தியோடு வழிபட்டுவருகிறார்கள். ஸ்ரீ சி. ஆனந்தசிவம் ஐயர் பூசைகளை நடத்தி வருகிறார்.

ஞானசிரோன்மணி பண்டிதர் சைவப்புலவர் ஆர். வடிவேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குவில் கிழக்கு கோணாவளை
# வைரவர் சுவாமி கோவில்

சிவநெறியும், செந்தமிழும், செழுமையுடன் திகழும் தமிழீழத்தில் பலராலும் கவரப்படும் யாழ் / மருத்துவக்கல்லூரி முன்பாக கோணாவளை வைரவர் சுவாமி கோவில் அமைந்துள்ளது. கொக்குவில் பதி பெரும் நிலப்பரப்பையுடையதால் கொக்குவில் கிழக்கு, கொக்குவில் மேற்கு என இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

## ஆலய வரலாறு

கொக்குவில் கிழக்கு பொற்பதி வீதியில் பிராமண வம்சத்தை சார்ந்த பல குடிகள் வாழ்ந்து வந்த காலத்தில், பிள்ளையான் ஐயர் என்பவர் தற்பொழுது வைரவ கோவில் அமைந்துள்ள நிலப் பரப்புடன் வடக்கு மேற்காகச் சேர்ந்துள்ள தோட்டக் காணியில் விவசாயம் செய்து வந்தார். காவல் தெய்வமாகிய வைரவப் பெருமான் தனது காணியில் கோவில் கொண்டிருக்க வேண்டுமென்ற பேரவாவோ அல்லது கனவில் தரிசனம் கண்டு உரைக்கப்பட்டாரோ யாமறியோம்.

இம்மெய்யன்பர் இற்றைக்கு 150 ஆண்டுகளுக்கு முன்னராக இங்கு கோவில் கொண்டிருக்கும் வைரவப் பெருமானை ''பூநகரி'' என்ற கிராமத்திலிருந்து இரத்தப் பலி கொடுத்து இங்கு வரவழைத்து கொண்டு வந்தனர் என்பதே பரம்பரைக் கதையாக, செவிவழக்காக, நாமறிந்த ஆலயத்தின் சிறப்பு வரலாறு. ''கோணாவளை'' என்ற சிறப்பு நாமமிடப்பட்ட இக்குறிச்சிப் பெயருடன் ''கோணாவளை வைரவர் சுவாமி கோவில்'' என்று இவ்வாலயத்திற்கு நாமம் சூட்டப்பட்டுள்ளது.

பிள்ளையான் ஐயர் தனது தோட்ட நிலப்பரப்பில் தென் கிழக்கு மூலைக்காணியில் ஓர் ஆலயம் அமைத்து பயபக்தியுடன் தீபம் ஏற்றி காலை மாலை நியமம் தவறாது பூசை செய்து வரலாயினர். அதன் பின், வைரவர் கடாட்சமும், திருவருட் பேறும் மேன்மேலும் பொலிவுற்றுத் திக்கெட்டும் பரவியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருக்குப் பின்னர் இவரது மக்கள் திரு. ஐயாத்துரை ஐயர், அவர் உடன் பிறந்த தம்பி திரு. சோமசுந்தர ஐயர் ஆகியோர் இவ்வாலயத்தைப் பாதுகாத்து பரிபாலித்து வந்தார்கள். சோமசுந்தரம் ஐயர் காலஞ்சென்ற பின்னர் அவர் மகன் திரு.பரமசாமிக் குருக்கள் இவ்ஆலயத்தைக் கையேற்றுப் பரிபாலித்து வந்தார். சிங்கப்பூரில் பரமசாமிக் குருக்களுக்கு ஆலய பூசகராக நியமனம் கிடைத்தமையால் தனது பூசை உரிமையை க. இரகுநாத ஐயருக்கு 16. 9. 1972 இல் ஒப்பந்த அடிப்படையில் கையளித்து விட்டு சிங்கப்பூர் சென்று விட்டார்.

எம்பெருமான் வழிக்கரையில் அமர்ந்திருந்து போவோர் வருவோர்களுக்கு எல்லாம் தன் அற்புதமான அருளை வாரி வழங்கி வரலாற்றுச் சிறப்புடையவராகி விளங்கிக் கொண்டிருக்கின்றார். இவரது அற்புதமான அருளை அனுபவத்தால் உணர்ந்த மெய்யடியார்கள் பலர். இவ்வாலயத்தைத் தரிசித்தவர்கள் உண்மையை உணர்வர். இவ்வாலயத்தின் அருள், தீபகற்பங்கள் யாவும் பரவி, புகழ் பூத்த ஆலயமாகத் திகழ்ந்து வந்துள்ளது. இரவு நேரங்களில் இவ்வாலய வீதியால் போய் வந்தவர்களுக்குக் காட்சி கொடுத்து மக்களின் மனதை அதிர வைத்து மெய் சிலிர்த்த பல சம்பவங்களை எம் முன்னோர் சொல்லக் கேட்டறிந்துள்ளோம். இப்படியான உண்மை அனுபவங்களைக் கேட்டறிந்த மக்கள் இரவு நேரங்களில் இவ்வீதியால் செல்வதில்லை. தன்னை நாடிவந்த மக்களுக்கும் அருள் பாலித்து அற்புதங்கள் பல புரிந்து வந்துள்ளார். தொழுவார்க்கிரங்கும் வைரவப் பெருமானின் கிருபாகடாட்சம் பக்தர்களிடையே நம்பிக்கையை ஊட்டியது.

மக்களுக்கு ஏற்படும் உடற் குறைபாடு, பிணி, குழந்தைகளுக்கு ஏற்படும் திடுக்காடு, யாவுக்கும் பூசகரால் விபூதி இட்டு பார்வை பார்க்கப்பட்டு, நூல் கட்டப்பட்டு வந்துள்ளது. பொருள்களைக் களவு கொடுத்தோர் வைரவப் பெருமானின் அருள் கடாட்சத்தையறிந்து ஆலயத்தை தரிசித்து நேர்த்தி வைத்து நூல் கட்டும் வழமை பல காலமாக நடைபெற்று வந்துள்ளது. இந்தவகையில் மலர்ந்த திருத்தலமே, கோணாவளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைரவர் சுவாமி கோவில். பெருமானின் அருட் பிரவாகம் அதிகரிக்கத் தொடங்கியது. மக்கள் வைரவரின் அருளை உணரத் தலைப்பட்டனர். வைரவப் பெருமானின் கடாட்சமும், திருவருட் பேறும் கிடைத்த மக்கள் அவரது திருவருளை உணரும்படி சில உண்மை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இவற்றில் சில சம்பவங்களை இவ்விடத்தில் நினைவு கூர்வது சாலப் பொருத்தமாகும்.

✱ யாழ் ஆனைப்பந்தி கிராமத்தில் அலுமாரியிலிருந்த பொருளை இழந்தவர். இவ்வாலயத்தில் நேர்த்தி வைத்து 24 மணித்தியாலத்திற்குள் அதே வீட்டிலிருந்தவரின் கையில் ''புலுமைச்சிலந்தி'' கடித்து உண்மையை வெளிக்காட்டினார்.

✱ இருபாலையில் வீட்டு நகையைப் பறி கொடுத்தவர் ஆலய பூசகரிடம் தனது கவலையைப் பிரஸ்தாபித்து, வைரவருக்கு நேர்த்தி வைத்து, நூல் கட்டி வீடு திரும்பினார். மறுநாள் தொலைந்த பொருள் இருந்த இடத்தில் காணப்பட்டது. சந்தேகிக்கப்பட்டவரின் வீடு தீப்பிடித்து எரிந்தது.

இப்படி பல அற்புதங்கள் செய்து தனக்கென ஒரு தனியிடத்தை அமைத்துக் கொண்டவர்.

வருடாவருடம் ஆனி மாதத்தில் பொங்கலோடு வேள்வியும் நடைபெற்று வந்தது. முதல் கிழமை விளக்கேற்று வைபவம் நடைபெறும். இது பொங்கல் இரண்டையும் அசம்பாவிதம் எதுவும் இல்லாமல் சிறப்பாகப் பக்தி சிரத்தையுடன் நடத்தி முடிப்பதற்கு வைரவப் பெருமானிடமிருந்து விடைபெற்றுக் கொள்வதாகும். இந்நிகழ்ச்சி மிக்க பயபக்தியுடன் நடைபெறும். அடுத்த சனிக்கிழமை முதற் பொங்கலும் வேள்வியும், அதற்கு அடுத்த சனிக்கிழமை இரண்டாவது பொங்கல் (எட்டாம் மடை) நடைபெற்று வந்தது.

பல ஊர்களிலிருந்தும் மக்கள் பங்கு கொண்டு நேர்த்திகளை பூர்த்தி செய்ய இவ்வாலயத்திற்கென்றே வளர்த்த கடா ஆடு, கோழி என்பனவற்றிற்கு பூமாலைகள் அணிந்து கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவார்கள். தற்பொழுது கொக்குவில் கிழக்கில் சாயி துர்க்கா அம்மன் கோயில் அமைந்துள்ள இடத்திலே வேள்வி நடை பெற்று வந்தது. உரும்பராய் காட்டு வைரவ கோயில், சுன்னாகம் ஐயனார் கோயில்களின் வருடாந்த வேள்விகளுக்கு சரிநிகராக இவ்வாலயத்திலும் வேள்வி நடைபெற்று வந்தது. காலப் போக்கில் ஆலயங்களில் உயிர் பலியிடுதல் தவறென உணர்ந்த மக்களால் வேள்வி நிற்பாட்டப்பட்ட பொழுது இவ்வாலயமும் இதைக் கடைப்பிடித்தது. ஆனால் பொங்கலைத் தொடர்ந்து கொண்டாடி வருகின்றனர்.

இவ்வாலயத்தைச் சூழ ஒருசில குடிகளே காணப்பட்டன. ஆகையால் இவ்ஆலயம் நன்றாக மக்களால் பராமரிக்கப்பட வில்லை. பழமையும் பெருமையும் வாய்ந்த இவ்வாலயம் சில ஆண்டுகளாக கவனிப்பாரற்ற நிலையில் இருந்தது. இவ்ஆலயம் சுண்ணாம்பினால் வடிவமைக்கப்பட்டிருந்தபடியால் ஆலயக் கட்டிடம் சீரழியும் நிலைக்கு எட்டியது. கர்ப்பக்கிருகத்தின் மேலுள்ள விமானம் மிக மோசமாக, காலத்தால் சிதைவுற்றுக் காட்சியளித்தது.

ஆன்மாக்களை உய்விக்க வழிகாட்டும் இறைவனுக்கு ஆலயம் அமைத்தலும், ஆலயத்தைப் புதுப்பித்தலும் பூசை முதலிய நித்திய, நைமித்திய கருமங்களைக் குறைவறச் செய்தலும் ''பதி நல்வினை'' என ஆகம நூல்கள் கூறுகின்றன. இவ்வாறான சிவப் பணியை சான்றோர் வரிசையில் மக்களின் மத்தியில் நன் மதிப்பைப் பெற்றவரும் சமூக சேவைகளில் தன்னை ஈடுபாடாக்கி தனது சொத்துக்களை பொது நிறுவனங்களுக்கு அன்பளித்தவருமான சிவபதமடைந்த சித்த வைத்தியர் அ. சின்னத்துரை அவர்கள் அயலவரின் ஆசியோடு 06. 07. 1969 (ஞாயிற்றுக்கிழமை) ஆலயத்தில் அங்குராப்பணக் கூட்டத்தைக் கூட்டினார். ஆலயத் திருப்பணி வேலைகளை முன்னெடுத்துச் செய்வதற் காகவும் ஆலயத்தைப் பரிபாலிக்கவும் பரிபாலனசபை ஒன்று அமைக்கப்பட்டது. 12. 09. 1969 (27. 08. 1969) வெள்ளிக்கிழமை மாலை 6.28 மணியளவில் பாலஸ்தாபனம் நடைபெற்றது. ஆகம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதிப்படி அருளும் அழகும் மிளிர வடிவமைக்கப் பேரவா கொண்ட திருப்பணிச்சபையால் 28. 01. 1970 புதன் காலை 6.00 மணியளவில் அத்திவாரக் கல் நாட்டப்பட்டது. உண்மையும், விசுவாசமும், பக்தியுமுடைய அடியார்கள் வைரவப் பெருமானுக்கு வெள்ளை வைரக்கற் கோயில் ஒன்றைக் காணவேண்டும் என பேரவாக் கொண்டு திருப்பணி வேலைகளுக்கான நிதி திரட்டும் நற்பணியில் ஈடுபட்டார்கள். பக்தர்கள் போதியளவு ஆதரவு நல்கினர். குறுகிய காலத்தில் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபங்களை கற்கோயிலாக அமைத்து 28. 01. 1972 (14. 01. 1972) வெள்ளி காலை 7.45-9.15 சுப நேரத்தில் திருவாதிரை நட்சத்திரத்தில் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் இனிது நிறைவேறியது. பரிபாலன சபையின் பக்தி மிகுசேவையால் திருப்பணி வேலைகள் நிதி வசதிக்கேற்பத் தொடர்ந்து நடைபெற்றன.

✱ 17. 03. 1974இல் அசையாமணிக்கு கோபுரம் பொலிவுடன் அமைக்கப்பட்டது.

✱ ஆலய மடப்பள்ளியும் அதனுடன் சேர்ந்த அறையும் வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி.வே.ஞானகுரு மகீதாவின் உபயமாக 16.04.1976இல் கட்டி முடிக்கப்பட்டது.

✱ திருவிழாக் காலங்களில் உற்சவ மூர்த்தியை கொலுவிருத்தி விசேட பூசைகள் நடைபெற வசந்த மண்டபத்தை பரிபாலனசபை 24. 08. 1981இல் நிறைவேற்றி முடித்தது.

வைத்தியர் அ. சின்னத்துரை அவர்கள் சிவபதமடைந்த பின்னர் 18.04.1979 இல் நடந்த பொதுக் கூட்டத்தில் திரு. ஐ. சண்முகம் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். செயலாளர் திரு. செ. சின்னத்தம்பி, பொருளாளர் திரு . பொ. கனக ரத்தினம் அவர்களின் கூட்டு முயற்சியால் நிருத்த மண்டபம், ஸ்தம்பமண்டபம் அமைப்பதற்கு 03.04.1985 (21.03.1985) திகதியில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெற்று, திருப்பணி வேலைகள் துரிதகதியில் முடிவடைந்து 01.09.1986 (16.08.1986) திகதியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூச நட்சத்திரத்தில் புனராவர்த்தன அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நிறைவேறியது.

1987ஆம் ஆண்டு தமிழீழத்தில் தொடங்கிய எதிர்பாராத வன்செயல்களால் நாட்டு நிலைமை சீர்குலைந்து மக்கள் புகலிடம் தேடி இடம்பெயர்ந்ததால் பரிபாலன சபை தானாகச் செயலிழந்து விட்டது. 14.08.1988 திகதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் அமரர் க.பரராசசிங்கம் தலைவராகவும் திரு.பொ.யோகலிங்கம் செயலாளராகவும் திரு.சி.பூபாலசிங்கம் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். பலமுறையாக இவ்வாலயக் கதவு திறக்கப்பட்டு ஆலயப் பொருட்கள் களவாடப்பட்டன. இழந்த பொருட்களை கண்டுபிடிக்க பல வழிகளைக் கையாண்டும் பலனளிக்கவில்லை. ஆகையால் ஆலயத்தின் பாதுகாப்புக்காக மகா மண்டபத்துக்கு சீமெந்துக் கூரை போட்டு கிழக்கு, தெற்கு வாசல்களுக்கு இரும்புச் சுருக்குக் கதவுகள் போடுவதற்கான திட்டம் ஒன்றைப் பரிபாலனசபை தீர்மானித்தது. இச்சபையின் அயரா முயற்சியாலும், கண்ணுறங்காப் பணிகளாலும் இத் திருப்பணி வேலைகள் யாவும் 07.12.1989ஆம் திகதி பூர்த்தியடைந்தது.

10524

உற்சவ மூர்த்தியின் வெண்கலச்சிலை பன்னெடுங்காலமாக மகா மண்டபத்தில் வைத்து வணங்கப்பட்டு வந்துள்ளது. அவருக்குத் தனிக் கோயில் ஒன்றை அமைக்க 30.01.1990இல் அத்திவாரம் இடப்பட்டது. சீமெந்து வேலைகள் 1991ஆம் ஆண்டில் முடிவடைந்தும் எதிர்பாராத நாட்டு நிலைமையால் மிகுதி வேலைகளை பூர்த்தி செய்ய முடியாத அவல நிலை தோன்றியது. வர்ணப் பூச்சு வேலைகளைப் பூர்த்தி செய்ய முடியவில்லை. 1994ஆம் ஆண்டு பண்டிகை வேலைகள் செய்யப்பட்டு சிற்பங்கள் வைத்து மெருகூட்டி வர்ண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு 10.02.1994இல் எழுந்தருளிக் கோயிலுக்கு கலசம் வைக்கப்பட்டு 11.02.1994 இல் விநாயகர், முருகன் சமேதரான சிலா விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டு மகா கும்பாபிஷேகம் வைரவப் பெருமானின் திருவருளால் இனிதே நிறைவேறியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிபாலன சபை

இவ்வாலயத்தைப் பாதுகாத்துப் பரிபாலிக்க யாருமற்ற நிலையில் ஆலயக் கட்டிடங்களும் அழியும் நிலையை எட்டியது. இக்காலத்தில்தான் அமரர் சித்த வைத்தியர் அ.சின்னத்துரை அவர்களின் தலைமையில் 06.07.1969ஆம் திகதி நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பரிபாலனசபை முதல்முதலில் அமைக்கப்பட்டது. இவர்களின் காலத்தில் ஆலயத்தை வைரக் கற்களால் அமைக்க பேரவாக் கொண்டு புனரமைப்பு வேலைகள் 28.01.1970 திகதி ஆரம்பமாகியது. இச்சபை ஆலய நிர்வாகப் பொறுப்பை ஏற்று நிர்வாகத்தை நன்கு பரிபாலித்து வந்தார்கள். ஆலயமும் புதுப் பொலிவைப் பெற்று ஆக்க பூர்வமான பணிகளைக் கண்டது. நாளடைவில் காலத்தின் மாற்றத்திற்கேற்ப ஆலயம் வளர்ச்சிபெற அளப்பரிய சேவையை ஆற்றினார்கள்.

வைத்தியர் அ. சின்னத்துரை அவர்கள் காலஞ்சென்ற பின்னர் 18.4.1979 இல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் திரு.ஐ.சண்முகம் தலைவராகவும் திரு. செ.சின்னத்தம்பி செயலாளராகவும் திரு.பொ.கனகரத்தினம் பொருளாளராகவும் தெரிவு செய்யப் பட்டனர். இவர்களின் காலப்பகுதியில் 3.4.1985 (21.03.1985) திகதி பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெற்று சபையின் விடா முயற்சியால் நிருத்த மண்டபம், ஸ்தம்ப மண்டபம் இவைகளை அமைப்பதற்குரிய ஆரம்ப வேலைகள் தொடங்கியது. வேலைகள் முடிவுற்று 1.9.1986 (16.08.1986) திகதியில் பூச நட்சத்திரத்தில் புனராவர்த்தன அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நிறைவேறியது. 1987ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட போர்க்கால சூழ்நிலையால் பரிபாலனசபை தானாகச் செயல் இழந்தது. ஆலயம் சிறிது காலம் பூசைகளின்றிப் பூட்டப் பட்டிருந்தது. 14.08. 1988 ஆம் திகதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் அமரர் க. பரராசசிங்கம் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு அவருடன் திரு.பொ.யோகலிங்கம் செயலாள ராகவும் திரு.சி.பூபாலசிங்கம் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். இச்சபையின் நிர்வாகத்தின் கீழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயத்திற்கென புதிய யாப்பு தயாரிக்கப்பட்டு 18.09.1988ஆம் திகதி நடைபெற்ற பொதுச்சபைக் கூட்டத்தில் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கியில் ஆலயத்திற்கென சேமிப்புக் கணக்கு 19.1.1989 இல் திறக்கப்பட்டது. இல. 25888. ஆலய நிர்வாகப் பிரமாணங்கள் அடங்கிய யாப்புடன் 14.12.1989இல் இந்து சமய இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் இவ்வாலயம் பதிவுசெய்யப்பட்டது.சபை ஆலயத்தை சீரமைத்து வருங் கால கட்டத்தில் இந்திய அமைதிப் படையினரின் அனர்த்தங்களால் சபை இயங்க முடியாமல் 26.02.1989இல் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் காலவரையறையின்றி சபையின் கூட்டங்கள் பின்போடப்பட்டன. இக்காலகட்டத்தில் தலைவர் க.பரராசசிங்கம் 31.01.1990இல் சிவபதமடைந்து விட்டார்.

1.04.1990 இல் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் திரு.சி.பரமநாதன் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். திரு.பொ.யோகலிங்கம் செயலாளராகவும் திரு.இ.சோதிநாதன் பொருளாளராகவும் சபைக்குத் தெரிவு செய்யப்பட்டனர். நாட்டில் நிலவி வந்த அனர்த்தங்களால் ஆலயத் திருப்பணி வேலைகளை துரிதமாக முன்னெடுக்க முடியவில்லை. 30.01.1990இல் உற்சவ மூர்த்திக்கென தனிக் கோயில் அமைக்க அத்திவாரம் இடப்பட்டிருந்த வேலைகள் 1990ஆம் ஆண்டு முடிவில் முடிவடைந்தது. வர்ணப் பூச்சு வேலைகள் முடிவடையாமல் 1994ஆம் ஆண்டு இவ்வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டன. 11.02.1994 (29.01.1994) திகதி வெள்ளிக்கிழமை காலை மகா கும்பாபிஷேகம் நடைபெற்று உற்சவ மூர்த்தி இக்கோயிலில் வைக்கப்பட்டது.

ஆலயந் தொடர்பாக தமிழீழக் காவல்துறையுடன் தொடர்பு கொண்டு ஆலய உண்மை நிலைப்பாட்டை எதுவித சந்தேகங்களுக்கும் இடமளிக்காமல் விளக்கினோம்.

ஆலயங்கள் அனைத்தும் தேசிய சொத்துக்கள் ஆக்கப்பட வேண்டுமென்ற கருத்துக்கள் ஓங்கிய இன்றைய காலகட்டத்தில் ஆலய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிபாலனம், பாதுகாப்பு அனைத்தும் சைவ மக்களின் உடைமையாக 01.09.1993ஆம் திகதியிலிருந்து ஆலய பரிபாலன சபைக்கு கைமாற்றம் செய்யப்பட்டது. ஆலய அமைதி பேணி அறவழி சார்ந்து பரிபாலனம் செய்த சபை வழக்குரைத்து கோவிலின் பொதுமையை நிலை நாட்டியது யாவரும் அறிந்ததே. ஆலயத்திற்கு பூசகர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கு உதயன் பத்திரிகை மூலம் 24.09.1993இல் அறிவித்தல் கொடுக்கப்பட்டிருந்தது. 25.09.1993இல் நடைபெற்ற நேர்காணலில் திரு.கௌ.உபேந்திரக் குருக்கள் தெரிவு செய்யப்பட்டார். இவர் 01.10.1993இல் இருந்து ஆலயப் பூசகராகக் கடமையாற்றினார். 12.12. 1993இல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் திரு.இ.சோதிநாதன் தலைவராகவும் திரு.பொ.யோகலிங்கம் செயலாளராகவும் திரு. யோ.சந்திரகுமார் பொருளாளராகவும் நியமிக்கப்பட்டனர். 23.05.1994இல் பூசகரின் தந்தையார் காலமாகிவிட்டபடியால் தகப்பனாரின் கோவில் பூசைகளை பொறுப்பேற்பதற்காக தன்னை சேவையில் இருந்து விலகிச் செல்ல சபையிடம் அனுமதி கோரினார். சபை அவரின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டது. பூசகரின் வெற்றிடத்துக்கு தற்காலிகமாக சேவை புரிந்த திரு.கு.சண்முகராஜசர்மா அவர்களை 01.07.1994ஆம் திகதியிலிருந்து ஆலயப் பூசகராக பரிபாலனசபை நியமனம் செய்தது.

30.10.1994இல் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் திரு.இ.சோதிநாதன் தலைவராகவும், பொ.யோகலிங்கம் செயலாளராகவும், திரு.யோ.சந்திரகுமார் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்களுடன்

உபதலைவர் திரு.சி.பரமநாதன்

உபசெயலாளர் திரு.சி. திருச்செல்வன்.

மற்றும் நிர்வாக உறுப்பினர்கள்:-

1. திரு.அ. சண்முகநாதன் 2. திரு.ச.இராசேந்திரன்
3. திரு.இ.இந்திரகுமார் 3. திரு.அ.கோபாலசிங்கம்

ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொதுக் கூட்டத்தில் சில திருத்தங்களுடன் அமைந்த ஆலயப் பிரமாணங்கள் (யாப்பு) சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. சில பிரிவுகளுக்கு திருத்தங்கள் தெரிவிக்கப்பட்டன. திருத்தங்கள் ஆராயப்பட்டு ஒருவருட காலமாக இருந்த பரிபாலனசபையின் ஆயுட்காலம் மூன்று வருட காலமாக நீடிக்கப் பட்டு சபை ஏகமனதாக அங்கீகாரம் வழங்கியது. வருடாந்த பொதுக் கூட்டம் வருடாவருடம் ஆவணி மாதம் 31ந் திகதிக்கு முன்னராக நடைபெற வேண்டும் என்றும் அக்கூட்டத்தில் ஆண்டறிக்கை வருடாந்த வரவு செலவுக் கணக்கறிக்கை சபையில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## உற்சவங்கள்

ஆலயத்திற்கு சிறப்பும் பெருமையும் தருபவை அங்கு நடைபெறும் பூசைகள். சித்திரை வருடப்பிறப்பு, வைகாசி விசாகம், ஆனி உத்தரம், ஆடிப்பூரம், ஆடி அமாவாசை, ஆவணிப்பூசத்தில் மணவாளக்கோலம், விநாயகர் சதுர்த்தி, நவராத்திரி, மானம்பூ, கந்தசஷ்டி விழா, ஐப்பசி வெள்ளி, தீபாவளி,சர்வாலய தீபம், திருவெம்பாவை, தைப்பொங்கல், தைப்பூசம், மகா சிவராத்திரி, பங்குனி உத்தரம், பிரதிமாதமும் பரணியில் அபிஷேகம் இவை யாவும் ஆகம விதிமுறைகளுக்கு அமைய நடைபெற்று வருகின்றன.

நைமித்திய பூசைகளில் சிறப்பிடம் பெறுகின்ற அலங்காரத் திருவிழா ஆண்டுக்கொருமுறை அழகு பொலிய அருள் பொழிய மக்கள் உள்ளம் உவக்க நடைபெற்று வருகின்றது. அலங்கார உற்சவம் தைத் திருவாதிரையைக் கடைசி நாளாகக் கொண்டு பத்து நாள் விழா ஆரம்பமாகி வெகு விமரிசையாக நடைபெற்று வருகின்றது. இவ்விழாக் காலத்தில் தெய்வீகப் பேருரைகள் பூசைகள் முடிய ஆலய மண்டபத்தில் நடைபெற்று வருகின்றன. பதினொராம் நாள் விசேட பூசை நடைபெற்று சுவாமி கிராம வீதியுலா வருகிறார். பன்னிரண்டாம் நாள் காலை வைரவர் மடை விசேடமாகக் கொண்டாடப்படுகிறது. வேள்வி இவ்வாலயத்தில் நிறுத்தப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் வருடாந்தப் பொங்கல் ஆனி பௌர்ணமியின் பின் முதல்வரும் வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணியளவில் தொடங்கி அடியார்களால் சிறப்புற நடாத்தப்பட்டு வருகின்றது. பொங்கலன்று ஆலயப் பூசைகளுடன் ஆலய வெளிக் கிணற்றடியிலிருக்கும் வைரவ சூலத்திற்கு மடைபரவி விசேட பூசைகள் முடிய மடைப் பொருட்கள் அனைத்தையும் அக்கிணற்றில் போட்டுவருவது அதிசிறந்த வழமையாகும். உற்சவ மூர்த்தி வீதியுலா வந்து இவ்விடத்தில் தரித்து நிற்கையில் இவ்வைபவம் யாவும் நிறைவேற்றப்படுகின்றன.

## *திருப்பணி*

*இறைவன் வல்லமையே சக்தி.*

*"எத்திறன் நின்றான் ஈசன், அத்திறம் அவளும் நிற்பாள்"* என்பதற்கிணங்க வைரவப் பெருமானின் அருட் சக்தியாக விளங்கும் காளிக்குத் தனிப் பெருங் கோயிலமைத்து காளியின் அருளாட்சி பெற சபை பேரவா கொண்ட வேளையில், அயலில் பன்னெடுங்காலமாக வாழ்ந்து இவ்வாலயத் திருப்பணிகளிலும் சிறப்புக்களிலும் கலந்து கொண்ட காலஞ்சென்ற இலகுப்பிள்ளை கணபதிப்பிள்ளை அவர்களின் குடும்பம் இக்கோவிலை வெள்ளை வைரக்கற்களால் அமைத்துத் தர முன்வந்துள்ளனர். சிற்பசாஸ்திரியால் ஆலயம் அமையும் இடம் குறிக்கப்பட்டு கற்கள் கொண்டுவரும் பணி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இப்பணி விரைவில் பூர்த்தியாக வேண்டுமென்ற உணர்வு வைரவர் அடியார்களின் உள்ளத்தில் காணப்படுகின்றது.

அலங்காரத் திருவிழா நாட்களில் வசந்த மண்டபத்தில் உற்சவ மூர்த்தியை தொடர்ந்தும் கொலுவிருத்தக் கூடிய பாதுகாப்பில்லை. ஆகையால் சீமெந்துக் கூரை போடப்பட்டு பண்டிகை வேலையுடன் இரும்புச் சுருக்குக் கதவு போட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவிழாக்காலங்களில் வழிபடுவோர் நிற்கமுடியாமல் மழை நீர் காற்றுக்கு அடித்து முழு மண்டபத்தையும் வெள்ளக்காடாக்குகிறது. இதற்குக் கற்சுவர் எழுப்பி மேள வாத்தியக்காரர் உபயகாரர் பண்ணிசையாளர் உபயோகிக்கக் கூடியதாக கட்டிடம் அமைக்கப்பட வேண்டும்.

தெற்கு மண்டபக் கூரையின் தீராந்தி வளைந்து இரும்புக் குழாயால் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. காலப்போக்கில் கூரை முழுமையும் பழுதடையும் நிலையில் உள்ளது. அதற்கு சீமெந்து வளை அமைப்பது அவசியமாக ஏற்பட்டுள்ளது. அத்துடன் தெற்கு வாசலில் சிறிய கோபுரம் ஒன்றை அமைத்து ஆலயத்தைச் சிறப்பிக்க வேண்டும்.

அடியார்கள் வேண்டுகோளை பூர்த்தி செய்ய நவக்கிரக மண்டபம் கட்டப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

## *பரிவார மூர்த்தி*

*விநாயகர்:*

*“விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்”*

விநாயகப் பெருமானுக்கு தனிக் கோயில் அமைக்க ஆலயத்தின் தென்மேற்கு மூலையில் யாழ் பல்கலைக்கழக கட்டிட ஒப்பந்தக்காரர் திரு.மனோகரன் அவர்கள் 1990ஆம் ஆண்டில் அத்திவாரத்திற்குரிய வேலைகளைப் பூர்த்தி செய்து சீமெந்துக் கற்களை அரிந்து ஆயத்தங்கள் செய்யப்பட்ட வேளையில் ஈழப்போர் தொடங்கியது. வேலைகள் யாவும் ஸ்தம்பித நிலையை அடைந்தன. அவர்களால் இத்திருப்பணி வேலைகள் செய்யப்படாவிடின் அவர்களின் சம்மதத்துடன் ஆலயப் பரிபாலனசபை இப்பணியைப் பூர்த்தி செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*முருகன் :*

*"ஒருதிரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகமுய்ய"*

என்றார் கச்சியப்ப சிவாசாரியார். விநாயகருக்குத் தனிக் கோயில் அமைக்கப்பட்டதும் முருகன் கோவிலும் வட மேற்கு மூலையில் நிர்மாணிக்கப்பட வேண்டியது ஆலய பரம்பரை - ஆகம விதிகளை ஒட்டியது. இத் திருப்பணியையும் பூர்த்தி செய்ய பரிபாலனசபை ஆவன செய்ய வேண்டும்.

## வாகனங்கள்

ஆலயத்திற்கு விதம்விதமாக வாகனங்கள் உருவாக்கப் பட்டுள்ளன. காலப்போக்கில் இன்னும் பல வாகனங்கள், இவ்வாலயம் காணும் என்பதே இச்சபையின் எதிர்பார்ப்பு.

தேவஸ்தான சபை கிடைக்கும் நிதியை ஒன்று திரட்டி காலத்துக்குக்காலம் பல திருப்பணி வேலைகளைச் செய்து வருகின்றது. சபையினர் மக்கள் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றனர். புதிய மகோற்சவங்களை ஆகம விதிப்படி ஆரம்பித்து வைரவப் பெருமான் அருளை மக்கள் யாவரும் அனுபவிக்க தங்களால் இயன்ற சகல முயற்சி களையும் எடுத்து வருகின்றனர். ஆலயம் புதுப்பொலிவு பெற்று பல ஆக்கபூர்வமான பணிகளைக் கண்டுள்ளது.

வைரவப் பெருமான் தன்னை நாடி வரும் மெய்யன்பர் களுக்குக் குறைகளைத் தீர்த்து அருட்பிரவாகத்தை சொரிந்த வண்ணம் திருவருளும் குருவருளும் வழங்குகின்றார். குற்றம் பொறுக்காத மூர்த்தி வைரவப் பெருமான். எனவே தான் பிரமனின் சிரசொன்றைக் கொய்தனர். அன்போடும் திரிகரண சுத்தியோடும் அவர் திருவடிகளை இறைஞ்சுவோமானால் வேண்டியன வெல்லாம் ஈந்தருளுவார்.

சுபம்.

*தலைவர் . க. சோதிநாதன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் / கொக்குவில் கோணாவளைப்பதி
# ஸ்ரீ நடனராஜ வைரவ மூர்த்தி
# திருப்பொன்னூஞ்சல்

## காப்பு

பிரணவனே ஐங்கரனே பிறையார் சென்னிப்
பெருமானும் சிவநடனாம் பிகையுந் தந்த
பெருமகனே கஜவதனப் பிரானே வேதம்
பேணியொரு மலைவரைந்த தேவா, ஞானப்
பொருணிறைகொக் குவில்கோணா வளையென்கின்ற
பொற்பதி வைரவமூர்த்தி பொலியும் ஊஞ்சற்
கருவளரும் கவிபுனையக் கருணைசெய்யும்
கணபதியே நின்திருத்தாள் காப்பதாமே.

## நூல்

வயந்தருபொன் னப்பனுட னம்மை வாழ்த்த
வாரணனும் குருகுகனும் மாலை சாத்த
வியன்வீர பத்திரனார் விருது பூக்க
விண்ணவரும் முனிவரரும் பணிகள் பார்க்க
அயன்திருமா லிந்திரன்பே ரணிகள் பூட்ட
அரம்பையர்க ளிசை பாடி யூஞ்சலாட்ட
நயந்தருகொக் குவில்கோணா வளையின் மேவும்
நடனவை ரவமூர்த்தி யாடீ ரூஞ்சல். 1

நீலப்பொன் மேனியில் வெண் ணிலவெறிக்க
நித்யமங் களவதனம் அருள்சுரக்க
சூலத்தி னோடுபர சுருக்குப்பாசம்
துலங்குதிருக் கரங்களினா லகிலங் காத்துப்
பாலொத்த மென்மொழிமா காளி பாகம்
பயிலவரு சுவானமிசை யினிதமர்ந்து
ஞாலக்கொக் குவில்கோணா வளையின்மேவும்
நடனவை ரவமூர்த்தி யாடீரூஞ்சல். 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவனமெல்லாம் சிங்காரப்பீடமாக
புனிதமறை யாகமங்கள் மாடமாக
சிவமலரும் புராணங்கண் மாலையாக
திருமலரும் கலைகள்பூஞ் சோலையாக,
தவமிருந்த தத்துவங்கள் மணிகளாக
தருமமெலாம் பொற்பாத அணிகளாக
நவமணிக்கொக் குவில் கோணா வளையின்மேவும்
நடனவை ரவமூர்த்தி யாடீரூஞ்சல். 3

மந்திரமே வடிவான வண்ணங்காட்டி
வருந்துமடி யார்களது வினைகளோட்டி
தந்திரமா சைவநெறி மாண்பு கூட்டி
தருவேத பூசனையின் பெருமைதீட்டி
வந்தபவ மறுக்கின்ற மருந்துமூட்டி
வகராதி யோகநிலைத் தேனீராட்டி
நந்தனகொக் குவில்கோணா வளையின் மேவும்
நடனவை ரவமூர்த்தி யாடீரூஞ்சல். 4

பால்வண்ண நீறொளிரும் தோள்களாட
பசுவண்ணப் பேறளிக்கும் தாள்களாட
நூல்விரவு பொன்மாலை மார்பிலாட
நுவலரிய செஞ்சடையெண் டிசையுமாட
கோல்பரவு படையாடக் குழைகளாட
குளிர்விழிக ளாடவருட் செவ்வாயாட
நால்வரின்கொக் குவில்கோணா வளையின்மேவும்
நடனவை ரவமூர்த்தி யாடீரூஞ்சல். 5

ஆகுவதற் குளம்கொண்டு தில்லைக்காளி
ஆர்ப்பரிக்கும் திருவாலங் காடுவந்து
தேடுவதற் கரியதிருப் பாதந்தூக்கி
சிகராதி ஊர்த்துவதாண் டவம்புரிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடுதவச் சுநந்தன் கார்க் கோடகன் காண்
கூத்தாடும் பசுபதியே கொடைமிகுந்து
நாடுயர்கொக் குவில்கோணா வளையில்மேவும்
நடனவை ரவமூர்த்தி யாடீரூஞ்சல். 6

வல்லானே யயன் சிரத்தை வலிந்து கிள்ளி
வானவரின் மலமறுத்துக் குருதியள்ளி
மல்லாரும் யாகபலி யேற்று வேண்டும்
வரங்கொடுக்கும் பூரணனே மறைகள் நான்கும்
சொல்லாமற் சொல்லுகிற சோதியானே
தொழுகோணாம் சரமெல்லாம் தோன்றியன்பு
நல்லூர்கொக் குவில்கோணா வளையின் மேவும்
நடனவை ரவமூர்த்தி யாடீரூஞ்சல். 7

கறைமிடற்றுப் பரம்பொருள்நீ காலன்வீழக்
காலாலே உதைத்தவன்நீ கருது மைந்து
நிறை தொழிலைப் புரிபவன்நீ நெடியவூழி
நிகழ்த்துபவ னீகொடுமை நீப்பவன்நீ
குறைவினையைத் தீர்த்தறத்திற் றொடுப்பவன்நீ
குவிந்திடுமா றாதாரத் ததிபன் நீயே
நறைமிகுகொக் குவில்கோணா வளையின்மேவும்
நடனவை ரவமூர்த்தி யாடீரூஞ்சல். 8

பாவணிசெய் திருமுறையிற் பயிலும் நாதா,
பக்தரது நெஞ்சகத்தில் பதிந்த பாதா
பூவணிசெய் வார்க் கினிக்கப் பழுத்த கோவே
புன்னெறியைப் போக்கவரும் கைலைத்தேவே
ஆவணிந்து மோனவெளி காண் கரும்பே
ஆனந்த வீடருளும் சிவப்பிழம்பே
நாவணிகொக் குவில்கோணா வளையின் மேவும்
நடனவை ரவமூர்த்தி யாடீரூஞ்சல். 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊனத்து நோயறுப்பீர் ஆடீரூஞ்சல்
உயிரெற்றும் பேயறுப்பீர் ஆடீரூஞ்சல்
ஈனத்து மிடி தவிர்ப்பீர் ஆடீரூஞ்சல்
இறைபணியே புரிவிப்பீர் ஆடீரூஞ்சல்
தானத்துத் தவந்தருவீர் ஆடீரூஞ்சல்
சதுர்க்காளி யுடன் வருவீர் ஆடீரூஞ்சல்
ஞானக்கொக் குவில்கோணா வளையின்மேவும்
நடனவை ரவமூர்த்தி யாடீரூஞ்சல். 10

## வாழி

போதமுயர் சிவாகமங்கள் பொலிந் துவாழி
புராணவிதி காசநெறி பூத்தினிதுவாழி
ஆதரவுத் தமிழுமடி யாரும் வாழி
அறம்பொங்கு மன்புநிதி பெருகி வாழி
ஓதரிய திருமுறைகள் பசுக்கள் வாழி
ஓங்குமகா காளித்தாய் கருணைவாழி
நாதன்கொக் குவில் கோணா வளையின் மேவும்
நடனவை ரவர் கழல்கள் வாழிவாழி.

ஆக்கியோன்:
அருட்கவி சீ. விநாசித்தம்பி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# யானை உரி போர்த்தது

சிவபெருமானுக்குப் பக்கத்தில் நின்ற அழகிய துளசி மாலையை அணிந்த திருமால் சிவபெருமானது திருவருளினாலே ஆண் உருக் கொண்டார். இவர் முன் மோகினி உருவமாக உலகெலாம் அளந்து இம்சித்தவர். இதைக் காணும் பொருட்டாக, பிரமதேவர்கள் முதலானோர் வந்தார்கள்.

''கடவுளர் யாரும் வந்து காலையி லங்க ணின்ற
முடிவறு முதல்வன் றன்னை முனிவொடு நோக்கி மீண்டுக்
கொடிய தோர் வேள்வியாற்றிக் கொல்லுறு மிவனை யென்னா
மடமை கொண் முனிவர் சூழ்ந்து மற்றோதீ மகத்தைச் செய்தார்

கந்த புராணம் ததீசி யுத்தப் படலம்

இந்த யாகம் அபிசாரக யாகம் எனப்படும். இதையியற்றும் போது சிவனார் செய்தவை. புலி வந்தது அதன் தோலை உரித்து அணிந்தார். மழு ஒன்று வந்தது அதைக் கையாயுதமாக வைத்துக் கொண்டார். மான் வந்தது அதைக் கையில் எடுத்துக் கொண்டார். பாம்புகள் தோன்றின அவைகளையும் எடுத்து அணிந்தார். சாரதர் (முனிவர்கள்) வந்தார்கள். பூதங்கள் வந்தன. வெண்டலை வந்தது அதையும் சடையில் அணிந்து கொண்டார். உடுக்கை வந்தது அதையும் ஒரு கரத்தில் கொண்டார். இன்னும் ஓர் யாகஞ் செய்ய அதிலே முயலகன் என்னும் பூதம் எழுந்தது. அனல் எழுந்தது அதன் மேல் ஓர் காலை வைத்தார். முனிவர்களின் யாகங்கள் பயனற்றவை ஆயின, முயலகனின் நெகிழ்ச்சியால் நடனம் ஆனது.

கடுக்கையு நதியும் பாம்புங் கலைமதிக் கொழுந்துஞ் சென்னி
முடித்தவன் பதத்தி லூன்று முயலகன் மெல்ல மெல்ல
வெடுத் தெடுத் தசைத்தலோடு மேதுவங் கதனை நோக்கி
நடித்தன னென்று நீங்கா நடம்புரி கின்றதேபோல்.

கந்த புராணம்

இவைகள் யாவையும் முடித்த பின்னர் எம்பெருமான் மீண்டும் மேருமலையை அடைந்தார். கயாசுரன் என்பவன் மேருமலையின்



பொதுசன நூலகம்
விசேட சேகரிப்புப் பகுதி
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட் சென்று பிரமதேவரை நினைந்து தவஞ் செய்தான். அவர் வெளிப்பட்டுத் தோன்றி என்ன வேண்டும் என்று கேட்டார். மாண்டிடாத பேராயுளும் ஆற்றலும் வேண்டுமென்றான். இந்த வண்ணம் வேண்டியளித்தமை ஆனால் சிவபெருமான் எதிரில் செல்லற்க, சென்றால் இவ்வரம் சிந்தும் என்றார். கயாசுரன் தேவர்களுக்கு துன்பஞ் செய்யத் தொடங்கினான்.

இந்திரனோடு சண்டை செய்து நால்மருப்பு யானை வாகனமாகிய பின்னர் ஐராவதத்தையும் துன்புறுத்தினார். சிவ பெருமான் எழுந்தருளியிருக்கிற காசியை அடைந்தார். அங்கு வந்த முனிவர்களையும் துன்புறுத்தி மணிகர்ணிகை என்னும் ஆலயத்துள் புகுந்தான். அங்கேயும் துன்பஞ் செய்தான். அன்றியும் அங்கு எழுந்தருளியிருக்கும் விசுவநாதப் பெருமானைச் சமீபித்தான். இதைக் கண்ட சிவன் கோபித்து முடி தொட நிமிர்ந்து நின்றார். தேவர்கள், முனிவர்கள் இதைக்கண்டு மயங்கினார்கள் பிரம்மா சொன்ன வார்த்தையை கயாசுரன் மறந்து விட்டான். கயாசுரனைத் தள்ளி வீழ்த்தி தலையைத் திருவடியால் மிதித்தார். இரத்தம் பிரவாகித்து ஓட உமாதேவியாரும் கண்டு கலங்கினார். இறவா வரம் பெற்றமையால் அக்கயாசுரனாகிய யானையின் தோலையுரித்து தோளிலே போர்த்து மறைந்தருளினார்.

## நரசிம்ம மூர்த்தியின் உடலைக்கிழித்தது

நரசிம்ம மூர்த்தியின் சரிதையை நினைக்கும் போது இரணியன், பிரகலாதன் ஆகியவர்களையும் நினைக்க வேண்டும். பிரகலாதன் இரணிய கசிபு குமாரன். இளமையில் ஆசாரிய புத்திரனாகிய சண்டனிடத்தில் கல்வி கற்க தந்தையால் ஏவப்பட்டு ஆசாரியன் கற்பித்தவாறு ஓதாமல் ஹரிநாமம் ஓதினான். அரசன் குமரனிடத்தில் கோபித்து ஆயுதம் முதலியவைகளை உபயோகித்தும், அக்கினியில் தள்ளியும், நாகங்களை விட்டுக் கடிப்பித்தும், யானையை ஏவவிட்டும், கோபுரத்தில் இருந்து தள்ளியும், கடலில் அமிழ்த்தியும், சம்மட்டியால் அடித்தும், இம்சித்தும், அக்குமாரன் முன்போல ஹரிநாமத்தை உச்சரித்துக் கொண்டே இருந்தான். தந்தையாகிய அரசன் கோபித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் தேவன் எங்கிருக்கிறார் என்று கேட்க எதிரில் உள்ள தூணைக் காட்டினான். தூணை உதைக்க தூணிலிருந்து வெளிவந்த நரசிங்கத் திருவுருவை அவனுக்குக் காட்டி தந்தையை உயிர் போக்குவித்தான். விஷ்ணு மூர்த்தியைத் தரிசித்த பின்னர் அசுரரைக் கொல்லாமலும் மற்றையோரைப் பகைக்காதவருமாய் இருக்க வரம் பெற்றார். பின்னர் இடும்பி ஒருவரால் சபிக்கப்பட்டு திருமாலுக்கு எதிரியானான். அவருடன் சண்டை செய்து தோற்று நல்லறிவு பெற்றான்.

நரஹரி இரணியனைக் கொன்ற விஷ்ணு மூர்த்தியின் திருவுரு. இவர் சிரம் சிங்கவுருவாகவும் மற்றைய தேகம் மனிதவுருவுங் கொண்டு தம்மை துதித்த பிரகலாதன் பொருட்டுத் தூணில் தோன்றி தேவரைத் துன்புறுத்திய அவ்வசுரனைக் கொன்று கோபமடங்காது நின்று, தேவர் வேண்டுகோளால் இலக்குமியை அடைய கோபம் நீங்கி பிரகலாதனை அனுக்கிரகித்தவர். இவர் கோபங் கொண்ட காலத்தில் சரபவுருக் கொண்ட சிவ மூர்த்தியால் தோல் உரியுண்டு கோபமடங்கினார் என்பர். சைவர் அச்சாபத்தை வெல்ல நாராயணப் பக்ஷியாய் விஷ்ணு வந்தார் என்பர்.

நரஹரிதாசர் திருமாலிடம் அன்பு பூண்டவராய் திருமால் கொண்ட பல அவதாரங்களையும் நாடகமாக நடித்து வருபவர். இவரின் சீடர் இவர் கொண்ட வேடத்திற் கிணங்க தாமும் வேடங் கொண்டு நடிக்கையில் பிரகலாதன் இரணியன் முன் விஷ்ணுமூர்த்தியின் சர்வவியாபக நிலை கூற, இரணியன் கோபித்து இந்தத் தூணிலும் திருமால் இருப்பாரோ எனக் கோபத்துடன் இம்சிக்க அதில் நரசிங்க வேடங் கொண்டிருந்தவனது உடலைப் பிளந்து மாலையிட்டனர். இவைகளை நரசிங்க புராணம் விரிவாகக் கூறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நரசிங்க, சரப அவதாரங்கள்

*சிவமஹாபுராணம் - முதற்பாகம்.*

தன்னிலும் மிக்க கடவுளே இல்லையென்று இனிமேல் வருவதையறியாமல் மிகவுஞ் செருக்குற்ற **ஹிரணியன்**, ''அப்படி இந்தத் தூணில் **ஹரி** கோபத்தால் கொதித்தெழுந்து கையில் இருந்த கத்தியால் ஓங்கி தூணை வெட்டினார். பெரிய இடி விழுந்தது போன்ற ஓர் சத்தம் உண்டாயிற்று. உடனே அந்தத் தூணில் இருந்து விஷ்ணுமூர்த்தி சந்தியா காலத்தில் உக்கிரமான கோபத்துடன் தைத்திரியர்கள் அனைவருமே அஞ்சத் தக்க உருவத்துடன் அவதரித்தார். உருவம் பாதி சரீரம் சிங்க வடிவானதும், பாதி சரீரம் மானுட வடிவமாகவும் உள்ள நரசிங்க வடிவத்துடன் உள்ளது. இதைக்கண்ட யாவரும் பயந்தார்கள். அவர் மூச்சினால் அசுரர்கள் யாவரும் அழிந்தார்கள். ஹிரணியன் ஒரு முகூர்த்தம் பார்த்து நரசிம்ம உருவம் கொண்ட ஹரியோடு சண்டை செய்தான். இது தான் தக்க முகூர்த்தம் என அறிந்த விஷ்ணுமூர்த்தியானவர் தூணில் வந்த துவாரத்தின் வழியாக தனது தொடையைப்புகுத்தி அதிலே ஹிரணியனை வைத்து நகங்களினால் கிழித்தார். நரசிங்கமூர்த்தி, இரணிய கசி பனுடைய இரத்தத்தில் ஒரு துளி கூட கீழே சிந்திச் சிதறாதபடி வாயை வத்து உறிஞ்சினார். இன்னும் உக்கிரம் மேலிட்டது. இதைக் கண்ட தேவர்கள் சிவனை வணங்கி நடந்தவற்றைக் கூறினர். சிவபெருமான் ''அமரர்களே, நீங்கள் பயப்படாதீர்கள்'' என்று கூறி அவர்களை அனுப்பிவிட்டு இருசிரமும் இணையில்லாத சிறகுகளும் கூரிய நகமுமுடைய எட்டுக் கால்களும், கடுங் கோபமும் நெடிய வாளும் பேரிரைச்சலுங் கொண்ட **சரபத்** திருவுருவத்துடன் நரசிங்கத்தையடைந்து இடிமுழக்கம்போலக் கர்ஜித்து உதிர வெள்ளம் ஊற்றெடுத்தோடச் சிங்கச் சிரத்தையும் கைகளையும் அறுத்துத் தள்ளி மேலே உட்கார்ந்து சிங்கத்தின் சர்மத்தை உரித்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்வை யாக்கிக் கொண்டு வெள்ளி மலையை அடைந்து எழுந்தருளி இருந்தார். விஷ்ணு பழைய உணர்வைப்பெற்று சிவபெருமானைப் பூஜித்து தேவர்களும் முனிவர்களும் கேட்கும்படி நரசிங்கபுராணத்தை ஓதி வைகுந்தம் அடைந்து எழுந்தருளியிருந்தார் என்பதாகுக.

கடம்பவனப் புராணம்

*கருதரிய லரிதரைபர னெற்றி யிற்றோன் றிச்சூல கபாலமேந்தி*
*வருபிரளயஞ் சுவற்றிப் பயிரவனாய ண்டத்து வங்கண்மாற்றி*
*யரிசரும கஞ்சு கியாய் வேதவெகி னூர்து முன்போல வுண்டாக்கி*
*யிருமை பெறக் காத்தருங் கேத்திரபாலன் றிருத்தா ளேத்தல்*
*செய்வோம்.*

*(சிங்கத்தின் சருமமுரித்தது குறிப்பிடத்தக்கது)*

卐



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# காசியின் தனிச்சிறப்பு

பிரணவத்தை ஓதுதல் சிறந்த பலனைத்தரும். முறைப்படி நன்கு உணர்ந்து பிரணவத்தை ஓதுதல் அசுவமேத யாகம் செய்த பலனைக் கொடுக்கும். நாவினால் எடுத்துச் சொல்லக்கூடாத பாபங்களைக்கூட, கொம்பிலிருக்கிற பழத்தைக் காற்று கீழே உதிர்ப்பது போல பிரணவம் ஒழித்து விடுமாம்.

மற்ற தேவர்களை வாக்கினால் துதித்து வணங்கினால் அவர்கள் அதனால் மகிழ்ந்து முன்வந்து வரத்தினை நல்குவர். பிறையணிந்த பிஞ்ஞகனை வணங்கித் துதித்திட்டால் அனைத்து தேவர்கள் தரும் பலனையும் அவரே தந்திடுவார். அத்தோடு ஒழிவிலாத முக்தியையும் அளிப்பார்.

ஆகவே, நன்கு அறிந்த கற்றோர்கள் தங்கள் அந்தியக்காலத்தை உணர்ந்து, காசி ஷேத்திரத்தை நாடிச்சென்று, அங்கே தங்கி கங்கையில் நீராடி, பிரணவம் ஜபித்து, ஈசன் திருவடிகளை ஒரு கணமும் மறக்காது தியானித்து பிறவாப் பேரின்ப வீட்டை அடைவர்.

காசியின் மகிமை அனந்தம், ஆயிரம் ஆண்டுகள் சொன்னாலும் நேரம் போதாது.

முன்னர் ஈசன் மலைமகளாய், பர்வதராஜனுக்குப் புத்திரியாய் பிறந்த உமையை மணந்துகொண்டு அவளுடன் காசிநகர் சென்றார். அங்கே அவிமுகதம் என அழைக்கப்படும் லிங்கத்தை பக்தர்கள் வழிபடும் நிமித்தம் பிரதிஷ்டித்தார். பின்னர் தேவியுடன் பக்கத்திலிருந்த பூங்காவிற்குச் சென்றாராம். நறுமணம் வீசும் வாசமலர்ச் செடிகளையும், சுவை மிகுந்த கனிகளைத்தரும் மரங்களையும் ஏராளமாகக் கொண்டிருந்த அப்பூங்காவில் ஈசனுடன் மகிழ்ந்து அமர்ந்திருந்த தேவி அவரைப்பணிந்து, ''பிரபோ, இத்தலத்தின் மகிமையைப் பற்றியும், இங்கு செய்யப்படும் தவத்தைப்பற்றியும் எனக்குக் கூறவேண்டும்'' என்று கேட்கவே ஈசனும் காசி க்ஷேத்திரத்தின் விசேஷத்தை தேவிக்கு எடுத்துச் சொன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல் சூழ்ந்த இவ்வையகத்தில் காசியைப் போன்று முக்தி தரும் தலம் வேறு ஏதும் இல்லை. பூலோகத்தில் மட்டுமல்ல. அமரர் உறையும் விண்ணுலகிலும், பாதாளத்திலும் கூட இதைப் போன்ற புண்ணியத்தலம் இல்லை. ஈசன் அத்தலத்தில் நீங்காது என்றும் உறைவதால் அவிமுக்தேச்வரம் என்ற பெயரும் அதற்கு உண்டு. ஆகவே, முற்றும் அறிந்த மகான்கள் தங்கள் வினைகள் அனைத்தும் ஒழிந்து முக்தியைப் பெறுவதற்காக, அங்கு வந்து திருநீறணிந்து ஈசன் திருவடிகளைச் சேவித்து உறைகின்றனர்.

நைமிசாரண்யம், புஷ்கரம், கங்காத்வாரம் போன்ற புண்ணிய ஸ்தலங்கள் பாப வினைகளைப் போக்கி அருள் செய்கின்றன என்றாலும், காசியைப் போன்று முக்தியைத் தருவதில்லை. அவ்வியன் என்னும் முனிவர் காசியில் தங்கி பரமனை வழிபட்டு பேரின்ப வீட்டை அடைந்தார். யக்ஷர்களுடைய அரசனான குபேரனும் காசியில் ஈசனை ஆராதித்து நவநிதிகளை அடையப் பெற்று திசைக்காவலருள் ஒருவனானான். சம்வர்த்தன் என்பவன் காசியில் உறையும் கருணை வள்ளலைக் கண்குளிரத் தரிசித்துத் தொழுது அவர் திருவடிகளில் நீங்காத வாழ்வைப் பெற்றான். புராணங்களைப் பலரும் அறியத் தகுந்த வகையில் அருளிய வியாசமுனிவரும் காசியிலே தங்கி இறைவன் திருவருளைப் பெற்றார் மாயோன், நான்முகன், அக்கினி, சூரியன், சந்திரன், இந்திரன் மற்றுமுள்ள தேவர்களும், முனிவர்களும் அங்கு தங்கி ஈசனை வழிபட்டு அவர் திருவருளைப் பெறுகின்றனர்.

விஷய சுகங்களில் ஆசைகொண்டவரும், புலன்களை அடக்கி மாதவம் செய்தவரும் காசியிலே இறப்பாரேயாகில் பேரின்ப முக்தியை அடைவர்.

காமதேனுவும் காசிக்ஷேத்திரம் வந்து ஈசனை லிங்கத்திலே ஆராதித்து பேறுபெற்றது. அதனால் பிரதிஷ்டிக்கப்பட்டு வழிபாடு செய்யப்பட்ட லிங்கம் கோப்பியேச்சுவரர் என்று அழைக்கப் படலாயிற்று. அந்த இடம் கோப்பிரேக்கம் என்ற பெயர் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமன் கபிலாகாரம் என்ற குளக்கரையில் ஓர் லிங்கத்தை பிரதிஷ்டித்து வழிபட்டார். அந்த லிங்கம் ரிஷபத்துவசன் என்ற பெயருடன் விளங்கலாயிற்று. பத்திரோதயம் என்ற தடாகத்தின் கரையில் மற்றொரு லிங்கத்தை அமைத்து அதை வழிபடும் ஏற்பாடுகளில் இருக்கிறார் பிரமன். அவ்வமயம் மாதவன் அந்த லிங்கத்தை விருப்பத்தோடு தாம் எடுத்து, தம் கையால் பிரதிஷ்டித்து வழிபட்டார். அதைக் கண்ட மலரோன் கோபமுற்று, ''அச்சுதா, இந்தக் காரியம் சரிதானா? நான் வழிபட ஆசையுடன் வைத்திருந்த லிங்கத்தை எடுத்து பிரதிஷ்டை செய்துவிட்டீர்களே'' எனக் கேட்டார்.

''நான்முகா, வருந்த வேண்டாம். இந்த லிங்கம் நான் பிரதிஷ்டித்ததாக இருந்தாலும் நீ பிரதிஷ்டித்ததாகவே உன் பெயரால் இரண்ய கர்ப்பேச்சுவரர் என்று விளங்கட்டும்'' என்று அருளினார்.

பின்னர் நான்முகன் ஈசனை வழிபட வேண்டும் என்ற ஆவலினால் வேறு ஒரு லிங்கத்தைப் பிரதிஷ்டித்து வழிபட்டார். பிரமனுடைய விருப்பத்தின் பேரில் லிங்கம் அமைக்கப்பட்டதால் அதற்கு இச்சுவலினேச்சுவரர் என்ற பெயர் ஏற்பட்டது.

ஒரு சமயம் தேவி அருகிலுள்ள உத்தியான வனத்திலே பந்து விளையாடும் போது புலி உரு எடுத்த இரு யக்ஷர்கள் அங்கே வந்தனர். அவர்கள் தேவியை உணராமல் பயங்கரமாக உறுமி அச்சத்தை உண்டாக்க முயன்றனர். தேவி தன் கையில் வைத்திருந்த பந்தை அவர்கள் மீது எறிந்து இருவரையும் மடியச் செய்தாள். அந்தப் பந்து லிங்கரூபமாகி அங்கே இருப்பிடம் கொண்டது. அந்த லிங்கம் கத்துகேச்சுவரர் என அழைக்கப்படுகிறது.

தேவியைத் திருமகளாகப் பெற்ற இமவான் எம்பெருமானுக்கு அவளைத் திருமணம் செய்து கொடுத்தான். சகல லோகத்துக்கும் ஆதிகாரணவானான ஈசன் தனக்கு மருமகனாக வந்தது பற்றி அளவற்ற மகிழ்ச்சி கொண்டான் அவன். காசி க்ஷேத்திரத்தை அடைந்து புண்ணிய கங்கையில் நீராடி இறைவனை லிங்க ரூபத்திலே வழிபட்டு மகிழ்ந்தான் இமவான். பர்வதராஜனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபட்ட அந்த லிங்கத்துக்கு சைலேச்சுவரர் என்ற பெயர் நிலைத்தது. சங்கமவீச்வரர் என்ற பெயரில் அமைத்து பிரமன் வழிபட்ட மற்றொரு லிங்கத்தை வழிபட்டால். கொடிய கோபம் கொண்ட புலியைப் போன்று துன்பங்களைத் தரக்கூடிய பாதகங்களை ஒழிக்கும். அமரரும் அசுரரும் ஒன்று சேர்ந்து நறுமணம் கொண்டு அர்ச்சித்து வழிபட்ட லிங்கத்துக்கு மத்திமேசர் என்று பெயர். சுக்கிராச்சாரியார் காசி வந்து ஒரு லிங்கத்தை பிரதிஷ்டித்து பக்தியுடன் வழிபட்டு ஈசன் திரு அருளைப் பெற்றார். அவரால் பூஜிக்கப்பட்ட லிங்கத்துக்கு சுக்கிரேச்வரர் என்று பெயர் வழங்கலாயிற்று.

சம்புகேசன் என்ற அசுரன் இறைவனிடம் பக்திகொண்டு காசியிலே லிங்கம் அமைத்து வழிபட்டு அவர் அனுக்கிரகம் பெற்றான். இன்னும் தேவர்கள் பலரும் காசி நகர் வந்து லிங்கங்களை அமைத்து ஈசனை வழிபட்டு அவர் அருளுக்குப் பாத்திரமானார்கள்.

ஈசன் இந்த விருந்தாந்தங்களை யெல்லாம் தேவிக்கு எடுத்துக்கூறி அந்த லிங்கங்களை அவளுக்குக் காண்பித்தார்.

''தேவி, இத்தலத்தின் மற்றொரு விசேஷம், இங்கு உயிர் விடும் மானிடரைத் தவிர, விலங்குகள், புழு பூச்சிகள், செடி கொடி விருக்ஷங்கள் கூட முக்தியை அடைகின்றன என்பதே. காசியில் உயிரைவிட்டால் மீண்டும் பிறப்பு இல்லை. கேதாரத்தைவிட பிரமன், அச்சுதன் ஆகியோருடைய க்ஷேத்திரங்கள் உத்தமம். அவற்றைவிட உத்தமமானது பிரளய காலத்திலும் அழியாது விளங்கும் அவிமுக்தம் என விளங்கும் இந்தக் காசி க்ஷேத்திரமே.''

இவ்வாறாகக் கூறிய ஈசன் அவிமுக்தேச்சுவரர் எனப்பட்ட லிங்கத்தினுள் அந்தர்த்தானமானார் அப்போது அந்த லிங்கத்தின் முடிவிலிருந்து கோடி சூரியப் பிரகாசத்தோடு உதயமானாற்போல் ஜோதி ஒன்று எழுந்தது. அந்த ஜோதியைக் கண்டு உமை பக்தியால் உள்ளம் உருக வணங்கித் துதித்தாள்.

தேவி ஈசனை வணங்கியதும் அங்கிருந்த முனிவர்களும் பரமனைப் பணிந்து துதித்தனர். அப்போது சிவன் யானையை உரித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோலைப் போர்த்தியவாறு கையிலே மழு தாங்கியவராய் அவர்களுக்குத் தரிசனம் தந்தார். ஈசனுடைய திருமேனியிலிருந்து

வீசிய பேரொளி முனிவர்களுடைய கண் பார்வையை மழுங்கச் செய்தது. அவர்களால் ஈசன் திருவுருவைக் கண்டு மனம் களிக்கமுடியவில்லை. தங்கள் முடியாமையை எண்ணி அவர்கள் மனம் வருந்தி நிற்கையில் அவர்களுடைய உள்ளம் படும் வேதனையை உணர்ந்து பரமன் அவர்களுக்குத் திவ்வியமான பார்வையைத் தந்தார். பகவானுடைய பரம கல்யாண ரூபத்தைக் கண்டு தங்களையே மறந்து நின்றனர் முனிவர்கள். தேவி அவர்கள் மலைப்பைப் போக்கி ஈசனைப் பணிந்து போற்றுமாறு சொன்னாள். முனிவர்கள் வேதங்களால் ஈசனைப் பலவாறு தோத்திரம் செய்து மகிழச் செய்தனர். அவர்கள் தோத்திரங்களால் மகிழ்ந்த மகேச்வரன் அவர்களுக்கு உயர்பதமாகிய முக்தியை அளித்தார். பின்னர் தேவியைப் பார்த்துச் சொன்னார்.

''பர்வதராஜகுமாரி, வானிலே உறையும் பிரமன், அச்சுதன், மற்றும் இந்திராதி தேவர்கள், முனிவர்கள், மற்றுமுள்ளோர் இத்தலத்துக்கு விரும்பி வந்து இங்கே கங்கையில் நீராடி என்னை வழிபட்டுத் தங்கள் வினைகள், ஒழியப்பெறுவர். கேதாரம் முதலான க்ஷேத்திரங்களிலுள்ள லிங்கங்கள் அனைத்தும் இந்தக் காசியில் சான்னித்தியம் கொண்டு விளங்குகின்றன.

''தேவி, நூறு பலம் நெய்யால் என் லிங்கத்துக்கு அபிஷேகம் செய்து அர்ச்சித்தால் நான் மகிழ்வுறுவேன். இருபத்தைந்து பலத்தால் அபிஷேகம் செய்வது அப்பியங்கமாகும். ஓர் ஆயிரம் பலம் நெய்யால் அபிஷேகம் செய்வது மாதானமாகும். ஆகவே, இருபத்தைந்து பலம் நெய்யால் எனக்கு அபிஷேகம் செய்து சந்தனக் குழம்பால் நீராட்டி, மலர்களால் அர்ச்சித்து புதல்வரோடும், உற்றாருடனும் என்னை வணங்கி வழிபட்டு பஞ்சாக்ஷரியை ஜபிப்பிவர் பிறப்பை ஒழித்தவராவர்.''

இவ்வாறு கூறிய ஈசன் அவிமுத்தேசுவர லிங்கத்தில் அந்தர்த்தானமானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் மல்லிகார்ச்சுனர், ஈசானன், கணேச்சுவரன், அகிலேச்சுவரன், ராமேச்சுவரன் கதம்பேசன் முதலான அனேக லிங்கங்கள் காசியிலே ஈசன் சாந்நியத்தைப் பெற்று விளங்குகின்றன.

கங்கையிலே நீராடி, தூய்மையான உள்ளத்தோடு பக்தியுடன் அந்த லிங்கங்களை மலர்களால் அர்ச்சித்து வழிபடுவோர் தங்களை வருத்துகின்ற துன்பங்கள் அனைத்தும் ஒழிந்தோட பிறவி நோய் நீங்கியவராகி முக்தியை அடைவர்.

*ஸ்ரீ இலிங்க புராணத்தின் பின்பற்று.*

ஈசன் உரைத்தவாறு தேவி அவிமுக்தேச்சுவரரை நெய்யபிஷேகம் செய்து, நீராட்டி மலர்கொண்டு அர்ச்சித்து பக்தியுடன் வழிபட்டாள்.

காசி நகரின் தனிச்சிறப்பைச் சிறப்பிக்க சுவாமி ஸ்ரீகுமர குருபர சுவாமிகள் கூறுவதைப் பார்ப்போம், நரை வந்ததென்றும் பிணி மூண்டதென்றும் மரணம் வருமென்றும் உலகிலுள்ளார் அஞ்சுதல் இயல்பு, அங்ஙனம் அஞ்சாமல் அவற்றை மகிழ்ச்சியோடு எதிர்நோக்குவாரும் உளரென்றால் நமக்கு ஆச்சரியமாக தோன்றும், இந்த முரண்பாடான நிகழ்ச்சியைக் காசியிலே காணலாம்.

*" படுத்த பாயுடனே பிணி மூழ்கினும்*
*பல்விழுந்து நரைத்தற மூப்பினும்*
*அடுத்த திங்கிவர்க்கே பெருவாழ்வெனும்*
*அப்பெரும்பதி யென்பிரேல்*
*விடுத்து விட்டிந் திரதிருவும் புவி*
*வெண்குடைக்கேளிடுமரசாட்சியும்*
*கடுத்த தும்பு களத்தரைத்தேடுவார்*
*காதலித்து வருந்திருக் காசியே"*

இன்னும்:-

*" நரை ஒமுதிர்ந்தன கண்கள் பஞ் சார்த்தன*
*நமன்றமர் வழிக் கொண்டனர்*
*திரைமு திர்ந்துடறிரங்கின திரங்கலை*
*செயலிது மட நெஞ்சே*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*உரைமுதிர்ந்தவர் குழாத்தோடு மடைதியா*
*லொழுகொளி முடிக்கங்கைக்*
*கரை முதிர்ந்திடாக் கலை மதிமுடித்தவர்*
*காசி நன் னகர்தானே.''*

காசியின் வியப்பைப் பின்வருமாறு கூறுகிறார்.

*''முயலாம வேதவ முத்தித் திருவை முயங்கநல்கும்*
*கயலார்பெருந்தடங்கண்ணிபங் காரருட் காசியிலே*
*செயலாவ தொன்றில்லைவாளா நெடுந்துயில் செய்யுமுங்கள்*
*பயலாக வேபணி செய்வார் புவனம் படைப்பவரே.''*

இக்காசியிலே சிறுபயலாகப் பிரமதேவன் பணிசெய்வார் பெருந்தடங்கண்ணி பங்கருக்கும் செயலில்லை. ஆனால் காசியில் கபாலத்தால் பிட்சை ஏற்கும் ஈஸ்வரராகிய வைரவ மூர்த்திக்கே வேலை உண்டு என்பது புராணம்.

பாட்டும் பொருளும் பொருளால் பொருந்தும் பயனும் என்னும் இலக்கண எடுத்துக்காட்டு இவருக்கே உரியது.

காசித்தலத்தை அவிமுத்தம், ஆனந்தவனம் என்றும் விசுவ நாதரை அகிலேசர், காசிநாதர் என்றும் , விசாலாட்சியம்மையை பெருந்தடங்கண்ணம்மை, ஆனந்தவல்லி என்றும் கூறுவர். இங்குள்ள கங்கையையும் மணிகர்ணிகை துறையையும் சிறப்பிக்கிறார்.

இங்கே உயிர்கள் இறக்கும்போது விசுவநாதர் எழுந்தருளி வந்து பிரணோபதேசம் செய்வாரென்றும் அவ்வுயிர்கள் சாரூபம் பெறுமென பலவகை நயம்படச் சொல்லப்படுகின்றன. இத்தலத்துள் யமபயமின்மையும் வைரவக்கடவுளே இங்கே தண்டிக்கும் அதிகாரியாக உள்ளாரென்பதையும் இவர் உணர்த்துகிறார்.

''வேதத் துரகர் விரக ரகிலேசர்
பாதத் துரகப் பரிபுரத்தார் - நாதரிவர்
சேவடிக் கண்டாரே திரும் பிழைத்துத் தென்புலத்தார்
கோவடிக்கண்டாரே குலைந்து.''

தென்புலத்தார் கோ என்பது யமன். அடி அண்டம், காசிக்குஇல்லை என்பதாம். இது வைரவக் கடவுளுக்கே உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசியில் விஸ்வநாதரும் வைரவரும்

காசி என்று இந்துக்கள் சொல்லும் வாரணவாசிக்கு அந்தப் பெயர் எப்படி வந்தது? கங்கையில் சங்கமமாகும் அஸிநதியையும், வருணைநதியையும் தெற்கு வடக்கு எல்லையாகக் கொண்ட கங்கைக் கரை நகரம் காசி என்று வந்தது. அரிமுதல் வருணை வரையில் கங்கைக் கரையில் புண்ணிய நீராடும் கட்டங்கள் மொத்தமாக அறுபத்து நான்கு இருக்கின்றன. இவைகளும் காசி மாநகருக்கே உரியவை. இது ஓர் தனித்தன்மை வாய்ந்த சிறப்பாகும் பன்னிரண்டு ஜோதிலிங்கங்களில் ஒன்று காசியில் இருப்பது. இவரே காசி விசுவேசுவரர். விசுவநாதர் வடிவில் ஈசன் என்றென்றும் காசியில் இருக்கிறார் என்பது இந்துக்களின் நம்பிக்கை. ஈசனின் திருமுடியை அலங்கரிக்கும். கங்கை காசிமாநகரையும் அலங்கரிக்கும். அதனால் தான் அணிசெய்து வணங்குவதாகப் பக்தர்கள் நம்புகிறார்கள். கங்கையிலே எங்கே நீராடினாலும் காசியில் நீராடுவது தான் சிறப்பானது.

காசிவிசுவேசுவரர் ஆலயம் சிறியதுதான். சரியாக 220 ஆண்டுகளுக்கு முன் ராணி அகல்யாபாய் அதைக்கட்டியதாக கூறுகிறார்கள். தங்கத்தகடு வேய்ந்த மண்டபம் தில்லையம்பல நடராஜனை நினைவுபடுத்துகிறது. உள்ளே பளிங்குக்கல் தரை யமைந்த சிறிய கர்ப்பக்கிருகம் இருக்கிறது. மூலையில் சிவ பள்ள மொன்றில் விசுவநாதர் கொலுவிருக்கிறார். விசுவேசுவரர் லிங்கம் சிவ - சக்தி சொரூபமாக இருக்கிறது. அது சிவ வடிவம் என்றும் கீழ்ப்பாகம் சக்தி வடிவம் என்றும் கூறுகிறார்கள்.

காசி விசுவநாதருக்கு, விடியற்காலை மூன்றுமணிக்கு சப்த தீர்த்த அபிஷேகம் நடைபெறுகிறது. நள்ளிரவு வரையில் அபிஷேகமும் பூசையும் தொடர்ந்து நடைபெற்ற வண்ணம் இருக்கிறது. இரவு ஏழரைமணி முதல் எட்டரை மணி வரையில் சப்தரிஜி பூசை நடைபெறும். ஏழு பண்டாக்கள் சுற்றிலும் அமர்ந்து மந்திரம் சொல்லி வாத்தியம் முழங்கி அபிஷேகம் செய்து அலங்காரஞ் செய்து ஆரத்தி எடுத்து முடிக்கிறார்கள். இதுவே அங்கு நடைபெறும் முக்கியமான பூஜை. இதைத் தரிசிக்க ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து கூடுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகமக்கள் அனைவருக்கும் உணவளித்து வாழ்விப்பவர் அன்னபூரணி. காசியிலே அன்னபூரணி ஈசனுக்கே உணவளிப்பதாக சம்பிரதாயம் இருக்கிறது. அதனால் காசியின் அரசியே அன்ன பூரணிதான். மதுரையின் அரசி மீனாட்சி என்பது போல. அன்னபூரணியின் ஆலயம், விசுவேசுவரர் கோயிலில் உள்ள சிறு சந்நிதியிலேயே அரைப்பர்லாங்கு தூரத்தில் இருக்கிறது. மராத்திய மன்னர்கள் இந்த ஆலயத்தைக் கட்டியதாகக் கூறுவர்.

உள்ளே எண்கோணவடிவில் உள்ள மண்டபத்தில் நின்று தான் தேவியைத் தரிசிக்க வேண்டும். எதிரே உள்ள பலகணிகளின் வழியாகத்தான் தரிசனம் தெரியும். இந்த மண்டபத்தைப் பன்னிரண்டு தூண்கள் தாங்குகின்றன. மத்திய மண்டபத்தைச் சுற்றி பிரகாரம் அமைந்திருக்கிறது. கீழே வெள்ளைச் சலவைக் கல்லால் தளம் போட்டிருக்கிறார்கள். கருவறைக்குள் யாரையும் அனுமதிப்ப தில்லை. வெளிமண்டபத்தில் இருந்து அன்னையின் திருமுகத்தை மட்டும் தரிசிக்கலாம். அதுவும் கவசம் போட்டமுகம்தான். கல்கத்தாவில் காளி தேவியின் முகதரிசனம் என்பது போல, தலையில் மணிமுடியும் (மகுடமும்) மார்பிலும் கரங்களிலும் மணிமாலைகளும் கழுத்தைச் சுற்றி நவரத்தின அணிவகைகளும் அழகு செய்கின்றன. அந்தத் திருக்கோலத்தில் சர்வேசுரனுக்கே அன்னமிடும் தாயாக விளங்குகிறாள் மாதா அன்னபூரணி.

சந்நிதியை தீபாவளியை ஒட்டி இரண்டு நாட்கள் பக்தர்கள் தரிசனத்துக்காகத் திறந்து வைத்திருக்கிறார்கள். அப்போது தங்க அன்ன பூரணியின் தரிசனமும் கிடைக்கிறது. லட்டுத் தேரில் அமர்ந்து அன்னை பவனி வருகிறாள். பல்லாயிரக் கணக்கான மக்கள் தீபாவளித் திருநாள் அன்று அந்தப் புனித தரிசனத்தைக் கண்டு களிக்கிறார்கள்.

அம்பாளின் இருபுறமும் ஸ்ரீதேவியும் பூதேவியும் உடன் இருக்கிறார்கள். கையைத் தூக்கி ஆசிர்வதிக்கிறார்கள். இவையும் பொன்னாலான விக்கிரகங்களே. கர்ப்பக்கிருகத்துக்கு வலதுபுறம் இரண்டு சிற்ப வேலைப்பாடமைந்த தூண்களுக்கு நடுவில் பெரிய ஆலய மணியைக் கட்டி வைத்திருக்கிறார்கள். இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசைந்து மணி முழங்கும் போது பேரிகையும் அதிர்கிறது. சங்கநாதத்துடன் தினப்படி பூசை சுமார் அரைமணி நேரம் நடைபெறுகிறது. அதைத் தொடர்ந்து கர்ப்பூர ஆரத்தி நடைபெறும்.

காசிவிசுவநாதர் கோயிலில் இருந்து சிறிது தொலைவில் சிறு சந்து ஒன்றில் காசி விசாலாட்சியம்மனின் கோயில் இருக்கிறது. இங்கே வடநாட்டவர் அதிகமாக வருவதில்லை. இது தென்னிந்தியர்களால் (நாட்டுக் கோட்டைச் செட்டிமார்களால்) கட்டப்பட்டது என்பது ஒரு காரணமாக இருக்கலாம். கோயிலின் அமைப்பும் பூஜை நடக்கும் விதமும் தென்மாநிலங்களில் கடைப்பிடிக்கப்படும் சம்பிரதாயத்தை ஒட்டி இருப்பது இன்னொரு காரணமாக இருக்கலாம்.

கௌரி தேவிக்குத் தனிச் சந்நிதியுண்டு அமர்ந்த திருக்கோலத்தில் மணி மாலையும் மலர்க்கரமுமாகக் காட்சி தருகிறார். அம்மனுக்கு தமிழ்நாட்டுக் கோயில்களில் செய்வதைப் போலவே அலங்காரமும் அர்ச்சனையும் நடக்கிறது. விநாயகர், தண்டபாணி, பைரவர், ஆகிய தெய்வங்களுக்கும் விக்கிரகமும் அர்ச்சனையும் உண்டு. தண்டபாணி என்பவர் இங்கே ஈசனுக்குக் காவல் தெய்வமாக வழிபடப்படுகிறார். கங்கைக் கரையில் திரிலோசன் காட் என்னும் படித்துறையை ஒட்டி ஓர் ஆலயம் அவர் பெயரால் உண்டு. இங்கே வால்மீகி மகரிஷி தவஞ்செய்தார் என்பதனாலே இராமர், சீதை, அநுமார் இவர்களின் பெருமை விளங்கிய சில சம்பவங்களுமுண்டு.

பூரி - ஜகந்நாதரைப் போலவே காசியிலும் ஓர் ஜகந்நாதர் ஆலயம் உண்டு. இக்கோயிலுக்கு அழகான ஓர் கோபுரமுமுண்டு. ஸ்ரீகிருஷ்ணர், சுபத்திரா, பலராமர், ஆகிய மூவருக்கும் இங்கே சந்நிதி உண்டு. இங்கே வரும் பத்தர்கள் திறந்த வெளியில் சமைத்துச் சாப்பிடுவார்கள். நெல்லி மரத்துக்கு பூஜை செய்து விட்டு சமைத்துச் சாப்பிடுவது குடும்பத்துக்கு நன்மை தரும் எனக் கருதுகிறார்கள். அதைத் ''தாத்திரி'' பூஜை என்று குறிப்பிடுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலுக்குச் சென்று திரும்பும் போது நாம் சண்டேஸ்வரரிடம் கையைத் தட்டி விடைபெற்று வணங்கி வருகிறோம். அதைப் போல காசிக்குச் சென்று திரும்புகிற பக்தர்கள் விடை பெற வேண்டிய முக்கியமான ஆலயம். காலபைரவர் ஆலயம். இது விசுவேசுவரர் ஆலயத்துக்கு வடக்கே ஒருமைல் தொலைவில் இருக்கிறது. காசிப் பட்டணத்துக்கு இவர் தான் காவற்காரர் என்று சொல்லுவார்கள்.

காலவைரவ மூர்த்திக்கு நாய் தான் வாகனம். சூலமும் உடுக்கையும் மழுவும், பாசக்கயிறும் ஏந்திய ஈசனின் திருவுருவமாகவே காலபைரவரைக் கருதுகிறார்கள். அவர் உள்ள இடத்தில் யமனும் இல்லை என்பது ஐதீகம். நாம் செய்த பாவங்களை அவர் போக்கி விடுவதாக நம்பிக்கை உண்டு. ஆலயத்தில் இதற்காக நம்மை மயில் இறகால் தட்டி ஆசீர்வதிக்கிறார்கள். கையில் காசிக் கயிறு கட்டிவிடுகிறார்கள். இது தோஷங்களை நீக்குவதற்கு உரியது. என்று கூறுகிறார்கள். இந்தியாவிற்கு யாத்திரைக்காகப் போய் வருபவர்கள் கண்டிப்பாகக் கொண்டு வருவனவற்றுள் காசிக் கயிறு முக்கிய இடம் பெறுகிறது. இக்கயிறு பல ஆண்டுகளுக்கு அறுந்து போகாமல் இருக்கும் தன்மை கொண்டது. இதைக் கையில் கட்டிக் கொண்டால் ஒருகாப்பு ஏற்பட்டது போன்ற உணர்வு உண்டாகிறது. வைரவக் கடவுளுக்கு எந்த அளவு வணக்கம் நடைபெறுகிறதோ அதேபோல அவருடைய அவதார தெய்வமான காளிமாதாவின் ஆலயத்துக்கும் உண்டு. வாள், சூலம், வில், அம்பு ஆகியவற்றை ஏந்திய அம்பிகை இவர் மகிஷாசுரமர்த் தனியான சக்தி வடிவமாகத் தோன்றுகிறாள். கால வைரவரைத் தரிசிக்காமல் காசியில் இருந்து திரும்பக் கூடாது என்ற நம்பிக்கை இப்போதும் உண்டு. வைரவருக்கு வாகனம் நாய் என்பதால் இங்கே நாய்க்கு அன்னமிடுவது விசேடமாகக் கருதப்படுகிறது.

நமக்கு இந்நூலில் கருதப்படுவதும் கருத்துக்குதவுவதும் வைரவக் கடவுளின் காசியின் விசேடமேயாகும். மற்றையவற்றை நேரமிருந்துளி நோக்குவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கபீர், துளசிதாசர், ஜெயதேவர், ஆதிசங்கரர் போன்ற மகான்களின் காலடி பட்டபூமி, கங்கைக்கரையில் ஈசனே தேவியுடன் நடனம் ஆடியதாக சாஸ்திரங்கள் கூறுகின்றன. கங்கையில் நீராடி காசியில் ஆலயங்களைத் தரிசிக்க வேண்டியது - வாழ்வில் ஒரு முறையாவது வந்து சந்திக்க வேண்டியது மிக விருப்பானது. இப்போது காசிக்கு வழிகாட்டுகிற கண்ணியவான்களுக்கு செய்தவத்தின் ஒரு பகுதி சேருவதாக.

திராவிட மொழிகளில் வழங்கும் வகரம் சமஸ்கிருதத்திலும் ஐரோப்பிய மொழிகளிலும் பகரமாக உச்சரிக்கப்படும். வங்காளம் என்பது ''பொங்கால'' என்று உச்சரிக்கப்படுவது ஒரு சான்று. அதுபோல வைரவர் என்ற தமிழகத்தில் உள்ளபெயர் வடநாட்டில் பைரவர் என்றது அபிதான சிந்தாமணி, தக்ஷன் விஷ்ணு, பிரமாதிகளுக்கு அகங்காரம் மேலிட்ட காலத்து அவர்களைச் சிவாக்ஞையால் சிட்சித்து அனுக்கிரகித்த சிவாவதாரம். இவருக்கு வேத உருவாகிய நாய் வாகனம். இத் திருநாமத்தில் ப,ர,வ, என்ற சிருட்டியாதி முத்தொழில்களும் அடங்குவது உணர்த் தப்படுகிறது. எனப் பொருள் விளக்கம் தருகிறது.

வைரவர் திருவுருவம் கோரமூர்த்தமாகும் இவர் செஞ்சடையும் முக்கண்ணும் நீலத்திருமேனியும் கொண்டவர். சூலம், பிரம கபாலம், பாசம், உடுக்கை ஆகிய நான்கையும் திருக்கரங்களில் ஏந்தியவர். கோபக்குறிப்புடன் கூடிய சிரிப்பு கொண்ட திருமுகத்தினர், சிவத்தின்றும் தோன்றிய காரணத்தால் சிவகுமாரனாகவே இவர் கருதப்படுகிறார். வைரவருக்கு ஊரின் பாதுகாப்பின் பொருட்டும், துன்ப நீக்கத்தின் பொருட்டும், பிணி நீக்கத்தின் பொருட்டும் பாயசான்னியத்தால் பலி சமைக்க வேண்டும் என்று ஆகமங்கள் கூறுகின்றன. இன்றளவும் காசித்திருத்தலமும், கங்கை நீராட்டும் காலவைரவர் வழிபாடும் அவர் திருவடிகளில் சார்த்தி எடுக்கும் காசிக்கயிறு அணிந்து பேறு பெறுதலும் தமிழ் மக்களால் போற்றப் பெறுவன தமிழ் நாட்டுக்குப் பன்னூறு கல் தொலைவில் உள்ள காசித் திருத் தலத்து வைரவரை ஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள் போற்றிப் பாடிய திருவருட்பா தமிழ் நாட்டிலும் வைரவர் தோத்திரமாக விளங்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## காசி கண்ட

# காலவயிரவர்

அண்ட கோடிகளெல்லாம் தமக்குள்ளே ஆராய்ந்து தேடி தேறல் ஒழுகுங் கனிந்த பசுந்தேமாங்கனியைப் பிழிந்து செழுஞ்சாறு நுகர்தலென்ன உண்டான சந்தோஷம் போல ஈற்றில் ஒருவனே உள்ளான். அவனே நீறு பூசியவனும் சூலந்தரித்து நின்றாடும் ஒருவன் ஆவன். அக்கடவுளார் மாயை என்னும் இருளானது உலகை மறைக்க அவிர் சுடராய் தன்னை உணராவகை மனம், வாக்கு, காயம் இவற்றிற்கு எட்டாத அவனது நிலையை அயன், மால், அவர்கட்கு காண்டல் இயலாது. மேல் நாள் தேவர் முதலானோர் கூடி ஆராயும் போது கமலப் புத்தேளாகிய பிரமபிரான் தானே ஒன்றான தலைவர் என்று கூறினார். உம்மைப் பயந்தவன் நானே எனத் திருமால் திருவாய் மொழிந்தார்.

*என்ன முனிவுற்றிரு வோரு மெழுதா மறைகளெவ்வாறு*
*சொன்னதெது வோ பொரு ளென்னாத் துணிந்து கேட்ப மறைநான்கும்*
*மன்னு முலகம் படைத் தளிக்க வல்லீர் யார்க்குந் தனிலைமை*
*முன்ன வரிதானு மக்கெம்மால் மொழியற் பாற்றோ வெனமொழியும்*

அமைத்தல், போற்றியளித்தல், துடைத்தல் என்னும் அரியமுத்தொழிலும் ஆற்றும் ஒருவன் சிவனொருவனே என்று நான்கு வேதங்களுள் முதலாம் வேதம் உரைக்கின்றது. இரண்டாம் வேதம் யோகத்தால் புவனமெல்லாம் பரவப்படுவது மூன்று கண்ணுடைய சிவனே என்று கூறுகிறது. பேரொளியின் தத்துவத்தாலே உலகம் மூன்றினையும் பரிபாலிப்பவன் சிவனே என்று மூன்றாம் வேதம் கூறும். தன்னை உணர்வோரும் தன்னை அறிவிப்பவனும் குளிர்ந்த கடுக்கைமாலை அணிந்த இறைவனே என்று நான்காம் வேதம் கூறும். இவற்றைக் கேட்ட கமலப் பொகுட்டோன் நகையாடி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஏற்றினேறி, சடைதாங்கி, ஈமத்தாடி, பொடிபூசிக்*
*காற்றுநுகருந் கறைமிடற்றக வைகாவாலாரைச் சமைத்துப்*
*போற்றுங் கணங்கட் கொரு முதலாய்ப் பூவைபாகம் பிரியா தோன்*
*தோற்றாதெவர்க்கு முன்னுயிராய் நின்றவாறென் சொல்வீரால்*

என்று மொழிந்தார். ஒன்றாய்ப் பலவாய் முழுமுதலாய் உள்வார்க்கு உணரும் பொருளாய் நின்றான் தொடர்ந்த மலமூன்றவராய் நின்றவாறு எவ்வாறு எனக்கூறி நகைத்தார். கிரியைக் குழைத்தவரும், புரமூன்றெரித்தவரும் சடையை உடையவருமாகிய சிவன் சோதிப் பிளம்பாய் சுடர் விட்டெரியத் தோற்றினார். மலர்க்கிழவன் அஞ்சாது அப்பிளம்பை நோக்கினார். இதைக் கயல்சேர் ஒரு பங்குள் கண்ணோர் மூன்றும் கண்டறிந்ததுவே.

*காண்டலோடு மலர்க் கிழவனுள்ள மதனிற் கானல் கொழுந்தித்*
*தூண்டு முனிவு பிடித் துந்த வென நுபுருவத்துணை நாப்பண்*
*நீண்ட சடையினொடுந் தோன்றும் புதல் வனலையோ நீயென்ன*
*மூண்ட வெகுளி வயிரவனை முக்கட் கனியாண்டளித்ததுவே*

அமையா வெகுளிக்கனல் கொழுந்த மலரோனது ஐந்தாந் தலையை கமைதீர் காரி தன்னிடக்கையின் உகிராற் கிள்ளி களிப்புற்றான் என்று கூறுகிறது காசிகாண்டம்.

இவ்வாறு நடந்தவைகளைக் கண்ட காயா வண்ணன் கடவுளாரைத் தொழுதான் வயிரவர் தலையோ டேந்தி பன்னீராண்டு உலகமுழுதும் திரிய வேண்டும் என்று செஞ்சடையோன் கூறினார். அதாவது,

*கற்றைக் கதிர்கால் வெண்ணிலவுக் கண்ணிவேய்ந்த காரிதனைப்*
*பற்றி மாதினுரு வொடு மோர்பாதம் விசும்பின்மேற் சிலம்ப*
*உற்றோர் பாதம் புவிமிதப்பவுறை திபிரமகத்தியென*
*நெற்றித்தனிக்கண்விடைப்பாகன் றரு மமோர்ந்து நிகழ்த்தினனால்*

என உலகெலாந் திரிந்து கடிசேர்பசியதுழாய் மாலைக் கண்ணனுறையு முலகடைந்தான். கண்டதும் முராரி காரியடி பணிந்தார். அத்தன்மையைக் காசி காண்டம் பின்வருமாறு



பொதுசன நூலகம்
விசேட சேர்க்கைப் பகுதி
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளம்புகிறது.

*வீழ்ந்தானெழுந்தான் மலர் தூவிவிரைசேர்கங்கை வேணியனைச்*
*சூழந்தான்றுதித்தான் றுள்ளினான் சுருதிப் பொருள்கள் பலபாடித்*
*தாழ்ந்தானுநகை பிடித்துந்தத்தழற்கு ஞானப் பெருங்கடனுள்*
*ஆழ்ந்தானுலக மனைத்தினையுமயின்றாரவிற்றுயின்றானே*

''அடியேன் காணப்பெற்ற பாக்கியம் வேறு யாதுளதோ'' என நொந்தார் செப்பர் முலைப்பெற்றிருவேயான் செய்தவமென் னெனக் கினியார் ஒப்பார் என வாழ்த்தினார். பின்னும் இவ்வுருக் கொண்டு வந்தது யாது காரணங்கொல் என்றார்.

*முட்டாட் கமலத்தயன்தலை யொன்றரிந்த பாவமுடியாதேல்*
*மட்டார துள வோனுல கீன்ற மறையோன் றலைகள் மழுப்படையின்*
*வெட்டாநின்று புவியனைத்தும் விளியுமுகாந்த முடிவதனில்*
*வட்டாட்டயர்ந்த கொடும்பழிகள் யாது நோற்று மாற்றினையால்*

மேலும் முராரி மகிழப் பலியளித்தார். இதைக் கேட்டு ''மூசு சுரும்புங் களிவண்டு முட்டாட்ட கமலத் தடை கிடக்குங்காசி நகரஞ் சென்றடைந்தால் இஃது நிவிர்த்தியாகும் என்றார்.

*காரேறுழக்கும் வயற்காசி நகரிற் காரியடைந்திடலும்*
*வேராவெருவிப் பிரமகத்திவியன் பாதலத்தினிடை யொளிப்ப*
*ஈராவுழுடையுரிபோர்த்த வெம்மான் கரத்தி லெஞ்ஞான்றுந்*
*தீராக் கபாலந் துயின்றோன் கைப்பொருள் போற் புவியிற் சேர்த்ததுவே*

இவ்வாறான காசிநகரினை காலவைரவர் காவல் செய்து வந்தார். கபாலம் வீழ்ந்த இடத்தில் ஓர் தீர்த்தமுண்டாகியது. இதில் நீராடுவோர் முன் வினை நீங்குவார் என்பது திண்ணம்.

*[இவை திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்து இருபத்தொன்றாவது ஸ்ரீ - ல - ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் கட்டளையிட்டருளியபடி ந. ச. மீனாட்சி சுந்தரம்பிள்ளையால் பதிப்பிக்கப் பட்ட காசி கண்டத்தைப் பின்பற்றியது.]*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# கந்தபுராணத்தில் கபாலீஸ்வரன்

*முன்னமோர் வைகன் மாலு முண்டகத் தயனு மாகப்*
*பொன்னின் மால் வரையினுச்சிப் பொலங்குவ டொன்றி னும்பர்*
*மன்றுழி முனிவர் தேவர் வரம்பிலோர் வந்தன் னாரைத்*
*சென்னியால் வணக்கஞ் செய்து செங்கரஞ் குவித்துச் சொல்வார்.*

மாமேருமலையின் உச்சியின் ஓர்பால் வழக்கம் போல மகா விஷ்ணுவும் பிரமனும் வீற்றிருக்கும் போது தேவர்கள் முனிவர்கள் வந்து தொழுது வணங்கினார்கள். அன்றியும் பின்வருமாறு மூவரின் முதலானோரு முதலிடை முடிவுமில்லாத் தேவருமெவையு நல்குஞ் செல்வரும் பரமேலாகியோ, வரும் புவனத்துள்ளவுயிருக்குயிராய் நின்றோருள் மேல்வர் யார்?எங்களுக்கு சொல்ல வேண்டுமென்று கேட்டனர். அவ்வேளை மாலையாகிய வலைக்குள் அகப்பட்டிருந்து பெருமிதங்கொண்ட பிரம தேவன்யானே மேலோன் என்றார், அது பொறாத மகாவிஷ்ணு மூர்த்தியும் உன்தனைத் தந்த யானே உன்னிலும் உயர்வாகிய பிரமம் என்றார். இவ்வாறே மாயையின் வலியால் மாறிமாறி தருக்கஞ் செய்தலைக் கண்டு தேவர், முனிவர்கள் அவ்விடத்தை விட்டு நீங்கினர். எனினும் தர்க்கமொழியவில்லை. வேதவாக்கையும் பிரண வாக்கையுயுமுணர்ந்தார்களில்லை. இவற்றை உணர்த்த யார்க்கும் குறித்த அருள் கூடும் பெம்மான் கருணை கொண்டு

*அடிமுடியிலாத வள்ள லமலமா மொளியாய் விண்ணி*
*னடுவுற வந்து தோன்ற நாரணன் றானும் வேதக்*
*கடவுளுஞ் சிவனா மென்று கருதிலர் யாதோ விந்தச்*
*சுடரென மருண்டாம் மாயச் சூழ்ச்சியினீங்கலாதார்*

ஒளிப்பிளம்பாக நின்றார் சிவபெருமான். இதை இருவருமுணர வில்லை. ஆனால் அச்சுத மூர்த்தியாகிய திருமால் அறிந்து விளங்கி நின்றார். பிரமனோ தனது உச்சித்தலையில் உள்ள வாயால் சிவனை இகழ்ந்தான். சீற்றம் கொண்டால் அண்டங்களும் அதிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள உயிரினங்களும் அழிவுறாது இருக்குமோ என எண்ணி

*எகினம துயர்த்த வண்ண விரும்பவந் தொலைப்ப வேனைப்*
*பகர்வத மகந்தை மாற்றப் பண்ணவர் மதர்ப்புச் சிந்த*
*மிரு பெருங் கருணை தன்னால் வேதநாயகனுள்ளத்து*
*மகிழ்வொடு புரிந்தானென்ப வயிரவக் கடவுடன்னை.*

அவ்வைரவக் கடவுள் நீல நிறம் பொருந்திய ஒளி திகழ்கின்ற திரு மேனியும் சிலம்புகள் ஒலிக்கும் திருவடியும் விடத்தினைக் காலுகின்ற செந்நிறம் பொருந்திய பாம்பை அரைஞாணாகக் கட்டிய வெற்றரையும், அனந்த கோடி சிரமாலைகள் ஆங்காங்கே அசையும் அகன்ற திருமார்பும், சூலமும், மழுவும், பாசமும், மழுவும், பாசமும், உடுக்கையும் ஏந்திய அழகிய திருக்கரங்களும், இளம்பிறை போலத் தோன்றிய ஒளி பொருந்திய வக்கிர தந்தங்களும், அக்கினிமயமான செவ்வானம் போன்ற அழகிய சிவந்த சடையும் கோபம் கிளருகின்ற சிரிப்பும், உக்கிர வடிவத்தையுடையவராய் அங்கு தோன்றினர். வைரவக்கடவுளை நோக்கி முழுமுதற் கடவுளாகிய சிவன் பின்வருமாறு கூறினார்

*திகழ்ந்தநஞ் சிறுவனாருஞ் செங்கமலத்தோன் சென்னி*
*யிகழ்ந்தது நம்மை யுச்சியிருந்ததே யதனை வல்லே*
*யகழ்ந்தனை கரத்தி லேந்தி யவனுயிர் நல்கித் தம்மைப்*
*புகழந்திடு முனிவர் தேவர் புரந்தொறும் போதியன்றே.*

*போந்தனை யனையர் புலவுடற் சோரி தானே*
*வாய்ந்ததோ ரைய மாக வாங்குதி வாங்கும் வேலை*
*வீந்தனர் தமக்கு மீட்டும் வியனுயி ருதவியன்றோ*
*ராய்ந்திடு மகந்தை மாற்றி யண்டமே லடைதியம்மா.*

பிரமதேவனின் உச்சியின் சிரசானது என்னை இழந்த தன்மையினால் அதைக் உயிராற்கிள்ளி அவரது உயிரை திரும்பவும் கொடுத்து அந்த உச்சிக் கபாலத்தை எடுத்துக் கொண்டு நம்மைப் புகழ்ந்திடும் தேவர் முனிவர்களிடம் ஐயமாக உதிரத்தை வாங்கக் கடவாய் என்று கட்டளையைக் கற்பித்தார். பின்னர் அண்ட முகட்டுக்குச் சென்று உனக்கெனப் பொருந்திய வைரவ புவனத்தில் இருந்து பிரபஞ்சத்திலுள்ள ஆன்மாக்கள் துன்பமடையா வண்ணம் காத்தருள்வாய் என்று கூறி அந்தச் சோதியினுள் மறைந்தருளினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஃது இனிதாய் நடந்தது விஷ்ணு மூர்த்தியானவர் தனது இருப்பிடமாகிய வைகுண்டம் போய்ச் சேர்ந்தார். பிரம்ம தேவனது தலையைக் கிள்ளி எடுத்தபோது உண்டான இரத்தப் பெருக்கினால் பிரம்ம பிரான் மயக்குற்று பின்னும் வயிரவக் கடவுளரால் தெளிந்து வயிரவுக்கடவுளை வணங்கி என்னை ஆட்கொண்டு பிழை பொறுக்க வேண்டுமென்றார்.

*இன்மை யாக விமைப்பி னுலகடும்*
*வன்மை கொண்ட வடுகநின்னாரரு*
*ணன்மை யாற் றொல்லை நல்லுணர் வெய்தினன்*
*புன்மையாவும் பொறுத்திடல் வேண்டுமால்*

வைரவக்கடவுள் காலவேகன், அக்கினிமுகன், சோமகன், ஆலகாலன்,அதிபலன் முதலாகிய பூதசேனைகளுடன் நெடுமாலு றைகின்ற நீண்ட வைகுந்த நகரத்தையடைந்தார். வாயிற் காவல னாகிய விடுவசேனனோடு சண்டை செய்து சூலாயுதத்தினால் அவனுடம்பை குத்தியெடுத்து உள்ளே துண்ணெனச் சென்றார்.

*"நிணங்கிளர் முத்தலை நெடிய வேவிறை*
*கணங்களி னிரையொடு கடிது செல்லமா*
*லணங்கின ரோடெழா வையன் றாண்மிசை*
*வணங்கி நின்றெந்தை நீ வந்த தென் என்றான்"*

திருமால் தேவியரோடு எழுந்து ஐயன் தாழ்மிசை வணங்கி வந்ததென்னென்றார். நாம் இங்கே வந்தது பிக்ஷைக்கு (பிச்சை) நின் திருந்து சென்னியில் ஒன்றிய குருதியை உதவுவாய், என நாரணன் நன்றெனப் போற்றி தமது சிவந்த நல்ல கைந்நகத்தால் ஒரு நரம்பை வாங்கி வழிந்த இரத்த நீரை சூலப்படையையுடைய வயிரவக்கடவுள் ஏற்கும்படி பிக்ஷ பாத்திரத்தில் உகுத்தார். அவ்வுதிரம் பெருகி பிரம கபாலத்தில் விழுந்ததும் வற்றிப் போனது. அகந்தையால் மயக்கமுற்றிருந்த மகாவிஷ்ணுப் பெருமானுக்கு வேறொரு மயக்கம் வந்தது. இதைக் கண்ட தேவிமாரும் மயக்க முற்றனர். இவர்களினது மயக்கத்தை நீக்கி திருமாலின் இருப்பிடத்தை விட்டுச் சென்றார். வைரம் பொருந்திய கபாலத்தை ஏந்திக் கொண்டு வேதம் ஆகிய நாளிக்கொடியை உயர்த்தி உலாவுவாராயினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# ஈழத்துச் சிதம்பரத்தில்
# இரு சிவஞான வைரவ மூர்த்திகள்

## *1. திண்ணக்களி வைரவர்:-*

இலங்கையில் சிறப்புற்று விளங்கும் பழைய பெரும் சிவஸ்தலங்களில் யாழ்ப்பாணத்தின் கண்ணே சைவத்தையும் செந்தமிழையும் போற்றிப் பேணிக்காத்துவரும் சீரிய நகராகிய காரைநகரில் அமைந்துள்ள சிவாலயங்களில் ஈழத்துச் சிதம்பரம் என்னும் பெயர் பெற்ற ஆலயமும் ஒன்றாகும். இங்கு அகன்ற மூன்று வீதிகள் அமைந்துள்ளன. அவற்றை விட இரண்டாம் மூன்றாம் சிறு வீதிகளும் உள்ளன. இவ்வீதிகளில் இரு ஞான வைரவர் ஆலயங்கள் உண்டு. இதனால் ஈழத்துச் சிதம்பரம் எனப் பெயர் பெற்ற காரைநகர்ச் சிறப்பு விளங்குகிறது. இரண்டாம் வீதியில் திண்ணக்களி வைரவரும் மூன்றாம் வீதியில் தினகரன்பிட்டி வைரவரும் எனத் திருநாமங்கள் பெற்று தற்போது விளங்கி வருகின்றன. இக்காரணங்கள் என்று நடை முறைக்கு வந்தன என்று கவனிப்போம்.

காரைநகரிலே குளக்கோட்டு மன்னன் முதன் முதலாக ஐயனார் ஆலயத்தை அமைத்தான். இவ்வாலயம் ஏழு நிலைக் கோபுரங்களைக் கொண்ட ஆலயமாகும். 1618ம் ஆண்டு போர்த்துக்கேயர் காலத்தில் இவ்வாலயம் சூறையாடப்பட்டு, அழிக்கும் நோக்கமாக வந்த மூவர் இரத்தம் கக்கி இறந்து போனார்கள். போர்த்துக்கேயர் தம்சமயத்தைப் பரப்புவதற்காக பல முயற்சிகள் செய்து சைவ சமய ஆலயங்களையும் அழித்தார்கள். இது சரித்திர உண்மையாகும். 1658ம் ஆண்டு ஒல்லாந்தர் காலத்திலும் சைவசமயமும் சைவ ஆலயங்களும் அழிக்கப்பட்டு வந்தது தெரிந்ததே. காரைநகர் ஐயனார் ஆலயத்தை அழிக்கும்போது பலர் சோதனைக்குட்பட்டு அழிந்து போனார்கள். ஆதாரம் இலங்கைச் சரித்திரமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசைகளை ஒழுங்காய்ச் செய்வதற்கு இயலாமல் துன்பப் பட்டும், திருவுருவங்களைக் கிணற்றில் போட்டும் தேர், வாகனம் முதலியவற்றைக் கடலில் அமிழ்த்தியும் அழிவு செய்வதைக் கண்ணுற்றும் கலங்கி இருந்தார்கள்.

இக்கால கட்டத்தில் இராமநாதபுரத்தைச் சேர்ந்த சேதுக் கரையைக் காவல் செய்த மறக்குடி வீரபரம்பரையிற் தோன்றிய ஆண்டி என்ற ஐயனார் என்ற அடியவர் பாதயாத்திரையாக இலங்கையில் உள்ள சிவஸ்தலங்களைத் தரிசித்து வந்து காரைநகர் ஐயனார் ஆலயத்துக்கும் வந்தார். ஆலயம் அழிக்கப்பட்டிருந்தமையைப் பார்த்து அங்குள்ள பெரியவர்களிடமும் ஆலய அர்ச்சகர்களிடமும் நிலைமைகளை விசாரித்து அறிந்து துக்கப்பட்டு வருந்தலானார். வைரவப் பெருமானை வணங்கி 'இவ்வித அழிவுகளையும் பார்த்துக் கொண்டிருந்தீரோ' என்று மனம் வருந்தி வினவி அழுதுகொண்டிருந்தார். சைவ சமயத்துக்கும் இவ்வாலயத்துக்கும் இவ்வித அழிவு வர வேண்டுமா என்று அழுது இரங்கிக் கொண்டிருக்கும் நாளில் கனவில் ஒருவர் தோன்றி ''அப்பனே, நீ பயப்படாதே, திண்ண புரத்திற்கு அண்மையில் உள்ள செழித்த அரசமரத்தின் கீழ் நாம் இருக்கின்றோம்'' என்று கூறி மறைந்தார்.

இதனால் ஆண்டி முனிவர் ஆச்சரியப்பட்டு தெளிந்து ஆடிப்பாடி இச்செய்தியைப் பரப்பலானார். அயலவருடன் சேர்ந்து அவ்வரசமரத்தைச் சுற்றி நாற்புறமும் தேடினார். அத் திருவுருவம் தென்படவில்லை. எனினும் அவ்வெண்ணத்தை விடாது அம்மரத்தடியில் இருந்து தவஞ் செய்யத் திட்ட மிட்டார்.. அப்போ தாம் கொண்டுவந்த அழகிய மூவிலைச் சூலாயுதத்தை நிறுத்தி ''ஐயனே, இச்சூலாயுதத்தில் வைரவ மூர்த்தியாய் எழுந்தருளி வந்து இவ்விடத்திலுள்ளோர் அனைவரும் ஈடேறும் வண்ணம் அருள்பாலிக்க வேண்டு'' மென்று கூறி வணக்கத்தைத் தொடங்கினார். செம்மலர் மாலை இட்டு வணங்கினார். ஊரவர்கள் ஒன்று கூடி அந்நிலச் சொந்தக் காரராகிய அம்பலவி முருகரிடம் போய்க் கூடிக் கதைத்தார்கள். அவரும் இவ்விடயத்தில் எழுச்சிமிக்கவரானார். ஆண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனிவரைக் கண்டு வணங்கி பூசைக்கு வேண்டியனவற்றைக் கொடுத்து அவர் விருப்பப்படி வைரவப் பெருமான் இருக்க ஓர் ஆலயமும் அமைத்துக் கொடுத்தார். இவ்வாறு சூலத்தை ஐயனாராகப் பாவித்து வணங்கிப் பூசை செய்து வரும் நாளில் அரசமரத்தின் தென்கிழக்குப் பக்கத்தில் ஓர் ஒளிப்பிழம்பு தோன்றியது. இதைக் கண்ட ஆண்டியார் அவ்விடத்தில் அகழ்ந்து பார்க்கும்போது ஐயனார் திருவுருவம் இருப்பதைக் கண்டார். ஆனந்தக் கண்ணீர் விட்டு ஆடிப்பாடினார். இது புதைக்கப் பட்டிருக்க வேண்டுமென்று முதியோர் பலர் கூடி நிச்சயித்தனர். பின்னர் ஆண்டியாரும், அம்பலவி முருகரும் ஊரவர்களைச் சேர்த்து ஓர் ஆலயம் அமைத்துப் பூசைசெய்யத் தொடங்கினர். இது வழக்கமாகி இன்று காரைநகர் மக்கள் கண்கொள்ளாக் காட்சியாக ஆண்டிகேணி வைரவர் எனப்பெயர் பெற்று அருள் புரிந்து வருகின்றார்.

## 2. *தினகரன்பிட்டி வைரவர்:-*

இவ்வைரவப் பெருமான் ஆலயம் காரைநகர் ஈழத்துச் சிதம்பர ஆலயத்தின் மூன்றாம் வீதியில் அமைந்துள்ளது. அந்தண குலத்தில் உதித்த துறவியான தினகரன் என்னும் பெயரையுடைய முனிவர் ஒருவர் வந்து தங்கி இருந்தார். அங்குள்ளோர்க்கு சைவமும், தமிழும் சொல்லிக் கொடுப்பதுடன் நில்லாது பண்ணிசையும் பயிற்றி வந்தார். திண்ணைக்கவி என்னும் நாமத்தையும் பெற்றார். இப்பெரியார் அங்கு வரும் அடியார்கள் தங்குவதற்கேற்ப ஓர் இடத்தை அமைத்ததுமன்றிக் காத்தற் கடவுளாய வைரவ மூர்த்தி ஆலயத்தையும் அமைத்தார். குற்றம் குறை காணாது நாள் தோறும் அவ்வாலயத்தில் பூசைசெய்து வந்தார். அன்றியும் ஆலய அருகில் ஓர் ஆலங்கன்றையும் நாட்டி வளர்த்து வந்தார். அது செழித்து கொழித்து மன்னர் சேனை மகிழ்வுடன் இருக்கக்கூடியதாக இருந்தது. இதனால் இம் முனிவர் இருந்த இடம் தினகரன்பிட்டி எனவும் இவரால் ஆக்கப்பட்ட வைரவ ஆலயம் தினகரன்பிட்டி வைரவர் ஆலயம் எனவும் வழங்கப்பட்டன. தற்போது நாட்டுநிலைமை சீரற்று இருப்பினும், வழமைபோல் பூசைகள் நடைபெற்று வருகின்றன.

*தகவல்*

***க. தில்லையம்பலம்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# விழிசிட்டி
# ஞான வைரவ சுவாமி ஆலயம்

## ஆலய இடம்:

தெல்லிப்பளை தென் மேற்கில் உள்ள விழிசிட்டிக் கிராமத்தின் மத்தியில் ஞான வைரவ சுவாமி ஆலயம் இருக்கின்றது. தல விருட்சம் புளி ஆதலாலும், புளிய மரங்கள் பல நிற்பதாலும் இதனைப் புளியடி வைரவர் கோயில் என்றுஞ் சொல்வர். தெல்லிப்பளைச் சந்தியிலிருந்து மேற்கே பிரதான வீதிவழி செல்லும்போது அம்பனைச் சந்தியைக் கடந்து75 மீற்றர் வரை சென்றதும் ஒரு வீதி பிரிந்து ஓரளவு வடமேற்காகச் சென்று பின் வடக்கும் மேற்குமாகத் திரும்பி ஒன்றரைக் கிலோமீற்றர்வரை சென்று பன்னாலைக் கிராமத்தைக்கடந்து, விழிசிட்டியினுள் வடக்கு நோக்கி 400 மீற்றர் வரை சென்று கிழக்குமுகமாக 200 மீற்றர் வரை செல்லத் தெற்கு நோக்கி ஒரொழுங்கை ஆலயப் பக்கம் செல்வதைக் கண்டுகொள்ள முடியும்.

## தோற்றமும் வளர்ச்சியும்

யாழ் அரசபணிமனைப் பதிவேட்டுச் செய்திகொண்டு 1840 இல் வேலாயுதர் கந்தர் என்பவரால் விழிசிட்டி ஞான வைரவசுவாமி ஆலயம் அமைக்கப்பட்டதென அறிகின்றோம். அவர் மரபினரான மூத்ததம்பி மணியத்தின் காலத்தில் ஆலயம் ஓரளவு பூரணத்துவம் பெற்றிருந்தது. சாந்தினாற் கட்டப்பட்ட கோயில், மடைப்பள்ளி, சுற்றுமதில், திருமஞ்சனக்கிணறு, கேணி, மடம் என்பன அப்போது அமைக்கப்பட்டிருந்தன. நித்திய நைமித்தியக் கிரியைகளுக்கான உபகரணங்களெல்லாம் இருந்திருக்கின்றன. மூத்ததம்பி மணியத்திற்கு ஆண்பிள்ளை இல்லாத காரணத்தால் மருமகன் வேலாயுதர் தம்பிப்பிள்ளை பொறுப்பை ஏற்று நடாத்தி வந்தார். அவருக்குப்பின் அவர் மூத்த புதல்வன் தம்பு என்பவரை அவ்வுரிமை சார்ந்தது. 1946.12.06 இல் பரிபாலன சபை அமைப்பின் கீழ் பண்டிதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னத்தம்பி கதிரிப்பிள்ளை தலைவராக இருந்த வேளை பல திருப்பணி வேலைகள் நடைபெற்றுள்ளன. கர்ப்பக்கிருகம், அர்த்தமண்டபம் வெள்ளை வைரக்கல்லாலே திருப்பணி செய்யப்பட்டன. ஏனைய பகுதிகளும் திருத்துவிக்கப்பட்டன. வெளியே ஒரு மண்டபம், கந்தசுவாமியார் வாயில் மண்டபம் என்பன புதிதாக அமைக்கப்பட்டன. சுற்றுமதில், மடைப்பள்ளி, களஞ்சியஅறை, வாகனசாலை திருத்தம் பெற்றன. நித்திய நைமித்தியங்களும் சிறப்பாகக் கவனிக்கப்பட்டன. மின்னிணைப்பும் செய்விக்கப்பட்டது.

## அமைப்பு:

ஞான வைரவர் என்பதற்குப் பொருத்தமாக ஆலயம் தெற்கு நோக்கி இருப்பது கவனிப்பிற்குரியது. கர்ப்பக்கிருகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், நிருத்தமண்டபம், தம்பமண்டபம், வெளிமண்டபம், என்பன உண்டு. பிரதான வாயிலில் இராஜகோபுரம் வைரக்கல்லினால் 15 அடி உயரத்திற்குக் கட்டப்பட்டுள்ளது. வாயிலின் கிழக்குப்புறத்தில் மணிக்கோபுரம் 21 அடி உயரமுடையதாக அமைக்கப்பட்டுள்ளது. கர்ப்பக்கிருகத்தின்மேல் அழகான தூபி உண்டு. தம்பமண்டபத்திற் பலிபீடம், நந்தி அமைந்துள்ளன. மகாமண்டபத்தில் முருகன் வேலுடன் கிழக்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். உற்சவமூர்த்தியும், முன்னைய மூலமூர்த்தி சூலமும், ஒரு சிவலிங்கமும் வழிபாட்டிற்குரியனவாக இங்கே தாபிக்கப்பட்டுள்ளன. விநாயகர், நாகதம்பிரான் பரிவார மூர்த்தங்கள் தென்மேற்குப்பகுதியில் கிழக்கு வாயிலை உடையனவாக அமைந்துள்ளன. வாகனசாலை களஞ்சிய அறை என்பன தென்கிழக்கிற் கட்டப்பட்டுள்ளன. திருமஞ்சனக்கிணறு ஈசானமூலையிலுள்ளது. உள்வீதியைச் சுற்றி மதில் உண்டு. வெளிவீதியில், தென்மேற்கில் ஒரு மடமும் கேணியும் இருந்தன. கேணி சதுரவடிவான கிணறாக்கப்பட்டுள்ளது. புதிய விஸ்தாரமான அமைப்பை எதிர்நோக்கிக் கிலம் அடைந்த மடம் அகற்றப்பட்டுள்ளது. வடக்கில் ஒரு பூந்தோட்டம் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூர்த்திகள்:

மூலமூர்த்தி வைரவர் கருங்கல் விக்கிரகம் 1949.06.01 இல் நடைபெற்ற கும்பாபிஷேகத்தின் போது தாபிக்கப்பட்டது. நான்கு திருக்கரங்களையுடையது. முன்பிருந்த சூலம் மகாமண்டபத்தில் வைக்கப்பட்டுள்ளது. பரிவார மூர்த்திகளாய விநாயகர், நாகதம்பிரான என்போரும் கருங்கல்லில் வடிக்கப்பட்டவர்களே, உற்சவ மூர்த்தி வைரவர் ஐம்பொன்னாலாயவர்.

## கும்பாபிஷேகம்

1949 இன் முன் நடைபெற்ற கும்பாபிஷேகங்கள் பற்றிய செய்திகளைப் பெறமுடியவில்லை. பண்டிதர் சின்னத்தம்பி கதிரிப்பிள்ளை பரிபாலனசபைத் தலைவராக இருந்த காலத்தில் மூன்றுமுறை கும்பாபிஷேகங்கள் நடைபெற்றுள்ளன. 1949.06.01, 1966.06.29. என்னுந் திகதிகளில் நடைபெற்ற மகா கும்பாபிஷேகங்களுக்குப் புத்தூர் சிவஸ்ரீ மார்க்கண்டேயக் குருக்கள் வைத்தியநாதக்குருக்கள் முதன்மைக் குருவாக இருந்திருக்கின்றார். 1981.06.05 இல் இடம் பெற்ற மகாகும்பாபிஷேகத்தின்போது அரியாலை சிவஸ்ரீ குகதாசசர்மா பாலசுப்பிரமணியக்குருக்கள் முதன்மைக்குருவாக இருந்து நடைமுறைப்படுத்தியுள்ளார்.

## நிர்வாகம்:

ஆதியிலிருந்து நடைமுறையிலிருந்த தனி முகாமை 1948 இல் மாற்றம் பெற்றது. 1945.08.10 இல் வழிபடுவோர் பொதுச்சபை ஒன்றைச் சின்னப்பு முருகேசர் C. C. S அவர்கள் கூட்டினார்கள். அன்று Dr. கார்த்திகேசு பொன்னையா அவர்களைத் தலைவராகவும், முகாமையாளர் தம்பிப்பிள்ளை தம்பு, சின்னப்பு முருகேசு, பண்டிதர் சின்னத்தம்பி கதிரிப்பிள்ளை என்போரை உபதலைவர்களாகவும், சின்னத்தம்பி பொன்னம்பலம் அவர்களைச் செயலாளராகவும், சுப்பிரமணியம் காசிப்பிள்ளை அவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபசெயலாளராகவும், சரவணை இளையகுட்டி அவர்களைப் பொருளாளராகவும், சுப்பிரமணியம் அம்பலவாணர் அவர்களை உபபொருளாளராகவும் மற்றும் பத்து பேர் கொண்ட நிர்வாகசபை அமைக்கப்பட்டது. 1946 இல் தலைவர், கா, பொன்னையா சிவபதமெய்தியதால் 1946.12.06 இல் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பண்டிதர் சின்னத்தம்பி கதிரிப்பிள்ளை அவர்கள் இறையடி சேர்ந்தார். 1982 .11.19 இல் தலைவர் சி, கதிரிப்பிள்ளை தலைமைப் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டார். 1982 .07.03 இல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பண்டிதர் வேலுப்பிள்ளை சங்கரப்பிள்ளை அவர்கள் தலைவராகவும், இளையவர் நமசிவாயம் அவர்கள் பொருளாளராகவும், மொத்தம் பதினொருவரை உறுப்பினர்களாகவுங் கொண்ட பரிபாலனசபை பொறுப்பை ஏற்றது. 1987.06.10 இல் செயலாளர் சி. சின்னத்தம்பி மறைய நாகலிங்கம் அரியபுத்திரன் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இச்சபையே இன்றைய பரிபாலனத்தை நடைமுறைப்படுத்துகின்றது.

### விழாக்கள்:

வைகாசிப் புனர்பூச நட்சத்திரம் இறுதிநாளாக வரும் வண்ணம் பன்னிரண்டு தினங்கள் அலங்கார உற்சவம் நடைபெறும். நவராத்திரி, திருவெம்பாவை , சிவராத்திரி, கந்தசஷ்டி என்னுங் காலங்களிலும் விசேட வழிபாடு உண்டு. ஐப்பசிப் பரணியில் அபிஷேக ஆராதனைகளும் சுவாமி வீதி உலா வருதலும் நிகழும்.

### உபகரிப்பு:

பிரதான வாயில் இராசகோபுரம் சூணாவத்தை வேலுப்பிள்ளை வைத்திலிங்கம் அவர்களால் 30 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது. மணிக்கோபுரம் சின்னப்பு முருகேசர் அவர்களால் 35 ஆண்டுகளின்முன் கட்டுவிக்கப்பட்டது. மூலஸ்தானத்தில் எந்த நாளுந் தீபமேற்றுவதற்கான தேங்காய் நெய்ச் செலவிற்கென இரண்டாயிரம் ரூபாவை சின்னப்பு முருகேசர் அவர்கள் வங்கியில் வைப்புச் செய்துள்ளார்கள். சுப்பிரமணியம் அம்பலவாணர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாய்வாகனமும், செல்லையா செல்வரெத்தினம் ஒரு குதிரை வாகனமும் உபகரித்துள்ளனர். ஆறுமுகம் மகாலிங்கசிவம் அவர்கள் ஒலி பெருக்குவதற்கான சாதனங்களை உபகரித்துள்ளார்.

### தர்மசாதனம்:

ஆலயம் அமைந்துள்ள நிலமும் வீதிகளும் சுமார் பத்துப்பரப்புவரை உண்டு. ஆலயத்தின் வடக்கே இரண்டு பரப்பு வரை உண்டு. பூந்தோட்டமாயிருந்த இந்த நிலத்தில் புளிய மரங்களும் மஞ்சள் நுணாக்களும் வளர்ந்துள்ளன. தென்புறம் இரண்டு பரப்புக்காணிவரை உண்டு. புளியமரங்கள் நிறைவாக நிற்கின்றன. தென் மேற்கில் பூசகரது வளவிற்கு மேற்காக ஒன்றரைப்பரப்பு நிலம் பூசகரது பரிபாலிப்பிலுள்ளது. ஆலயத்திற்கு மேற்கில் மட பரிபாலனத்திற்காக மடத்தைச் சுற்றி ஒரு பரப்பு விடப்பட்டுள்ளது. கேணிக்குத் தென் புறத்திலும் அரைப்பரப்பு நிலம் உண்டு. அதிலே பாலர் பாடசாலைக் கட்டிடம் அமைக் கப்பட்டுள்ளது. அந்தக் கட்டிடம் மக்கள் பொதுத் தேவைகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றது.

### அர்ச்சகர்:

பிரம்மஸ்ரீ இராமசாமிஐயர் சோமசுந்தரஐயர் 1910 ஆம் ஆண்டு வரையில் இக்கோயில் அர்ச்சகரானார்கள். அவருக்குப் பிள்ளைகள் இல்லை. 1935 வரையில் ஸ்ரீ சோமசுந்தரையர் இறையடி சேர அவர் மனைவியார் வள்ளியம்மா மேற்பார்வையில் அவர் சகோதரி பிள்ளைகள் அர்ச்சகர்களாகப் பணிபுரிந்தனர். அவர்களுள் மூத்தவராய பிரம்மஸ்ரீ சேஷையர் சிவபாதவிருதய ஐயர் 1962 தொடக்கம் பூசை செய்து வருகின்றார்கள். தினமும் காலை 8 மணி, மாலை 6 மணி என இருகாலப் பூசை முறைமை உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையம்சங்கள்:

மாவை சு. குழந்தைவேலு, சு. இராசு. அளவெட்டி சோமஸ்கந்தர் செல்லத்துரை என்போர் மங்கள வாத்தியம் இசைப்போராக முன்பிருந்தனர். இப்போது அளவெட்டி சாம்பசிவம் வேலாயும், இரத்தினவேலு கேதீஸ்வரன், இரத்தினவேலு ஞானசம்பந்தன் என்போர் அவ்வகை பணிபுரிகின்றனர். திருமுறைப்பண்ணிசை மணி இளையவர் நமசிவாயம் தேவாரப் பண்ணிசை வகுப்பு நடத்துகின்றார்கள். கார்த்திகேயர் அம்பலச்சட்டம்பியார், கதிர்காமர் காசிச்சட்டம்பியார், சுப்பர், கணபதிச் சட்டம்பியார், பண்டிதர் சின்னத்தம்பி கதிரிப்பிள்ளை, பௌராணிகர் காசிச்சட்டம்பியார் ஆறுமுகம், பண்டிதர் வேலுப்பிள்ளை பொன்னம்பலவன் முதலியோரால் வளர்க்கப்பட்ட புராணபடனம் இன்றும் இந்த ஆலயத்தில் நடைமுறையிலுண்டு. கந்தசஷ்டி காலத்தில் சூரபன்மன் வதையும், திருவெம்பாவைக்காலத்தில் திருவாதவூரடிகள் புராணமும் படனஞ் செய்யப்படுகின்றன. வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை, சுன்னாகம் ஸ்ரீமத் குமாரசுவாமிப் புலவர் என்போர் இந்த இந்து ஆலயத்துப் புராணபடனத்திலே பங்கு கொண்டனர் என்னும் பெருமையும் உண்டு. வித்துவ சிரோமணிக்குப் புராணம் வாசிப்பவராக அமைந்தவர்களில் விழிசிட்டி கணபதிச் சட்டம்பியார் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

காப்புச் செய்யுளுடன் பதினொரு பாடல்களையுடைய திருவூஞ்சற்பாடலுண்டு. பாடியவர் யாரென்று தெரியவில்லை. எச்சரிக்கை, பராக்கு, வாலி, கும்மி, மங்களம் என்னும் பகுதிகளும் இணைந்துள்ளன. அலங்கார உற்சவ இறுதி நாளன்றும், திருவாதிரை விழாவின் போதும் இதனைப் படிப்பர்.

நேரிற் கண்டறிந்தவற்றுடன், கோயில் அர்ச்சகர் பிரம்ம ஸ்ரீ சே. சிவபாதவிருதய ஐயர், சபைத்தலைவர் பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை, உபதலைவர் செ. சிவசுப்பிரமணியம், பொருளாளர் இ. நமசிவாயம், க. உமாமகேஸ்வரம்பிள்ளை என்போர் தந்த செய்திகளும் தொகுக்கப்பட்டு எழுதப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# இணையிலி
# வைரவர் கோயில்கள்

(அ) யாழ்ப்பாண அரசுக் காலத்தில் முதன்மை பெற்ற ஊர்களுள் இணையிலி ஊரும் ஒன்று. இவ்வூர் இப்போது இணுவில் என வழங்குகிறது. இவ்வூரில் நான்கு பிரதான வைரவர் கோயில்கள் உள. அவை;- மாணிக்க வைரவர் கோயில், விளாத்தியடி வைரவர் கோயில், காரைக்கால் வைரவர் கோயில், மருதனார் மடம் வைரவர் கோயில்.

மாணிக்கவைரவர் கோயில் உள்ள இடத்திற்கு முற் காலத்தில் இவ்வூர்ப்பகுதித் தலைவனாக இருந்த பேராயிரவன் என்பவனுக்கு பின் அரசர்களாக இருந்த காலிங்கராயனால் அமைக்கப் பெற்றது. இவனது மகன் வைலாயநாதன். இவர்கள் திருக்கோவலூரில் இருந்து வந்தவர்கள். தம் ஆட்சிச் சிறப்புக்கும் வெற்றிக்கும் ஆக வைரவக் கடவுளையும் பத்திரகாளி அம்மனையும் நாளும் வழிபட்டு வந்தனர்.

மூலமூர்த்தியாகிய வைரவமூர்த்தி நாய் வாகனத்தில் எழுந்தருளி இருக்கிறார். இதற்குப் பக்கலில் பத்திரகாளி அம்மன் மூர்த்தம் இருக்கிறது. இவ்விரு மூர்த்திகளும் மிகவும் அருளாற்றல் உள்ளவை. இக்கோவிலின் முன்போ அயலிலோ தவறு செய்பவர்கள் உடனே தண்டனைக்கு ஆளாவர் எனக் கூறுவர்.

இங்கு பொங்கல் பூஜைகள் நாள் தோறும் நடை பெறுகின்றன. மடை வைத்தல் என்னும் பண்டைய முறை இங்கு நிகழ்ந்து வருகிறது. இவ்வூரவர்களே அன்றி அயல் ஊரவர்களும் இங்கு வந்து மடைவைத்து வழிபட்டு உணவு ஆக்கிப் படைத்து வழிபடுவர்.

யாழ்ப்பாணப் பகுதியில் இவ்வூர் நாடகங்களுக்கும் இசைக்கும் யாழ் அரசர் காலம் முதல் நிலைக்களனாக இருந்தது. சிறந்த நாடக ஆசிரியர்களும் நடிகர்களும் இங்கு இருந்தனர். அதனால் இவ்வூரில் நாடக அரங்கு ஒன்று இருந்து வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாடக அரங்கு இக்கோயிலின் அயலிலேயே இருந்து வந்தது. பல ஊரவர்கள் இங்கு வந்து பங்குபற்றுவர். இந் நாடகங்கள் தொடங்க முன் நாடக ஆசிரியர்களும் நடிகர்களும் இக்கோயிலின் வைரவக் கடவுளையும் பத்திரகாளி அம்மனையும் வழிபட்டே தொடங்குவர். நாடகக் காப்புச் செய்யுளில் இக்கடவுளர் பெயர்கள் இருக்கும்.

இவ்வூரில் இருந்த கொத்து உடையார் என்பவர் இவ் வைரவர் வழிபாட்டை அலட்சியம் செய்ததினால் தண்டிக்கப் பட்டார் எனக் கூறுவர் கடந்த நூற்றாண்டின் பிற் பகுதியில் இவ்வூரில் சந்நியாசியார் என்னும் துறவியார் இருந்தார். இவர் பெரும் சித்தர். அருளாற்றல் மிக்கவர். பெரும் அற்புதலங்கள் செய்தவர். ஆங்கில அரசின் மதிப்புப் பெற்றவர். நோய் பிணிகளையும் பேய் பிசாசு முதலியவைகளையும் இல்லாமல் செய்தவர். இவர் தமது அனைத்து முயற்சிகளுக்கு இக் கோயிலின் வைரவர், பத்திரகாளி ஆகிய இருவரையும் வழிபட்டே தொடங்குவர். இங்கிருந்து முரசு முதலிய பலவாத்தியங்களிடையே ஆடல் பாடல்களுடனும் இருப்பிடம் சென்று தமது வழிபாட்டு முறைகளை நடத்துவர்.

இக்கோவிலின் தலவிருட்சமாகப் பெருமாமரம் இருந்தது. இவ்வைரவ மூர்த்தம் மிக வல்லமை உள்ளது. சிறு தவறு செய்பவர்களும் இங்கு பெரும் தண்டனை பெற்றனர். அதனால் இக்கோவிலின் முன்பாகச் செல்ல அஞ்சினர். இதனைப் பலர் சந்நியாசியார் என்னும் பெரியவரிடம் முறையிட்டனர். அதனால் அவர் இவ்வைரவரை வழிபட்டு இம்மாமரத்தைத் தறித்து விட்டார். இதன்பின் இவ்வைரவ மூர்த்தியின் அருளாற்றல் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது எனக் கூறுவர்.

இம்மூர்த்தியின் அதி அருளாற்றல் மட்டுப்படுத்தப் பெற்ற தற்கு இன்னொரு காரணம் கூறுவர். இம்மூர்த்தியை இவ்வூரின் மேற்கே கந்தசுவாமிகோவிலின் அயலில் உள்ள விளாத்தி மரத்தடியில் ஒரு வைரவ வழிபாடும், கிழக்கே காரைக்கால் கோயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயலில் ஒரு வைரவ வழிபாடும் நடைபெறுதலும் காரணமாகும் பழைய வைரவ வழிபாட்டில் இருந்து புதிய இரு வைரவ வழிபாடுகளைச் சந்நியாசியாரே தொடங்கி வைத்தவர் என்பர்.

இக்கோயில் முன்பு ஓலையால் வேயப்பட்டு இருந்தது. இப்போது கற்கோவிலாக இருக்கிறது. இக்கோயிலின் முன்பாக யாழ். அரசர் காலத்து அருளாற்றல் உள்ள சிவகாமி அம்மை கோயில் இருக்கிறது. இக்கோவிலுக்கு அண்மையில் இவ்வூர் அரசனாக இருந்த கைலாயநாதன் என்பவனுக்கு கோயில் மடை இருக்கிறது. இவர் தெய்வமாக வழிபடப்படுகிறார். இக் கோயில் இளந்தாரி கோயில் எனப்படும். இங்கு நாள் தோறும் வழிபாடு உண்டு. ஆண்டில் ஒருமுறை புது ஆண்டுப்பிறப்பை எடுத்து ஆண்டுப் பெருவிழா மடை நடைபெறும் இந்த ஆண்டுப் பெருவழிபாட்டில் அங்கிருந்து பெரும் வாத்தியங் களுடன் ஆடல் நடைபெறும். இந்த ஆண்டுப் பெருவழி பாட்டில் அங்கிருந்து பெரும் வாத்தியங்களுடன் ஆடல் பாடல்களொடு பூசகரும் பக்தர்களும் வந்து இங்கு மடை வைத்து வழிபாடு செய்வர். இவ்வைரவர் இக்கைலாயநாதன் என்னும் இளந்தாரி வழிபட்ட கடவுளுமாவார்.

இன்னும் பலர் இவ்வைரவரை வழிபட்டு தம் தேவைகளை நிறைவு செய்கிறார். அத்துணை நம்பிக்கை இவ் வைரவரிடம் அனைவருக்கும் உண்டு. இளந்தாரி தூது நூலில் இவ் வைரவருக்கும் பத்திரகாளிக்கும் துதிப்பாடல்கள் உள

பொது நூலகம் ... ... பகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கானை

# நிகரை ஞானவைரவர் ஆலயம்

இப்பகுதியில் மிகவும் பழைமை வாய்ந்த ஆலயங்களில் சங்கானை நிகரை ஞான வைரவர் ஆலயமும் ஒன்றாகும். ஆதிகாலத்தில் மிகவும் சிறிதாக இருந்த ஆலயம் காலப்போக்கில் வளர்ச்சியடைந்து பொதுமக்கள், மற்றும் இளைஞர்கள் எல்லோரினது ஒத்துழைப்பாலும் பல திருப்பணி வேலைகள் செய்யப்பட்டு இன்று ஈழத்தின் மிகப்பெரிய வைரவ ஆலயங்களில் ஒன்றாகத் திகழ்கின்றது.

இவ்வாலயத்தில் பரிவாரமூர்த்திகளாக - பிள்ளையார், சந்தான கோபாலர், பாலமுருகன், வேல், நாகதம்பிரான் ஆகிய தெய்வங் களுக்கு ஆலயங்களும் அமைக்கப்பட்டுள்ளன. அழகிய ராஜகோபுரம் மணிக் கோபுரம், மணிமண்டபம் முதலியன ஆலயத்தின் அழகை மேலும் அழகுபடுத்துகிறது.

ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் 02.02.1987இல் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து வருடாவருடம் அலங்கார உற்சவம் 15 நாட்களுக்கு மாசி மகத்தை அந்தமாகக் கொண்டு நடைபெற்று வருகிறது. தைப்பொங்கல் விழா, தைப்பூசத்திருவிழா, சிவராத்திரி விழா, பங்குனி உத்தரத் திருவிழா, சித்திரைப் பரணித் திருவிழா, ரோகிணி நட்சத்திரத் திருவிழா, வைகாசி விசாகப் பொங்கல் விழா, ஆடிப்பூர விழா , நவராத்திரி விழா, திருவெம்பாவை ஆகியவை மிகவும் சிறப்பாக வருடாவருடம் கொண்டாடப்பட்டு வருகிறது.

*ஆ. ஞானசேகரம்*
*உபதலைவர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# உரும்பராய்
# காட்டு வைரவர் கோயில்

யாழ்ப்பாணப் பகுதியில் இக்கோயில் புகழ் பெற்றது. புத்தாண்டு தினத்தையடுத்து பெரும் வேள்வி நடைபெறும். இரவு முழுவதும் பெரும் பொங்கல்கள் நடைபெறும். பகல் ஆடுகள் பலியிடப்படும். இதற்காக பல ஊரவர்கள் இங்குவருவர். பக்குவம் செய்த இந்த உணவு தென் இலங்கைக்கு பார்சலாக அனுப்பப்பெறும்.

காடு என்பது பாலை நிலத்திற்குப் பெயர். ஒரு காலத்திற் பாலைப் புலப்பாங்காக இருந்ததினால் இப்பெயர் பெற்றது. இப்போது இப்பகுதி நல்ல உணவுப் பொருள் விளையும் தோட்ட நிலங்களை உடையது. இதனால் இப்பகுதி மக்கள் இங்கு பயபக்தியோடு வழிபாடு செய்கின்றனர். கோயிலில் உயிர்ப்பலி இருத்தல் ஆகாது என்னும் இயக்கத்தினால் ஆடுகளைப் பலியிடுதல் இல்லாமல் ஆகிவிட்டது. பொங்கல் பூசை நடைபெறுகிறது. இவ்வயிரவர் அருள் ஆற்றல் காரணமாக ஒரு வகை அச்ச உணர்வு மக்களிடம் உள்ளது. பெரும் ஆலயமாக இருக்கிறது.

உரும்பராய் கிழக்கில் ஞானவைரவர் கோயில் சிறப்பான வழிபாடுகளோடு விளங்கி வருகிறது.

*தகவல்: இ. க. கந்தசாமி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# இணுவில்
# விளாத்தியடி வைரவ கோயில்
# காரைக்கால் வைரவ கோயில்
# மருதனாமடம் வைரவ கோயில்

இணுவில் மேற்பால் புகழ்பெற்ற இணுவில் ஹரிசுவாமி கோயில், விளாத்தியடி வயிரவ கோயில், கீழ்பால் புகழ்பெற்ற காரைக்காற் சிவன் கோயில், வடபால் மருதனாமட வைரவ கோயிலும் இருக்கின்றன. இவை மூன்றும் புகழ்பெற்ற வைரவ கோயில்கள்.

விளாத்தி மரத்தின்கீழ் வழிபடப் பெற்றதினால் விளாத்தியடி வைரவரெனப் பெயர் பெற்றது. அருள் ஆற்றல் உள்ளோர் சிறந்த வைரக் கல்லினால் இக்கோயிலைக் கட்டினார்கள். இக்கோயிலின் முன்பாக உள்ள கிணற்று நீர் புனித தீர்த்தமாகவும் நோய் பிணிகளை நீக்கும் ஆற்றல் உள்ளதாகவும் இருக்கிறது. மக்கள் இங்கு பொங்கிப் படைத்து வழிபடுகின்றனர்.

காரைக்கால் வைரவர் அருளாற்றல் உள்ளவர். இதனால் யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள பலரும் இங்குவந்து வழிபாடு செய்கின்றனர். பலர் இங்கு இருந்து வழிபட்டு நோய் பிணி நீங்குகின்றனர். வெள்ளிக்கிழமை தோறும் வெறும் வழிபாடு நடைபெறும். நோய் நீங்கும் மருந்தாக இவ்வமுதினை மக்கள் நம்புகின்றனர். இத்தலம் சித்தர்களின் இருப்பிடமாக இருந்து வந்துள்ளது. சித்தர்கள் ஞானிகள் இங்குவந்து சென்றுள்ளனர். நயினாதீவுச்சாமி, வடிவேற் சுவாமி, நடராசமுனிவர் ஆகியவர்கள் இக்கோயிலின் வளர்ச்சிக்கு வழிவகுத்தனர். அண்மையில் அம்பலவாணசுவாமி இங்கு இருந்து பெரும் பணி செய்துள்ளார். யாழ்ப்பாணப்பகுதி மக்கள் நோய் பிணி குறைகளை அறிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை நீங்க உதவிப் பெரும் புகழ் பெற்றார். அவரது சமாதி இக் கோவிலின் பக்கலில் உள்ளது. படைத்தளபதியாக இலங்கை வந்த கருணாகரத் தொண்டமான் வசித்த இடத்தில் இக் கோயில் இருக்கிறது. பலவகை மரங்களும் நிறைந்த சோலையாக இயற்கை எழிலோடு இந்த இடம் உள்ளது.

மருதனார் மடம் வைரவர் கோயில் மருதனார் மடச் சந்தியில் சேர் இராமநாதன் அமைத்த இராமநாதன் மகளிர் கல்லூரிக்குத் தென்பால் உள்ளது. இலங்கையில் பெருஞ் ஞானியாக விளங்கிய யோக சுவாமி நாள்தோறும் இக்கோயிலுக்கு வந்து தங்கிச் செல்வர். மருதனார் மடத்தில் பெரும் காலைச்சந்தை நாள் தோறும் நடைபெறும் பல ஊர்களிலும் இருந்து தோட்ட உணவுப் பொருள்களை விற்பவர்களும் வாங்குபவர்களும் வருவர். இவர்கள் அனைவரும் இக்கோயிலில் வழிபாடு செய்து காணிக்கை வழங்குவர். இதனால் நாளாந்தப் பூசை வழிபாடுகளில் மக்கள் அதிகமாகப் பங்குபற்றுவர். விசேட தினங்களில் விசேட பூசை நிகழும். பொங்கல் செய்து மக்கள் வழிபடுவர். உணவு சமைத்து பூசை நிறைவில் அனைவருக்கும் வழங்குவர். இதன் தல விருட்சம் ஆல்.

மேற் குறித்த மூன்று வைரவ கோயில்களிலும் மூல மூர்த்தியாக வைரவக் கடவுளின் சூலம் உள்ளது. இம் மூன்று கோயில்களை விட இவ்வூரில் உள்ள கிணறுகளின் அயலில் வைரவ கோயில் அமைத்து வைரவ வழிபாடு நாள் தோறும் நடைபெறுகிறது. சூலம் வழிபடு பொருளாக உள்ளது. வைரவர் என்றால் அனைவருக்கும் ஒருவகைப் பயம். வைரவர் தண்டிப்பார் என்ற பயம் இருக்கிறது.

*தகவல் : கந்தவேள்*

卐



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## சித்தாண்டி

# ஸ்ரீ செங்நெல் வைரவர் காவியம்

திருமருவு பரனுதவு ஆதிவயி ரவர்மீது
செந்தமிழ்ப் பாமாலை செப்புதற் கேதான்
கருமருவு விகடதட கரிமுகவ னேயுனது
கமலமல ரடியிணைக ளதனைநினை வுறவே
மருவுதிரு வரசனும் பிரமனுட னுறையும்
மாதுகலை சரஸ்வரயு மனதினு ளிருக்க
அருமருவு வடுகனெனு மொருகடவு ளுனதுதிரு
அடியிணைக ளொருபோது மனதில்மற வேனே.

மறவாம லருள்தில்லை மன்றுள்நின்றாடி
மனுவோர்கள் பிணிதீர வருவோர் நீ ரலவோ
குறமாது தனைமேவு குகனோடு பொருசூரர்
குலம்மாள வேலேவு குமரவே ளலவோ
திறமாக வருகாளி திரிசூலி யுடனோடு
சிவனார்தன் மகனாக வருவோர்நீ ரலவோ
இறவாத முனிவோர்கள் தொழமேவு கயிலாய
மணிவாச லுறையீசர் புகழோது வோமே.

ஓதுமோங் காரமுக் கோணசற் கோண
ஒளியாகி வெளியாகி உருவாகி நின்று
மாதுசுந் தரிகாளி யுடநடன மாடிவரு
வயிரவ சொரூபமென வருபரா பரனே
பாதுகாத் துலகங்க ளெங்கணும் நின்று
பலபே ரிடும்பூசை வேள்விக ளுகந்து
காதிலிரு குண்டல மணிந்துவரு கின்ற
கருணைபெறு நூற்றெட்டு வயிரவரும் நீயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீயே சிங்காச னத்தினி லிருந்து
நின்னருள் புரிந்துபூ லோகந் தழைக்க
நீயேயீ ரேழு அண்டம் பயங்கொள்ள
நின்றுதான் முப்புரத் தைத்தகன மாக்கி
நீயே மதன்றனை யெரித்து முக்கோடி
நிலையான தேவரை யழித்தவனும் நீயே
நீயே வெண்ணீறணிந் தேசுடலை நின்றாய்
நித்தவே கத்தனே நிலவுபுனை வோனே.

நிலவுபுனை குலவுசடை யோனுருவ மாகி
நிறுமான வயிரவ சொரூபமென வந்து
அலகுசூ லாயுத கபாலமு மேந்தி
ஆதிவயி ரவராகி வந்தமெய்ப் பொருளே
குலவுவெள் ளிலைசெங் கரும்பினொடு பூகமடல்
குங்குலிய தீபமொடு செங்கமல மலரும்
இலகுமகில் சந்தணங் கஸ்தூரி கற்பூர
மிளநீ ருடன்மடைக ளேற்றுகந் தவனே.

ஏற்றுநீ ரட்டவயி ரவராக வந்து
எங்கணும் பலபூசை வேள்விக ளுகந்து
காத்துநீ கங்காள வயிரவசொ ரூபமொடு
கருணைபெறு நூற்றெட்டு வயிரவரு மாகி
பாத்துநீ யுலகமதி லெங்கும் பரந்து
பலிகொண்டு துர்க்கைக் களித்துவரும் நீயே
வேற்றுருவ தாகவே வந்தேழு கன்னியை
மணம் வேட்டு மென்மை பெறு விறுமவயி ரவரே.

வயிரவ சொரூபமென வந்ததற் பரனே
வடுகவயி ரவரென வுதித்த சுந்தரனே
எயிரவ வனத்தில் வரு பூதப்பிசாசுகளை
எறிசூலம் வேல்விட் டெறிந்தவரும் நீயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிரவி யுடன்சமய மாகிநின்றவனே
பலவேஷ வுருவாக வுலவுதற் பரனே
உயிருமுட லும்பொருளு மாகிநின் றவனே
உத்தண்ட ஆதிவயி ரவரான பொருளே.

பொருளான ஆதிசங் கரா சிவாயநம
போகாத பிணிதொலைத் தவனே சிவாயநம
இருளான ரெத்தவயி ரவரே சிவாயநம
வீரேழு புவனமு நிறைந்தாய் சிவாயநம
அருளான ஆதிசங் காரா சிவாயநம
அன்பர்க்கு அன்பான ஆதி சிவாயநம
மருளான வுன்மத்த வயிரவ சிவாயநம
மண்டலத் தோர்புகழ நின்றாய் சிவாயநம.

சிவாயறிங் காரமென வந்தவோங் காரனே
சித்திதரு நித்தியம தானசங் காரனே
உபாயமது செய்வதற் கேயுதித் தவனே
உண்டென்ற வர்க்குதவு முண்மை நாயகனே
நவாயமெனு மட்சரம தாகிநின் றவனே
நான்மறைக ளும்புகழும் நடுவான தேவனே
மவாயறீங் காரவோங் காரத்து நித்தமெய்ப்
பொருளாகி நின்றதொரு ஆதிவயிரவரே.

ஆதியே யெங்களை யிரட்சிக்க வந்தநீ
அண்டபகி ரண்டமு மடுக்காய் நிறைந்த நீ
சோதியே சுடரொளிய தானதொரு கடவுள் நீ
துட்டவயி ரவர்கோடி சூழவரு பவருநீ
நீதியே யுந்தனை நினைப்பவர் தனக்குமுன்
நிற்குமத கரிகளொரு திக்கிலோ டாதோ
ஊதிபம தானதொரு கண்கண்ட தெய்வமே
உன்னருள் புரிந்துதவு முன்மைநா யகனே.
நாயகம தானதொரு நாதா நமோநமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுபுவ னங்கங் நிறைந்தாய் நமோ நமோ
தாயான ஆதிசங்காரா நமோ நமோ
சதுர்மறை புகழ்ந்தவயி ரவரே நமோநமோ
பாய்பரிகள் தலையிடற வருவாய் நமோநமோ
பாருலகி லதிகதே வதையே நமோநமோ
நாதனே யென்பிழை பொறுப்பாய் நமோ நமோ
நாதாந்த ஆதிவயிரவ தேவ தேவனே.

நமசிவா யப்பொருள தானவரு வாழி
நான்மறைகள் வாழிசர சோதிமிக வாழி
நிமலனா ரருள்வாழி நீதிமுறை வாழி
நித்தியகல் யாணிபத் திரகாளி வாழி
நமதுகட கரிமுகவர் பாதமலர் வாழி
நங்கைதெய் வானைமண வாளனும் வாழி
உமது புகழ் புவிமீதி லோதுவோர் வாழி
உத்தண்ட வயிரவர் வாழவா ழியவே.

தகவல் : ஓய்வு பெற்ற அதிபர்
செ. நாகராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஐயந் திரிபின் றளந்துதிரி யிற்றெளிந்து*
*மெய்யுணர்ச்சி கண்விழிப்பத் தூங்குவார் - தம்முளே*
*காண்பதே காட்சி கனவு நனவாகப்*
*பூண்பதே தீர்ந்த பொருள்.*

*ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்*
*(பிரபந்தம், பா- 308)*

10524



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எடுத்தாண்ட நூல்கள்

1. கந்த புராணம்
2. காஞ்சிப் புராணம்
3. திருச்செந்தூர்ப் புராணம்
4. உபாசன வைரவர்
5. மருதடி விநாயக மான்மியம்
6. சிவமஹாபுராணம்
7. ஸ்ரீ லிங்க புராணம்
8. நால்வர் திருமுறைகள்
9. சிவபுராணம்
10. திருவாவடுதுறைப் புராணம்
11. திருவானைக்காப் புராணம்
12. திருப்பாதிரிப்புலியூர்ப் புராணம்
13. திரு நாகைக்காரோணப் புராணம்
14. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தம்
15. யாழ்ப்பாணச் சரித்திரம் *(முதலியார் செ. இராசநாயகம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**சிவநெறிச் செல்வர், சைவ நன்மணி இரா. மயில்வாகனம் அவர்கள் இந்** நூலின் தொகுப்பாசிரியர். இவர், மட்டக்களப்பை மையமாகக் கொண்ட புளியந்தீவில் பொருந்தி வாழ்ந்த திரு. இராசதுரை - முத்துப்பிள்ளை என்போருக்கு மகனாகப் பிறந்தவர். (1917) பயிற்றப்பட்ட ஆசிரியராக இருந்து மனத்துக்கினிய மங்கையர்க்கரசியை மணமகளாகப் பெற்றவர். அன்னாரின் கும்பராசியால் இன்பராசனாக வாழ்கிறார். பொன்விழாக் கண்ட புண்ணியன். மங்கையர்க்கரசி யாழ. இராமநாதன் கல்லூரியில் பயிற்றப்பட்ட ஆசிரியை ஆகி வெளிவந்தவர். இவர் வாழ்வும் இறையருளால் இன்பமானது. எச்சமான எழுவரில் ஒருவர் குலக்கொழுந்தாய கிரிஜா. மற்றைய அறுவர் ஐங்கரன் அருளான வராதலினால் கரன் என கடைசியில் அழைப்பர். (சுதாகரன்)

இற்றைக்கு இருபது ஆண்டுகட்கு முன்பிருந்து இப்பெரியாரை நன்கறிந்து அவரோடிணங்கி வந்துள்ளேன். வளர்ந்தோர் கல்வியால் தம் திறமையை மேம்படுத்தியவர். சமயமென்றால் சைவம் என்றும் தமிழ் என்றால் இனிமை என்றும் மறவாத மதிப்புடையவர். 'சிந்தனைக்கோவை', 'ஒன்பதாந் திருமுறை ஒருநோக்கு', 'சிந்தனைக்கோவை 2' ஆகிய நூல்களின் ஆசிரியருமாவர். சிவநெறிச் செல்வர், சைவநன்மணி ஆகிய விருதுகளைப் பெற்றதுமன்றி, அனைத்திலங்கை சமய இலக்கியத்துறை நூலாக்கப் பரிசாக ஆயிரம் ரூபாவும் சான்றிதழும் பெற்றவர்.

''என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாய்த் தமிழ் செய்யுமாறே'' என்னும் திருமூலர் வாக்குக்கிணங்க உடலாந் தமிழை ஓயாது ஓம்பி உயிராந் தெய்வ உணர்வைப் பெற்றவர். ''பண்டிதர்க்கே பாவுடைத்து'' என்பதை விடுத்து ''பாட்டுக்கொரு புலவன் பாரதியடா'' என்பதற்கு இணங்க பல பாக்களியற்றியவர். பல நினைவுகளை மலராக்கியவர். இப் பெரியாரை வணங்கி வாழ்த்துகிறேன்.

*'' ஆய்ந்தனன் ஒண்தமிழை அறிஞர் பலரிடையே*
*தேர்ந்தனன் மூத்தோன் திருவருளால் - வாய்ந்த*
*நலமெலாம் எய்தியே நன்றெலாம் செய்து*
*நிலமதில் வாழ்க நீடு.''*



இவ்வண்ணம்

**பொன். பாலசுந்தரம்**
*ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலய*
*அறங்காவலர் குழு உறுப்பினர்,*
*தேயிலைப் பிரிவு முதல்வர்,*
*ஜபர்ஜி பிரதர்ஸ்,*
*கொழும்பு - 13*

*லக்ஷ்மீஹர, 309, செட்டியார் தெரு, கொழும்பு - 11, தொலைபேசி 341532*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org